தமிழ்த் துணைவன்.
'நால்வர்'

எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு 1956

LIFCO TAMIL TUNAIVAN CE8.LC K

லிப்கோ

# தமிழ்த் துணைவன்

— விளக்கவுரையும் வினாவிடையும் —

[பட விளக்கங்களுடன்]

by NAALVAR

செய்யுள், உரைநடை, கட்டுரை, இலக்கணம், பயிற்சியும் முயற்சியும்,
மனப்பாடப் பகுதி, ஆசிரியர் வரலாற்றுக் கண்ணாடி,
மாதிரி வினாத்தாள்கள் அடங்கியது.

ஆசிரியர் :
"நால்வர்"

CONNEMARA PUBLIC LIBRARY
12 NOV
MADRAS

பதிப்பகத்தார் :
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
தியாகராயநகர் :: சென்னை-17

சென்னையில் லிப்கோ ஏஜெண்டுகள் :
எம். தாமோதரம் & கம்பெனி,
அப்பர் பில்டிங்ஸ், 9/286, எஸ்பிளனேட், சென்னை-1.

பதிப்புரிமை] 1955 [விலை ரூ. 1-2-0

R.B 136 / 3-55

# புலவர் அருளிய பொன்னுரை

புலவர் மயிலை சிவ. முத்து,
தலைவர்,
தமிழாசிரியர் கழகம்.

17, இரத்தின முதலி தெரு,
சென்னை.

71062
86c211

லிப்கோ கம்பெனியாரால் புத்தம் புதிய முறையில் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கென எழுதப்பட்ட உரை நூலை ஊன்றிப் படித்துப் பார்த்தேன். சொற்களின் எளிமை, பொருள் விளக்கம், பாடங்களைப் பகுத்துக் கூறும் வகை, இலக்கணக் குறிப்பு, கேள்வியும் பதிலும் அமைந்துள்ள தன்மை இவை யாவும் பாராட்டத்தக்கவை.

இளஞ் சிறுவர்களுக்குப் படங்களைக் கொண்டு பாடங்களை விளக்கும் முறை எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

பாடங்களை எழுதிய ஆசிரியர்களிடமே நேராகத் தொடர்பு கொண்டு சில குறிப்புக்களை விளக்கமாகத் தந்திருக்கும் லிப்கோ பதிப்பகத்தினரை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இந்நூல் மாணவ மாணவியர்க்குச் சிறந்த துணைவனாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறது எனப் பல ஆசிரியர்கள் ஆர்வமோடு என்னிடம் கூறி இருத்தலே இந்நூலின் பெருமைக்குச் சிறந்த சான்றாகும்.

இந்நூல் பள்ளியில் படிக்காமல் அரசாங்கத் தேர்வுக்குச் செல்லும் இளைஞர்களுக்கும் (Private candidates) வெற்றிக்கு உற்ற துணைவனாக விளங்கும் என்று நம்புகிறேன். இந்நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த வாழ்த்து.

(ஒப்பம்) மயிலை சிவ. முத்து.

# என்னென்ன?


| என் | | பக்கம் |
|---|---|---|

## 1. பாட்டுப் பகுதி

### I. வாழ்த்துப் பகுதி

1. கடவுள் வாழ்த்து ... 1
2. மொழி வாழ்த்து ... 5

### II. அறவுரைப் பகுதி

1. திருக்குறள் ... 9
2. நாலடியார் ... 27
3. இனியவை நாற்பது ... 31
4. அறநெறிச் சாரம் ... 33

### III. தொடர்நிலைச் செய்யுட் பகுதி

கம்ப ராமாயணம் ... 35

### IV. பல்சுவைப் பகுதி

1. புறநானூறு ... 45
2. சென்னைக்கு வந்து சிவமானேன் ... 49
3. மனோன்மணீயம் ... 53
4. பாரத தேசம் ... 62
5. இன்னிசை இருநூறு ... 66
6. உலக ஒருமை ... 69
7. கனியமுதம் ... 75
8. எழிலோவியம் ... 78

## 2. உரைப் பகுதி

1. ஒன்று பட்டாலுண்டு வாழ்வு ... 83
2. புகழ் பாடச் சொன்ன புல்லர் ... 89
3. 'தம் மக்கள்' ... 94
4. ஸ்விட்ஸர்லண்ட் ... 101
5. பால் பண்ணை ... 105
6. அனலும் ஆவியும் ... 112
7. அருந்தமிழ்க் கலைஞர் ... 115
8. ஊர்ச் சபையமைப்பும் கடமையும் ... 121
9. அன்பும் அருளும் ... 126
10. பொப்பண காங்கேயன் ... 130
11. பயிர் செய்தல் ... 135
12. நூலகத் தேவை ... 138
13. வீட்டிற் கலை .... 141

## 3. இலக்கணப் பகுதி

பாடத் திட்டத்தின் மொழி பெயர்ப்பு ... 1
வாக்கியம் ... 2
சொல் இலக்கணம் ... 4
நிறுத்தக் குறிகள் ... 8
சந்தி விதிகள் ... 9
சென்ற ஆண்டுகளின் இலக்கணக் கேள்விகள் ... 11
பிழை நீக்கி எழுதுங்கள் .. 13

## 4. கட்டுரைப் பகுதி

பாடத் திட்டத்தின் மொழி பெயர்ப்பு ... 17
மாதிரிக் கட்டுரைகள் ... 18
பயிற்சிக்குரிய சில கட்டுரைகள் ... 26
கட்டுரைக் குறிப்புக்கள் ... 26
சென்ற ஆண்டுகளின் கட்டுரைக் கேள்விகள் ... 26

## 5. ஆசிரியர் வரலாற்றுக் கண்ணாடி ... 28

## 6. மனப்பாடப் பகுதி

1. செய்யுட் பாடத்தைக் கற்பது எப்படி? ... 32
2. ஒவ்வொரு நாளும் மனப் பாடம் செய்யுங்கள் ... 33

## 7. மாதிரி வினாத்தாள்கள்

மாதிரி வினாத்தாள் 1 ... 38
மாதிரி வினாத்தாள் 2 ... 40
மாதிரி வினாத்தாள் 3 ... 42
மாதிரி வினாத்தாள் 4 ... 44
மாதிரி வினாத்தாள் 5 ... 46




# பதிப்பகம் பகர்வது

**அன்புக்கும் அருங்குணங்களுக்கும் இருப்பிடமான மாணவ மணிகாள் !**

வாழ்க. ஆண்டுதோறும் எட்டாம் வகுப்பு மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் தமிழ்த் துணைவன் இதோ வெளிவந்துவிட்டது.

மாணவர்கள் தமிழ் வளம் ஒன்றையே கருதி வெளியிடும் இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு ஏடும் எழுத்தும் மிகவும் பயனுள்ளவை என்பதை ஒரு முறை மேறபோக்காகப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம்.

**"நால்வர்"** துணைப் புத்தகம் என்றாலே நாட்டில் நல்ல வரவேற்பு! மேலும் இந்த ஆண்டில் இப்புத்தகம் புத்தம் புதிய அமசங்கள் பல நிறைந்த பூஞ்சோலையாக இருப்பது கண்டு மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள் என்று நம்புகின்றோம். இந்நூலுக்குப் பொன்னுரையருளிய பேராசிரியர் **மயிலை சிவ. முத்து** அவர்கட்கும், வழக்கப்போல் இத துணை நூல் சிறப்பாக விளங்குவதற்குத் தேவையான உதவிகளைப் புரிந்துவரும் உயர்திரு. வித்துவான் **தணிகை. உலகநாதன்** அவர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய சென்னை **ராஜா பவர் பிரஸ்** உரிமையாளர்க்கும் எங்கள் நன்றி.

அன்புள்ள,

தி லிட்டில் ப்ளவர் கம்பெனியார்.

# பெற்ருேர்கட்கு ஒரு வேண்டுகோள்

இவ்வுரைநூலின் ஒவ்வொரு பக்கத்தின் ஈற்றிலும், ஒவ்வொரு பொன்மொழியோ அன்றிப் பழமொழியோ தரப்பெற்றுள்ளது. அவை ஏன் தரப்பெற்றுள்ளன? கல்வியின் நோக்கம் அறிவு பெறுதல் ஆகும். அறிவின் பயன் ஒழுக்கமுடைமையாகும். எனவே, ஒழுக்கம் இன்றேல் கல்வி கற்றதனுல் உண்டாகும் பயன் இல்லையாகும். மாணவர்க்கு நல்லொழுக்கங்களில் சிலவற்றைப் புகட்ட வேண்டும் என்னுங் கருத்துடனேயே அத்தகைய பொன்னுரைகளும், பழமொழிகளும் இடம் பெற்றுளளன.

மாணவர்கள் தேர்வில் வெற்றிபெற வழிகாட்டுதல் எங்களுடைய துணை நோக்கமாகும். எங்களுடைய முதல் நோக்கம் மாணவர்க்கு ஒழுக்கங்களை ஓரளவு கற்பிப்பதே ஆகும். அத்தகைய எங்கள் முதல் நோக்கம் நிறைவேறுமாறு செய்தல் பெற்ருேர்களையே சார்ந்தது. ஆகவே, பெற்ருேர்களே! ஈண்டுத் தரப்பெற்றுள்ள பழமொழிகளையும், பொன்மொழிகளையும் உங்களுடைய மக்கள் நடைமுறையிற் கைக்கொள்ளுமாறு செய்யுங்கள்; 'சான்ருேனக்குதல் தந்தைக்குக் கடனே' என்னும் தந்தையின் கடமையை நிறைவேற்ற முன் வாருங்கள். அவ்வாறு நிறைவேற்றினுல் உங்களுடைய மக்கள் 'அறிவறிந்த மக்கள்' ஆவர். அறிவறிந்த மக்களைப் பெறுவதினும் சிறந்த பேறு வேறில்லை. அது பற்றியே வள்ளுவனுர்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்ருர்.

— தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

## வாழ்த்து

நால்வர் துணைநூலை நன்கு பயின்றவர்கள்
மேல்வந்து வெற்றி மிகப்பெறுக—சால்புடைய
கல்வி சிறந்து கடவுள் அருளாலே
நல்லவராய் வாழ்க நயந்து.

— புலவர் தணிகை. உலகநாதன்,
ஆசிரியர்.

# இந்தப் புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி?

---

**அன்புள்ள மாணவ மாணவிய மணிகளே!**

உங்கள் தமிழ் நலம் கருதியே வெளியிடப்பெறும் இந்த நூலைக் கீழ்க் காணும் குறிப்புக்களின்படி உபயோகிப்பது உங்கட்குப் பெரும்பயன் அளிக்கும்.

1.. ஒவ்வொரு பாடத்திலும் 'கேள்வியும் பதிலும்' என்ற தலைப்பின் கீழ் 'உடுக்குறி' (*) இட்டவைகளை ஊன்றிப் படியுங்கள்.

2. வகுப்பில் பாடம் நடக்கும்போது உங்கள் அருமை ஆசிரியர் போதிக்கும் விஷயங்களைக் கவனிக்க வேண்டுமேயன்றி, இப்புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அப்படியும் இப்படியும் பார்த்தல் நல்ல பழக்கமன்று.

3. பள்ளியில் ஆசிரியர் போதித்த விஷயங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவதற்கும், மேலும் நடக்க வேண்டிய பாடங்களை முன்னதாகவே படித்தறிந்து கொள்வதற்கும் 'வீட்டுத் துணைவனாக' நீங்கள் இதனைப் பயன்படுத்துவது நல்லது.

4. தனியாக அரசாங்கத் தேர்வுக்குப் படிக்கும் மாணவர்கள் இந் நூலைத் தம் நல்லாசிரியர் போல் பாவித்து இடைவிடாமல் படித்து, புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து மாதிரி வினாத்தாள்கட்கும் சரியாக விடையளிக்க வல்லவராயின் தேர்வில் வெற்றி பெறுவது நிச்சயம்.

5. இப்புத்தகத்தில் காணப்படும் படங்கள் வெறும் அலங்காரத்துக்காகச் சேர்க்கப்பட்டவையல்ல. இளம் பருவத்திலுள்ள நீங்கள் படங்களையும் ஊன்றிப் பார்த்து, அத்துடன் தரப்படும் செய்திகளையும் இணைத்துக் கொண்டால், அவை உமது உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியும் அல்லவா?

6. இப்புத்தகச் செய்திகளைப் படித்தால் மட்டும் போதாது. வினா விடைப் பகுதிகளையும், மனப்பாடப் பகுதிகளையும் நீங்கள் எழுதி எழுதிப் பார்த்து ஒப்பிட்டுத் திருத்திக்கொள்ள வேண்டும்.

7. ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் தரப்பட்ட பழமொழிகளைப் பயன்படுத்தி உங்கள் ஒழுக்கத்தை வளர்த்துக் கொண்டால், நீங்கள் தமிழ் நாட்டின் புத்திர ரத்தினங்களாவீர்கள் என்பது உறுதி.

எட்டாம் வகுப்பு மாணவர்காள்
லிட்டில் பிளவர் நூலிதனைத்
தட்டாமல் நீர் படிப்பீரேல்
திட்டமாய் வெற்றி பெறுவீரே.

— தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
சென்னை—17.

---

1 NOV 1957

# இத்தேர்வுக்குச் செல்லும் மாணவர்கட்குப் பொதுக் குறிப்புக்கள்

1. பொதுத் தேர்வு மார்ச்சு முடிவில் அல்லது ஏப்ரல் தொடக்கத்தில் நடைபெறும். தேர்வுக்குரிய தேதிகளும், பாடங்களும் பிப்ரவரி மாத அளவில் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் (Fort St. George Gazette) வெளியிடப்படும். (டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸில் கேட்டு வாங்கிப் பார்க்கவும்.)

2. தேர்வு எழுதும் ஆண்டு, ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று 15 வயது முடியப் பெறுபவர்கள் யாவரும் தேர்வுக்குச் செல்லலாம். அவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் படித்திருக்க வேண்டும் என்னும் நியதியில்லை.

3. நடைமுறை வருஷத்தில் எந்தப் பள்ளியிலும் படியாதவர்களே பிரைவேட்டாக இந்தத் தேர்வுக்குச் செல்லலாம்.

4. விண்ணப்பத் தாளில் டிப்டி இன்ஸ்பெக்டராவது, ரெவின்யூ இன்ஸ்பெக்டராவது கையெழுத்துப் போட வேண்டும்.

5. பாடங்கள்: (1) தாய்மொழி (தமிழ்), (2) கணக்கு, (3) சமூக நூல், (4) விஞ்ஞானம், (5) ஆங்கிலம் (விருப்பம் இருப்பின்).

6. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிற்கும் உரிய பாட நூல்களைக் கல்வியிலாகாவினர் ஆண்டுதோறும் வெளியிடுவர். பிறவற்றின் பாடத் திட்டங்கள் வெளியிடப் பெற்றுள்ளன. அவற்றுக்கேற்றவாறு எழுதப் பெற்றுள்ள எந்தப் பாட புத்தகத்தையும் மாணவர்கள் படிக்கலாம்.

7. தேர்வுக்குப் போகும் எல்லா மாணவர்களுக்கும் ஆங்கிலத்தைத் தவிர, ஏனைய பாடங்கள் கட்டாயமாகும்.

8. பரீட்சைக்குப் போவோர் ஒவ்வொருவரும் ரூ. 5 டிரெஷரியில் கட்ட வேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தில் படித்து, அதன் வாயிலாக ஒரு முறை தேர்வுக்குச் சென்று தோல்வியுற்றவர்கள், இரண்டாம் முறை இத்தேர்வுக்குச் செல்வதாயின் ரூ. 2-8-0 கட்ட வேண்டும். விவரத்திற்கு டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸில் கேட்டு அறியவும்.

9. ஆங்கிலம் இன்றித் தேர்வு பெற்றவர்கள் ஆங்கிலத்திற்கு மட்டும் போகலாம். அதற்கு அணா 8 கட்ட வேண்டும்.

10. வெளியூர்களில் அரசாங்க டிரெஷரியிலும், சென்னையில் ரிஸர்வ் பாங்கியிலும்தான் பணத்தைக் கட்ட வேண்டும்.

11. பணம் கட்டிய டிரெஷரி செலானை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

12. விண்ணப்பத் தாள் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸிலும், ஜில்லா கல்வி அதிகாரியின் ஆபீஸிலும்தான் கிடைக்கும்.

13. கல்வி இலாகாவினர் அச்சடித்துள்ள விண்ணப்பத் தாளில்தான் விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

14. விண்ணப்பத் தாளில் எல்லாவற்றையும் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும்.

15. விண்ணப்பத் தாளையும், செலான் முதலியவற்றையும் இணைத்து, கல்வி இலாகாவிற்கு நேரே அனுப்ப வேண்டும். தபால் உறையின்மேல், "Application for Admission to the VIII Standard Public Examination, 1956 (செல்லும் ஆண்டைத் தக்கவாறு ஈண்டுக் குறிப்பிடுக.)—Private Candidates" என்று குறிப்பிட்டுப் போதிய தபால் தலை ஒட்டி அனுப்புதல் வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

To

The Secretary to the Commissioner for Government Examinations, Cathedral Post Office, MADRAS-6.

16. விண்ணப்பத்தாள் முதலியவை சாதாரணமாக நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள்ளாக, கல்வி இலாகாவைச் சேர வேண்டும். (டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸில் கேட்டுத் தெளிக.)

17. ரிஜிஸ்தர் செய்து அனுப்புவது நலம்.

18. கடைசி நாள்வரையில் காத்திராமல், 10, 15 நாட்களுக்கு முன்னதாகவே பணம் கட்டி, விண்ணப்பத்தை அனுப்புதல் நலம். குறிப்பிட்ட அந்த நாளுக்குள் அதிகாரிகளிடம் விண்ணப்பம் கிடைக்கவில்லையேல், விண்ணப்பத்தைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

19. விண்ணப்பத் தாளில் குறைபாடுகள் இருந்தாலும் அதனை நிராகரித்து விடுவார்கள்.

20. விண்ணப்பம் போய்ச் சேர்ந்ததா என்று அறிய, அதனுடன் உன் முகவரி எழுதிய தபால் கார்டு ஒன்றை இணைப்பது நலம்.

21. ஊருக்கு அருகில் உள்ள இடத்தைத் தேர்வு எழுதுவதற்குத் தேர்ந்து எடுத்தல் நலம். (அவ்விடத்தில் தேர்வு நடக்கும் "ஸெண்டர்" உள்ளதா என்று தெரிந்துகொள்.)

22. விண்ணப்பம் அனுப்பியபிறகு, தேர்வைப்பற்றிய எந்தச் செய்திக்கும் கல்வியிலாகாவினர் விடையளிக்க மாட்டார்கள்.

23. தேர்வு எழுதச் செல்வோர், தம்மைப்பற்றிய அறிமுகக் கடிதம் கொண்டு செல்ல வேண்டும். டிப்டி இன்ஸ்பெக்டர் அத்தகைய அறிமுகக் கடிதம் கொடுக்கலாம்; பள்ளிக்கூடத் தலைவரும் தரலாம்.

24. தேர்வு அறையில் ஒழுங்கு வேண்டும். ஒழுங்கு தவறி நடந்தாலும், காப்பி அடித்தாலும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

## விண்ணப்பம் தயாரிக்கக் குறிப்புக்கள்
### (மாதிரி விண்ணப்பத் தாளைப் பார்)

1 (*a*)-ல் உன் பெயரைப் பெரிய எழுத்துக்களில் (A, B, C, D) எழுது. உன் பெயருக்கு முன் உன் தந்தையினது பெயரின் முதலெழுத்தைச் சேர். ஊர்ப் பெயரின் முதலெழுத்தையும் சேர்க்கலாம். உன் வழக்கப்படி அதைக் குறிப்பிடு. இங்கு நீ குறிப்பிடும் பெயரைத்தான் ஸர்டிபிகேட்டில் குறிப்பிடுவார்கள். எனவே, உன் பெற்றோர் வைத்த பெயரைக் குறிப்பிடு. செல்லப் பெயரையோ, விளையாட்டுப் பெயரையோ குறிப்பிடாதே.

1 (*b*)-ல் நீ ஆணா, பெண்ணா என்பதைக் குறிப்பிடு (Male அல்லது Female).

2-ல் உன் ஜாதியைக் குறிப்பிடு. ஜாதிகளின் பெயர்கள் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. பார்த்து, உன் ஜாதி எதுவோ அதைக் குறிப்பிடு.

3-ல் நீ பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் குறிப்பிடு; தெளிவாக எழுது.

குறிப்பு: இங்கே குறிப்பிடும் தேதியைப் பிறகு மாற்ற முடியாது. எனவே, உன் பெற்றோர்களையோ, உறவினரையோ கேட்டு, எச்சரிக்கையாகக் குறிப்பிடு. இந்தத் தேதி உண்மை என்று தெரிந்தால்தான் டிப்டி இன்ஸ்பெக்டரோ, ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ உன் விண்ணப்பத் தாளில் கையெழுத்துப் போடுவார். எனவே, எச்சரிக்கையாக இரு.

4-ல் உனது தாய் மொழியைக் குறிப்பிடு. 'TAMIL' என்று குறிப்பிடு.

5-ல் நீ தேர்வு எழுத விரும்பும் இடத்தின் பெயரைக் குறிப்பிடு. தூரத்தில் உள்ள ஊரின் பெயரைக் குறிப்பிடாதே.

6 (1)-ல் நீ E. S. L. C. ஸர்டிபிகேட்டை இணைத்து வைத்திருக்கிறாயா, இல்லையா என்பதைக் குறிப்பிடு. வைத்திருந்தால், 'Yes' என்று குறிப்பிடு; இல்லையென்றால், 'No' என்று குறிப்பிடு.

6 (2)-ல் E. S. L. C. ஸர்டிபிகேட் இணைத்து வைத்திருந்தால், அதன் நம்பரையும், தேதியையும் குறிப்பிடு. இல்லையென்றால், 'Nil' என்று குறிப்பிடு.

6 (3)-ல் ஸர்டிபிகேட் வைத்திருந்தால்தான் இங்குக் குறிப்பிட வேண்டும். டிப்டி இன்ஸ்பெக்டர் கொடுத்ததாக இருந்தால், கீழே இருப்பதை அடித்துவிடு. ஸப்-அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டிரஸ் ஆப் கேர்ல்ஸ் ஸ்கூல்ஸ் கொடுத்திருந்தால், மேலே இருப்பதை அடித்துவிடு. அடிக்கப்படாத பகுதியில், ஸர்டிபிகேட் கொடுத்த உத்தியோகஸ்தரது ரேஞ்சின் பெயரைக் குறிப்பிடு.

6 (4) ல் நீ இதற்கு முன்பு இந்த அரசாங்கத் தேர்வுக்குப் போயிருக்கிறாயா? போயிருந்து, தோல்வியுற்றிருந்தால், அந்த ரிஜிஸ்தர் நம்பரையும், வருடத்தின் பெயரையும் தேர்வு எழுதின இடத்தின் பெயரையும் குறிப்பிடு. இப்பொழுதுதான் முதல் முறையாக இத்தேர்வுக்கு நீ போவதாக இருந்தால், 'No' என்று குறிப்பிடு.

7 (1)-ல் பணங்கட்டின ட்ரெஷரி ரசீது வைத்திருக்கிறாயா? வைத்திருந்தால், 'Yes' என்று எழுது.

7 (2)-ல் எவ்வளவு பணம் கட்டினாய் என்று குறிப்பிடு. இரண்டரை ரூபாயானால், Rs. 2-8-0 என்று குறிப்பிடு. ஐந்து ரூபாயானால், Rs. 5-0-0 என்று குறிப்பிடு.

7 (3)-ல் எந்த டிரெஷரியில் கட்டினாய் என்று குறிப்பிடு. ஸப் டிரெஷரியானால், 'Sub-Treasury' என்று குறிப்பிடு. டிரெஷரியானால், 'Treasury' என்று குறிப்பிடு.

7 (4)- ல்பணம் சட்டின செலானின் நம்பரையும், தேதியையும் குறிப்பிடு.

8. (மிக முக்கியமானது):

உனது முழு முகவரியையும் குறிப்பிடு. கல்வி இலாகாவினர் அனுப்பும் கடிதம் உனக்கு எளிதில் கிடைப்பதற்கு, தெளிவாக முகவரியை எழுதுதல் வேண்டும். ஆங்கிலத்தில் எழுது.

முகவரியைப் பெரிய எழுத்துக்களில் எழுது.
ஊர் அல்லது கிராமத்தின் பெயரைக் குறிப்பிடு.
போஸ்டாபீஸ் பெயரைக் குறிப்பிடு.
தாலுக்காவின் பெயரைக் குறிப்பிடு.
ஜில்லாவின் பெயரைக் குறிப்பிடு.

கடைசியில் உள்ள கட்டத்தில் உன் கையெழுத்தைப் போடு. ஆங்கிலத்தில்தான் கையெழுத்தைப் போட வேண்டும்.

நீ ஆங்கிலத் தேர்விற்கும் போவதானால் கொடுக்கப்பட்டிருக்கும் பாடங்களுக்குப்பிறகு '5' என்று குறிப்பிட்டு English optional என்று குறிப்பிடு. பின் 'Station' என்னும் இடத்தில் உன் ஊரின் பெயரைக் குறிப்பிடு.

'Date' என்னும் இடத்தில், நீ விண்ணப்பம் தயாரிக்கும் தேதியைக் குறிப்பிடு.

**எச்சரிக்கை: எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.**

**உதாரணம்:** தஞ்சை ஜில்லாவில், கும்பகோணம் தாலுக்காவில், கொட்டையூர் என்னும் கிராமத்தில், முருகப் பிள்ளை என்பவரது மகன், மாணிக்கம் என்பவன் தயாரித்திருப்பதுபோல் இங்கே மாதிரியாக விண்ணப்பத் தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. அவன் பள்ளிக்கூடத்திலேயே படியாதவன். இப்பொழுதுதான் முதல் முறையாக இப்பரீட்சைக்குப் போகிறான். அவன் விண்ணப்பம் தயாரித்திருப்பது போன்ற மாதிரித் தாள் ஒன்று அடுத்த பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோல், மாற்றவேண்டிய இடங்களில் மாற்றங்களுடன் விண்ணப்பத்தைத் தயாரிக்க.

தயாரிக்கப் பெற்ற விண்ணப்பத்தாளின் மாதிரி

# APPLICATION FORM.

## Public Examination at the end of VIII Standard, April 1956

## (FOR PRIVATE CANDIDATES ONLY.)

NOTE.—Application forms should be made out only in English.

| | |
|---|---|
| 1. (*a*) Name of candidate (in full) IN BLOCK LETTERS (as entered in the E.S.L.C.)<br>(*b*) Sex ... ... ... ... | *K. M. MANICKAM*<br>*Male* |
| 2. Class of community to which candidate belongs. The candidate will here enter Brahman, Non-Brahman Hindu, Harijan, Muslim, Indian Christian, Anglo-Indian or European, as the case may be. | *Non-Brahman Hindu* |
| 3. Date of birth ... ... ... ... | *12-10-1938* |
| 4. Language ... ... ... ... | *Tamil* |
| 5. Centre at which candidate desires to be examined.<br>The centre selected should be one nearest to the place where the candidate resides or is employed. | *Kumbakonam* |
| 6. (1) Whether the E.S.L.C. has been enclosed in original.<br>(2) Number and date of E.S.L.C. ...<br>(3) Issued by whom ... ... ...<br>(4) Whether the candidate has appeared for the Public Examination at the end of VIII Standard held in the previous year, and if so, the register number, year and the centre at which he/she appeared, should be furnished. | *No.*<br><br>Deputy Inspector of Schools<br>Sub-Assistant Inspectress of Girls' Schools<br>*No.* |
| 7. (1) Whether the candidate has attached the Treasury Officer's receipt for the fee paid by him?<br>(2) Amount of fee paid-Rs. 2-8-0/Rs. 5-0-0.<br>(3) Place of remittance Sub-Treasury / Treasury ...<br>(4) Chalan Number and date of remittance | *Yes*<br><br>*Rs. 5—0—0*<br>*Kumbakonam Sub-Treasury*<br>(இங்கு செலானின் நம்பரையும், தேதியையும் குறிப்பிடுக.) |
| 8. (ADDRESS IN FULL)—(IN BLOCK LETTERS). (In English.)<br>Station/Village ... ... ...<br>Post Office ... ... ...<br>Taluk ... ... ...<br>District ... ... ... | *K. M. MANICKAM*<br>*c/o Sri R. MURUGA PILLAI*<br>*KOTTAIYUR*<br>*KOTTAIYUR P.O.*<br>*KUMBAKONAM*<br>*TANJORE* |
| Signature of the candidate in English in full. | (இங்கு உன் கையெழுத்தை ஆங்கிலத்தில் இடு.) |

*Subjects of Examination*:

1. First Language.
2. Elementary Mathematics.
3. Social Studies.
4. Elementary Science.
5. *English* (*optional*). (தேவையானால்)

STATION: *Kottaiyur*
Date *20-11-1955*

NOV 1957

## மார்க்குகள் தெரிய வேண்டுமா?

(அரசியலார் அறிக்கை)

---

ஈ. எஸ். எல். சி. பரீட்சை எழுதிய மாணவர்கள், தேர்வில் வெற்றி பெற்றாலும், தோல்வியுற்றாலும் தங்கள் தேர்வு மார்க்குகளுக்கு அத்தாட்சிப் பத்திரம் வேண்டுமானால் முன்னதாகவே இரண்டு ரூபாய் செலுத்த வேண்டும். அங்கீகாரம் பெற்ற ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தம் பள்ளி மூலம் ஈ. எஸ். எல். சி. பரீட்சைக்குப் போன மாணவர்களின் மார்க்குகளையோ அல்லது அம்மாணவர்கள் எந்தப் பாடத்தில் தவறி விட்டனர் என்பதையோ அறிய விரும்பினால், அவர்கள் ஒரு மாணவனுக்கு நான்கணா வீதம் அரசாங்கத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் இந்த அத்தாட்சிப் பத்திரங்களில் சாதாரணமாக அரசாங்க ஆரம்பப் பள்ளி யிறுதித் தேர்வு நற்சாட்சிப் பத்திரத்தில் காணப்படும் விவரங்கள் எல்லாமே எழுதப்பட்டிரா. தேர்வில் எழுதிய மாணாக்கர்களின் மார்க்குகள் மட்டுமே அத்தாளில் காணப்படும். தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுகின்ற விவரப் பட்டியலிலும் மாணவர் ஒவ்வொரு பாடத்திலும் வாங்கிய மார்க்குகள் இவ்வளவு என்று குறிப்பிடப்பட்டிரா. அதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட மாணவர் எந்தப் பாடத்தில் தவறிவிட்டார் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும். எந்த ஆண்டுத் தேர்வுபற்றியும் அத்தாட்சிப் பத்திரம் வேண்டுபவர்களோ, தோல்வியுற்ற மாணாக்கரின் மார்க்கு விவரம் வேண்டுமென்பவரோ ஒவ்வொரு ஆண்டின் ஜூன் 5-ஆம் தேதிக்குப் பிறகே, அந்தந்த ஆண்டு, வேண்டிய விவரங்கள் இவற்றைக் குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். அவ்விண்ணப்பத்துடன், குறித்த தொகையை அரசாங்க கஜானாவில் செலுத்திப் பெற்ற ரசீதை இணைத்தல் வேண்டும். செலுத்த வேண்டிய தொகைகளை ஏதாவதொரு அரசாங்கக் கஜானாவில் சென்னை இராச்சிய வரவுக் கணக்கில் 36-ஆம் தலைப் பின்கீழ்க் குறிப்பிட்டுக் கட்டுதல் வேண்டும்.

The fees should be remitted under the head "XXXVI—a Miscellaneous Departments—Government Examinations by the Commissioner—Fee for certified copy of marks/list of failed candidates—E. S. L. C. Public Examination, 195..." விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: "Commissioner for Government Examinations, Madras-6."

---



# கொடி வணக்கம்

பள்ளிகளில் சுதந்திர நாளும், குடியரசு நாளும் விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. அந்நாட்களில் காலைப்பொழுதில் நம் நாட்டுக் கொடி ஏற்றப்படுகிறது. அக்கொடிக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம். அப்பொழுது நாம் நினைவிற் கொள்ளவேண்டுவன யாவை?

கொடியின் தலைப்புறத்தே காவி நிறம் காணப்படுகின்றது. அஃது எதனை நமக்கு நினைவூட்டுகின்றது? நம் நாடு சுதந்திரம் பெறும்பொருட்டுத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் பலர் தியாகம் செய்தார்களல்லவா? பலர் தம் இரத்தத்தைச் சிந்தினார்களல்லவா? அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் பல துன்பங்களைத் தியாகிகள் தாங்கிக்கொண்டார்களல்லவா? அத்தகைய விடுதலை வீரர்களுடைய தியாகத்தை அக்காவி நிறம் நமக்கு நினைவூட்டும். அவ்வளவில் **நாம் அத்தியாகிகளுக்கு நம் மனத்தினால் வணக்கம் செலுத்த வேண்டும்.**

கொடியின் இடைப்பகுதியில் உள்ள வெண்மை நிறமும், அசோக சக்கரமும் அமைதியைக் குறிக்கும். **நம் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கு நாம் பாடுபட வேண்டும்** என்பதனை அவை குறிப்பிடும்.

இனி, கொடியின் கீழ்ப்புறத்தே உள்ள பசுமை நிறம் நம் நாட்டின் செழிப்பைக் குறிப்பிடும். **நம் நாட்டின் இயற்கை வளத்தினை நாம் பயன்படுத்த வேண்டும்** என்னும் நினைவு அப்பொழுது நமக்கு உண்டாகும்.

எனவே, கொடி வணக்கம் செய்யுங்கால் விடுதலை வீரர்களின் தியாகம், நாட்டின் அமைதி, நாட்டின் வளத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நினைவிற்கொண்டு, அவற்றின் பொருட்டுப் பாடுபடுவதாக ஒவ்வொருவரும் உறுதி செய்துகொள்ளுதல் வேண்டும்.




1 NOV

# நாட்டு வணக்கப் பாடல்

*பாடலின் முழுப் பகுதி

[நேரம் : 52 நொடி]

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராடா
திராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆஸிஷ மாஹே
காஹே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

— *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

*பாடலின் குறுகிய பகுதி

[நேரம்: 20 நொடி]

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

* The "Indian Express" dated 2nd May, 1955.

## இப்பாடலின் இன்றியமையாமை

"யாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு" என்று பாரதியார் பாரத நாட்டைப் பாராட்டிப் பாடியுள்ளார். பாரத நாடு பழம்பெரு நாடு. பாரத நாடே நம் தாய்நாடு. நம் நாடு பொன்னாடு. தீரத்திலும், வீரத்திலும், ஈரத்திலும் சிறந்த மக்களை ஈன்றுள் நம் பாரதத் தாய். அவளைப் பணிந்து போற்றுதல் நம் தலைக்கடமை. பாடலின் வாயிலாகப் பணிதல் தக்கது.

நாம் யாவரும் பாரதத் தாயின் மக்கள். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மக்களுள் உயர்வு தாழ்வு இராதன்றே? நாம் எல்லோரும் ஓர் குலம்; ஓர் இனம். ஆகவே, நமக்குள் உடன் பிறப்புணர்ச்சி வேண்டும். அவ்வுணர்ச்சி நம் இதயத்தில் என்றும் நின்று நிலவ வேண்டும். அவ்வாறு நிலவுதற்கு நாட்டு வணக்கப் பாடல் நற்றுணை செய்யும். இப்பாடலைப் பாடி அருளியவர் நம் பாரத நாட்டுப் புலவர் பெருந்தகையாராகிய இரவீந்திர நாத தாகூர் அவர்கள் ஆவார்.

## எப்பொழுது, எவ்விதம் பாடுதல் வேண்டும்?

நாட்டு வணக்கப் பாடலின் முழுப் பகுதியையும், குறுகிய பகுதியையும் பாடலாம் என்று அரசியலார் விதித்துள்ளனர். குறுகிய பகுதிக்கேற்ற பாடத்தையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளின் பொழுதுதான் நாட்டு வணக்கப் பாடலைப் பாடல் வேண்டும் என்று அரசியலார் முன்பு கட்டுப்பாடு அமைத்திருந்தனர். அக்கட்டுப்பாட்டினை அரசியலார் அண்மையில் *(30—4—1955) நெகிழ்த்தி விட்டனர். அதன்படி இனி,

1. ஜனாதிபதி, கவர்னர், அமைச்சர் போன்ற அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் அதைப் பாடுதல் பெரிதும் விரும்பத்தக்கது. அவ்வாறு பாடுமாறு தூண்டுதலும் வேண்டும்.

---

* From The "Indian Express" dated 2nd May, 1955:—

The Government of India have laid down that these versions should be played only on the following occasions :

FULL VERSION: (i) on all occasions when the President is present in person (including broadcasts by the President on National Days); (ii) on all occasions for Governors and Rajpramukhs when they attend ceremonial parades within their State; and (iii) at Republic and Independence Day Parades when the National Flag is broken. SHORT VERSION: On all other occasions; (these will mostly be milliary functions.)

In contra-distinction to the occasions on which the two versions should be played as noted above, the Government of India have further decided that the National Anthem could be sung (with or without the accompaniment of the instruments) on occasions which although not ceremonial are nevertheless invested with significance, because of the presence of Governors, Rajpramukhs or Ministers. Government consider that this practice is not only desirable but should actually be encouraged. There would also be no objection to the singing (as distinct from playing) of the standard version of the National Anthem by educational institutions, during certain solemn functions such as Founders' Day, Annual Day, etc.

2. கல்வி நிலையங்களில் நடைபெறும் ஆண்டுவிழா போன்ற நிகழ்ச்சிக் காலங்களில் அதனைப் பாடலாம்.

3. பாடலை அரசியலார் அறுதியிட்டுள்ளவாறே பாட வேண்டும். எழுத்தும் அசையும், சீரும் தளையும் பிறழாமல் அப்பாடலை உள்ளவாறே பாடவேண்டும்.

4. பள்ளி விழாக்களில் பாடலின் முழுப்பகுதியைப் பாடுதல் தக்கது.

5. விழாக்களின் முடிவில்தான் அப்பாடலைப் பாட வேண்டும்.

6. பள்ளி விழாக்களில் வாய்ப்பாட்டாகத்தான் அதனைப் பாடவேண்டும்.

7. இன்னிசைக் கருவிகளுடன் இயைந்தும் அதனைப் பாடலாம்.

8. இன்னிசைக் கருவிகள் இல்லையெனினும் இழுக்கில்லை.

## இப்பாடலின் விளக்கம்

மக்களின் மனத்தகத்தே தங்கிடும் தலைவ! பாரதப் பெருவள்ளலே! நீ வெல்க! பாஞ்சாலம், சிந்து, குஜராதா, மராடா, திராவிடம், உத்கலம், வங்கம் ஆகிய நாடுகளும், விந்தியம், இமயம் முதலிய மலைகளும், யமுனை, கங்கை முதலிய ஆறுகளும், கடலும் நின் புகழைக் கூறி மகிழும். என்றும் வெற்றி நினக்கு மிகும். மக்கட் கூட்டம் மகிழ்ந்துறையும் தாயகம் வெல்க! வெல்க நீ! வெல்க! வெல்க! நினக்கே வெற்றி வெற்றி! வெற்றி வெற்றி!!

## பாடுங்கால் நம் கடமை

நாட்டு வாழ்த்துப் பாடலைப் பாடவேண்டிய முறைபற்றியும், பாடுங்கால் ஆண்டுக் குழுமியுள்ள மக்களின் ஒழுகலாறு பற்றியும உயர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் பலவிடங்களில் பன்முறை கூறியுள்ளார்.

*25—9—1952 அன்று, செகந்திராபாத் என்னும் இடத்தில் அவர், "நாட்டு வணக்கப் பாடலுக்கு நாம பெருமதிபபினைத் தருதல் வேண்டும. பாடலைப் பாடுங்கால் நாம் யாவரும் போர் வீரர்களைப் போல நிற்க வேண்டும்; அசைதல் கூடாது; சட்டைப் பைகளில் கையைத் திணித்துக்கொள்ளுதல் கூடாது" என்று கூறியுள்ளார்.

† 22—2—1955 அன்று, ஹஸாரிபாக் என்னும் இடத்தில் அவர், "நாட்டு வணக்கப் பாடல் பாடப் பெறுங்கால் எழுந்து

* "தினமணி", 26-9-1952.
† The "Indian Express" dated 23rd February, 1955.

நின்று வணக்கம் காட்டுதல் நம் தலைக்கடமையாம். அது முடியும் வரையில் யாவரும் நிமிர்ந்து நிற்றல் வேண்டும்; நகர்தல் கூடாது; நம் நாட்டுப் போர் வீரர்களைப்போல் நிற்க வேண்டும். தலையைச் சொறிதலோ ஒருவருடன் ஒருவர் பேசுதலோ கூடாது. பாரத நாட்டின் குரலே அப்பாடல். அப்பாடலின் கருத்தைப் பின்பற்றி நடப்பேன் என்று ஒவ்வொருவரும் உறுதி கூறிக் கொள்ளுதல் வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

*9—5—1955 அன்று பெர்ஹாம்பூரில் அவர், "தேசிய கீதம் இந்தியாவின் குரல். அந்தப் பாடலைப் பாடும்பொழுது கவனியாமல் இருப்பது நம் நாட்டை அவமதிப்பதாகும்'' என்று கூறியுள்ளார். மேலும் அவர், "நாட்டு வணக்கப் பாடலைப் பெருங் குரலில், வானமே அதிரும்படி பாட வேண்டும். யாவரும் சேர்ந்து பாட வேண்டும். அப்பொழுது குழுவிசை அமைய வேண்டும். அதனைப் பாடுங்கால் அசைவதோ, கண்ணையும் கருத்தையும் வேறு புறத்தில் செலுத்துவதோ கூடாது. பாடத் தெரியாதவர்களும் பாடப் பழகிக் கொண்டு கூட்டத்துடன் சேர்ந்து பாடுதல் வேண்டும்'' என்று அப்பொழுது கூறியுள்ளார்.

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களே! நமது நாட்டின் முதலமைச்சர் ஏன் அவ்வாறு அடிக்கடி வற்புறுத்திக் கூறியுள்ளார் என்று சிந்தித்துப் பாருங்கள். நம் நாட்டில் மொழிகள் பல உள்ளன; பலவகைப்பட்ட இனத்தவர் உள்ளனர்; சமயங்கள் பல உள்ளன. இனம் பற்றியும், சமயம் பற்றியும், மொழி பற்றியும் நமக்குள் ஏற்படக் கூடிய பிணக்குகளையும் பூசல்களையும் அகற்றி, நாம் யாவரும் உடன் பிறந்தவர்கள் என்னும் உணர்ச்சியையூட்டுவதற்கு அப்பாடல் பெருந்துணை செய்யும். பாடலைப் பாடுங்கால் எழும் குழுவிசை (Chorus) நாம் யாவரும் ஒன்று என்றும், நமக்குள் உயர்வு தாழ்வு இல்லை என்றும் நமக்கு எடுத்துக்காட்டும். நாட்டு வணக்கப்பாடலாகிய தேசீயப்பாடலை ஆங்கிலத்தில் 'National Anthem' என்பர். அவ்வாங்கிலச் சொற்றொடர், 'அரசியலார் இசைவு பெற்று அமைந்த தேசீயப் பாடல்' என்று பொருள்படும். 'Anthem' என்னும் ஆங்கிலச் சொல், 'தூய்மை வாய்ந்த குறுகிய குழுவிசைப் பாட்டு' என்று பொருள்படும். எனவே, நீங்கள் நாட்டு முதல் அமைச்சர் கூறியுள்ள நல்லுரைகளின்படி நடத்தல் வேண்டும். நாடு தழைக்க நாட்டில் செல்வங் கொழிக்க, நாட்டுப்பற்று என்றும் நிலவ, மக்கள் இன்பமுடன் வாழ அத்தகைய உணர்ச்சி இன்றியமையாதது.

———

* The "Hindu" dated 10th May, 1955.

12 NOV

# 1. பாட்டுப் பகுதி

பாட்டுப் பகுதியில், I. வாழ்த்துப் பகுதி, II. அறவுரைப் பகுதி, III. தொடர்நிலைச் செய்யுட் பகுதி, IV. பல்சுவைப் பகுதி என நான்கு பிரிவுகள் உள்ளன.

---

## I. வாழ்த்துப் பகுதி

1. கடவுள் வாழ்த்து, 2. மொழி வாழ்த்து என இரு பகுதிகள் வாழ்த்துப் பகுதியில் அடங்கியுள்ளன.




எடுத்த காரியம் வெற்றியுடன் இனிது முடிவதற்குக் கடவுள் அருள் வேண்டும். ஆகையால் எந்த நூல் இயற்றினாலும் முதலில் கடவுள் வாழ்த்துப் பாடுதல் புலவர்களின் இயல்பாகும்.

**கடவுள் வாழ்த்து :** கடவுளை வாழ்த்துதல் என்பது பொருள். இரண்டாம் வேற்றுமைத் தொகை. கடவுளது வாழ்த்து என விரிப்பின் ஆறும் வேற்றுமைத் தொகை. வாழ்த்து - வாழ்த்துதல் ; தொழில் பெயர்.

1. மாணிக்கவாசகர் அருளிய

### திருவாசகம்

### முன்னுரை

இப்பகுதியில் வந்துள்ள பாடல் திருவாசகத்தில் திருவேசறவு என்னும் பதிகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். பத்துப் பாடலைக்கொண்ட பகுதிக்குப் 'பதிகம்' என்று பெயர். இது திருப்பெருந்துறையில் பாடப்பட்டது. தவறு புரிபவர்களையும் கடவுள் திருத்தித் தம் அடியாராக ஏற்றுக்கொள்வார் என்பதை இப்பாடலால் உணரலாம்.

இப்பாடல் எம்மதத்தினரும் சம்மதமென்று பாடத்தகுந்த பெருமையை உடையதாகும்.

**திருவேசறவு :** துன்பப்படுவதிலிருந்து நீக்குதல்.

**நூலின் பெயர்க் காரணம் :** திரு வாசகம் - அழகிய சொற்களால் ஆகிய பாமாலை என்பது பொருள். திரு - அழகு. வாசகம் - சொல்.

**நூலின் பெருமைகள் :**

1. 'திருவாசகம் என்னும் தேன்' என்று பெரியவர்களால் பாராட்டப் பெறுவது.

2. கற்போர் மனத்தைக் கரையச்செய்து பாவங்களை ஒழித்து இறைவன் அருளைப் பெறுவதற்குத் துணையாக இருப்பது.

---

"அகர முதல எழுத்தெல்லாம்." — வள்ளுவர்.

3. திருவாசகப் பாக்களின் சிறப்பினை அறிந்து இறைவனே மாணிக்க வாசகர் பாடும்போது எழுதி வந்ததாக அறிஞர்கள் கூறுகிறார்கள்.

4. இதன் பெருமையை உணர்ந்த டாக்டர் போப் துரைமகனார் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

5. இந்நூல் தெய்வத்தன்மை உடைய பாடல்களால் ஆகிய உயர்ந்த நூலாகும்.

## ஆசிரியர் வரலாறு



**ஆசிரியர் பெயர் :** மாணிக்கவாசகர்.

**இயற்பெயர் :** திருவாதவூரர்.

**பிறப்பிடம் :** பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூர்.

**சமயம் :** சைவம்.

**குலம் :** அமாத்தியப் பிராமண குலம்.

**ஆதரித்தவர் :** அரிமர்த்தன பாண்டியன்.

**சிறப்புப் பெயர் :** தென்னவன் பிரமராயன்.

**தொழில் :** பாண்டியனின் முதல் அமைச்சர்.

**இயற்றிய வேறு நூல் :** திருக்கோவையார்.

**காலம் :** சிலர் 4-ஆம் நூற்றாண்டு என்பர்; சிலர் 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

## பொருள் விளக்கம்

### உரைநடை

எம்பெருமானே! மூத்தானே! மூவாத முதலானே! முடிவு இல்லா ஒத்தானே! பொருளானே! உண்மையுமாய் இன்மையுமாய்ப் பூத்தானே! இங்குப் புகுந்து புரள்வேனைக் கருணையினால் நீ பேர்த்து ஆண்டவாறு அன்றே.

### பதவுரை

எம் பெருமானே - எம் தலைவனே!
மூத்தானே - (எல்லாப் பொருள்களுக்கும் முன்னே தோன்றியமையால்) மூத்தவனே!
மூவாத - முதுமை அடையாத
முதலானே - ஆதியே!
முடிவு இல்லா - அளவு இல்லாத
ஒத்தானே - அருள் நூல் வடிவமாக இருப்பவனே!
பொருளானே - அந்நூல்களின் பொருளாகவும் இருப்பவனே!
உண்மையுமாய் - (மெய்யருக்கு) உள்ள பொருளாகியும்,
இன்மையுமாய் - (பொய்யருக்கு) இல்லாத பொருளாகியும்,
பூத்தானே - தோன்றினவனே!
இங்கு - இவ்வுலகில்
புகுந்து - பிறந்து
புரள்வேனை - உலக வாழ்வில் துன்பப்படுகின்ற என்னை
கருணையினால் - நின் திருவருளினால்
பேர்த்து - (அவ்வாறு துன்பப்படு வதிலிருந்து) நீக்கி
நீ ஆண்டவாறு அன்றே - நீ என்னை ஆட்கொண்ட முறைதான் என்னே!

## தெளிவுரை

எம் தலைவனே! என்றும் முதுமை அடையாத முதல்வனே! அளவில்லாத நூல் வடிவமானவனே! அவற்றின் பொருளாக விளங்குபவனே! மெய்யருக்கு மெய்யாகவும், பொய்யருக்குப் பொய்யாகவும் தோன்றியவனே! இவ்வுலகிலே பிறந்து உலக வாழ்வில் துன்பப்படும் என்னை நின் திருவருளினால் நீ அத்துன்ப நிலையிலிருந்து நீக்கி ஆண்ட முறையை என்னென்று பாராட்டுவேன்?

## விளக்கம்

கடவுளே உலக உயிர்களின் தாயாகவும் தந்தையாகவும் விளங்குபவன். அவன் அருளினாலேயே எல்லா உயிர்களும் பிறந்து வாழ்ந்து மடிகின்றன. ஆதலால் '**மூத்தானே**' என்றார்.

இறைவன் முதலும் முடிவும் இல்லாதவர்; என்றும் இளமை உடையவர். ஆதலால் '**மூவாத முதலானே**' என்றார்.

ஆண்டவனின் தன்மைகளையும், கருணைத் திறத்தையும் போற்றிப் புகழும் நூல்களுக்கு அளவில்லை. வேதங்களும் புராணங்களும் கடவுளைப் பற்றியே பலபடப் பாராட்டுகின்றன. அதனாலேயே '**முடிவில்லா ஓத்தானே**' என்றார்.

இறைவனிடத்தில் உண்மை அன்புடையவர்களின் மனக்கண்ணில் அவன் புலப்படுதலால் உள்பொருளாகவும், அந்த அன்பு இல்லார்க்கு எவ்வகையிலும் புலப்படாமையால் இல்பொருளாகவும் விளங்குவான் என்பதைக் குறிப்பிடுவதற்காக '**உண்மையுமாய் இன்மையுமாய்**' என்றார்.

ஐம்புல ஆசையினாலே உயிர்கள் உலகில் பிறந்து இறந்து உழல்கின்றன. துன்பப்படும் உயிர்களுக்கு இறைவன் உண்மை ஞானத்தை அளித்து ஆட்கொண்டு பேரின்பமாகிய முத்தியை அளிப்பான். இவ்வாறு தவறு புரிபவர்களையும் நல்வழிப்படுத்தி இறைவன் அடியாராக ஏற்றுக் கொள்கிறான். அஃது அவனது கருணையின் தன்மை என்பது புலப்படுகிறது. மூத்தானே × மூவாத முதலானே, ஓத்தானே × பொருளானே, உண்மையுமாய் × இன்மையுமாய் என இறைவனது தன்மையை ஒன்றுக்கொன்று மாறுபடுத்திக் கூறி இருக்கும் நயம் படித்து இன்புறத்தக்கது.

ஒத்து - ஓதப்படுவது; நூல். ஓத்தானே, பொருளானே என்பதற்குச் சொல் உலகமும் பொருள் உலகமும் ஆக இருப்பவனே என்றும் பொருள் கூறுவர். பேர்த்தே - மீண்டும்.

## இலக்கணம்

மூத்தானே! பூத்தானே! — வினையாலணையும் பெயர்கள். மூவாத — தெரிநிலைப் பெயரெச்சம். முடிவில்லா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். புரள்வேனை — வினையாலணையும் பெயர். முடிவு + இல்லா = முடிவில்லா.

## கேள்வியும் பதிலும்

1. கடவுள் வாழ்த்து கூறப்படுவது ஏன்?

எடுத்துக்கொண்ட செயல் இனிது நிறைவேறுதற் பொருட்டு அருள் புரியுமாறு கடவுள் வாழ்த்து கூறப்படுகின்றது.

***2. மாணிக்கவாசகரைப்பற்றிக் குறிப்பு எழுதுக.**

மாணிக்கவாசகர் சிறந்த சிவனடியார். இவர் பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூரில் அமாத்தியப் பிராமண குலத்தில் தோன்றினார். சிவத் தலங்கள் தோறும் சென்று சிவபெருமானைக் குறித்து மனமுருகப் பாடினார். இவர் அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராகப் பணியாற்றினார். திருவாசகமும் திருக்கோவையாரும் இவர் இயற்றிய நூல்களாகும். இவர் காலம் கி. பி. 4-ஆம் நூற்றாண்டு என்பர்; 9-ஆம் நூற்றாண்டு என்றும் சிலர் கூறுவர்.

**3. திருவாசகத்தின் பெருமைகள் யாவை ?**

(1) 'திருவாசகம் என்னும் தேன்' என்றும், 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்றும் பெரியோர்களால் பாராட்டப்பட்டது.

(2) தெய்வத்தன்மை பொருந்திய பாக்களால் ஆகியது.

(3) மாணிக்கவாசகர் பாடிவர, சிவபெருமானே நேரில் எழுதிக் கொண்ட பெருமையுடையது.

(4) கற்போர் மனத்தைக் கரையச்செய்து இறைவன் திருவருளைப் பெறுவதற்குத் துணையாக இருப்பது.

(5) டாக்டர் போப் துரைமகனார் இதன் பெருமையை உணர்ந்து இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**4. திருவாசகம் - பெயர்க் காரணம் கூறுக.**

அழகிய சொற்களால் ஆகிய பாமாலையாகையால் இதற்குத் திருவாசகம் என்று பெயர்.

**5. நம் பாடப்பகுதி திருவாசகத்தில் எப்பதிகத்தில் வந்துள்ளது ?**

எம் பாடப்பகுதி திருவாசகத்தில் 'திருவேசறவு' என்னும் பதிகத்தில் வந்துள்ளது.

***6. மாணிக்கவாசகர் இறைவனின் தன்மைகளைக் குறித்துக் கூறுவன யாவை ?**

இறைவன் எப்பொருளுக்கும் மூத்தவன்; என்றும் முதுமையடையாத முதல்வன்; அளவில்லாத அருள் நூல்களின் வடிவமாக இருப்பவன்; அவற்றின் பொருளாகவும் விளங்குபவன்; மெய்யருக்கு உள் பொருளாகவும், பொய்யருக்கு இல்பொருளாகவும் தோன்றுபவன்; இவ்வுலகில் பிறந்து உலக வாழ்வில் துன்புறும் அடியார்களைத் தன் திருவருளினால் அத்துன்பத்தி லிருந்து நீக்கி ஆட்கொள்பவன்.

***7. இப்பாடலின் கருத்து யாது ?**

இறைவன் தவறு செய்பவர்களையும் நல்வழிப்படுத்தித் தன் அடியாராக ஏற்றுக்கொள்வான். அஃது அவனது கருணையின் திறமாகும்.

**8. பொருள் கூறுக : (விடை எதிரெதிரே காண்க)**

(1) மூவாத - முதுமை யடையாத.

(2) பூத்தானே - தோன்றியவனே.

(3) புரள்வேனை - துன்பப் படுபவனாகிய என்னை.

(4) பேர்த்தே - மீண்டும்.

" எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்." — ஔவையார்.

9. **இலக்கணக் குறிப்பு வரைக:** (விடை எதிரெதிரே காண்க)

(1) மூவாத - தெரிநிலைப் பெயரெச்சம்.

(2) முடிவில்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

(3) பெருமானே - விளிப்பெயர்.

(4) பேர்த்து - வினையெச்சம்.

# மொழி வாழ்த்து

2. சோமசுந்தர பாரதியார் இயற்றிய

## தமிழ்ப் பல்லாண்டு

### முன்னுரை

மொழியையும் கடவுளாகவே எண்ணி வாழ்த்துதல் புலவர்கள் வழக்கம். மொழி வாழ்த்து - மொழியை வாழ்த்துதல். இரண்டாம் வேற்றுமைத் தொகை.

நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் பெருமையைக் கூறி அது பல ஆண்டுகள் வாழவேண்டும் என வாழ்த்தும் பகுதியாகையால் இது தமிழ்ப் பல்லாண்டு எனப்பட்டது.

### ஆசிரியர் வரலாறு

**ஆசிரியர் பெயர் :** ச. சோமசுந்தர பாரதியார்.

**தந்தையார் :** எட்டையபுரம் சமஸ்தான உட்படு கருமத் தலைவராக இருந்த சுப்பிரமணிய நாயகர் என்னும் எட்டப்பபிள்ளை.

**பிறந்த நாள் :** 27-7-1879.

**ஊர் :** எட்டையபுரம். தற்போது பசுமலையில் வசிக்கிறார்.

**தொழில் :** நெடுநாட்கள் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இருந்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றித் தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

**ஆசிரியரின் நூல்கள் :** 1. தொல்காப்பியவுரை, 2. மாரி வாயில், 3. மங்கலக்குறிச்சியில் பொங்கல் நிகழ்ச்சி, 4. சேரவேந்தர் தாய வழக்கு, 5. திருவள்ளுவர், 6. தசரதன் குறையும் கைகேயி நிறையும்.

**ஆசிரியரின் பெருமைகள் :** 1. இவர் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரின் நண்பர். பிள்ளைப் பருவமுதல் தோழமையாய் உடன் விளையாடி வாழப்பெற்றவர்.

2. ஆங்கிலம், தமிழ், மலையாளம், லத்தின் முதலிய மொழிகளில் சிறந்த புலமை உடையவர்.

3. யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இவரது தமிழ்ப் புலமையைப் பாராட்டி 'நாவலர்' என்ற பட்டம் கொடுத்துச் சிறப்பித்தனர்.

4. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் அண்மையில் இவருக்கு 'டாக்டர்' என்னும் பட்டம் அளித்துப் பெருமையளித்தனர்.

5. தமிழ்க் கடலைக் கரைகண்ட நம் பாரதியார் இராமநாதபுரம், எட்டையபுரம் சமஸ்தானத் தலைவர்களாலும், செட்டி நாட்டரசராலும் பெரிதும் பாராட்டிப் போற்றப்பெற்றவர்.

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்."—அதிவீரராம பாண்டியன்.

## நம் பாடப் பகுதி

'**தமிழ்ப் பல்லாண்டு**' என்னும் நம் பாடப்பகுதி, ஆசிரியர் அவர்கள் இயற்றிய **மாரி வாயில்** என்னும் கவிதை நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

மேகத்தைத் தூதாக அனுப்புதல் என்பது இதன் பொருள். மாரி - மேகம். வாயில் - தூது.

ஒரு சமயம் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தான். அவனைத் திருமணம் செய்துகொண்ட பாண்டிய மன்னனின் மகள், அவனைப் பிரிந்த காலத்தில் குமரிப்பக்கம் வந்து, கணவன் தீதில்லாமல் திரும்பி வரவேண்டுமென்று கன்னித் தெய்வத்தை வழிபட்டாள். மழைக்காலத்தில் ஒருநாள் கடலாடும்போது கிழக்கு வானத்தில் மேகத்தைக் கண்டு அதனைத் தன் கணவனாகிய அர்ச்சுனனிடம் தூதாக அனுப்ப, அம்மேகம் விசயனிடம் காதலியின் குறைகளை முறையிட்டு மீள்வதாகக் கற்பனைசெய்து இந்நூல் எழுதப் பெற்றது.

## பொருள் விளக்கம்

### 1. பூமகளின் முதல் மகள் தமிழ்த்தாய்

#### உரைநடை

பொய் மொழியா, புலமை வளம் வள்ளுவர் போல்வாரும், போற்றும் அறிவு அற உரிமை கீரன் அனையாரும், மெய் மொழியால் உயர்த்த புகழ்மடியில் வளர் தமிழை, மேதினியாள் முதல் மகளாய் மேவுதல் ஓர் வியப்போ.

#### பதவுரை

**பொய் மொழியா** - பொய் மொழி கூறாத
**புலமை வளம்** - அறிவு வளத்தைப் பெற்ற
**வள்ளுவர் போல்வாரும்** - திருவள்ளுவர் போன்ற மொழிப்புலவர்களும்
**போற்றும் அறிவு** - யாவரும் புகழும் அறிவையும்
**அற உரிமை** - நீதியில் சிறக்கும் உரிமையையும் உடைய
**கீரன் அனையாரும்** - நக்கீரன் போன்ற சங்கப் புலவர்களும்
**மெய் மொழியால்** - தம் உண்மைச் சொற்களால் ஆகிய பாக்களாலும் நூல்களாலும்
**உயர்த்த** - உயர்த்திய
**புகழ் மடியில்** - புகழாகிய மடியில்
**வளர் தமிழை** - வளர்கின்ற தமிழ் மகளை
**மேதினியாள்** - பூமகள்
**முதல் மகளாய்** - தன் முதல் மகளாக
**மேவுதல்** - கொள்வது
**ஓர் வியப்போ?** - ஒரு வியப்பாகுமோ? (வியப்பன்று. இயல்பே.)

#### தெளிவுரை

பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் போன்றவர்களும், அறிவும், நீதிநெறியும் உடைய நக்கீரன் போன்றவர்களும் தம் உண்மைச் சொற்களால் ஆகிய பாக்களாலும் நூல்களாலும் வளர்த்த புகழினிடத்தில் தமிழ்மகள் வளர்கிறாள். அத்தகைய தமிழ்மகளைப் பூமகள் தன் முதல் மகளாகக் கொண்டதில் வியப்பில்லை.

---

தம் வரலாற்றுக் குறிப்பை மனமுவந்து அனுப்பி உதவிய டாக்டர், நாவலர், ச. சோமசுந்தர பாரதியாருக்கு எம் நன்றி.

— தி லிட்டில் ப்ளவர் கம்பெனியார்.

### விளக்கம்

திருக்குறளுக்குப் பொய்யாமொழி என்னும் வேறு பெயரும் உண்டு. சாதி சமய வேறுபாடு இன்றி எல்லாருக்கும் பொருத்தமான உண்மைக் கருத்துக்களையே கூறுவதால் இது பொய்யாமொழி எனப்படும்.

ஒரு சமயம் சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும், 'பெண்கள் கூந்தலில் இயற்கை மணம் உண்டு' என்று அவர் கூறியது குற்றமே என வாதிட்டார் நக்கீரர்; நீதி வழியில் நிற்கும் உரிமை தமக்கு உண்டு என்பதை நிலைநாட்டினார். இவ்வாறு திருவள்ளுவர் பொய்யா மொழியாலும், நக்கீரனார் நேர்மையினாலும் தமிழின் புகழினை வளர்த்தார்கள். அவர்கள் வளர்த்த புகழாகிய மடியில் தமிழ் மகள் வளர்கிறாள். ஆதலால் பூமகள் தமிழ்மகளைத் தன் முதல் மகளாகப் பாராட்டுவதில் ஆச்சரியமில்லை. இஃது இயல்பே ஆகும்.

### இலக்கணம்

மொழியா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அறிவு அறம் : அறிவும் அறமும் — உம்மைத் தொகை. உயர்த்த புகழ் — பெயரெச்சத் தொடர். வளர்தமிழ் — வினைத்தொகை. மேவுதல் — தொழிற் பெயர்.

## 2. பல்லாண்டு நிதம் பாடிப் பைந்தமிழை வளர்ப்போம்

### உரைநடை

நாம் நல்ல தமிழ் நங்கை வளம் நாடுதும்; நாடி நானிலத்து மேன் மொழிகள் நல்கு பல வளமும் எல்லையறும் எழில் இளையாட்கு அணிந்து மகிழ்ந்து ஏத்தி பல்லாண்டு நிதம் பாடி என்றும் இசை வளர்க்குவம்.

### பதவுரை

நாம் - நாங்கள்

நல்ல தமிழ் நங்கை - நல்ல தமிழ்த் தாயின்

வளம் நாடுதும் - வளத்தை ஆராய்வோம்

நாடி - அவ்வாறு ஆராய்ந்து

நானிலத்து - இப்பூமியில்

மேன் மொழிகள் நல்கும் - மேனாட்டு மொழிகள் வெளியிடும்

பல நலமும் - பல்வகை நன்மைகளையும்

எல்லையறும் எழில் - அளவில்லாத அழகுடைய

இளையாட்கு அணிந்து - இளமைப் பருவம் வாய்ந்த தமிழ்த் தாய்க்கு அளித்து அழகுபடுத்தி

மகிழ்ந்து ஏத்தி - அவளை மகிழ்ந்து புகழ்ந்து

பல்லாண்டு - (அவள் நெடுங்காலம் சீரும் சிறப்பும்பெற்று வாழவேண்டும் என்னும்) பல்லாண்டை

நிதம் பாடி - நாள்தோறும் பாடி

என்றும் - எக்காலத்திலும்

இசை வளர்க்குவம் - தமிழ்த் தாயின் புகழை வளர்ப்போம்.

### தெளிவுரை

நாம் நல்ல தமிழ் மொழியின் வளத்தை ஆராய்வோம்; அவ்வாறு ஆராய்ந்து, இவ்வுலகத்தில் வழங்கும் மேனாட்டு மொழிகள் வெளியிடும் பல நல்ல கருத்துக்களையும், அளவில்லாத அழகுடைய இளமைப் பருவம் வாய்ந்த தமிழன்னைக்கு அளித்து அவளை அழகுபடுத்துவோம்; மகிழ்ந்து புகழ்ந்து, அவள் நெடுங்காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என்னும்

---

"குணமே உண்மையான செல்வம்; பணம் அன்று." — ரஸ்கின்.

பல்லாண்டை நாள்தோறும் பாடி, எக்காலத்திலும் தமிழ்த்தாயின் புகழை வளர்ப்போம்.

### விளக்கம்

தமிழ் இக்காலத்தில்தான் தோன்றியது என்று அளவிட்டுக் கூற முடியாத பழைமை வாய்ந்தது; அளவில்லாத இலக்கியங்களை உடையது. அதன் இலக்கிய வளங்களை உணர்வது தமிழ்மக்கள் கடமையாகும். அத்துடன் நில்லாமல் ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளில் உள்ள சாத்திரங்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்து உதவுதல் வேண்டும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்றார் பாரதியார். நானிலம்—நான்கு வகை நிலங்களால் ஆகிய நாடு: அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

### இலக்கணம்

நாடுதும் — **தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று.** நான்கு + நிலம் = நானிலம். மேற்கு + மொழிகள் = மேன்மொழிகள். நாடி, அணிந்து, ஏத்தி, பாடி—**வினையெச்சங்கள்.** பல + ஆண்டு = பல்லாண்டு. வளர்க்குதும்—**தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று.**

## கேள்வியும் பதிலும்

**1. மொழி வாழ்த்து—பெயர்க் காரணம் கூறுக.**

மொழியை வாழ்த்துதல் என்று பொருள்படுவதால் மொழிவாழ்த்து எனப்பட்டது.

***2. டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களின் ஊர், காலம் முதலியவற்றைக் குறிப்பிடுக.**

விடை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.

***3. டாக்டர் சோமசுந்தர பாரதியார் கூறும் தமிழின் பெருமைகள் யாவை?**

பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் போன்றவர்களும், அறிவும் நீதி நெறியும் உடைய நக்கீரனார் போன்றவர்களும் தம் உண்மைச் சொற்களால் ஆகிய பாக்களாலும் நூல்களாலும் வளர்த்த புகழினிடத்தில் தமிழ்த்தாய் வளர்கிறாள். அத்தகைய தமிழ்மகளைப் பூமகள் தன் முதல் மகளாகக் கொண்டிருப்பதில் வியப்பு இல்லை. இயல்பாகவே அவள் முதல் மகளே ஆவாள்.

***4. தமிழ்த்தாய் எவ்வாறு பூமகளின் முதல் மகள் ஆவாள்?**

திருவள்ளுவர் இயற்றிய உலக வேதமாகிய திருக்குறளாலும், நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படைபோன்ற நூல்களாலும் உலகில் தமிழின் புகழ் நெடுங்காலமாகப் பரவியுள்ளது. இவ்வாறு தோற்றத்தாலும், மெய்ம்மை, அறிவு, அறம், புலமை முதலிய ஆற்றல்களாலும் தமிழ்மகள் தரைமகளின் தலைமகளாக விளங்குகிறாள்.

**5. தமிழ்த் தாய்க்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் யாவை?**

நாம் தமிழிலக்கியங்களை ஆராய்ந்து அவற்றின் வளங்கண்டு மகிழ வேண்டும். மேனாட்டு மொழிகளில் உள்ள பல கலைகளையும் செய்திகளையும் தமிழில்

மொழிபெயர்த்துத் தமிழன்னையை அலங்கரித்துப் புகழ்ந்து நாள்தோறும் பாடி அவள் புகழை எக்காலத்தும் வளர்க்க வேண்டும்.

6. பொருள் கூறுக: (விடை எதிரெதிரே காண்க)

(1) மேவுதல் - பொருந்துதல்.
(2) நாடுதும் - ஆராய்வோம்.
(3) ஏத்தி - புகழ்ந்து, வணங்கி.
(4) நிதம் - தினந்தோறும்.

7. இலக்கணக் குறிப்பு வரைக: (விடை எதிரெதிரே காண்க)

(1) வளர்தமிழ் - வினைத்தொகை.
(2) மேவுதல் - தொழிற் பெயர்.
(3) நானிலம் - பண்புத் தொகை.
(4) வளர்க்குதும் - தன்மைப் பன்மைஎதிர்கால வினைமுற்று.
(5) நங்கை வளம் - ஆறும் வேற்றுமைத் தொகை.

---

# II. அறவுரைப் பகுதி

நீதிகளைக் கூறும் பகுதி என்பது இதன் பொருள். இப்பகுதியில், 1. திருக்குறள், 2. நாலடியார், 3. இனியவை நாற்பது, 4. அறநெறிச் சாரம் என்னும் நீதி நூல்களிலிருந்து செய்யுட்கள் பாடமாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

## 1. திருவள்ளுவர் இயற்றிய

## திருக்குறள்

### முன்னுரை

சிந்தைக்கும் செவிக்கும் இனியது திருக்குறள். அதன் பெருமையை அறிந்தே அரசாங்கத்தார் ஆரும் வகுப்பு முதல் எல்லா வகுப்புக்கும் அதனைக் கட்டாய பாடமாக வைத்துள்ளனர்.

பெயர்க் காரணம்: திரு - மேன்மை; குறள் - இரண்டடி வெண்பா. மேன்மையான குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள். அடையடுத்த கருவியாகுபெயர்.

பிரிவு: திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. மொத்தம் 133 அதிகாரங்களும், அதிகாரம் ஒன்றிற்குப் பத்து பாட்டு வீதம் 1330 குறட்பாக்களும் அடங்கியது.

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல் வகையைச் சேர்ந்தது. கீழ்க்கணக்காவது அறம், பொருள், இன்பங்களைப் பற்றிய வெண்பாக்களினால் இயன்ற நூல்களைக் கொண்டது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்:

1. நாலடியார்.
2. நான்மணிக்கடிகை.
3. இனியவை நாற்பது.
4. இன்னா நாற்பது.
5. கார் நாற்பது.
6. களவழி நாற்பது.
7. ஐந்திணை ஐம்பது.
8. ஐந்திணை எழுபது.
9. திணைமொழி ஐம்பது.
10. திணைமாலை நூற்றைம்பது.
11. திருக்குறள்.
12. ஆசாரக்கோவை.

---

13. திரிகடுகம்.
14. பழமொழி.
15. சிறுபஞ்சமூலம்.
16. முதுமொழிக்காஞ்சி.
17. ஏலாதி.
18. கைந்நிலை.

இவற்றை நினைவுபடுத்தும் வெண்பா :

நாலடி நான்மணி நானாற்ப(து) ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ(டு) ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.

**நூலின் பெருமை :**

1. எல்லாக் காலத்துக்கும், மதத்துக்கும், சாதிக்கும் பொதுவான நீதிகளைக் கூறுவது.

2. குறுகிய செய்யுட்களால் அரிய விஷயங்களைத் தெரிவிப்பது.

3. ஆங்கிலம், லத்தீன் முதலிய மேல்நாட்டு மொழிகளில்கூட மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

4. "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி", "பழுகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்". இப்பழமொழி களில் இரண்டு என்பது இரண்டடிப் பாக்களைக் கொண்ட திருக்குறளைக் குறிக்கும்.

5. திருக்குறள் பல புலவருக்கும் மேற்கோளாகப் பயன்படுகிறது.

6. தற்போது ஆங்காங்கே திருக்குறள் மகாநாடுகளும், திருவள்ளுவர் திருநாளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

7. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியாரும் பாராட்டியுள்ளார்.

**திருக்குறளின் வேறு பெயர்கள் :** (1) முப்பால், (2) பொய்யாமொழி, (3) உத்தரவேதம், (4) வாயுறை வாழ்த்து, (5) தெய்வ நூல், (6) தமிழ் மறை, (7) திருவள்ளுவர், (8) பொதுமறை.

**உரையாசிரியர் :** உரையாசிரியர் பதின்மர். அவர்களுள் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்தது.

## திருவள்ளுவரைப்பற்றிய குறிப்புக்கள்

**பெருமை :** தமிழ்மொழிக்கே தனிப்பெருமை அளித்தவர் திருவள்ளுவர். தெய்வப் புலவர் என்னும் சிறப்புப் பெயரே இவர் பெருமையை விளக்கும். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாரதியாரும் புகழ்ந்து பாடியுள்ளார்.

**பிறப்பிடம் :** சென்னையில் உள்ள மயிலாப்பூர்.

**தந்தை :** பகவன். **தாய் :** ஆதி. **மனைவி :** வாசுகி அம்மையார்.

**தொழில் :** செய்யும் தொழில்களில் சிறந்த நெய்யும் தொழிலைத் திருவள்ளுவர் புரிந்து வந்தார்.

**காலம் :** கடைச்சங்க காலம். சுமார் 1,800 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்.

**நூல் அரங்கேற்றிய அவைக்களம் :** பாண்டியன் உக்கிரப் பெருவழுதி காலத்தில் அவன் அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.

"கடமையைச் செய்வதிலே உரிமை இருக்கிறது." — காந்தியடிகள்.



## திருவள்ளுவர்

**திருவள்ளுவரின் பெயர்க் காரணம் :** திருவள்ளுவரின் பெயர்க் காரணங்கள் பலவாகக் காணப்படுகின்றன. (1) வள்ளுவர் ஒரு குடிப்பெயர் என்பது, (2) திருவள்ளுவர் வள்ளுவன் ஒருவனுடைய வளர்ப்புப் பிள்ளை என்பது, (3) வள்ளுவர் என்பது இயற்பெயரே என்பது, (4) வள்ளுவர் என் போர் யானைமேல் இருந்து அரசன் ஆணையை முரசினை அடித்துத் தெரிவிப்பவர் என்பது, (5) வளப்பமுடையவர் வள்ளுவர் என்பது.

**வேறு பெயர்கள் :** (1) முதற்பாவலர், (2) செந்நாப்போதார், (3) நாயனர், (4) நான்முகனர், (5) தேவர், (6) மாதானுபங்கி, (7) தெய்வப் புலவர், (8) பெருநாவலர்.

**இவர் காலப் புலவர்கள் :** ஔவையார், கபிலர், பரணர் முதலியவர்கள்.

### பொருள் விளக்கம்

### 1. வாய்மை

(வாயின் தன்மை. சொல்லில் தூய்மையாக இருப்பதே வாய்மையாகும்.)

---

"உண்டிக் கழகு விருந்தோடுண்டல்." — அதிவீரராம பாண்டியன்.

### உரைநடை

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்.

### பதவுரை

உள்ளத்தால் - (ஒருவன் தன்) மனத்திற்கு ஏற்ப
பொய்யாது - பொய் கூருமல்
ஒழுகின் - நடப்பானுயின் (அவன்)
உலகத்தார் - உலகத்தில் உள்ள உயர்ந்தவர்களுடைய
உள்ளத்துள் எல்லாம் - மனங்களில் எல்லாம்
உளன் - இருப்பவனுவான்.

### தெளிவுரை

ஒருவன் தன் உள்ளத்துக்கு ஏற்பப் பொய் கூருமல் ஒழுகுவானுயின் உலகில் உள்ள உயர்ந்தோர் யாவரும் அவனை மறவாமல் மனத்தில் கொண்டு பாராட்டுவர்.

### கருத்து

பொய்யாத மனத்தை உடையவன் உயர்ந்தோரால் மதிக்கப்படுவான்.

### விளக்கம்

பொய் கூருமையாகிய அவனது அறத்தின் உயர்வை நினைத்து உயர்ந்தோர் எப்போதும் அவனையே எண்ணிப் பாராட்டுவர். ஆதலால் 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' என்று கூறினர். இக்குறட்பாவால் இம்மையில் வாய்மையால் உண்டாகும் பயன் கூறப்பட்டது.

### இலக்கணம்

உள்ளத்தால் — உள்ளத்திற்கு என்று நான்காம் வேற்றுமையுருபு இருக்க வேண்டிய இடத்தில் மூன்ரும் வேற்றுமையுருபு வந்தமையால் அது மூன்ரும் வேற்றுமை உருபு மயக்கம். பொய்யாது—எதிர்மறை வினையெச்சம். ஒழுகின்—வினையெச்சம்.

## 2. நிலையாமை

(தோன்றிய பொருள்கள் எல்லாம் நிலையில்லாமல் அழியும் தன்மை.)

### உரைநடை

பெருஞ்செல்வம், (வருதல்) கூத்தாட்டு, அவை, குழாத்து, அற்று, போக்கும், அது, விளிந்த, அற்று.

### பதவுரை

பெரும் செல்வம் - ஒருவனுக்கு மிகுந்த செல்வம் (வந்து சேருதல்)
கூத்தாட்டு - கூத்தாடும்
அவை - அரங்கத்தில்
குழாத்து அற்று - காண்போர் கூட்டம் வந்து கூடியது போன்றது.
போக்கும் - வந்த செல்வம் நீங்கிப் போவதும்
அது - அந்தக் கூட்டம்
விளிந்த அற்று - கூத்தாட்டு முடிந்த போது கலைந்து செல்வது போன்றது.

### தெளிவுரை

ஒருவனுக்கு மிகுந்த செல்வம் வந்து சேருதல் கூத்தாடும் இடத்தில் மக்கள் ஒன்ருகத் திரண்டு வருவதற்குச் சமமாகும். வந்த செல்வம் நீங்கிப் போவது கூத்து முடிந்ததும் அக்கூட்டம் கலைந்து போவதற்குச் சமம் ஆகும்.

### கருத்து

செல்வம் விரைவில் தோன்றி விரைவில் அழியும் தன்மை உடையது.

### விளக்கம்

மக்கள் கூட்டமானது கூத்தாட்டம் காண்பதற்காகத் தானே கூடி அக்கூத்தாட்டம் முடிந்த பிறகு கலைந்து போவதுபோலச் செல்வமும் ஒருவனுடைய நல்வினை காரணமாக அவனை அடைந்திருந்து, அந்நல்வினை நீங்க, தானும் போய்விடும். விளிதல் - கெடுதல். இங்கே, கூட்டம் கலைந்து போதலைக் குறிக்கும்.

### இலக்கணம்

அற்று—குறிப்பு வினைமுற்று. பெருஞ்செல்வம்—பண்புத் தொகை. போக்கு—தொழிற் பெயர்.

## 3. ஊக்கமுடைமை

(ஒரு செயலைச் செய்யும்பொழுது மனம் சளையாது எழுச்சி உடையராக இருத்தல்.)

### உரைநடை

யானை, பரியது, கூர்ங்கோட்டது, ஆயினும், புலி தாக்குறின் வெரூஉம்.

### பதவுரை

யானை - யானையானது
பரியது - (எல்லா மிருகங்களைக் காட்டிலும்) பெரிய உடம்பை உடையது (அதுவும் அன்றி)
கூர்ங்கோட்டது - கூர்மையான தந்தங்களையும் உடையது
ஆயினும் - ஆனாலும்
புலி - புலியானது
தாக்குறின் - (தன்னை) எதிர்க்குமானால்
வெரூஉம் - (அதற்கு) அஞ்சும்.

### தெளிவுரை

யானை எல்லா மிருகங்களைக் காட்டிலும் பெரிய உடம்பை உடையது. அதுவுமன்றிக் கூர்மையான தந்தங்களையும் உடையது. ஆயினும், புலி தன்னை எதிர்க்குமானால் அதற்கு அஞ்சும்.

### கருத்து

அரசர் பகைவரைவிட உடல்வன்மையும் படைச்சிறப்பும் உடையவராயினும், ஊக்கம் இல்லாதவராயின், ஊக்கமுடைய அரசருக்குப் பயப்படுவர்.

### விளக்கம்

உடல்வலிமையும் படைவலிமையும் புறத்தில் மிகுதியாக உடையவராயினும், அகத்தில் ஊக்கம் இல்லாத அரசர் அதனை உடையவருக்கு அஞ்சுவர். புலி மிகுந்த ஊக்கம் உடையது. யானை ஊக்கம் இல்லாதது.

### இலக்கணம்

பரியது—ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. வெரூஉம்: வெருவும் என்னும் சொல் திரிந்து அளபெடுத்தது—சொல்லிசை அளபெடை.

## 4. இடுக்கண் அழியாமை

(ஒரு செயலைச் செய்யும்பொழுது, தெய்வத்தாலாவது, செல்வம் இல்லாத காரணத்தாலாவது, உடல் வருத்தத்தினாலாவது துன்பம் நேர்ந்தால், அதற்கு மனம் வருந்தாமை).

### உரைநடை

இன்பம், விழையான், இடும்பை, இயல்பு, என்பான், துன்பம், உறுதல், இலன்.

### பதவுரை

இன்பம் - (தனக்கு) இன்பம் தருவனவற்றை

விழையான் - விரும்பாமல்

இடும்பை - (எடுத்துக் கொண்ட செயலால்) துன்பம் அடைதல்

இயல்பு என்பான் - இயல்பாகும் என்று அமைதியோடு இருப்பவன்

துன்பம் - (தன் முயற்சியால்) துன்பத்தை

உறுதல் - அடைதல்

இலன் - இலனாவான்.

### தெளிவுரை

தனக்கு இன்பம் தருவனவற்றை விரும்பாமல், தான் மேற்கொண்ட காரியத்தால் துன்பம் அடைவது இயல்பாகும் என்று கருதி, அமைதியோடு இருப்பவன் தன் முயற்சியால் துன்பம் அடையமாட்டான்.

### கருத்து

ஒரு காரியத்தைச் செய்யும்போது நேரும் துன்பத்தைத் துன்பம் என்று கருதாமல் இயல்பு என்று நினைப்பவன் எப்போதும் தன் முயற்சியால் துன்பம் அடையமாட்டான்.

### விளக்கம்

இன்பத்தை விரும்பினாலும், துன்பம் உண்டாவது இயற்கை என்று கருதாமையாலும் துன்பம் உண்டாகுமாகையால், இவ்விரண்டு செயலும் செய்யாதவனைத் ' துன்பம் உறுதல் இலன்' என்று கூறினார்.

### இலக்கணம்

விழையான்—விரும்பாமல்—முற்றெச்சம். உறுதல்—தொழிற்பெயர். இலன்—குறிப்பு வினைமுற்று.

## 5. சொல் வன்மை

(தாம் நினைத்த செயல் முடியும் அளவிலும், அமைச்சியல் நடக்க அனுகூலமான வகையிலும் சொற்களைச் சொல்லுதலில் வல்லவனாக இருத்தல்.)

### உரைநடை

ஆக்கமும், கேடும், அதனால், வருதலால், சொல்லின்கண், சோர்வு, காத்து ஓம்பல்.

பதவுரை

ஆக்கமும் - (தம் அரசர்க்கும் மற்ற வர்க்கும்) செல்வமும்
கேடும் - அழிவும்
அதனால் - (தாம் சொல்லும்) சொல்லால்
வருதலால் - வருவதனால்
சொல்லின்கண் - (அத்தன்மையான) சொல்லினிடத்து
சோர்வு - தடுமாற்றம் உண்டாதலை
காத்து ஓம்பல் - (அமைச்சர்) தம் மிடத்து உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்க.

தெளிவுரை

தம் அரசருக்கும் மற்றவருக்கும் செல்வமும் அழிவும் தாம் சொல்லும் சொல்லால் உண்டாதலால், அத்தகைய சொல்லினிடத்தில் அமைச்சர்கள் தடுமாற்றம் உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கருத்து

செல்வமும், கேடும் தமது சொல்லால் வருதலால் அமைச்சர்கள் தம் சொல்லினிடத்தில் தடுமாற்றம் உண்டாகாமல் காக்க வேண்டும்.

விளக்கம்

செல்வத்துக்குக் காரணமாகிய நற்சொல்லேயும், அழிவுக்குக் காரண மாகிய தீச்சொல்லேயும் இரண்டும் சொல் என்னும் ஒப்புமை பற்றி அவற்றால் என்று பன்மையாகக் கூறுமல் அதனால் என்று ஒருமையாகக் கூறினார். அமைச்சர்களின் சொல்லில் உண்டாகும் தடுமாற்றம், மற்றவர்கள் சொல்லில் உண்டாகும் தடுமாற்றம் போலாகாமல், எல்லா உயிர்களுக்கும் தீங்கு விளைப் பதாகையால் காத்தோம்பல் என்றார்.

இலக்கணம்

கேடு—முதனிலை திரிந்த தொழிற் பெயர். சோர்வு—தொழிற் பெயர். காத்து—வினையெச்சம்.

## 6. வினைத்தூய்மை

(செல்வத்தோடு, அறத்தையும், புகழையும் தரக்கூடிய தூய்மையான செயல்களைச் செய்தல்.)

உரைநடை

ஈன்றாள், பசிகாண்பான், ஆயினும், சான்றோர், பழிக்கும், வினை, செய்யற்க.

பதவுரை

ஈன்றாள் - (ஒருவன் தன்னைப்)பெற்ற தாயினுடைய
பசி - பசியை
காண்பான் ஆயினும் - (தன் வறுமையால்) கண்டு வருந்தும் தன் மையுடையவன் ஆனாலும்
சான்றோர் - (அது காரணமாக) அறிவு நிறைந்த பெரியோர்கள்
பழிக்கும் - பழிக்கத் தகுந்த
வினை - செயல்களை
செய்யற்க - செய்யாதிருப்பானாக.

தெளிவுரை

ஒருவன் தன்னைப் பெற்ற தாயினுடைய பசியைத் தன் வறுமையால் கண்டு வருந்தும் தன்மை உடையவன் ஆனாலும், அது காரணமாக அறிவு

நிறைந்த பெரியோர்கள் பழிக்கத் தகுந்த செயல்களைச் செய்யாதிருக்கக் கடவன்.

### கருத்து

ஒருவன் தன் தாயினது பசியை வறுமையால் கண்டானாயினும், அஃது ஒழிவதற்காக அறிவுடையார் பழிக்கும் தொழில்களைச் செய்யாதிருக்க வேண்டும்.

### விளக்கம்

மிகவும் வயதான பெற்றோரும், கற்புடைய மனைவியும், குழந்தையும் பசியால் வருந்தும்போது தீய செயல்கள் பல செய்தாவது அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நீதிநூல்கள் பொதுவாகக் கூறுவதுண்டு. ஆயினும், அரசர்களின் நன்மதிப்புக்குரிய அமைச்சர்களுக்கு அவ்வாறு நடப்பது பொருந்தாது என்று கூறினர்.

### இலக்கணம்

ஈன்றாள்—வினையாலணையும் பெயர். பசிகாண்பான்—பசியைக் காண்பான்—இரண்டாம் வேற்றுமைத் தொகை. செய்யற்க—எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

## 7. தூது

(சந்திப்பதற்கும் பிரிப்பதற்கும் வேறு அரசர்களிடத்தில் செல்பவருடைய தன்மை.)

### உரைநடை

தொகச் சொல்லி, தூவாத, நீக்கி, நகச் சொல்லி, நன்றி, பயப்பதாம், தூது.

### பதவுரை

தொகச் சொல்லி - (வேற்றரசர்களுக்குப் பல காரியங்களைச் சொல்லும்போது) சுருக்கமாகச் சொல்லியும்

தூவாத நீக்கி - (இனிமையில்லாத காரியங்களைச் சொல்லும்போது) கடுஞ்சொற்களைச் சொல்லாமல் நீக்கியும்

நகச்சொல்லி - இனிமையான சொற்களால் மனம் மகிழும்படி சொல்லியும்

நன்றி-(தம் அரசனுக்கு) நன்மையை

பயப்பதாம் - செய்பவனே

தூது - தூதனாவான்.

### தெளிவுரை

வேற்றரசர்களிடம் பல காரியங்களைச் சொல்லும்போது சுருக்கமாகச் சொல்லியும், இனிமையல்லாத காரியங்களைக் கூறும்போது கடுஞ்சொற்களைக் கூறாமல் நீக்கியும், இனிமையான சொற்களால் அவர் மனம் மகிழுமாறு கூறியும் தன் அரசனுக்கு நன்மையைச் செய்பவனே தூதனாவான்.

### கருத்து

வேற்றரசர்களிடத்தில் தான் சென்ற காரியத்தைச் சுருக்கமாக அவர் விரும்புமாறு கூறுபவனே தன் அரசனுக்கு நன்மை புரியும் தூதன் ஆவான்.

### விளக்கம்

. பல காரியங்களையும் கேட்க விரும்பாத அரசர் அவற்றைச் சுருக்கமாகக் கூறுவதை விரும்புவர். இனிமையில்லாத காரியங்களுக்கு உடம்படாத அரசர்தம் மனம் மகிழுமாறு கூறுவதால் அவ்வினிமை இல்லாமை தோன்றாதாகையால் அதற்கு உடம்படுவர். ஆகையால் இந்த இருவிதத்திலும் தூதர்கள் தம் கடமையைத் தவறாமல் முடித்தல் வேண்டும்.

### இலக்கணம்

சொல்லி, நீக்கி — வினையெச்சங்கள். ஆம் - ஆகும் — தொகுத்தல் விகாரம்.

## 8. குறிப்பறிதல்

(அரசர் நினைத்த காரியத்தை அவர் சொல்லாமல் அறிதல்.)

### உரைநடை

குறிப்பின் குறிப்பு உணராவாயின் உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ ?

### பதவுரை

குறிப்பின் - (குறித்ததைக் காண வல்ல தமது) அறிவால்
குறிப்பு - பிறர் குறிப்பினை
உணராவாயின் - அறிய மாட்டா வாயின்
உறுப்பினுள் - (ஒருவனுக்கு) அவய வங்களில்
கண் - (சிறந்தனவாகிய) கண்கள்
என்ன பயத்தவோ ? - வேறு என்ன பயனைச் செய்வனவோ ?

### தெளிவுரை

குறித்ததைக் காணவல்ல தமது அறிவால் பிறர் குறிப்பினை அறிய மாட்டாவாயின் ஒருவனுக்கு அவன் அவயவங்களில் சிறந்த கண்கள் ஒன்றும் பயனில்லாதனவையாம்.

### கருத்து

பிறர் குறிப்பினை உணரும் தன்மை இல்லாத கண்கள் பயனற்றவையாம்.

### விளக்கம்

இக்குறட்பாவால் குறிப்பு அறியாரின் இழிவு கூறப்பட்டது. குறிப்பு அறிவதற்குக் கண் துணையாக இருப்பதால் உயிரின் அறிவு கண்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

### இலக்கணம்

கண் - கண்கள் — பால்பகா அஃறிணைப் பெயர். குறிப்புணரா-குறிப்பை உணரா — இரண்டாம் வேற்றுமைத் தொகை.

## 9. அவை அஞ்சாமை

(தாம் பேசுதற்குரிய சபையை அறிந்து பேசும்போது அச்சபைக்கு அஞ்சாமல் இருத்தல்.)

"கற்கக் கற்கத் தமிழ் கற்கண்டினும் இனிக்கும்." — சுத்தானந்தர்

### உரைநடை

கற்ற, கற்றூர்முன், செல, சொல்லி, தாம் கற்ற, மிக்க, மிக்காருள் கொளல்.

### பதவுரை

கற்றூர் முன் - பலநூல்களையும் கற்றவர் சபையில்
கற்ற - தாம் கற்ற வித்தைகளை
செல - அவர்கள் உள்ளம் ஒப்புக்கொள்ளும் வகையில்
சொல்லி - கூறி
தாம் கற்ற - தாம் கற்ற வித்தைகளை விட
மிக்க - அதிகமான பொருள்களை
மிக்காருள் - அதிகமாகக் கற்றவரிடத்து
கொளல் - அறிந்து கொள்ள வேண்டும்

### தெளிவுரை

பலநூல்களையும் படித்தறிந்த புலவர்கள் சபையில் தாம் கற்ற வித்தைகளை அவர்கள் உள்ளம் ஒப்புக்கொள்ளும் வகையில் கூறித் தாம் கற்ற வித்தைகளை விட அதிகமான பொருள்களை அதிகமாகக் கற்றவரிடத்து அறிந்து கொள்ள வேண்டும்.

### கருத்து

படித்தவர்கள் தாம் கற்றவற்றைப் படித்த புலவர்கள் சபையில் பொருத்தமாகக் கூறித் தாம் கல்லாதனவற்றை அவரிடத்து அறிந்து கொள்ள வேண்டும்.

### விளக்கம்

கற்க வேண்டிய எல்லாவற்றையும் ஒருவரே கற்றல் இயலாது. ஆகையால் வேறு வேறு துறைகளைக் கற்ற பல புலவர்கள் உள்ளசபையில் தாம் கற்ற வித்தைகளை அவர்கள் மனம் கொள்ளுமாறு கூறவேண்டும். அப்புலவர்களும் தாம் கற்ற வித்தைகளையெல்லாம் கூறுவர். அதனால் ஒருவர் தாம் கல்லாத வித்தைகளையும் கேட்டறியலாம்.

### இலக்கணம்

கற்றூர், கற்ற — வினையாலணையும் பெயர்கள். கொளல், கொள்க — வியங்கோள் வினைமுற்று. சொல்லி - வினையெச்சம்.

## 10. நாடு

(அரசனாலும் அமைச்சராலும் ஆளப்படுவதாய் அரண் முதலிய அங்கங்களுக்கு வேண்டிய சிறப்பினை உடையது.)

### உரைநடை

நாடு, உறு பசியும், ஓவாப் பிணியும், செறு பகையும், சேராது, இயல்வது.

### பதவுரை

நாடு - நாடாவது
உறு பசியும் - அதிகமான பசியும்
ஓவாப் பிணியும் - நீங்காத நோயும்
செறுபகையும் - (வெளியிலிருந்து வந்து) அழிவு செய்யும் பகையும்
சேராது - அடையப் பெறாமல்
இயல்வது - இனிது நடப்பதாகும்.

### தெளிவுரை

நாடாவது அதிக பசியும், நீங்காத நோயும், வெளியிலிருந்து வந்து அழிக்கும் பகையும் அடையப்பெருமல் இனிது நடப்பதாகும்.

### கருத்து

பசியும், நோயும், பகையும் இல்லாமல் இன்பமாக நடப்பதே நாடாகும்.

### விளக்கம்

உழவர்கள் நன்கு பயிரிடுவதால் அதிக பசி உண்டாகாது. தீய காற்றும், மிகுந்த குளிரும், மிகுந்த வெப்பமும், தீய உணவுப் பொருள்களும் இல்லாதிருப்பின், நோய் உண்டாகாது. அரசன் வலிமையும், நிலைப்படையும், காடும், அரணும் உடையவனுயின் பகை ஏற்படாது.

### இலக்கணம்

நாடு — எழுவாய். இயல்வது — பயனிலை. ஒவா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். செறு பகை — வினைத்தொகை, உறு பசி — வினைத்தொகை. உறு பசி 'உறு' — உரிச் சொல்.

## 11. பொருள் செயல்வகை

(நாட்டாலும் அரணாலும், வளர்க்கவும் காக்கவும்படுவதாகிய பொருளைச் சம்பாதித்தலின் வகையைக் கூறுதல்.)

### உரைநடை

(அரசர்) அருளொடும், அன்பொடும், வாரா, பொருள், ஆக்கம், புல்லார், புரளவிடல்.

### பதவுரை

அருளொடும் - (அரசர்) தாம் குடிகளிடத்தில் செய்யும் கருணையோடும்
அன்பொடும் - குடிகள் தம்மிடத்துச் செய்யும் அன்போடும்
வாரா - கூடி வராத
பொருள் ஆக்கம் - செல்வத்தை
புல்லார் - அடையாதவராகி
புரளவிடல் - நீக்கிவிட வேண்டும்.

### தெளிவுரை

அரசர் தாம் குடிகளிடத்தில் காட்டும் கருணையோடும், குடிகள் தம்மிடத்துக் காட்டும் அன்போடும் கூடிவராத செல்வத்தைத் தாம் அனுபவியாமல் விட்டொழிக்க வேண்டும்.

### கருத்து

அரசர் அருளோடும் அன்போடும் கூடிவராத பொருளை விட்டொழிக்கக் கடவர்.

### விளக்கம்

தம் மக்களின் வருவாயில் ஆறில் ஒரு பங்கு வரியைக் கொள்வதே அருளோடும் அன்போடும் கூடிவரும் செல்வமாகும்.

### இலக்கணம்

வாரா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். புல்லார் - புல்லாராகி — முற்றெச்சம். விடல் — வியங்கோள் வினைமுற்று.

## 12. நட்பு

(அரசன் தொழில் நடத்துவதற்கு உதவுவது நட்பு.)

### உரைநடை

பண்பு உடையாளர் தொடர்பு பயில்தொறும், நூல் நவில்தொறும் நயம் போலும்.

### பதவுரை

பண்பு உடையாளர் - நற்குண முடைய மக்கள்
தொடர்பு - தம்முள் கொண்ட நட்பு
பயில்தொறும் - பழகும் போதெல்லாம் அவருக்கு இன்பம் தருவது
நூல் - நூற்பொருளை
நவில்தொறும் - கற்கும் போதெல்லாம்
நயம்போலும் - (படித்தவர்க்கு) இன்பம் தருதலைப் போன்றது.

### தெளிவுரை

நற்குணமுடைய மக்கள் தம்முள் கொண்ட நட்பு பழகும் போதெல்லாம் அவருக்கு இன்பம் தருதல், நூலின் பொருளைக் கற்கும் போதெல்லாம் படித்தவருக்கு மகிழ்ச்சியை அளிப்பது போன்றதாகும்.

### கருத்து

நற்குண முடையாரது நட்பு பழகப்பழக மிகவும் இன்பமாக இருக்கும்.

### விளக்கம்

நூலின் பொருள் படிக்கும் போதெல்லாம் இன்பத்தைக் கொடுப்பதால் நூல் நயம் எனப்பட்டது. ஔவையாரும் அதியமானும், பாரியும் கபிலரும், கண்ணனும் குசேலனும் நட்புக்கு நல்ல எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றனர்.

### இலக்கணம்

தொடர்பு — எழுவாய். போலும் — பயனிலை. தொடர்பு — தொழிற் பெயர். உடையாளர் — வினையாலணையும் பெயர்.

## 13. பேதைமை

(யாதும் அறியாமை)

### உரைநடை

சான்றோர் குழாஅத்து பேதை, புகல் கழாஅக்கால் பள்ளிஉள் வைத்தற்று.

### பதவுரை

சான்றோர் - பெரியோரது
குழாஅத்து - சபையில்
பேதை - மூடன் ஒருவன்
புகல் - புகுதல்
கழாஅக்கால் - (அசுத்த மானவற்றை மிதித்துக்) கழுவாத காலை
பள்ளியுள் - இன்பம் தரும் படுக்கையில்
வைத்தற்று - வைத்தது போலும்.

### தெளிவுரை

பெரியோரது சபையில் மூடன் ஒருவன் புகுதல் அசுத்தங்களை மிதித்துக் கழுவாத காலை இன்பம் அளிக்கும் படுக்கையில் வைத்தது போன்றதாகும்.

"மொழியில்லாத மனிதன் உயிருள்ள பிணம்."— ஷேக்ஸ்பியர்.

### கருத்து

பெரியோர் சபையில் நுழையும் பேதை அவமானம் அடைவான்.

### விளக்கம்

அசுத்தமான காலினால் மிதிக்கப்பட்டபடுக்கை இழிவாகக் கருதப்படுவதுபோலப் பெரியோர் சபையும் மூடன் நுழைந்தமையால் இழிவாகக் கருதப்படும் என்பதை இக்குறளால் அறியலாம்.

### இலக்கணம்

ஆல் — அசை. கழாஅக்கால் — மலம் முதலியவற்றை மிதித்த கால் என்று கூறாமல் கழாஅக்கால் என்று கூறினமையால் இடக்கரடக்குச் சொல். புகல் — தொழிற் பெயர். அற்று — குறிப்பு வினைமுற்று.

## 14. உட்பகை

(புறப்பகைக்கு இடம் கொடுத்து அது வெல்லும் வரையில் உள்ளாய் நிற்கும் பகை உட்பகையாகும்.)

### உரைநடை

உள்பகை, உற்ற குடி அரம் பொருத, பொன்போல, பொருது, உரம் தேயும்.

### பதவுரை

உள்பகை உற்ற குடி - (முன்னே வளர்ந்துவந்ததாயினும்) உட்பகை உண்டாகிய குடி
அரம் - அரத்தினால்
பொருத - தேய்க்கப் பெற்ற
பொன் போல - இரும்பு போல
பொருது - அதனால் கெடுக்கப்பட்டு
உரம் - வலிமையானது
தேயும் - குறையும்.




### தெளிவுரை

முன்னே வளர்ந்து வந்ததாயினும் உட்பகையுள்ள குடியானது அரத்தினால் தேய்க்கப்பெற்ற இரும்புபோல அவ்வுட்பகையால் தாக்கப்பட்டு வலிமை குறையும்.

### கருத்து

உட்பகை உள்ள குடி அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்புபோல் வலி குறைந்து ஒழியும்.

### விளக்கம்

உட்பகையுடையவர்கள் நன்மை செய்பவரைப் போலப் பழகிக் குடியில் உள்ளவர்களை மெல்லமெல்லப் பிரியச் செய்வார்கள். ஆகையால் உட்பகைக்கு அரத்தை உவமையாகக் கூறினர். இரும்புக்கும் பொன் என்று வேறொரு பெயர் உண்டு.

### இலக்கணம்

அரம்பொருத - அரத்தால் பொருத—மூன்றும்வேற்றுமைத்தொகை. பொருத—இறந்தகாலப் பெயரெச்சம். பொருது—இறந்தகால வினையெச்சம். உள்+பகை=உட்பகை.

## 15. மருந்து

(நோய் மக்களுக்கு இருவகையால் உண்டாகும். விதிவசத்தால் உண்டாகும் நோய்கள் உண்டு. தீய உணவு, செயல் முதலிய காரணங்களால் உண்டாகும் நோய்களை நீக்கும் முறைகள் இங்கே கூறப்படுகின்றன.)

### உரைநடை

(மருத்துவன்) நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல்.

### பதவுரை

**நோய்** - (மருத்துவன் நோயாளியிடமுள்ள) நோயை
**நாடி** - (அதன் குறிகளால் இன்னதென்று) துணிந்து
**நோய்முதல்** - (பின்னர்) அந்த நோய் வருவதற்குக் காரணத்தை
**நாடி** - ஆராய்ந்து தெளிந்து
**அது** - (பின்னர்) அந்த நோயை
**தணிக்கும் வாய்** - தீர்க்கும் உபாயத்தை
**நாடி** - அறிந்து
**வாய்ப்பச் செயல்** - அவ்வுபாயத்தைச் செய்யும்போது பிழையின்றிச் செய்ய வேண்டும்.

### தெளிவுரை

மருத்துவன் நோயாளியிடமுள்ள நோயை அதன் குறிகளால் இன்னதென்று தெளிவாக அறிந்து, பின்னர் அந்த நோய் வருவதற்குக் காரணத்தை ஆராய வேண்டும். அதன் பின்னர் அந்த நோயைத் தீர்க்கும் உபாயத்தை அறிந்து அதனைப் பிழையின்றிச் செய்ய வேண்டும்.

### கருத்து

மருத்துவன், நோயாளியிடமுள்ள நோயும், அதன் காரணமும், அது தீர்க்கும் வழியையும் அறிந்து அவ்வழியைப் பிழையில்லாமல் செய்ய வேண்டும்.

### விளக்கம்

நோய் உண்டாதற்குக் காரணம் உணவும் செயலும் என இரண்டாம். இவ்விரண்டையும் ஆராயின் நோயைத் தீர்க்கும் முறையையும் அறியலாம். பிழையாமை - பழைய மருத்துவர் செய்யும் முறைகளில் தவறுமை.

### இலக்கணம்

நாடி—வினையெச்சம். தணிக்கும்—பெயரெச்சம். செயல்—வியங்கோள் வினைமுற்று.

## கேள்வியும் பதிலும்

*1. திருக்குறளுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

மேன்மையான குறள் வெண்பாக்களால் ஆகிய நூலாகையால் இதற்கு இப்பெயர் வந்தது. திரு-மேன்மை. குறள்-இரண்டடி வெண்பா.

**2. திருக்குறளின் பிரிவுகள் யாவை ?**

திருக்குறள் முப்பெரும் பிரிவுகளை உடையது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பனவாம்.

**3. திருக்குறளின் பெருமைகளைக் குறித்து உனக்கு என்ன தெரியும் ?**

விடை முன்னுரையில் படித்துணர்க.

**4. திருக்குறளின் வேறு பெயர்கள் யாவை ?**

முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் வேதம், பொது மறை, திருவள்ளுவர், திருவள்ளுவப்பயன் என்பன திருக்குறளின் வேறு பெயர்களாம்.

**5. திருவள்ளுவருக்கு வழங்கும் பிற பெயர்கள் யாவை ?**

நாயனர், தேவர், முதற்பாவலர், பொய்யில் புலவர், பெருநாவலர், தெய்வப் புலவர், செந்நாப் போதார், மாதானுபங்கி, நான்முகனர் என்பன திருவள்ளுவரின் மறுபெயர்களாம்.

**6. திருக்குறளின் உரையாசிரியர் எத்துணையர் ? அவர்களில் சிறந்தவர் யார் ?**

திருக்குறளின் உரையாசிரியர்கள் பதின்மர். அவர்களில் சிறந்தவர் பரிமேலழகர்.

***7. திருவள்ளுவர் வரலாற்றைப் பற்றிச் சுருக்கி எழுதுக.**

திருவள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தார். இவர் தாய் ஆதி. தந்தை பகவன். வள்ளுவன் ஒருவனல் வளர்க்கப்பட்டமையால் இப்பெயர் பெற்ருர். இவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தார். இவருடைய மனைவியார் வாசுகி என்பவர். வள்ளுவர் கற்பன கற்றுச் சிறந்த புலமை பெற்று உலகம் போற்றும் திருக்குறளை இயற்றியருளினர். இவர் கடைச் சங்க காலமாகிய கி. பி. 2-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். அதாவது சுமார் 1800 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

**8. வாய்மையாளன் அடையும் பயன் யாது ?**

ஒருவன் தன் உள்ளத்திற்கு ஏற்பப் பொய் பேசாமல் ஒழுகுவானுயின் அவன் உயர்ந்தோர் உள்ளத்தில் எல்லாம் இருப்பான்.

***9. "உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்"; யார் ? எவ்வாறு ?**

ஒருவன் தன் மனம் அறியப் பொய் பேசாமல் ஒழுகுவானுயின் அவன் பெருமையை நோக்கி உயர்ந்தோர் யாவரும் அவனைத் தம் உள்ளங்களில் வைத்துப் போற்றுவர்.

***10. பெருஞ் செல்வம் தோன்றுதலுக்கும் மறைதலுக்கும் கூறப்பட்ட உவமைகளை விளக்குக.**

ஒருவனிடத்தில் பெருஞ்செல்வம் உண்டாவது கூத்தாட்டத்தைப் பார்ப்பதற்குப் பெருங்கூட்டம் வந்து சேர்வது போன்றது.

அச்செல்வத்தின் போக்கும் அக்கூத்தாட்டம் முடிந்த பிறகு திடுமென்று கலைந்து போவதைப்போல விரைவில் அழிந்து விடும்.

*11. "பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை, வெரூஉம் புலிதாக் குறின்"—இக்குறளை விளக்கி இதனால் புலப்படும் நீதியைக் கூறுக. இதில் உள்ள அணியை விளக்குக.




யானை புலியைவிட உடல் வலிமையும் வெல்லுவதற்குத் தக்க கூரிய தந்தங்களையும் உடையது. ஆயினும், ஊக்கம் இல்லாமையால் அவ்வூக்கத்தை யுடைய புலிக்கு அஞ்சும்.

அதுபோல, ஓர் அரசன் தன் விரோதிகளைவிட மிகுந்த உடல் வலிமையும், வெல்லுதற்குச் சிறந்த ஆயுதத்தையும் உடையவனாயினும் ஊக்கம் இல்லாதவனாக இருப்பின், ஊக்கம் உடைய பகைவர்க்கு அஞ்சுவான்.

இக்குறட்பாவில் உவமேயத்தைக் கூறாமல் உவமானத்தை மட்டும் கூறி அவ்வுவமானத்தால் உவமேயத்தை விளங்கவைத்தமையால் இது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

12. "துன்பம் உறுதல் இலன்"—யார் ?

தன் உடம்புக்கு இன்பமானவற்றை விரும்பாமல், தொழில் செய்தலால் துன்பம் அடைவது இயல்பு என்று தெளிந்திருப்பவன் தன் முயற்சியில் எப்போதும் துன்பம் அடையமாட்டான்.

13. அமைச்சர்கள் சொற்சோர்வு வராமல் ஏன் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் ?

தம் அரசனுக்கும், அங்கங்களுக்கும் செல்வமும் கேடும் தமது சொல்லால் வருவதால், அமைச்சர்கள் தம் சொல்லின்கண் சோர்வு (தடுமாற்றம்) வராமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

*14. "ஈன்றாள் பசி காண்பான்" என்னும் குறட்பாவின் கருத்தினை விளக்குக.

வயது முதிர்ந்த பெற்றோரும், மனைவியும் மக்களும் பசியால் வருந்தும் போது தீய காரியங்கள் செய்தேனும் காப்பாற்றவேண்டும் என்று நீதிநூல் கள் கூறுகின்றன. ஆனால், அரசரின் தொழிலுக்கும் மதிப்புக்கும் உரிய அமைச்சர்கள் அவ்வாறு செய்வது தகாது. ஆகையால் ஒருவன் தன்

தாயினது பசியை வறுமையாற் கண்டானாயினும் அந்தப் பசியைப் போக்குவதற்காக அறிவுடையார் பழிக்கும் தீய செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

***15. தூதனின் கடமை யாது?**

வேற்றரசர்களிடத்தில் பல செய்திகளைச் சொல்ல வேண்டியிருப்பின் அவற்றைச் சுருக்கமாகச் சொல்லி, விருப்பமில்லாத செய்தியைக் கூற நேர்ந்தால் கடுஞ்சொல் கூறாமல் இனிய சொற்களால் அவர் மனமகிழச் சொல்லியும் தன் அரசனுக்கு நன்மையைச் செய்வதே தூதனின் கடமை யாகும்.

**16. எப்படிப்பட்ட கண்கள் பயனற்றனவாம்?**

குறித்ததை உணரவல்ல தம் அறிவினால் பிறர் குறிப்பினை அறியும் தன்மையில்லாத கண்கள் பயனற்றனவாம்.

**17. கற்றவர்கள் மேலும் தம் கல்வி அறிவைப் பெருக்குவது எப்படி?**

கற்றவர்கள் தாம் கற்றவற்றைப் பலநூல்களைக் கற்றவர் சபையில் அவர் மனங் கொள்ளுமாறு சொல்லித் தாம் கல்லாதவற்றை அவரிடத்து அறிந்து கொள்ளவேண்டும்.

***18. நாடாவது யாது?**

அதிக பசியும், நீங்காத நோயும், வெளியிலிருந்து வந்து அழிக்கும் பகையும் அடையப் பெறாமல் இனிது வாழும் நாடே நாடாகும்.

**19. அரசர் எத்தகைய செல்வத்தை விட்டொழிக்க வேண்டும்?**

அரசர் தாம் குடிகளிடத்தில் செய்யும் கருணையோடும் குடிகள் தம்மிடத்துச் செய்யும் அன்போடும் கூடிவராத செல்வத்தைத் தாம் அனுபவியாமல் விட்டொழிக்க வேண்டும்.

***20. நற்குணமுடையவர் நட்பு எது போன்றது?**

நற்குணமுடையவர்கள் நட்பு, நூலின் பொருளைக் கற்கும் போதெல்லாம் படித்தவர்க்கு மகிழ்ச்சியை அளிப்பது போலப், பழகும் போதெல்லாம் அவருக்கு இன்பம் அளிக்கும்.

***21. "கழாஅக்கால் பள்ளியில் வைத்தற்று." — எது? விளக்குக.**

பெரியோரது சபையில் மூடன் ஒருவன் புகுதல், அசுத்தங்களை மிதித்துக் கழுவாத காலை இன்பம் அளிக்கும் படுக்கையில் வைத்தது போன்றதாகும்.



**22. உட்பகையால் நேரும் துன்பம் யாது?**

முன்னே வளர்ந்து வந்ததாயினும் உட்பகையுள்ள குடியானது அரத்தினால் தேய்க்கப்பெற்ற இரும்புபோல அவ்வுட்பகையால் மெல்ல மெல்லத் தாக்கப்பட்டு வலிமை குன்றும்.

***23. மருத்துவன் நோயைத் தீர்ப்பது எப்படி?**

நோயாளியின் நோயை அதன் குறிகளால் இன்னதென்று துணிந்து, பின்னர் அந்த நோய் வருவதற்குக் காரணத்தை ஆராய்ந்து, தெளிந்து, அந்த நோயைத் தீர்க்கும் உபாயத்தை அறிந்து பிழையின்றிச் செய்ய வேண்டும்.

**24. (1) 'நவில்தொறும்', (2) 'கழாஅக்கால்' என்று தொடங்கும் குறட்பாக்களின் உவமான உவமேயங்களைத் தனித்தனியே எடுத்தெழுதுக.**

(1) நவில்தொறும் நூல் நயம் போலும் - உவமானம்.
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு - உவமேயம்.

(2) கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் - உவமானம்.
சான்றோர் குழாஅத்துப் பேதை புகல் - உவமேயம்.

**25. கீழ்வரும் குறட்பாக்களுக்குப் பதவுரை தருக.**

(1) உள்ளத்தால்
(2) பரியது
(3) ஆக்கமும் கேடும்
(4) ஈன்றாள் பசி
(5) உறுபசியும்
(6) நவில்தொறும்
(7) அரம்பொருத
(8) நோய் நாடி

விடைகளைத் திருக்குறட் பகுதியில் உரையில் காண்க.

**26. பொருள் கூறுக: (விடை எதிரெதிரே காண்க)**

(1) அற்று - அத்தன்மையது.
(2) பரியது - பருத்தது.
(3) ஆக்கம் - உயர்வு, செல்வம்.
(4) இடும்பை - துயரம்.
(5) சோர்வு - தடுமாற்றம்.
(6) தொக - சுருக்கமாக.
(7) தூவாத - கடுஞ்சொற்கள்.
(8) உறு - மிக்க.
(9) புல்லார் - அடையார்.
(10) பள்ளி - படுக்கை.

**27. பதம் பிரித்து எழுதுக: (விடை எதிரெதிரே காண்க)**

(1) கூர்ங் கோட்டது = கூர்மை + கோட்டது
(2) தாங்கற்ற = தாம் + கற்ற
(3) பொருளாக்கம் = பொருள் + ஆக்கம்
(4) வைத்தற்றால் = வைத்து + அற்று + ஆல்
(5) உட்பகை = உள் + பகை

**28. இலக்கணக் குறிப்பு வரைக: (விடை எதிரெதிரே காண்க)**

(1) உள்ளத்தால் - வேற்றுமை மயக்கம்
(2) அற்று - குறிப்பு வினைமுற்று
(3) செய்யற்க - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று
(4) கொளல் - வியங்கோள் வினைமுற்று
(5) ஒவா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(6) கண் - பால்பகா அஃறிணைப் பெயர்
(7) பொருத - பெயரெச்சம்
(8) பொருது - வினையெச்சம்

"பலகற்றோம்யாமென்று தற்புகழ வேண்டா." — முனைப்பாடியார்.

2. சமண முனிவர்கள் இயற்றிய

# நாலடியார்

## முன்னுரை

நாலடியார் திருக்குறளோடு ஒப்ப மதிக்கப்படும் பெருமை வாய்ந்தது. இந்நூல் உயர்ந்த நீதிகளைக் கொண்டது.

பெயர்க் காரணம்: நான்கு அடிகளை உடைய வெண்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள். நான்கு + அடி = நாலடி. இது கருவியாகு பெயராய் நாலடி வெண்பாக்களால் ஆகிய நூலைக் குறித்தது. ஆர் - சிறப்பைக் காட்டவந்த விகுதி.

திருக்கோவையார், திருவுந்தியார் போன்ற நூல்களும் ஆர் என்னும் விகுதி பெற்றமை காண்க.

வேறு பெயர்கள்: நாலடி, நாலடி நானூறு, வேளாண் வேதம்

பிரிவு: திருக்குறளைப் போலவே நாலடியாரும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. மொத்தம் 400 செய்யுட்கள் அடங்கியது. ஒவ்வொரு அதிகாரத்துக்கும் பத்துப் பாடல்கள் வீதம் 40 அதிகாரங்களை உடையது.

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல் வகையைச் சேர்ந்ததேயாகும்.

தொகுப்பாசிரியர்: பதுமனார் என்னும் புலவர் இதற்கு அதிகாரம் வகுத்தார்.

காலம்: கடைச்சங்க காலம்.

நூலின் பெருமை: (1) 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி', 'பழகு தமிழ்ச் சொல் அருமை நாலிரண்டில்' என்னும் பழமொழிகள் வழங்குகின்றன.

(2) திருக்குறளோடு சேர்த்து எண்ணப்படும் பெருமை வாய்ந்த நீதி நூல் ஆகும்.

(3) பல ஆசிரியர்களுடைய அரிய கருத்துக்களைக் கொண்டது.

(4) எழுத்தாளர்க்கும், பேச்சாளர்க்கும் மேற்கோளாகப் பயன்படுகிறது.

(5) பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(6) தெய்வத் தன்மையுடையது.

## நாலடியாரைப்பற்றிய வரலாறு

கடைச்சங்க காலத்தில் எண்ணாயிரம் சமண முனிவர் பஞ்சம் நிறைந்த தம் நாட்டைவிட்டுப் பாண்டிய நாட்டுக்குச் சென்றனர். பாண்டிய மன்னன் அவர்களை அன்போடு ஆதரித்து வந்தான். சமண முனிவர்களின் சொந்த நாடு சில நாட்களில் பழையபடியே செழிப்படைந்தது. முனிவர்கள் பாண்டியனை விடை கேட்டனர். பாண்டியன் அவர்களை விட்டுப்பிரிய மனமில்லாமல் காலம்கடத்தி வந்தான். அரசன் எண்ணத்தை அறிந்த முனிவர்கள்

"அருந்தமிழ்ப் புலவர் அயனினும் மேலாம்." — குமரகுருபரர்.

ஒரு நாளிரவு ஆளுக்கொரு செய்யுள் இயற்றித் தம் இருக்கையில் வைத்து விட்டு மறைந்தனர். முனிவர்கள் செய்கை அறிந்த மன்னன் வருந்தினான். அவர்கள் செய்யுள் எழுதிய ஏடுகள் வையையாற்றில் எறியப்பட்டன. அவற்றுள் 400 பாக்கள் நீரை எதிர்த்துக் கரைக்கு வந்தன. அவ்வாறு வந்த பாக்களின் தொகுப்பே நாலடியார் ஆகும்.

## பொருள் விளக்கம்

### உரைநடை

யானை அறிந்து அறிந்தும், பாகனையே கொல்லும் ; நாய் எறிந்த வேல் மெய்யது ஆ(க) வால் குழைக்கும். (ஆகையால்) யானை அனையவர் நண்பு ஒரீஇ நாய் அனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்.

### பதவுரை

யானை - யானையானது
அறிந்து அறிந்தும் - (பலமுறை பழகியதால் தன்னை உணவு முதலிய அளித்துக் காப்பவன்) என்று அறிந்திருந்தும்
பாகனையே - தன்னை வளர்க்கும் பாகனையே
கொல்லும் - (கோபம் ஏற்பட்டால்) கொன்றுவிடும்.
நாய் - நாயானது
எறிந்தவேல் - (தன் தலைவன் தன் மேல் கோபித்து) வீசிய ஆயுதம்
மெய்யது ஆ(க) - தன் உடம்பில் தைத்திருக்கும் போதும்
வால் குழைக்கும் - வாலை ஆட்டிக் கொண்டு தன் தலைவனிடம் அன்பு காட்டும். (ஆதலால்)
யானை அனையவர் - யானையைப் போன்றவர்களுடைய
நண்பு - நட்பை
ஒரீஇ - நீக்கி
நாய் அனையார் - நாயைப் போன்றவர்களுடைய
கேண்மை - நட்பை
கெழீஇக் கொளல் - சேர்த்துக் கொள்ளுதல்
வேண்டும் - தகுந்ததாகும்

### தெளிவுரை

யானை தனக்கு உணவு அளித்துக் காக்கும் பாகனைப் பலமுறை அறிந்திருந்தாலும் சிறு தவறு ஏற்படினும் அவன் மீது கோபம் கொண்டு அவனைக் கொன்றுவிடும். ஆனால், நாய் தன் எசமானன் தன்மீது கோபத்தால் வீசிய ஆயுதம் தன் உடம்பில் தைத்திருக்கும்போதும், தன்வாலை ஆட்டிக் கொண்டு அவனிடத்தில் அன்பை வெளிப்படுத்தும். ஆகையால் யானையைப் போல் நன்றி மறக்கும் மக்களின் நட்பை நீக்கி, நாயைப்போல் நன்றி மறவாதவருடைய நட்பை மேற்கொள்ள வேண்டும்.

### கருத்து

யானைபோல் நன்றி மறப்பவர் நட்பை நீக்கி, நாயைப்போல் நன்றி மறவாதவருடன் நட்புக்கொள்ளல் வேண்டும்.

### விளக்கம்

பலமுறை தாம் செய்த பலப்பல உதவிகளைப் பெற்றும், அவற்றையெல்லாம் மறந்து, தம்மால் நேர்ந்த சிறு துன்பத்தையே பெரிதும் பாராட்டி மனத்திலே வஞ்சம் வைத்துத் தகுந்த சமயம் பார்த்துத் தமக்குத் துன்பம் செய்யும் குணம் உடையவர்களிடத்தில் நட்புக் கொள்ளக் கூடாது.

---

**"இந்திய இளைஞர்களே! நீங்களே இந்நாட்டின் நந்தவனங்கள்." -நேரு.**





தாம் பலதீமைகள் செய்தாலும் அவற்றையெல்லாம் மறந்துவிட்டுத் தாம் ஒருசமயம் செய்த சிறிய உதவியையே உள்ளத்தில் எண்ணிப் பாராட்டும் தன்மை உடையவர்களுடனே நட்புக் கொள்ளவேண்டும். யானை சிறியார்க்கு உவமை. நாய் பெரியார்க்கு உவமை. வேல் - இங்கு ஆயுதம் என்னும் பொருளில் வந்தது.

## இலக்கணம்

ஒருவி - ஒரீஇ, கெழுவி - கெழீஇ என விகாரப்பட்டன — சொல்லிசையளபெடை. அறிந்தறிந்து—அடுக்குத்தொடர். நண்பு + ஒருவி = நண்பொரீஇ. எறிந்த வேல்—பெயரெச்சத் தொடர். வால்குழைக்கும்—இரண்டாம் வேற்றுமைத் தொகை. கொல்லும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

## கேள்வியும் பதிலும்

*1. நாலடியார்—பெயர்க் காரணமும் ஆசிரியர் பெயரும் கூறுக.

நான்கு அடிகளை உடைய வெண்பாக்களால் செய்யப்பட்ட நூலாகையால் இதற்கு நாலடியார் என்று பெயர். ஆர் - சிறப்பை உணர்த்தும் விகுதி. நாலடியாரை இயற்றியவர் சமண முனிவர்கள்.

*2. நாலடியாரின் பெருமைகள் யாவை ?

(1) நீதி நூல்களில் திருக்குறளுக்கு அடுத்த சிறப்பினை உடையது.

(2) 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி ; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி', 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்னும் பழமொழிகள் நாலடியாரின் பெருமையைக் குறிக்கும்.

(3) ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

(4) பல ஆசிரியர்களுடைய அரிய கருத்துக்களைக் கொண்டது.

(5) எழுத்தாளர்க்கும், பேச்சாளர்க்கும் மேற்கோள் நூலாகப் பயன்படுகிறது.

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார்." — வள்ளுவர்.

3. **நாலடியாரின் தொகுப்பாசிரியர் யார் ?**

*நாலடியாரின் தொகுப்பாசிரியர் பதுமனார்.*

4. **நாலடியாரின் வேறு பெயர்கள் யாவை ?**

*நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்பன.*

5. **நாலடியார் எந்த நூல் வகையைச் சார்ந்தது ?**

*நாலடியார் பதினெண்கீழ்க்கணக்கு நூல் வகையைச் சார்ந்தது.*

6. **நாலடியார் பற்றிய வரலாற்றைச் சுருக்கி வரைக.**

*விடை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.*

7. **யானை, நாய் இவற்றின் தன்மைகள் யாவை ?**

*யானை தனக்கு உணவு அளித்துக் காப்பாற்றும் பாகனைப் பலமுறை அறிந்திருந்தும் அவன் சிறுதவறு செய்தாலும் அவன்மீது கோபம் கொண்டு அவனைக் கொன்றுவிடும்.*

*நாயானது, தன் தலைவன் தன்மீது சினம்கொண்டு வீசிய ஆயுதம் தன் உடம்பில் தைத்திருக்கும்போதும் வாலை ஆட்டிக்கொண்டு அவனிடம் அன்பு காட்டும்.*

8. **நாம் எப்படிப்பட்டவர் நட்பை மேற்கொள்ள வேண்டும் ? எப்படிப்பட்டவர் நட்பை விலக்குதல் வேண்டும் ?**

*நாம் நாய்போல என்றும் நன்றி மறவாதவருடைய நட்பை மேற்கொள்ள வேண்டும். யானையைப் போல நன்றிகெட்ட குணமுடையவர்களின் நட்பை நீக்கவேண்டும்.*

*9. **யானையனையார் நண்பு, நாயனையார் கேண்மை—இவ்விரண்டையும் விளக்குக.**

*யானை, தனக்கு உணவு அளித்துக் காக்கும் பாகனை நன்கு அறிந்திருந்தும் அவன் செய்த சிறு துன்பத்தையே எண்ணி அவனைக் கொன்றுவிடும். அதுபோலப் பலமுறை தாம் செய்த பலப்பல உதவிகளைப் பெற்றும் அவற்றையெல்லாம் மறந்து, தம்மால் நேர்ந்த சிறு துன்பத்தையே பெரிதும் பாராட்டி மனத்தில் வஞ்சம் வைத்துத் தருந்த சமயம் பார்த்துத் தமக்குப் பெருந்துன்பம் புரியும் குணமுடையவர்கள் நட்பு கூடாது.*

*நாய், தன் எசமானன் தன்மீது கோபத்தால் வீசிய ஆயுதம் தன் உடம்பில் தைத்திருக்கும்போதும் தன் வாலை ஆட்டிக்கொண்டு அவன்மீது தனக்குள்ள அன்பையும் நன்றியையும் காட்டும். அதுபோலத் தாம் பல தீமைகள் செய்தாலும் அவற்றையெல்லாம் மறந்துவிட்டுத் தாம் ஒரு சமயம் செய்த சிறிய உதவியை எண்ணிப் பாராட்டும் தன்மை உடையவர்களுடனே நட்புக்கொள்ள வேண்டும்.*

10. பொருள் கூறுக : (விடை எதிரெதிரே காண்க)

| | |
|---|---|
| (1) நண்பு - நட்பு | (4) குழைக்கும் - ஆட்டும் |
| (2) ஒருவி - நீக்கி | (5) அனையவர் - போன்றவர் |
| (3) கெழுவி - சேர்த்து | (6) எறிந்த - வீசிய |

11. பதம் பிரித்து எழுதுக : (விடை எதிரெதிரே காண்க)

| | |
|---|---|
| (1) நண்பொரீஇ = நண்பு + ஒரீஇ | (3) அறிந்தறிந்தும் = அறிந்து + அறிந்தும் |
| (2) நாயனையார் = நாய் + அனையார் | |

" இறைந்தோறும் ஊறும் கிணறு." — பழமொழி.

12. இலக்கணக்குறிப்பு வரைக (விடை எதிரெதிரே காண்க)

(1) ஓரீ இ-சொல்லிசை அளபெடை
(2) அறிந்தறிந்து-அடுக்குத் தொடர்
(3) எறிந்த - பெயரெச்சம்
(4) கொளல் - தொழிற் பெயர்

பூதஞ் சேந்தனார் இயற்றிய

# இனியவை நாற்பது

## முன்னுரை

பெயர்க் காரணம் : இனிமை உண்டாக்கும் நல்ல செயல்களைப் பற்றி உரைக்கும் நாற்பது வெண்பாக்களை உடைய நூலாகையால் இது இப்பெயர் பெற்றது - அன்மொழித் தொகை : நாற்பது - நாற்பது பாக்களால் ஆகிய நூல் - ஆகு பெயர்.

நூலின் வேறு பெயர்கள் : இனிது நாற்பது, இனிய நாற்பது என்பன.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் பெயர் : பூதஞ் சேந்தனார்.

தந்தையின் பெயர் : மதுரைத் தமிழாசிரியர் பூதன்.

சமயம் : சைனர் என்பார் சிலர் ; அந்தணர் என்பார் சிலர்.

காலம் : கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவர்.

நூல்வகை : இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்வகையைச் சேர்ந்தது.

## பொருள் விளக்கம்

### உரைநடை

பத்து கொடுத்தும், பதி இருந்து, வாழ்வினிது ; வித்து குற்று உண்ணா விழுப்பம் மிக இனிது ; பற்பல நாளும் பழுது இன்றி, பாங்கு உடைய, கற்றலின் காழ் இனியது இல்.

### பதவுரை

பத்து - பத்து (சில) பொருள்களை
கொடுத்தும் - கொடுத்தாவது
பதி இருந்து - உள்ளூரில் இருந்து
வாழ்வு - வாழ்தல்
இனிது - நல்லது
வித்து - விதைக்கென வைக்கப்பட்ட தானியத்தை
குற்று உண்ணா - குற்றி உண்ணாத
விழுப்பம் - உயர்வு
மிக இனிது - மிகவும் நல்லது
பற்பல நாளும் - பலப்பலநாட்களும்
பழுது இன்றி - குற்றம் இல்லாமல்
பாங்கு உடைய - தகுதி உடைய நூல்களை
கற்றலின் - கற்பதைப் போல
காழ் இனியது - மிகவும் இனியது
இல் - வேறொரு செயலும் இல்லை.

### தெளிவுரை

தம் இனத்தார் தாம் செய்த குற்றத்துக்குத் தண்டம் விதிப்பாராயின் பத்துப் பொருள்களைக் கொடுத்தாவது உள்ளூரில் வாழ்வது நல்லது. விதைக்

"தீதும் நன்றும் பிறர்தர வாரா." — கணியன் பூங்குன்றனார்.

கென ஒதுக்கி வைக்கப்பட்ட தானியத்தைக் குற்றி உண்ணுத உயர்வு மிகவும் நல்லது. பலப்பல நாட்களும் குற்றம் இல்லாமல் தகுதியுடைய நூல்களைக் கற்பதைப் போல மிகவும் இனிய செயல் வேறொன்றும் இல்லை.

## விளக்கம்

'பத்(து) ஊர் புக்கு இரந்து உண்டு பல பதிகம் பாடி' என்னும் தேவாரத்தில் பத்து என்பது சில என்னும் பொருளில் அமைந்திருப்பதைக் காணலாம்.

தான் செலுத்தும் வரியில் பத்து மடங்கு செலுத்தும்படி நேர்ந்தாலும் உள்ளூரில் இருந்து வாழ்தல் நல்லது என்றும் பொருள் கூறுவர்.

தன்னிடத்தில் தன் இனத்தார் குற்றங்கண்டு பத்துப் பொருள் அபராதம் விதிப்பார்களாயின் அதைச் செலுத்தாமல் உள்ளூரை விட்டு வெளியேறுவதைவிட அதைக் கொடுத்துத் தம் சொந்த ஊரிலேயே வாழ்வது நல்லது. ஆதலால், '**பத்துக்கொடுத்தும் பதியிருந்து வாழ்வு இனிதே**' என்றார்.

விதை இல்லை எனில் அடுத்த பருவத்தில் பயிர் செய்ய முடியாது: ஆதலால் '**வித்துக் குற்றுண்ணு விழுப்பம் மிக இனிதே**' என்றார்.

ஒரு பிறவியில் படித்த கல்வி ஏழுபிறவியிலும் தொடர்ந்துவந்து உதவுமாதலால் கற்கத் தகுந்த நூல்களைக் கற்க வேண்டு மென்பதற்காக, '**பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய கற்றலின் காழினியது இல்**' என்றார்.

## இலக்கணம்

இனிது—குறிப்பு வினைமுற்று. உண்ணு—ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பழுது + இன்றி = பழுதின்றி. பாங்கு + உடைய=பாங்குடைய. வாழ்வு—தொழிற் பெயர். உடைய—வினையாலணையும் பெயர்.

## கேள்வியும் பதிலும்

***1. இனியவை நாற்பது — பெயர்க் காரணம் கூறுக.**

இனிமையைத் தரும் நல்ல செயல்களைப் பற்றி உரைக்கும் நாற்பது வெண்பாக்களை உடைய நூலாகையால் இதற்கு இனியவை நாற்பது என்று பெயர்.

**2. 'இனியவை நாற்பது' என்னும் நூலின் ஆசிரியரைப் பற்றிக் குறிப்புரை வரைக.**

'இனியவை நாற்பது' என்னும் நூலின் ஆசிரியர் பூதஞ்சேந்தனார். இவர் மதுரைத் தமிழாசிரியர் பூதன் என்பார் மகனாவார். இவர் சைனர் என்பார் சிலர்; அந்தணர் என்பார் சிலர். பூதஞ்சேந்தனார் கடைச்சங்க காலப் புலவர்.

***3. எவை எவை இனியவை ஆகும்?**

தம் ஊரார் தண்டம் என்று விதிக்கும் சில பொருள்களைக் கொடுத்தாவது உள்ளூரிலிருந்து வாழ்தல் இனிது; விதைக்கென வைக்கப்பட்ட தானியத்தைக் குற்றியுண்ணுதிருத்தல் மிகவும் இனியது; பலப்பல நாட்களும் குற்றம் இல்லாமல் தகுதியுடைய நூல்களைக் கற்பதைப்போல் மிகவும் இனியது வேறொன்றும் இல்லை.

*4. பூதஞ்சேந்தனார் இனிது, மிக இனிது, எல்லாவற்றிலும் இனிது என்று எவ்வெவற்றைக் குறிப்பிட்டுள்ளார் ?

3-ஆம் கேள்வியின் விடையே இதற்கும் பொருந்தும்.

*5. 'பத்துக் கொடுத்தும் பதிஇருந்து வாழ்விளிதே' - இதற்கு இரு பொருள் தருக.

(1) ஊரார் விதிக்கும் அபராதமாகிய சில பொருள்களைக் கொடுத்தாவது உள்ளூரிலேயே குடியிருப்பது நல்லது.

(2) தன் இயல்பாகச் செலுத்தும் வரியில் பத்துமடங்கு செலுத்தும்படி நேர்ந்தாலும் உள்ளூரில் இருந்து வாழ்வது நல்லது.

6. பொருள் கூறுக :—(விடை எதிரெதிரே காண்க.)

(1) குற்று - குற்றி
(2) விழுப்பம் - சிறப்பு
(3) பாங்குடைய - தகுதியான
(4) காழ் இனியது - மிகவும் இனியது
(5) இல் - இல்லை.

7. இலக்கணக் குறிப்பு : (விடை எதிரெதிரே காண்க.)

(1) இனிது - குறிப்பு வினைமுற்று
(2) வாழ்வு - தொழிற்பெயர்
(3) உண்ணு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(4) உடைய - வினையாலணையும் பெயர்.

முனைப்பாடியார் இயற்றிய

# அறநெறிச் சாரம்

## முன்னுரை

**பெயர்க் காரணம் :** அறம் + நெறி + சாரம் = அறநெறிச் சாரம். தரும நெறியினது சாரங்களைக் கூறும் நூல் என்பது இதன் பொருள். அறநெறியினது சாரம் என விரிந்து நூலைக் குறிப்பதால் இது ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அறத்தினது நெறி என விரியின் ஆறும் வேற்றுமைத் தொகை. அறமாகிய நெறி என்று கொண்டால் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

## ஆசிரியர் வரலாறு

**ஆசிரியர் :** முனைப்பாடியார்

**பிறப்பிடம் :** சோழ நாட்டுத் திபங்குடி

**சமயம் :** சைனம்

**காலம் :** சுமார் 500 ஆண்டுகட்கு முற்பட்டது

**நூலின் இயல்பு :** இந்நூல் 'அருங்கலச் செப்பு' என்னும் சமண சமய நீதி நூலின் பகுப்பு முறையைப் பின்பற்றியுள்ளது. காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

**நூலின் பெருமைகள் :**

(1) இந்நூல் திருக்குறள், நாலடியார் போன்ற சிறந்த நீதி நூல்களின் உயர்ந்த கருத்துக்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுகின்றது.

(2) சமணசமய ஒழுக்கத்தையும் அருகக் கடவுளின் சிறப்பையும் நன்கு விளக்குகிறது. இந்நூல் ஆடவர் பெண்டிர், நெஞ்சம் ஆகியவற்றை முன்னிலைப் படுத்தி கூறும் செய்யுட்கள் பலவற்றைக் கொண்டிருப்பது பாராட்டத் தக்க தாகும்.

## பொருள் விளக்கம்

### உரைநடை

காய்வதன்கண் உற்ற குணம் தோன்றாதாகும்; உவப்பதன் கண் குற்றமும் தோன்றாக்கெடும். (ஆதலால்) காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே.

### பதவுரை

காய்வதன்கண் - வெறுக்கப்படும் பொருளில்
உற்ற - உள்ள
குணம் - நல்ல தன்மையானது
தோன்றாதாகும் - புலப்படாது
உவப்பதன்கண் - விரும்பப்படும் பொருளில் உள்ள
குற்றமும் - குற்றங்களும்
தோன்றாக்கெடும் - புலப்படாமல் மறையும் (ஆதலால்)
காய்தல் - வெறுப்பும்
உவத்தல் - விருப்பும்
அகற்றி - இல்லாமல்
ஒரு பொருள்கண் - ஒரு பொருளில் உள்ள குணம் குற்றங்களை
ஆய்தல் - ஆராய்ந்து அறிதல்
அறிவுடையார் கண்ணதே - அறிவுடையவர்கள் செயலாகும்.

### தெளிவுரை

ஒரு பொருளை வெறுப்புடன் ஆராய்ந்தால் அதில் உள்ள நல்ல தன்மைகள் தோன்றா. ஒரு பொருளை விருப்புடன் ஆராய்ந்தால் அதில் உள்ள குற்றங்கள் தோன்றாமல் மறையும். ஆதலால், விருப்பு வெறுப்பு இல்லாமல் ஒரு பொருளிலுள்ள குணம் குற்றங்களை ஆராய்தல் அறிவுடையவர்கள் செயலாகும்.

### விளக்கம்

ஒரு பொருளின் மீது வெறுப்புள்ளவனுக்கு, அப்பொருள் எவ்வளவு தான் நல்ல பொருளாக இருப்பினும் குற்றம் நிறைந்த பொருளாகவே தோன்றும். ஒரு பொருளினிடத்து விருப்பம் அதிகமாகக் கொண்டவன் அது தீய பொருளாக இருப்பினும் அவன் அதன் மீது கொண்டுள்ள பற்றினால் அதிலுள்ள குற்றங்கள் அவனுக்குப் புலப்படுவதில்லை. ஆகையால், ஒரு பொருளின் உண்மைத் தன்மையை விரும்புவோர் அதனிடத்து வெறுப்பும் விருப்பும் இல்லாமல் நடுநிலைமையோடு ஆராயவேண்டும்.

### இலக்கணம்

காய்தல், உவத்தல் — தொழிற்பெயர்கள். அகற்றி — வினையெச்சம். உற்ற — பெயரெச்சம். தோன்றா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

## கேள்வியும் பதிலும்

1. அறநெறிச் சாரம்——பெயர்க் காரணமும், ஆசிரியர் பெயரும் கூறுக.

தரும நெறியினது சாரங்களைக் கூறும் நூலாகையால் இதற்கு இப் பெயர் வந்தது. இதன் ஆசிரியர் முனைப்பாடியார்.

2. முனைப்பாடியாரைப் பற்றிக் குறிப்பு வரைக.

முனைப்பாடியார் சோழநாட்டுத் தீபங்குடியைச் சார்ந்தவர்; சைன சமயத்தினர்; சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

3. ஒரு பொருளை எவ்வாறு ஆராய்தல் வேண்டும்? ஏன்?

ஒரு பொருளை வெறுப்போடு ஆராய்ந்தால் அதிலுள்ள குணம் தோன்றாது. அதை விருப்பத்தோடு ஆராயின் அதிலுள்ள குற்றம் தோன்றாது. ஆகையால் ஒரு பொருளினிடத்தில் வெறுப்பும் விருப்பும் இல்லாமல் ஆராய வேண்டும்.

4. பொருள் கூறுக. (விடை எதிரெதிரே காண்க)

(1) காய்தல் - வெறுத்தல்
(2) உவத்தல் - விரும்புதல்
(3) உற்ற - பொருந்திய
(4) ஆய்தல் - ஆராய்தல்

5. இலக்கணக் குறிப்பு வரைக. (விடை எதிரெதிரே காண்க)

(1) உவத்தல் - தொழிற் பெயர்
(2) அகற்றி - வினையெச்சம்
(3) உற்ற - பெயரெச்சம்
(4) தோன்று - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

---

# III. தொடர்நிலைச் செய்யுட் பகுதி

முதற் செய்யுளுடன் பின்வரும் செய்யுள் கதைத் தொடர்பாக அமைந்து வருவதற்குத் தொடர்நிலைச் செய்யுள் என்று பெயர்.

கம்பர் இயற்றிய

## கம்ப ராமாயணம்

### முன்னுரை

நூலின் பெயர்க் காரணம்: கம்பர் + ராமாயணம் = கம்ப ராமாயணம். கம்பரால் செய்யப்பட்ட ராமாயணம் என்றேனும் கம்பரது ராமாயணம் என்றேனும் பொருள்படும். ஆதலின் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்றேனும், ஆறும் வேற்றுமைத் தொகை என்றேனும் கொள்ளலாம்.

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர்: இந்நூலை இயற்றியவர் கம்பர்.

பிறப்பு, வளர்ப்பு: கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் பிறந்தார். இவர் தந்தை ஆதித்தன் என்பவர். இவரை ஆதரித்தவர் சடையப்ப

வள்ளல் ஆவர். கம்பரது சமாதி இன்னும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த நாட்டரசன் கோட்டையில் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

**கம்பர் பெருமை:** (1) 'கவிச் சக்கரவர்த்தி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். (2) 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்னும் பழமொழிகள் கம்பரின் புலமையைக் காட்டும்.

**பெயர்க் காரணம்:** (1) குலம் பற்றி வந்தது என்றும், (2) நாடு பற்றி வந்தது என்றும், (3) கம்பர் குழந்தைப் பருவத்தில் திருவழுந்தூர்க்கோயில் கொடிக்கம்பத்தின் கீழ்க் கிடந்ததால் வந்தது என்றும், (4) கம்பர் என்பது இயற்பெயரே என்றும் பலவகையாகக் காரணங்கள் கூறப்படுகின்றன.

**குலம்:** வேளாளர் என்பர் சிலர். உவச்சர் என்பர் சிலர். உவச்சர் என்பதே பெரும்பாலோர் கருத்து.

**காலம்:** கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு என்று சிலரும், கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று சிலரும் கூறுகின்றனர். 12-ஆம் நூற்றுண்டு என்பதே ஆராய்ச்சியாளர் முடிவு.

**பிற நூல்கள்:** கம்பர், சரசுவதி அந்தாதி, ஏரெழுபது, சடகோபரந்தாதி, கோயில் ஒழுகு முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

**காண்டங்கள்:** கம்ப ராமாயணத்திலுள்ள காண்டங்கள் ஏழு. அவை பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், யுத்த காண்டம், சுந்தர காண்டம், உத்தர காண்டம் என்பவை. நம் பாடப் பகுதி சுந்தர காண்டத்தைச் சேர்ந்தது. இவற்றுள் முதல் ஆறு காண்டங்களும் கம்பரால் பாடப் பெற்றவை. உத்தர காண்டம் ஒட்டக் கூத்தர் பாடியது என்பர். ஏழு காண்டங்களும் 12,000 பாடல்களை உடையன. அவற்றுள் கம்பர் பாடியவை 10,500 பாடல்களாம்.

**வேறு பெயர்:** கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்திற்கு இராமாவதாரம் எனப்பெயரிட்டனர். அது தற்கால வழக்கத்திலில்லை. தற்காலத்தே வழங்குவது கம்ப ராமாயணம் என்னும் பெயரே.

**நூல் இயற்றக் காரணம்:** வடமொழியில் உள்ள வால்மீகி ராமாயணத்தைப் போல் தமிழிலும் ராமாயணம் பாடவேண்டும் என்னும் ஆசையினால் இவர் இந்த நூலைப் பாடினர். இவரை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் தூண்டுதலாலும், சோழ அரசனை குலோத்துங்கனின் வேண்டுகோளாலும் இவர் இதை இயற்றினர் என்றும் சிலர் கூறுவர். இவர் தாம் இயற்றிய இந்நூலைத் தமிழ்ப் புலவர்கள் முன்பாகத் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்தார்.

**கம்பர் குண நலம்:** இவர் செய்ந்நன்றி மறவாத செந்தமிழ்ப் புலவர். தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை இராமாயணத்தில் பத்து இடங்களில் புகழ்ந்து பாடியுள்ளார்.

**சமகாலப் புலவர்கள்:** ஔவையார், புகழேந்தி, ஒட்டக் கூத்தர், பேராசிரியர் முதலியவர்கள்.

## சுந்தர காண்டம்

சுந்தரமாகிய காண்டம் என விரியும். இதன் பொருள் அழகிய பகுதி என்பது. சுந்தரம் - அழகு. காண்டம் - பகுதி. கம்ப ராமாயணச் செய்யுட்களில் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து அழகுபட அமைந்திருக்கும் பகுதியாகையால் இதற்கு இப்பெயர் வந்தது. இராம

பிரானிடத்தில் மிகுந்த பக்தியுடைய அனுமனது பெருமையை நன்கு விளக்கி இனிமையாக உள்ள பகுதியாகையால் இதற்கு இப்பெயர் வந்தது. அனுமனுக்குச் சுந்தரன் என்றும் வேறு பெயர் உண்டு. இக்காண்டத்தில் வரும் பெரும்பகுதி அநுமன் செயலையே குறிக்கும் பகுதியாகையால் இப்பெயர் வந்தது.

## காட்சிப் படலம்

நம் பாடப்பகுதி காட்சிப் படலத்தில் உள்ளது. அதாவது சீதையை அசோக வனத்தில் தேடப் புகுந்த அநுமன் அவளை அங்கே கண்டு மகிழ்ந்த நிகழ்ச்சியைக் கூறும் படலம்.

## நம் பாடப் பகுதியின் சுருக்கம்

சீதையைக் காணும் பொருட்டு அநுமன் தென்திசை நோக்கி இலங்கையை அடைந்தான். அங்குப் பலவிடங்களிலும் தேடி அவளைக் காணமல் அசோகவனத்தை அடைந்தான். அங்கும் சீதையைக் காணவில்லையேல் இலங்கையை அழித்துத் தானும் இறப்பதாக உறுதி பூண்டான்.

அநுமன் சோலையினுள்ளே புகுந்தான்; அரக்கியர் நடுவே சீதை அமர்ந்திருப்பதைக் கண்டான். அக்காட்சி கருமேகக் கூட்டங்களினிடையே மின்னற் கொடி தோன்றுவது போல இருந்தது. சீதையின் மாசுபடாத தூய தன்மையைக் கண்டு பலவாறு பாராட்டினன். சீதை தோன்றியதால் குடிப்பிறப்பு, பெண்மை, நாணம் முதலியவை உயர்வு அடைந்தன வென்று புகழ்ந்தான். அந்நிலையை இராமன் காணும் பேறு பெறவில்லையே என்று வருந்தினன். பின்னர் ஒரு மரத்தில் மறைந்திருந்தான். அப்போது அங்கே இராவணன் தோன்றினன்.

## பொருள் விளக்கம்

### 1. அசோக வனத்தில் அநுமன் எண்ணம்

#### உரைநடை

மாடு நின்ற அம் மணிமலர்ச் சோலையை மருவி, இவ்வழி தேடி காண்பனேல் என் சிறுமை தீரும்; ஊடு கண்டிலன், எனில் பின்னர் உரியது ஒன்று இல்லை. இ விலங்கல் மேல் இலங்கையை வீட்டி விடுவேன்.(மற்று—இடைச் சொல்.)

#### பதவுரை

மாடு நின்ற - பக்கத்தில் இருந்த
அ - அந்த
மணி - அழகிய
மலர்ச் சோலையை மருவி - மலர்கள் நிறைந்த அசோகவனத்தை அணுகி
இவ்வழிதேடி - இவ்விடத்தில் தேடி
காண்பனேல் (சீதையை) கண்டால்
என் சிறுமை தீரும்-எனது துன்பம் நீங்கும்
ஊடு கண்டிலன் - இவ்விடத்தில் காணவில்லை என்றால்
பின்னர் - பின்பு
உரியது - செய்யத்தக்கது
ஒன்று இல்லை - ஒன்றும் இல்லை
இ விலங்கல் மேல் - இந்தத் திரிகூட மலைமீது அமைந்த
இலங்கையை - இந்த இலங்கையை
வீட்டி - அழித்து
விடுவேன் - தானும் இறப்பேன் (என்று சிந்தித்தான் அநுமன்.)

### தெளிவுரை

(இலங்கை முழுவதும் சீதையைத் தேடியும் காணுத அநுமன் இன்னும் தேடாமல்) பக்கத்தில் இருந்த அசோக வனத்தை அடைந்து, "இவ்விடத்தில் சீதையைக் காணக் கூடும்; கண்டால் என்மனத் துன்பம் நீங்கிவிடும். இங்குக் காணவில்லை என்ருல் பின்னர் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. சீதையைக் கவர்ந்த இராவணன் வசிக்கும் இந்த இலங்கையை அழித்து நானும் இறப்பேன்'' என்று சிந்தித்தான்.

### விளக்கம்

அசோகவனத்தைத் தவிர தேடுதற்குரிய வேறு இடமில்லை. அங்கும் சீதாபிராட்டியைக் காணவில்லை என்ருல் தேடும் எண்ணத்தைக் கைவிட்டுத் திரும்பவேண்டியதுதான். குறிப்பிட்ட நாள் கடந்து திரும்பினுல் கடுந் தண்டனை விதிக்கும் சுக்ரீவனை அடைவதைவிட, சீதாபிராட்டியைக் கவர்ந்த இராவணன் வசிக்கும் இலங்கையை அழித்துப் பழிக்குப்பழிவாங்கிப் பின்னர் தானும் இறப்பதே நல்லது என்று அநுமன் கருதினன்.

**விலங்கல்மேல் இலங்கை:** மலைமீது அமைந்த இலங்கை. ஒரு காலத்தில் வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் போர் மூண்டது. ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளாலும் மேருமலையைப் பிடித்துக் கொள்வதென்றும் வாயு தனது வலிமையால் அம்மலையைப் பெயர்த்துவிடுவதென்றும் அவர்கள் தமக்குள் முடிவு செய்து கொண்டனர். இவ்வலிமைப் போட்டியில் வாயு மிக வேகத்துடன் வீசியதால் மேருமலையின் சிகரம் ஒன்று உடைபட்டுத் தென்கடலில் வீழ்ந்து விட்டது. அச்சிகரத்தில் அமைக்கப்பட்ட நகரமே இலங்கையாகும் என்று சிலர் கூறுவர்.

மாடு - பக்கம். ஊடு - இடையில். விலங்கல் - மலை. சிறுமை - சீதையைக் காணுமையால் உண்டான வருத்தம்.

### இலக்கணம்

மருவி, தேடி, வீட்டி — வினையெச்சங்கள். அ+வழி = அவ்வழி. சிறுமை—பண்புப் பெயர். இல்லை—குறிப்பு வினைமுற்று. வீடுவேன்— தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று. மற்று—இடைச் சொல். வீடு+வ்+என்=வீடுவேன்.

[மேற் கூறியவாறு நினைத்து அநுமன் சோலைக்குள் நுழைந்தான். அச் சோலையில் இருந்த சீதை இராமனைப்பற்றிப் பலவாறு எண்ணி ஏங்கியிருந் தாள். அவளுடன் விபீடணன் மகளாகிய திரிசடையும் அவளிடத்தில் அன்புகாட்டித் துணையாக உரையாடிக் கொண்டிருந்தாள். இரவு திரிசடை ஒரு நல்ல கனவு கண்டாள். இலங்கையில் சில கெட்ட சகுனங்கள் தோன்றின. சீதையைச் சுற்றிக் காவல் புரிந்து வந்த அரக்கியர் தூங்கினர்.]

## 2. அநுமன் சீதை இருக்குமிடத்தைக் காணுதல்

### உரைநடை

இ இடை அண்ணல் அ இராமன் ஏவிய வெம் விடை அனைய போர் வீரம் தூதனும் அரிதின் நோக்குவான் அ இடை எய்தினன், நோ இடை மடந்தைதன் இருக்கை நோக்கினன்.

## பதவுரை

இ இடை - இப்படிப்பட்ட சமயத்தில்
அண்ணல் - பெருமையிற் சிறந்த
அ இராமன் - அந்த இராமன்
ஏவிய - அனுப்பிய
வெம் விடை அனைய - கொடிய காளையைப் போன்ற
போர் - போரில் வல்ல
வீரம் - வீரத் தன்மை பொருந்திய
தூதனும் - தூதனுகிய அநுமனும்
அரிதின் - அருமையாக
நோக்குவான் - பார்த்து வருபவனாய்
அ இடை - அந்த இடத்தை
எய்தினன் - அடைந்து
நோ இடை - (மிகவும் மெல்லியதாகையால்) வருந்தும் இடையை உடைய
மடந்தையின் - சீதையின்
இருக்கை - இருப்பிடத்தை
நோக்கினுன் - பார்த்தான்.

## தெளிவுரை

இச்சமயத்தில் இராமன் அனுப்பிய கொடிய காளையைப் போன்ற போர்வீரமுடைய அநுமன் எல்லா இடங்களையும் உற்றுப் பார்த்துப் பின்னர், வருந்தும் இடையை உடைய சீதையின் இருப்பிடத்தைக் கண்டான்.

## விளக்கம்

இராமபிரானின் தூதனுகி இலங்கையில் புகுந்து, எல்லாவிடங்களிலும், விடாமல் உற்றுப் பார்த்துக் கொண்டுவருபவனுகிய அநுமன் அவ்வசோக வனத்தில் சீதாபிராட்டியைக் கண்டான் என்பது கருத்து. விடை - காளை. காளை கம்பீரமான தோற்றத்துக்கும், வீர நடைக்கும், வலிமைக்கும் உவமையாகக் கூறப்பட்டது.

## இலக்கணம்

ஏவிய—பெயரெச்சம். நோக்குவான், எய்தினன்—முற்றெச்சங்கள். நொ + இடை = நொவ்விடை—வினைத்தொகை. அனைய—உவம உருபு.

### 3. கண் விழித்தெழுந்த அரக்கியர் சீதாபிராட்டியைச் சூழ்ந்து கொள்ளுதல்.

## உரைநடை

எண்ணினுக்கு அளவு இடல் அரிய ஈட்டினர், கண்ணினுக்கு அளவு இடல் அரிய காட்சியர், பேண் என பெயர் கோடு திரியும் பெற்றியர், துண்ணென, துயில் உணர்ந்து, எழுந்து சுற்றினர்.

## பதவுரை

எண்ணினுக்கு - மனத்திற்கும்
அளவு இடல் - அளவிடுவதற்கு
அரிய - அருமையான
ஈட்டினர் - கூட்டமாக இருப்பவர்களும்
கண்ணினுக்கு - கண்களுக்கு
அளவு இடல் அரிய - அளவிட அருமையான
காட்சியர் - தோற்றம் உடையவர்களும்
பேண் என - பெண்கள் என்று
பெயர் கோடு - பெயர் வைத்துக் கொண்டு
திரியும் - திரிகின்ற
பெற்றியர் - தன்மையுடையவர்களும் ஆகிய அரக்கியர்
துண் என - திடுக்கென்று
துயில் உணர்ந்து - தூக்கத்திலிருந்து விழித்து
எழுந்து சுற்றினர் - எழுந்து வந்து (சீதையைச்) சூழ்ந்து கொண்டனர்.

### தெளிவுரை

மனத்திற்கும் அளவிட முடியாத கூட்டமாக இருப்பவர்களும், கண்களுக்கும் அளவிட முடியாத தோற்ற முடையவர்களும், பெயர் அளவில் பெண்கள் என்று திரிகிற தன்மை உடையவர்களும் ஆகிய அரக்கியர் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து சீதாபிராட்டியைச் சுற்றிக் கொண்டார்கள்.

### விளக்கம்

அரக்கியர் தன்மையைக் குறித்து இப்பாட்டில் கம்பர் அழகாகக் கூறி இருக்கும் நயம் படித்து இன்புறத்தக்கது. அரக்கியர் நினைப்பதற்கும் இயலாத அளவு கூட்டமாக இருப்பவர்கள்; காண்பதற்கும் இயலாத மிகப் பெரிய தோற்றமுடையவர்கள். பெண்களுக்கு வேண்டிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களும் இன்றி விலங்குபோன்ற இரக்கமில்லா அரக்கியர் உருவத்தால் பெண்களாயினும் குணத்தால் பெண்கள் அல்லர் என்பதைப் புலப்படுத்துவதற்காகக் கம்பர், 'பெண் எனப் பெயர் கொடு திரியும் பெற்றியர்' என்று குறிப்பிட்டார். ஈடு—வலிமை என்றும் பொருள் கூறுவர்.

### இலக்கணம்

அரிய—குறிப்புப் பெயரெச்சம். எழுந்து—வினையெச்சம். கொண்டு - கொடு—தொகுத்தல் விகாரம். துண்—ஒலிக் குறிப்பு. திரியும்—பெயரெச்சம்.

## 4. அநுமன் அரக்கியரிடையே சீதையைக் காணுதல்

### உரைநடை

ஒரு தனிக்கொண்டல் உரு நிறத்து ஊழியான் இரு நிறத்து உற்ற எற்கு இயைந்த காந்தத்தை விரிமழைக் குலம் கிழித்து ஒளிரும் மின் எனக் கருநிறத்து அரக்கியர் குழுவில் கண்டனன்.

### பதவுரை

ஒரு தனிக் கொண்டல் - ஒப்பற்ற ஒரு நீருண்ட மேகம் போன்ற
உரு நிறத்து - உருவ நிறத்தை உடையவனும்
ஊழியான் - யுகமுடிவிலும் அழிவில்லாதவனும் ஆகிய திருமாலின்
இருநிறத்து உற்ற - பெரிய மார்பிலே தங்குபவரும்
எற்கு இயைந்த - எனது (கம்பனது) மனத்தில் பக்தியைப் புகுத்தி என்னைக் கவரும்
காந்தத்தை - காந்தம் போன்றவரும் ஆகிய (இலக்குமியின் மறு பிறப்பான) சீதையை
விரி - (வானத்தில்) பரவுகின்ற
மழை குலம் - கறுத்த மேகக் கூட்டத்தை
கிழித்து - இடையே பிளந்து கொண்டு
ஒளிரும் - அங்கு விளங்குகின்ற
மின் என - மின்னலைப் போல
கரு நிறத்து - கரிய நிறத்தை உடைய
அரக்கியர் குழுவின் - அரக்கியர் கூட்டத்தின் இடையில்
கண்டனன்-(அநுமன்) பார்த்தான்.

### தெளிவுரை

நீர் கொண்ட மேகம் போன்ற நிறத்தை உடையவனும், ஊழிக் காலத்திலும் அழியாதிருப்பவனும் ஆகிய திருமாலின் பரந்த மார்பில் பொருந்தி,

கம்பனின் மனத்தைக்கவரும் இலக்குமியின் அவதாரமாகிய சீதாபிராட்டியை அநுமன் கறுத்த மேகக் கூட்டத்தின் நடுவே தோன்றும் மின்னலைப் போல, கரிய அரக்கியர் கூட்டத்தின் இடையில் கண்டான்.

## விளக்கம்

மிகவும் கரிய நிறமுடைய அரக்கியர் கூட்டம் கரிய மேகக் கூட்டம் போன்று இருந்தது. அவர்கள் இடையே இருந்த சீதை அம் மேகக் கூட்டங்களைப் பிளந்துகொண்டு மின்னல் கொடி விளங்குவது போல இருந்தாள்.

இராமன் திருமால் அவதாரம் என்பதும், சீதை இலக்குமி அவதாரம் என்பதும் இப்பாடலால் அறியலாம். கம்பர் சீதாபிராட்டியிடம் மிகுந்த பக்தி பூண்டவர் என்பதும் இப்பாடலால் விளங்கும்.

'உரு நிறத்து ஒரு தனிக் கொண்டல்': நீருண்ட கருமேகம் போன்ற கருநிறம் உடையவனாதலால் திருமால் இவ்வாறு குறிப்பிடப் பட்டான்.

'இரு நிறத்து உற்ற'—திருமாலினது பெரிய மார்பிலே தங்குபவள் இலக்குமி. திருமால் பாற்கடலில் பள்ளிகொண்ட நிலையில் இருக்கும்போது அவனது மார்பில் இலக்குமி தங்குகின்றாள் என்பதும் அவ்விலக்குமியே சீதையாகப் பிறந்தாள் என்பதும் புராண வரலாறு ஆகும்.

எற்கு இயைந்த காந்தத்தை: எனது மனத்தைக் கவர்கின்ற காந்தம் போல்பவள் சீதை என்று கம்பர் குறிப்பிடுகின்றார். சீதா பிராட்டியின் திருவுருவத்தில் மனத்தைப் பறிகொடுத்து, பக்தியுடன் கம்பர் இருந்தார். ஆதலால், சீதை இரும்பு போன்ற தம் மனத்தை இழுக்கும் காந்தம் போல்பவள் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

## இலக்கணம்

இப்பாடலில் முதல் இரண்டடிகளிலும் அரக்கியருக்கும் மேகக் கூட்டங்களுக்கும், சீதைக்கும் மின்னற் கொடிக்கும் ஒப்புமை தோன்றக் கூறி இருப்பதால் உவமையணியாகும். விரிமழைக்குலம் — வினைத்தொகை. ஒளிரும் — பெயரெச்சம். ஊழியான் — வினையாலணையும் பெயர்.

[அரக்கியர் நடுவில் இருப்பவள் சீதையே என்று துணிந்து அநுமன் மகிழ்ச்சியடைந்தான். அவளது உருவ முறையைக் கண்டு, மாசுபடாத தூய தன்மையை எண்ணித் தனக்குள் பலவாறு பாராட்டி மகிழ்கிறான்.]

## 5. சீதையின் இந்த நிலையைக் காணும் பேறு இராமனுக்கு இல்லையே என்று அநுமன் நினைத்தல்

### உரைநடை

நங்கை தோன்றலால் மனைப் பிறவி பேண நோற்றது; பெண்மை போல் நாணம் நோற்று உயர்ந்தது; மாண நோற்று ஈண்டு இவள் இருந்த ஆறு எலாம் அவன் கமலக்கண்களால் காண நோற்றிலன்.

### பதவுரை

நங்கை தோன்றலால்-சீதை பிறந்த காரணத்தால்

மனைப்பிறவி - இவள் பிறந்த குடிப் பிறப்பு

பேண நோற்றது - (யாவரும் தன்னை) விருப்பப்படியான தவத்தைச் செய்ததாகும்;

பெண்மை போல் - (சீதையின்) பெண் தன்மையைப் போல

"பிறந்தோர் என்போர் புகழுடன் சிறந்தோர்." — சுந்தரம் பிள்ளை.

நாணம் - இவளிடம் உள்ள நாணமும்
நோற்று உயர்ந்தது - தவம் செய்து உயர்ந்தது
மாண - இத்தகைய சிறப்புண்டாகுமாறு
நோற்று - (கணவனையே நியானித்தலாகிய) தவத்தைச் செய்து
ஈண்டு - இங்கு
இவள் இருந்த ஆறு எலாம் - இவள் இருந்த விதத்தை எல்லாம்
அவன் - இராமபிரான்
கமலம் கண்களால் - செந்தாமரை போன்ற தன் கண்களால்,
காண - பார்ப்பதற்கு
நோற்றிலன் - தவம் செய்யவில்லை.

### தெளிவுரை

'சீதை தோன்றியதால் இவள் குடிப்பிறப்பு யாவரும் தன்னை விரும்புமாறு தவம் செய்ததாகும். இவள் பெண் தன்மையைப் போல இவளிடம் உள்ள நாணமும் தவம் செய்து உயர்ந்தது. இத்தகைய சிறப்பு உண்டாகுமாறு தன் கணவனையே நியானித்தலாகிய தவத்தைச் செய்து இங்கு இவள் இருக்கும் விதத்தையெல்லாம் இராமபிரான் தன் செந்தாமரை போன்ற கண்களால் பார்ப்பதற்குத் தவம் செய்யவில்லை.' என்று அநுமன் எண்ணினான்.

### விளக்கம்

கற்புநிலை மாறாத சீதை உலகத்தில் தோன்றியதால்அவள் குடிப்பிறப்புக்கும், நாணம் என்னும் குணத்துக்கும் மிகுந்த உயர்வு ஏற்பட்டது என்பது கருத்து. இப்படிப்பட்ட மேன்மையை உடைய சீதையை நேரில் கண்டால் இராமன் பேரின்பம் அடைவான். அவன் அங்ஙனம் பேரின்பம் அடையாமைக்குக் காரணம் அவன் தவக்குறைவாகவே இருக்கலாம் என்று அநுமன் எண்ணினான்.

### இலக்கணம்

நங்கை—பெண்பாற் சிறப்புப்பெயர் × நம்பி—ஆண்பாற் சிறப்புப் பெயர். கமலக்கண் = தாமரை மலர் போன்ற கண்கள்—உவமத் தொகை. இருந்த + ஆறு = இருந்தவாறு.

### 6. அநுமன் இவ்வாறு எண்ணி அங்கு ஒரு மாக்கிளையில் மறைந்து நிற்க அங்கே இராவணன் தோன்றுதல்

### உரைநடை

என்று இனையன இவை எண்ணி, வண்ணம் வான் பொன் இணி நெடுமரப் பொதும்பர் புக்கு அவண் நின்றனன் அவ்வழி நிகழ்ந்தது என் எனில் துன்று பூஞ்சோலை வாய் அரக்கன் தோன்றினான்.

### பதவுரை

என்று இனையன - மேற்கண்டவாறு இத்தகையவற்றை
எண்ணி - அநுமன் நினைத்து
வண்ணம் வான் - அழகும் உயர்வும் கொண்டு
பொன் இணி - பொன்மயமாக அடர்ந்த
நெடுமரப்பொதும்பர் - நீண்ட மரங்களைக் கொண்ட அசோகவனத்தில்
புக்கு - நுழைந்து
அவண் - அவ்விடத்தில்
நின்றனன் - மறைந்து பார்த்துக் கொண்டிருந்தான்
அவ்வழி - அங்கு அப்போது
நிகழ்ந்தது - நடந்தது
என் எனில் - என்ன செய்தி என்றால்
துன்று - நெருங்கிய
பூஞ்சோலை வாய் - பூக்களைக் கொண்ட சோலையில்
அரக்கன் - அரக்கனாகிய இராவணன்
தோன்றினான் - வந்தான்.

## தெளிவுரை

மேற்கண்டவாறு அநுமன் இப்படிப்பட்ட செய்திகளை நினைத்து அழகும் உயர்வும் கொண்டு பொன்மயமாக அடர்ந்த மரங்களைக் கொண்ட அசோக வனத்தில் நுழைந்தான்; அவ்விடத்தில் மறைந்து பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது நெருங்கிய பூக்களையுடைய அச்சோலையில் இராவணன் தோன்றினன்.

## விளக்கம்

சீதையைப்பற்றிப் பலவாறு புகழ்ந்த எண்ணத்துடன் அநுமன் மரத்தின் மேல் தங்கி இருந்தபோது இராவணன் தோன்றினன்.

## இலக்கணம்

நெடுமரம்—பண்புத்தொகை. வழி, வாய்—ஏழாம் வேற்றுமைஉருபுகள். புக்கு—புகு என்னும் பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று. பூ+சோலை=பூஞ்சோலை.

## கேள்வியும் பதிலும்

**1. கம்ப ராமாயணம்—குறிப்பு வரைக.**

கம்பரது இராமாயணம் எனவிரியும் ஆறும் வேற்றுமைத் தொகை. கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் எனவிரியின் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

**2. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது? நம் பாடப் பகுதி எக்காண்டத்தில் எப்படலத்தில் உள்ளது?**

கம்ப ராமாயணம், 1. பாலகாண்டம், 2. அயோத்தியா காண்டம், 3. ஆரணிய காண்டம், 4. கிஷ்கிந்தா காண்டம், 5. சுந்தர காண்டம், 6. யுத்த காண்டம், 7. உத்தர காண்டம் என ஏழு காண்டங்களை உடையது, நம் பாடப்பகுதி சுந்தர காண்டம் காட்சிப் படலத்தில் உள்ளது.

**3. சுந்தர காண்டத்துக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?**

விடை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.

**4. கம்பரின் பெயர்க் காரணம், தந்தை, பிறப்பிடம், காலம், சமயம், பெருமை, ஆதரித்தவர் பெயர் முதலியவற்றை எடுத்து எழுதுக.**

விடை முன்னுரைப் பகுதியில் படித்துணர்க.

**5. அசோக வனத்தை அடைந்த அநுமன் என்னென்ன எண்ணினான்?**

இலங்கை முழுவதும் தேடியும் சீதையைக் காணாத அநுமன் அசோகவனத்தை அடைந்தான். அங்கு, "இவ்விடத்தில் சீதையைக் கண்டால் என் மனத்துன்பம் நீங்கும்; இங்கும் காணவில்லையேல் பின்னர் நான் செய்யத் தக்கது ஒன்றும் இல்லை. சீதையைக் கவர்ந்த இராவணன் வசிக்கும் திரிகூடமலைமீது அமைந்த இந்த இலங்கையை அழித்து நானும் இறப்பேன்" என்று எண்ணினன்.

**6. 'விலங்கல் மேல் இலங்கை'—இதன் கதைக் குறிப்பை எழுதுக.**

ஒரு சமயம் வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் போர் உண்டாயிற்று. ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளாலும் மேருமலையைப் பிடித்துக்கொள்ள

தென்றும், வாயு தன் வலிமையால் அம்மலையைப் பெயர்த்துவிடுவதென் றும் அவர்கள் தமக்குள் முடிவுசெய்துகொண்டனர். இவ்வலிமைப் போட்டி யில் வாயு மிக வேகத்துடன் வீசியதால் மேரு மலையின் சிகரம் ஒன்று உடை பட்டுத் தென்கடலில் வீழ்ந்துவிட்டது. அச்சிகரத்தில் அமைக்கப்பட்ட நகரமே இலங்கையாகும்.

***7. "தேடி இவ்வழி......இலங்கையை விட்டி"—இதனைச் சந்தர்ப்பத் துடன் விளக்குக.**

5-ஆம் கேள்வியின் விடையையே இதற்கும் எழுதுக.

**8. அநுமன் எப்படிப்பட்டவன்?**

*அநுமன் கொடிய காலனைப் போன்ற போரில் வல்ல வீரத்தன்மை உடையவன்.*

**9. சீதையைச் சுற்றியிருந்த அரக்கியரின் தன்மையைப் பற்றிக் கம்பர் கூறுவன யாவை?**

*சீதையைச் சுற்றிலும் இருந்த அரக்கியர்கள் மனத்தாலும் அளவிட முடியாத கூட்டத்தினர்; கண்களுக்கு அளவிட அருமையான உருவத்தை யுடையவர்; பெண் என்ற பெயருடன் விளங்கினரே அன்றி அவர்களிடம் பெண் தன்மையே சிறிதும் காணப்படவில்லை. மின்னற் கொடியைப் போன்ற சீதையைச் சுற்றிலும் அரக்கியர் கருமேகக் கூட்டங்கள் போல் இருந்தார்கள்.*

***10. 'விரிமழைக் குலம் கிழித்து ஒளிரும் மின் என' — இவ்வுவ மையை உவமேயத்துடன் பொருத்தி விளக்குக.**

*அரக்கியர் நடுவே அநுமன் சீதையைக் கண்டான். கருநிறம் உடைய அரக்கியருக்கு இடையே செந்நிறம் உடைய சீதை இருந்தாள். கரிய பொருள் கள் சூழ்ந்திருக்கும் இடத்தில் செந்நிறமுடைய பொருள் பிரகாசத்துடன் தோன்றுமல்லவா? விரிந்த மேகக் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு மின் னல் தோன்றுவது போலக் கரிய நிறமுடைய அரக்கியருக்கு இடையில் செந் நிறமுடைய சீதை ஒளியுடன் தோன்றினாள்.*

**11. சீதையினிடத்தில் கம்பர் மிகவும் பக்தி உடையவர் என்பதை எப்படி அறியலாம்?**

*அரக்கியர்க்கு நடுவே இருந்த சீதையை அநுமன் கண்ட காட்சியைக் கம்பர் வருணிக்கும்போது, 'எற்கு இயைந்த காந்தத்தை' என்று குறிப்பிட்டுள்ளார். 'எனது அன்புக்கும் பக்திக்கும் இடமான சீதை' என் பது இதன் பொருள். இதனால் கம்பர் சீதையிடம் மிகவும் பக்தியுடையவர் என்பதை அறியலாம்.*

***12. 'காண நோற்றிலன் அவன் கமலக் கண்களால்'—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.**

(அல்லது)

**சீதா பிராட்டியின் கற்பின் பெருமைகளைக் குறித்து அநுமன் எவ்வாறு பாராட்டினான்?**

*அசோகவனத்தில் சீதாபிராட்டியின் மாசுபடாத தூய தன்மையை எண்ணி அநுமன் தனக்குள் பலவாறு பாராட்டி மகிழ்ந்தான். அவன், சீதை பிறந்த காரணத்தால் இவளது குடிப்பிறப்பு உயர்ந்துவிட்டது. இவ ளிடத்தில், உள்ள பெண்மையும் நாணமும் இவளால் உலகில் உயர்வைப்*

" குழந்தையே தந்தை." — ஆஸ்கார் ஒயில்டு.

பெற்றன. இத்தகைய காட்சியைக் கண்டால் இராமன் பெரிதும் மகிழ்வான். ஆனால், இதைக் காணும் பேறு இராமனுக்குக் கிடைக்கவில்லையே" என்று எண்ணினன்.

**13. சீதையின் தன்மைகளைக் குறித்துத் தனக்குள் பாராட்டிய அநுமன் பின்னர் என்ன செய்தான் ?**

*சீதையைப் பற்றித் தனக்குள் பலவாறு பாராட்டிய அநுமன் அழகிய உயர்ந்த பொன்மயமான மரங்களையுடைய அசோகவனத்தில் ஒரு மரத்தின் மேல் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அங்கு இராவணன் தோன்றினன்.*

**14. பொருள் கூறுக : (விடை எதிரெதிரே காண்க) :**

(1) மாடு - பக்கம்
(2) ஊடு - இடையில்
(3) விலங்கல் - மலை
(4) விடை - காளை
(5) ஈட்டினர் - கூட்டத்தினர்
(6) கொண்டல் - மேகம்
(7) எற்கு - எனக்கு
(8) மாண - சிறப்பாக
(9) பொதும்பர் - சோலை
(10) புக்கு - புகுந்து
(11) துன்று - நெருங்கிய
(12) பெற்றியர் - தன்மையுடையவர்

**15. இலக்கணக் குறிப்பு எழுதுக : (விடை எதிரெதிரே காண்க) :**

(1) இல்லை - குறிப்பு வினைமுற்று.
(2) வீடுவேன் - தன்மை ஒருமை வினைமுற்று.
(3) மற்று - இடைச்சொல்
(4) ஊழியான் - வினையாலணையும் பெயர்
(5) கமலக்கண் - உவமத் தொகை
(6) நெடுமரம் - பண்புத்தொகை
(7) விரிமழை - வினைத்தொகை
(8) அரிய - குறிப்புப் பெயரெச்சம்
(9) மருவி - வினையெச்சம்.

---

# IV. பல்சுவைப் பகுதி

*பலவாகிய சுவைகளை உடைய பகுதி என்பது இதன் பொருள்.* இப் பகுதியில் 1. புறநானூறு, 2. சிலேடை (சென்னைக்கு வந்துசிவமாயினேன்), 3. மனோன்மணீயம், 4. பாரத தேசம், 5. இன்னிசை இருநூறு, 6. உலக ஒருமை, 7. கவியமுதம், 8. எழிலோவியம் என்பன அடங்கும்,

1. *சங்கப் புலவர்கள் இயற்றிய*

## புறநானூறு

### முன்னுரை

**நூலின் பெயர்க்காரணம் :** புறப்பொருளைப் பற்றிய நானூறு செய்யுட்கள் கொண்ட நூலாகையால் இஃது இப்பெயர் பெற்றது. புலவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுதியே இந்நூல். புறம்+நானூறு=புறநானூறு. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. நானூறு - எண்ணலளவை யாகுபெயர்.

தமிழரின் வீரம், கல்வி, வாணிபம், போர் முதலியனபற்றிய செய்திகளைக் கூறுவது **புறம்** என்று கூறப்படும்.

**நூல்வகை:** புறநானூறு சங்க நூல் தொகுதியில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

**எட்டுத்தொகை நூல்கள்:** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறுஎன்பன.

**இவற்றை நினைவுபடுத்தும் வெண்பா:**

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புற்மென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.

**வேறு பெயர்கள்:** இந்நூலுக்குப் புறப்பாட்டு, புறம், புறம்பு நானூறு என்னும் வேறு பெயர்களும் உண்டு.

**இந்நூல் கூறும் செய்திகள்:** புறநானூற்றிலிருந்து பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர், சிற்றரசர்கள், போர் வீரர்கள், வள்ளல்கள் முதலியோரின் வரலாறுகள் அக்காலத்து மக்களின் நடையுடை பாவனை இவற்றை உணரலாம்.

**காலம்:** கடைச் சங்க காலம். கி. பி. இரண்டாம் நூற்றுண்டு.

## ஆசிரியர் வரலாறு

**ஔவையார்:** அக்காலத்தில் எல்லா அரசர்களாலும் பெரிதும் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டவர். இவர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவர்; பாணர் குலத்தைச் சேர்ந்தவர். அதியமானின் அருமை நண்பர்; அவன் அவைக்களப் புலவராக நெடுநாள் இருந்து உதவி புரிந்தார். இவர் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய பிற சங்க இலக்கியங்களினும் காணப்படுகின்றன. ஔவையார் இப்பாடலில் அதியமானின் கொடைச் சிறப்பைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## அதியமான் நெடுமான் அஞ்சியின் வரலாறு

அதியமான் சேரநாட்டைச் சார்ந்த தகடூரை ஆண்டவன். கடைஎழு வள்ளல்களில் ஒருவன். இவன் உண்டாரை நெடுங்காலம் வாழவைக்கும் நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்துப் பெருமை பெற்றான். அவரைத் தம் அவைக்களப் புலவராக்கி சிறப்பித்தான்.

## பொருள் விளக்கம்

### அதியமானின் கொடைச்சிறப்பு

### உரைநடை

அணிபூண், அணிந்த, யானை, இயல் தேர் அதியமான், ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினும், தலை நாள் போன்ற விருப்பினன்-பரிசில் பெறூஉம் காலம் நீட்டினும் நீட்டாது ஆயினும் யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல, கை அகத்தது; அது பொய் ஆகாது; அருந்த ஏமாந்த நெஞ்சம்! வருந்த வேண்டா; அவன் தாள் வாழ்க. (மாதோ, ஏ — அசைகள்)

### பதவுரை

**அணிபூண்** - அழகிய ஆபரணங்களை
**அணிந்த** - அணிந்துள்ள
**யானை** - யானையும்,
**இயல் தேர்** - சிறந்த தன்மையை உடைய தேரினையும் கொண்ட
**அதியமான்** - அதியமான் என்னும் வள்ளல்
**ஒருநாள் செல்லலம்** - (நாம்) ஒரு நாள் செல்லோம்
**இருநாள் செல்லலம்** - இரண்டு நாட்கள் மட்டும் செல்லோம்
**பலநாள் பயின்று** - பல நாட்கள் சென்று பழகினாலும்
**பலரொடு செல்லினும்** - (தனியாகச் செல்லாமல்) பலரையும் உடன் அழைத்துச் சென்றாலும்
**தலை நாள் போன்ற** - முதல் நாள் கண்டது போன்ற
**விருப்பினன்** - விருப்பம் சிறிதும் குறையாத தன்மை உடையவன்
**பரிசில் பெறூஉம் காலம்** - நாம் பரிசிலை அடைவதற்குரிய காலமானது
**நீட்டினும்** - தாமதமானாலும்
**நீட்டாது ஆயினும்** - அதிகப்படா விட்டாலும்
**யானை** - யானையானது
**தன் கோட்டிடை** - தன் தந்தங்களின் இடையே
**வைத்த** - வைத்துக் கொண்டுள்ள
**கவளம்போல** - கவளமாகிய உணவு அதன் வாயில் தவறாமல் செல்வது போல
**கையகத்தது** - பரிசில் நமது கையின்கண் உள்ளது
**அது பொய் ஆகாது** - அது தவறாது
**அருந்த** - பரிசிலை உண்ண
**ஏமாந்த நெஞ்சம்** - விருப்பம் கொண்ட மனமே!
**வருந்த வேண்டா** - வருந்துதல் வேண்டாம்.
**அவன் தாள்** - அவனுடைய (அதியமானுடைய) திருவடிகள்
**வாழ்க!** - வாழ்வனவாகுக!

### தெளிவுரை

அதியமான் நாம் ஒருநாள் அல்லது இருநாள் செல்லாமல் பலநாள் சென்றாலும், பலரோடு சென்றாலும் வெறுப்புறாமல் முதல் நாளில் நம்மைக் கண்டபோது கொண்டது போன்ற விருப்பத்தினையுடையவன். அவன் பரிசளிக்கச் சிறிது காலம் தாமதித்தாலும் தாமதிக்காவிட்டாலும் யானையின் தந்தங்களுக்கிடையில் வைக்கப்பட்ட உணவு அதன் வாயில் புகுவது தவறாதது போலப் பரிசில் நம் கையின்கண் உள்ளது. அது தவறாது. பரிசிலை அடைய விருப்பம் கொண்ட மனமே! வருந்த வேண்டாம். அதியமானுடைய திருவடிகள் வாழ்க!

### விளக்கம்

**தலைநாள் போன்ற விருப்பினன்:** ஒருவரிடம் ஒரு முறையன்றி மறுமுறை உதவி கருதிச் சென்றால் அவர் வெறுப்பு அடைவது இயல்பு. அதியமானோ இரு முறையன்றிப் பலமுறை சொல்லினும், தான் மட்டும் அன்றிப் பலரையும் உடன் அழைத்துச் சென்றாலும் சிறிதும் வெறுப்படையான். வெறுப்படையாமை மட்டும் அன்று. ஒருவரை முதன் முதலில் காணும் போது எத்தகைய விருப்பம் கொள்வானோ அத்தகைய விருப்பத்தினின்றும் சிறிதும் மாறான் என்று அவனுடைய ஈகை மனப்பான்மையை இனிது விளக்கினர் ஆசிரியர். யானை தன் தந்தங்களின் இடையில் வைத்துள்ள உணவு அதன் வாயில் புகுவதற்குச் சிறிது காலம் தாழலாம். அவ்வாறு காலதாமதம் ஏற்படினும் அதன் வாயில் செல்வது தவறாது. அதுபோல அதியமான் பரிசு

கொடுக்கச் சிறிது காலதாமதம் செய்தாலும் பரிசில் கிடைப்பது திண்ணம் என்பதற்காக, 'யானை, தன் கோட்டிடை வைத்த கவளம்போலக் கையகத்தது' என்றார்.

நிச்சயமாகக் கிடைக்கும் என்னும் உறுதியால் கையகத்தது என்று எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது.

வாழ்க அவன் தாள் - அதியமானின் முயற்சி வாழ்க என்றும் சிலர் பொருள் கூறுவர். தாள் - முயற்சி.

கவளம்—இங்கு வெல்லமும் அரிசியும் கலந்து யானைக்குக் கொடுக்கும் ஒரு வாய் அளவு உணவைக் குறிக்கும்.

## இலக்கணம்

விருப்பினன்—வினையாலணையும் பெயர். பூண்—காரணப் பெயர். பெறூஉம்—குறில் நெடிலாகி அளபெடுத்தது, இன்னிசை அளபெடை. ஓசை குறைந்த இடத்தில் அளபெடுத்தமையால் செய்யுளிசை அளபெடை என்றும் கூறலாம். வாழ்க—வியங்கோள் வினைமுற்று. செல்லலம்—தன்மைப் பன்மை வினைமுற்று.

## கேள்வியும் பதிலும்

**1. புறநானூறு—பொருளும் இலக்கணமும் கூறுக.**

புறப்பொருளைப்பற்றி எழுதப்பட்ட நானூறு பாக்களைக் கொண்ட நூலாகையால் இதற்குப் புறநானூறு என்று பெயர். இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

**2. புறநானூறு எந்தத் தொகை நூலைச் சார்ந்தது? அத்தொகையைச் சார்ந்த நூல்கள் யாவை?**

புறநானூறு எட்டுத் தொகை நூல்களைச் சார்ந்தது. எட்டுத் தொகை நூல்களாவன; நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

**3. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?**

புறநானூற்றால் பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர், சிற்றரசர்கள், வள்ளல்கள் முதலியோரின் வரலாறுகளும் அக்காலத்து மக்களின் நடை உடை பாவனைகளும், வீரம், வாணிபம், போர் முதலியவை பற்றிய செய்திகளும் அறியப்படுகின்றன.

**4. ஔவையார், அதியமான் இவர்களைப்பற்றிக் குறிப்பு எழுதுக.**

விடை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.

***5. ஔவையார் அதியமானின் கொடைச்சிறப்பைப் பற்றிக் கூறுவனவற்றை விளக்குக.**

அதியமான், ஒருநாள் அல்லது இருநாள் செல்லாமல் பலநாள் சென்றாலும் பலரோடு சென்றாலும் முதல் நாளில் நம்மைக் கண்டபோது கொண்ட விருப்பத்தினை உடையவன் அவன். அவன் பரிசு அளிக்கச் சிறிது காலம் தாமதித்தாலும் தாமதிக்கா விட்டாலும் யானையின் தந்தங்களுக்கிடையில் வைக்கப்பட்ட உணவு அதன் வாயில் புகுவது தவறாதது போலப் பரிசில் நம்

" இன்பம் என்பது துன்பத்தின் இடைவெளி." — ஸெல்டன்.

கையின் கண் உள்ளது. அது தவறாது. பரிசிலை அடைய விரும்பும் மனமே! வருந்தவேண்டா. அதியமானுடைய திருவடிகள் வாழ்க!" என்று ஔவையார் அதியமானின் கொடைச் சிறப்பைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

6. "யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல"—இவ்வுவமையை உவமேயத்துடன் பொருத்தி எழுதுக.

யானை தன் தந்தங்களின் இடையில் வைத்துள்ள உணவு அதன் வாயில் புகுவதற்குச் சிறிது காலம் தாழ்ப்பினும் அவ்வாறு புகுவது தவறாது. அது போல அதியமான் பரிசு கொடுப்பதற்குச் சிறிது கால தாமதம் செய்தாலும் பரிசில் கிடைப்பது திண்ணம்.

7. பொருள் கூறுக: (விடை எதிரெதிரே காண்க)

(1) பயின்று - பழகி
(2) தலைநாள் - முதல் நாள்
(3) இடை - நடுவில்
(4) கோடு - கொம்பு (தந்தம்)
(5) கவளம் - வாயளவு உணவு
(6) ஏமாந்த - ஆசைப்பட்ட
(7) தாள் - பாதங்கள் (அல்லது) முயற்சி

8. பிரித்து எழுதுக: (விடை எதிரெதிரே காண்க)

(1) கோட்டிடை - கோடு + இடை
(2) கையகத்தது - கை + அகத்தது
(5) பொய்யாகாது - பொய் + ஆகாது

9. இலக்கணக் குறிப்பு எழுதுக: (விடை எதிரெதிரே காண்க).

(1) செல்லலம் - தன்மைப் பன்மை வினைமுற்று
(2) பெறூஉம் - இன்னிசை அளபெடை
(3) வாழ்க - வியங்கோள் வினைமுற்று
(4) விரும்பினன் - வினையாலணையும் பெயர்
(5) அணிந்த - பெயரெச்சம்
(6) மாதோ - அசை

2. இராம கவி இயற்றிய தனிப்பாடல்




## சென்னைக்கு வந்து சிவமாயினேன்

### முன்னுரை

**தனிப்பாடல் நூலின் பெயர்க் காரணம்:** பல புலவர்கள் அவ்வப் போது தம் அறிவும் ஆற்றலும் விளங்கப் பாடிய பாடல்கள் தனிப்பாடல் எனப்படும்.

**நூலின் வேறு பெயர்கள்:** இந்நூலுக்குத் தனிப்பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### சிலேடை

ஒரே சொல்லில் இருபொருள் புலப்படுமாறு கூறுவது சிலேடையாகும். இப்பாடல் சென்னையில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் சிவபெருமானின் தன்மையையும் அமைத்துச் சிலேடையாகப் பாடப்பட்டது.

" சேவையே மதத்தின் லட்சியம்." — எஸ். பி. ஜோஷி.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் பெயர்: இராம கவி.

காலம்: பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்.

இயற்றிய வேறு நூல்கள்: திருவாய்ப்பாடிபுராணம், சாரப் பிரபந்தம் முதலியவை.

பிற குறிப்பு: இவர் பிரம்பூர் ஆனந்தரங்கனைப் பாடிப் பரிசு பெற்றார்.

## பொருள் விளக்கம்

### உரைநடை

மன்னும் சிர(ங்)ம் கைக்கொண்டு, அரைச் சோமன் கட்டிச் சடை முறுக்கி, மெய்கண்ட நீறு அணிந்து, சென்னபுரி வந்து நல்ல அன்னமது காணாதவன் ஆகி சிவன் ஆனேன்.

### பதவுரை

#### 1. புலவர்

மன்னும் - நிலைபெற்ற
சிரங்கை - சிரங்கு என்னும் புண்களை
கைக்கொண்டு - அனுபவித்தும்
அரைச் சோமன் - போதிய ஆடையில்லாமையால் கிழிந்த துணியை
கட்டி - இடுப்பில் கட்டிக் கொண்டும்
சடைமுறுக்கி- பொருள் இல்லாமையால் எண்ணெய் இன்றித் தலைமயிர் சடையாக ஆகியும்
மெய்கண்ட - உடல் முழுவதும் பொருந்திய
நீறு அணிந்தும் - தெருவில் கண்ட புழுதி படிந்தும்
சென்னபுரி - சென்னை நகரத்தை
மேவி - அடைந்து
நல்ல - சிறந்த
அன்னம் அது - சோறானது
அறியாதவன் ஆகி - கிடைக்கப் பெறாதவன் ஆகி
சிவன் ஆயினேன் - சிவபெருமானின் தன்மையைப் பெற்றேன்.

#### 2. சிவபெருமான்

மன்னும் - நிலைபெற்ற
சிரம் கைக்கொண்டு - பிரமன் தலையோட்டைக் கையில் ஏந்தியும்
அரைச்சோமன் - பாதியாகிய பிறைச் சந்திரனை
கட்டி -முடியில் அணிந்தும்
சடை முறுக்கி - தலைமயிரைச்சடைகளாக முறுக்கியும்
மெய் கண்டம்-உடம்பிலும் கழுத்திலும்
நீறு அணிந்து - திருநீற்றை அணிந்தும்
சென்னபுரி - சென்னை நகரத்திற்கு
மேவி - சென்று
நல்ல - சிறந்த
அன்னமது -அன்னப்பறவையாகிய பிரமனால்
அறியாதவன் ஆகி -அறியப்படாதவன் ஆகியும்
சிவன் ஆனேன் - சிவபெருமானது தன்மையை அடைந்தேன்.

## தெளிவுரை

| | புலவர் | சிவபெருமான் |
|---|---|---|
| 1. | நிலைபெற்ற சிரங்கு என்னும் புண்களை அனுபவித்தும் | நீங்காத பிரமன் தலையோட்டைக் கையில் ஏந்தியும் |
| 2. | கிழிந்த ஆடையை இடுப்பில் அணிந்தும் | பிறைச்சந்திரனை முடியில் அணிந்தும் |
| 3. | தலைமயிர் சடையாக ஆகியும் | தலைமயிரைச் சடைகளாக முறுக்கியும் |
| 4. | உடல் முழுவதும் புழுதி படிந்தும் | உடலிலும் கழுத்திலும் திருநீறு பூசியும் |
| 5. | நல்ல உணவு கிடைக்கப் பெருமையாலும் | அன்னப் பறவையாகிய பிரமதேவனால் தேடியும் காணப்படாமையாலும் |

இவ்வாறு புலவர் சென்னைக்கு வந்து, சிவபெருமானின் தன்மைகளை உடையவரானார்.

## விளக்கம்

**சிவபெருமான் அரைச் சோமன் (பிறைச் சந்திரன்) அணிந்த வரலாறு :**

அசுவனி, பரணி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்கள் தக்ஷனுடைய பெண்கள். அவர்களைச் சந்திரன் மணந்தான். அவர்களில் ரோகிணி என்பவளிடமே சந்திரன் மிகவும் அன்புடையவனாக இருந்தான். மற்ற பெண்கள் மூலமாக இச்செய்தியை அறிந்த தக்ஷன் சினம் கொண்டு சந்திரனைத் தேய்ந்து அழியுமாறு சபித்தான். சந்திரன் தன் பதினைந்து கலைகளும் தேய்ந்து ஒற்றைக்கலையுடன் இருந்தான். அவன் உயிர் பிழைப்பதற்காகச் சிவபெருமானைச் சரணடைந்தான். அவர் அக்கலையைத் தம் தலையில் அணிந்து சந்திரன் வாழவேண்டுமென்று அருள் புரிந்தார். ஆயினும் தக்ஷனது சாபம் பொய்க்கவில்லை. சிவபெருமான் அருளும் மாறவில்லை. சந்திரன் பதினைந்து நாட்கள் தேய்வதும், பதினைந்து நாட்கள் வளர்வதுமாக ஆனான்.

**அன்னம் அறியாதவன் ஆகிய வரலாறு :**

ஒரு சமயம் பிரமனும் திருமாலும் தாமே பெரியவர் என்று ஒருவருக்கொருவர் வாதிட்டுப் போர் செய்தனர். அவர்களுக்குப் புத்தி கற்பிக்க விரும்பிய சிவபெருமான் இருவரின் இடையே ஒரு பெரிய நெருப்பு மலையாகத் தோன்றினார். நெருப்பு மலையைக் கண்ட இருவரும் அதன் அடி அல்லது முடியை விரைவில் அறிந்து வருபவரே பெரியவர் என்று முடிவு செய்தனர். பிரமன் அன்னப் பறவை உருவம்கொண்டு முடியைக் காணப் புறப்பட்டார். திருமால் வராக (பன்றி) உருவம் கொண்டு அடியைக் காணப் புறப்பட்டார். இருவரும் எவ்வளவோ முயன்றும் அடியையோ முடியையோ காண முடியவில்லை. அதனால் இருவரும் கர்வம் ஒழிந்து தம்மைவிடப் பெரியவர் ஒருவர் இருக்கவேண்டும் என்னும் உண்மையை உணர்ந்தனர்.

'கெட்டும் பட்டணம் சேர்' என்பது ஒரு பழமொழி. அதன்படி வறுமையால் வாடிய புலவர் சென்னைக்குச் சென்று தம் வறுமை நோயை நீக்க

விரும்பினார். ஆனால் அங்கு அவரைக் கவனிப்பார் இல்லை. தாம் அடைந்த துன்பங்களைச் சாமர்த்தியமாகக்கூறும் நயம் படித்து மகிழ்வதற்குரியது.

### இலக்கணம்

மன்னும்—பெயரெச்சம். அறியாதவன்—வினையாலணையும் பெயர். மேவி—வினையெச்சம். ஆனேன்—தன்மை ஒருமை வினைமுற்று. இச் செய்யுளில் நான் என்பது தோன்ரு எழுவாய். ஆனேன்— பயனிலை. மெய் கண்டம்—உம்மைத்தொகை.

### கேள்வியும் பதிலும்

**1. தனிப்பாடல்—இதன் பெயர்க்காரணமும், வேறு பெயர்களும் யாவை ?**

**2. இராம கவியைப் பற்றிக் குறிப்பு எழுதுக.**

இவ்விரண்டு கேள்விகளுக்கும் உரிய விடையை முன்னுரைப் பகுதியில் படித்துணர்க.

***3. சிலேடை என்ருல் என்ன ? உங்கள் பாடப்பகுதி யார் யாருக்குச் சிலேடையாகப் பாடப்பட்டது ?**

ஒரு சொல்லில் இரு பொருள் விளங்குமாறு கூறுவது சிலேடையாகும். நம் பாடப்பகுதி சென்னையில் இராமகவியின் அனுபவத்தையும் சிவபெருமானின் தன்மையையும் சேர்த்துச் சிலேடையாகப் பாடப்பட்டதாகும்.

***4. சென்னைக்கு வந்த புலவர் எவ்வாறு சிவன் ஆனர் ?**

சென்னைக்கு வந்த புலவர் 1. நிலைபெற்ற சிரங்குகளை அனுபவித்தும் (பிரமனது தலையோட்டைக் கையில் ஏந்தியும்)

2. இடையில் கிழிந்த ஆடையை அணிந்தும் (பிறைச் சந்திரனை முடியில் அணிந்தும்)

3. பொருள் இல்லாமையால் எண்ணெய் இன்றித் தலைமயிர் சடையாக முறுக்குற்றும் (தலைமயிரைச் சடையாக முறுக்கியும்)

4. உடல் முழுவதும் தெருப்புழுதி படிந்தும் (உடலிலும் கழுத்திலும் திருநீறு அணிந்தும்)

5. நல்ல உணவு கிடைக்கப் பெருமலும் (சிறந்த அன்னப்பறவையாகிய பிரமனல் காணப்படாதவராகியும்) சிவபெருமானக ஆனர்.

**இலக்கணக் குறிப்பு எழுதுக:** (விடை எதிரெதிரே காண்க)

(1) நல்ல - குறிப்புப் பெயரெச்சம்
(2) காணுதவன் - வினையாலணையும் பெயர்.
(3) மெய்கண்டம் - உம்மைத்தொகை
(4) ஆனேன் - தன்மை ஒருமை வினைமுற்று.

3. பேராசிரியர் P. சுந்தரம் பிள்ளை இயற்றிய

# மனோன்மணீயம்

## முன்னுரை

**பெயர்க் காரணம் :** பாண்டிய நாட்டு மன்னனாகிய சீவக வழுதி என்பானுக்கு மனோன்மணி என்ற ஒரு மகள் உண்டு. அவள் வரலாற்றைக் கூறும் நூலாதலால் இதற்கு மனோன்மணீயம் என்று பெயர். சகுந்தலை பற்றிய வரலாறு சாகுந்தலம் எனப்பெயர் பெற்றதுபோல மனோன்மணியைப் பற்றிய வரலாறு மனோன்மணீயம் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு பெயர் பெறுவதை வடமொழியில் தத்திதாந்த நாமம் என்பர்.

## ஆசிரியர் வரலாறு

**ஆசிரியர் பெயர் :** பேராசிரியர் P. சுந்தரம் பிள்ளை

**ஊர் :** ஆலப்புழை

**தந்தை :** பெருமாள்பிள்ளை

**தாயார்:** மாடத்தி அம்மாள்

**ஆசிரியர் :** கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள்

**தொழில் :** இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் அறிவு நூல் (தத்துவ சாஸ்திரம்) பேராசிரியராக விளங்கினார்.

**இயற்றிய வேறு நூல்கள் :** நூற்றொகை விளக்கம், திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி,

**காலம் :** கி. பி. 1855 - 1897

**ஆசிரியர் பெருமைகள் :**

1. உலகம் போற்றும் ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடக முறையைத் தழுவி முதன் முதலாகத் தமிழ் நாடகம் எழுதி ஆங்கில ஆசிரியரையும்விடப் பெரும் புகழ் பெற்றவர் இவரே.

2. ஆங்கிலம், தமிழ், மலையாளம் முதலிய மொழிப்புலமை பெற்றவர்.

3. தம் ஆசிரியராகிய சுந்தர முனிவரிடம் பேரன்பு பூண்டொழுகி அவர் பெயரையே மனோன்மணீயத்தில் சுந்தர முனிவர் எனக் குறிப்பிட்டுத் தம் குரு பக்தியைப் புலப்படுத்தியுள்ளார்.

**நூலின் பெருமைகள் :**

1. இந்நாடகம் ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு (Lord Lytton) என்பவர் எழுதிய 'இரகசிய வழி' (Secret Way) என்னும் நூலைத் தழுவி இயற்றப் பட்டதாகும்.

2. தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலிய மொழிகளில் உள்ள நாடக வழக்கத்துக்குப் பொருத்தமாக இந்நூல் இயற்றப்பட்டது.

---

"இந்தியாவின் இருதயம் கிராமங்களே." — காந்தி.

3. தமிழில் தலை சிறந்த இந்நாடக நூலைப் பின்பற்றி வேறு சில தமிழ் நாடகங்களும் இயற்றப்பட்டுள்ளன.

4. இந்நாலில் சிறந்த கற்பனைகள், இயற்கை வருணனைகள், தத்துவப் பொருள்களைப்பற்றிய செய்திகள், உலகியல் உண்மைகள் ஆகியவை சிறந்து விளங்குகின்றன.

5. இந்நூல் இன்ப முடிவைக் கொண்ட நாடகம் ஆகும்.

## பாடப்பகுதிச் சுருக்கம்

நம் பாடப் பகுதி இரண்டாம் அங்கத்திலுள்ள இரண்டாம் களத்தில் வந்துள்ளது.

சீவக வழுதி என்பவன் பாண்டிய நாட்டு மன்னன். அவனுக்கு மனோன்மணி என்று ஒரு மகள் இருந்தாள். அவள் தோழி வாணி. வாணி நடராசன் என்னும் அழகன் மீது காதல் கொண்டிருந்தாள். நடராசன் பாண்டிய மன்னனிடத்தும் நாட்டிடத்தும் மிகவும் பற்றுடையவன். அவன் சுந்தர முனிவரின் அருள் வலிமையால் பாண்டிய மன்னனுக்கு வேண்டும்போது வேண்டிய உதவிகளைப் புரிந்து வந்தான்.

நடராசன் எப்போதும் இயற்கை எழிலில் ஈடுபட்டுப் பாட்டுப் பாடும் பாவலன். ஒரு நாள் காலையில் சூரியன் உதயத்தைக் கண்டு இன்பம் கொண்டு கூறிய வருணனைகள் படித்து மகிழ்வதற்கு உரியனவாம். இப்பகுதியில் சூரியன் தோன்றும் அழகிய காட்சியும், இருள் நீங்கும் தன்மையும், சேவலின் செருக்கும், காக்கைகளின் கலக்கமும், பறவைகளின் பாடலும் மிக இனிமையாக வருணிக்கப்பட்டு உள்ளன.



உரைநடை

பரிதியின் உதயம் பார்க்கக் கருதில், இவ்விடம் சாலவும் இனிது; உதயம் செவ்விதில் கண்டு பின் செல்வோம்.

## பதவுரை

பரிதியின் - சூரியனது
உதயம் - தோற்றத்தை
பார்க்கக் கருதில் - பார்க்க விரும்பினால் (அதற்கு)
இவ்விடம் - இந்த இடமே
சாலவும் இனிது - மிகவும் பொருத்தமான இடமாகும்.
உதயம் - சூரியனின் தோற்றத்தை
செவ்விதில் கண்டு - நன்றாகப் பார்த்து
பின் - பிறகு
செல்வோம் - மற்றக் காரியத்துக்குச் செல்லுவோம்.

## தெளிவுரை

ஒரு நாள் நடராசன் சூரிய உதயம் நன்றாகத் தோன்றும் இடத்தில் நின்று, 'சூரியோதயத்தைப் பார்க்க விரும்பில், இந்த இடமே மிகவும் பொருத்தமான இடமாகும். சூரியோதயத்தை நன்கு பார்த்துப் பிறகு மற்றக் காரியங்கட்குச் செல்லலாம்' என்று கருதினான்.

## விளக்கம்

இவ்வடிகளால் நடராசன் விடியற்காலையிலேயே கண்விழித்தெழுபவன் என்பதை உணரலாம். கிழக்குத்திசையில் தன் பொன் கிரணங்களைப் பரப்பித் தோன்றும் சூரியனின் தோற்றம் நடராசன் உள்ளத்தைக் கவர்ந்தது. "உதயம் செவ்விதில் கண்டு பின் செல்வோம்" என்பதால், நடராசன் இயற்கை அழகில் பெரிதும் ஈடுபட்டவன் என்பதை அறியலாம்.

## இலக்கணம்

இ + இடம் = இவ்விடம். சால — உரிச்சொல். இனிது — குறிப்பு வினைமுற்று. ஏ — அசை. கண்டு — வினையெச்சம். செல்வோம் — உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

## இருள் நீங்கிய இன்பக் காட்சி (4—11)

## உரைநடை

ஓவியத் தொழில் வலோன், நீவியக் கிழியில், நீட்டுவான் புகுந்த சித்திரம், நீட்டும் தூரியம் தொடத்தொட துலங்குதல் போல, உருவு தோன்றுவணம் ஒன்றுய்ச் செறிந்து, கருகு இருள் மயங்கிய காட்சி கழிந்து, சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத்தொட, சிறிது சிறிதாய் உறுப்புகள் தெளிய, தோன்றும் இத்தோற்றம் நன்று (ஏ—அசை)

## பதவுரை

ஓவியத் தொழில் வலோன் - ஓவியம் தீட்டுவதில் வல்லவன்
நீவியக் கிழியில் - படம் எழுதுவதற்கான சீலையில்
நீட்டுவான் - வரைவதற்காக
புகுந்த - தொடங்கிய
சித்திரம் - சித்திரமானது
நீட்டும் தூரியம் - அவன் எடுத்துத் தீட்டுகின்ற சித்திரம் எழுதும் கோலானது
தொடத்தொட - அச்சித்திரத்தைத் தொடும்போதெல்லாம்
துலங்குதல்போல - உருவம் இன்னதென்று விளங்குவது போல

உருவுதோன்றா வணம் - உலகிலுள்ள உயிர்களின் உருவங்கள் புலப்படாதபடி
ஒன்றாய்ச் செறிந்து - திரளாகக் கூடி
கருகு இருள் மயங்கிய - கருத்த இருள் போர்வையானது மூடிக் கொண்டிருந்த
காட்சி - தோற்றமானது
கழிந்து - தேய்ந்து
சூரியன் - சூரியனது
பன்னிறக் கதிர்கள் - பல நிறமுடைய கிரணங்கள்
தொடத்தொட - அவ்விருட் போர்வை மேல் படுந்தோறும்
சிறிது சிறிதாய் - கொஞ்சங் கொஞ்சமாக
உறுப்புகள் தெளிய - உலகத்தின் உறுப்புக்கள் நன்றாகப் புலப்படும் படியாக
தோன்றும் இத்தோற்றம்-காணப் படும் இக்காட்சி
நன்று - மிக நன்று.

## தெளிவுரை

சித்திரம் எழுதுவதில் வல்லவன் ஒருவன் தான் ஒரு சீலையில் வரையப் புகுந்த சித்திரமானது அவனால் எழுத எடுத்துக் கொள்ளப்பட்ட தூரியக் கோல் படும்போதெல்லாம் அவன் எழுதும் உருவம் இன்னதென்று விளங்கும். அதுபோல் சூரியனின் கிரணங்கள் படப்பட உலகிலுள்ள பொருள்களின் மேல் படர்ந்துள்ள இருள் நீங்கிப் பொருள்களெல்லாம் விளக்கமாகக் காணப்படும்.

## விளக்கம்

இருளைப் போக்குபவன் சூரியன். சூரியனின் தோற்றம் இல்லையேல், உலகத்தில் விளக்கம் இல்லை. எல்லாம் ஒரே இருள் மயமாகிவிடும். உலகத்தில் உள்ள அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களும் தங்கள் வடிவங்கள் கண்ணுக்குப் புலப்படாதபடி இருட் பிழம்பில் ஆழ்ந்து விடும். சூரியனின் தோற்றமே அவ்விருட்பிழம்பை நீக்கி எல்லாப் பொருள்களும் விளக்கமாக புலப்படும்படிச் செய்யும். இத்தகைய இயற்கைக் காட்சி கண்ணுக்கினிய காட்சி ஆகும் என்பதைப் புலப்படுத்துவதற்காகத், 'தோன்றும் இத் தோற்றம் நன்றே' என்று கூறினர். தூரியம் - ஓவியம் எழுதும் கோல். கிழி - சீலை.

## இலக்கணம்

வல்லோன் என்பது வலோன் எனத் தொக்கது. தீட்டுவான் — 'வான்' ஈற்று வினையெச்சம். நீவியக் கிழி = நீவியம் + கிழி — இவ்விரண்டும் சீலை (திரை) என்ற பொருளில் வந்தன : ஒரு பொருட் பன்மொழி. பல + நிறம் = பன்னிறம். துலங்குதல் — தொழிற் பெயர். சிறிது சிறிதாய், தொடத் தொட — அடுக்குத் தொடர்கள். நன்று — குறிப்பு வினைமுற்று. தோற்றம் — எழுவாய் ; நன்று — பயனிலை.

## சேவலின் செருக்கு (12—16)

### உரைநடை

சூட்டைச் சேவல், கூரைக்கொடி படர்ந்த அவ்வீட்டு உச்சியின் மேல் விம்பாய் நடந்து, பின் இருசிறை அடித்து நெடுவாய் அங்காந்து ஒரு முறை கூவி, உழையுளார் புகழ, உற்று நோக்குவர் போல் சுற்று நோக்குதலும் (இனிது).

## பதவுரை

சூட்ட்டை - உச்சிக் கொண்டையை உடைய
சேவல் - சேவல் கோழியானது
சுரைக்கொடி படர்ந்த - சுரைக் கொடி படர்ந்திருக்கின்ற
அவ்விட்டு - அந்த வீட்டினுடைய
உச்சியின் மேல் - கூரையின் மேல்
விம்பாய் நடந்து - கர்வத்துடன் நடந்து
பின் - பிறகு
இரு சிறை - இரண்டு இறக்கைகளை யும்
அடித்து - தட்டி
நெடுவாய் - பெரிய வாயை
அங்காந்து - திறந்து
ஒரு முறை கூவி - ஒருதரம் கூவி
உழை உளார் - பக்கத்தில் வசிப்ப வர்கள்
புகழ - தன்னைப் புகழ வேண்டி
உற்று நோக்குவர் போல் - உற்றுப் பார்ப்பவரைப் போல
சுற்று நோக்குதலும் - சுற்றிலும் நோக்குதலும்
(இனிது) - மிகவும் இனிய காட்சி யாகும்.

## தெளிவுரை

கொண்டையை உடைய சேவலானது சுரைக் கொடி படர்ந்திருக்கும் அவ் வீட்டுக் கூரையின் மேல் கர்வத்துடன் நடந்து பின்னர் இரண்டு இறக்கை களையும் அடித்துத் தன் பெரிய வாயைத் திறந்து ஒருதரம் கூவி, பக்கத்தில் வசிப்பவர்கள் தன்னைப் புகழ வேண்டி உற்றுப் பார்ப்பவரைப் போலச் சுற்றிலும் நோக்குதலும் மிகவும் இனிய காட்சி ஆகும்.

## விளக்கம்

சுரைக் கொடி படர்ந்த வீட்டுக் கூரைமீது சேவல் செருக்கு நடை நடந்து இரு இறக்கைகளையும் அடித்துக்கொண்டு தலை நிமிர்ந்து கூவுதல் மிக அழகிய இயற்கைக் காட்சியாகும். அதனைப் படம் பிடித்துக் காட்டுவது போலப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறும் வருணனை கருத் துக்கு விருந்தளிப்பதாகும். சேவலின் வீர நடையையும் எழுச்சி மிக்க குரலை யும் கேட்டு அண்டையிலுள்ளார் அதன் ஆற்றலைப் பாராட்ட வேண்டும் என்று அது சுற்றுமுற்றும் நோக்குகின்றது என்று புலவர் கற்பனை நயம் தோன்றக் கூறியுள்ளார்.

## இலக்கணம்

சுரைக் கொடி — இருபெயரொட்டுப் பண்புத் தொகை. படர்ந்த — பெயரெச்சம். நெடுவாய் — பண்புத் தொகை. உளார், நோக்குவர் வினையாலணையும் பெயர்கள்.

## கரிய காகம் கலங்கி ஓடுதல் (17—21)

### உரைநடை

இருள்பகை இரவி, தம்மையும் இருள் என, கருதி, காய்வனோ என்று அயிர்த்து, வாயசம், இருசிறைக் கையால், மார்பில் புடைத்து, கலங்கி, மெய்யாம் தம் பெயர் விளம்பி, பதறி எத்திசையிலும் சிதறி ஓடுதலும் (இனிது.) (ஏ - அசை).

## பதவுரை

இருள் பகை - இருளுக்குப் பகைவனை
இரவி - சூரியன்
தம்மையும் - காக்கைகளாகிய தங்களையும்
இருள் என - இருள் கூட்டங்கள் என்று
கருதி - நினைத்து
காய்வனே என்று - கொன்று விடுவானோ என்று
அயிர்த்து - சந்தேகித்து
வாயசம் - காக்கைகள்
இரு சிறைக் கையால் - இரண்டு இறக்கைகளாகிய கைகளினால்
மார்பிற் புடைத்து - தம்முடைய மார்பிலே அடித்துக்கொண்டு
கலங்கி - கலக்கத்தை அடைந்து
மெய்யாம் - உண்மையாகிய
தம் பெயர் விளம்பி - தங்கள் பெயர்களைச் சொல்லிக் கொண்டு ('கா', 'கா' என்று கத்திக்கொண்டு)
பதறி - தடுமாறி
எத் திசையினும் - எல்லாப் பக்கங்களிலும்
சிதறி ஓடுதலும் - தனித்தனியாகப் பறந்து ஓடுவதும்
(இனிது) - மிக அழகாக இருக்கின்றது.

## தெளிவுரை

இருளுக்குப் பகைவனாகிய சூரியன் காக்கைகளாகிய தங்களையும் இருள் கூட்டங்களென்று கொன்று விடுவானோ எனச்சந்தேகித்து இரண்டு இறக்கைகளாகிய கைகளால் தம் மார்பிலடித்துக் கொண்டு கலக்கத்தை அடைந்து காக்கைக் கூட்டங்கள் 'கா', 'கா' எனக் கூவி, தடுமாறி எல்லாப் பக்கங்களிலும் தனித்தனியாகப் பறந்து ஓடுவது மிகவும் அழகாக இருக்கின்றது.

## விளக்கம்

இரவைப் போக்குவது சூரியனுக்கு இயல்பு. விடியற் காலையில் காக்கைகள் விழித்தெழுந்து 'கா', 'கா' வெனக் கூவிக்கொண்டே தங்கள் கூடுகளிலிருந்து வெளியே பறந்து செல்வது வழக்கம்.

இந்த இயற்கை நிகழ்ச்சியில் ஆசிரியர் தம் கற்பனை நயத்தை ஏற்றிக் கூறியுள்ளார். கறுத்த நிறம் உடைய தங்களையும் சூரியன் தன் பகையாகிய இருட் கூட்டங்கள் என்று கொன்று விடுவானோ என அஞ்சிக் காக்கைகள் கைகளைப் போன்ற தம் இறக்கைகளை மார்பில் அடித்துக் கொண்டு, தாங்கள் இருட்கூட்டங்கள் அல்ல என்றும் உண்மையில் தாங்கள் காக்கைகளே என்றும் குறிப்பிடுவதற்காக, 'கா', 'கா' என்று கூவித் தடுமாறிச் சிதறி ஓடின.

இவ்வாறு கவிஞர் தம் குறிப்பை இயற்கை நிகழ்ச்சியில் ஏற்றிக் கூறுவதற்குத் தற்குறிப் பேற்ற அணி என்று பெயர்.

காக்கைகளின் இறக்கைகளைக் கைகளாக உருவகித்தது மிகவும் பொருத்தம் ஆகும்.

## இலக்கணம்

இருள் + பகை = இருட்பகை. கருதி, அயிர்த்து, புடைத்து, கலங்கி, விளம்பி, சிதறி, பதறி—இவை வினையெச்சங்கள்.

## பறவைகளின் பாடல் (22 - 27)

### உரைநடை

பல்நிறச் சிறகர்ப் பறவைத் தொழுதி, தம்மினம் தழுவி, சூழ்ந்து, வட்டமாய், அங்கு அங்கு இருந்து, தங்கள் முறை முறை அம்சிறை ஒத்து அறுத்து, அடியா, எஞ்சல் இல், இசை அறி, மாக்களின் ஈட்டம் போல, வசையறு பாடல் வழங்கலும் இனிது. (ஏ - அசை.)

### பதவுரை

பல்நிற - பல நிறங்களோடு கூடிய
சிறகர் - இறக்கைகளை உடைய
பறவைத் தொழுதி - பறவைகளின் கூட்டம்
தம் இனம் தழுவி - அதனதன் இனங்களோடு சேர்ந்து
சூழ்ந்து வட்டமாய் - சுற்றிலும் வட்டமிட்டுக் கொண்டு
அங்கு அங்கு இருந்து - எங்கு எங்கு கூடு கட்டி உள்ளனவோ, அங்கங்கிருந்து
தங்கள் முறை முறை - முன்னால் எழுந்தவை முன்னாலும், பின்னால் எழுந்தவை பின்னாலும்
அம் சிறை - அழகிய இறக்கைகளால்
ஒத்து அறுத்து அடியா - இசைக்குப் பொருத்தமாகத் தாளம் போடுவது போல அடித்து
எஞ்சலில் - குறைவில்லாத
இசை அறி மாக்களின் - இசை பாடுபவர்களின்
ஈட்டம் போல - கூட்டத்தைப்போல
வசையறு - குற்றமில்லாத
பாடல் - பாடல்களை
வழங்கலும் - ஒலித்தலும்
இனிது - மிகவும் அழகாக இருக்கின்றது.

### தெளிவுரை

பல வர்ணங்களோடு கூடிய இறக்கைகளை உடைய பறவைகளின் கூட்டம் அதனதன் இனங்களோடு சேர்ந்து வானத்தில் சுற்றிலும் வட்டமிட்டுக் கொண்டு, அவை கூடு கட்டியுள்ள அவ்வவ்விடங்களிலிருந்து கொண்டு முன்னர் எழுந்தவை முன்னரும், பின்னர் எழுந்தவை பின்னருமாக, பாட்டுக்கு ஏற்றபடி தாளம் போடுவது போலத் தம் அழகிய இறக்கைகளை அடித்துக் கொண்டு பாடுகின்றன. அவை குறைவில்லாத இசையைப் பாடுபவர்கள் ஒன்றாகக் கூடிப் பாடுவது போல் குற்றமில்லாத பாடல்களை ஒலித்தல் மிகவும் அழகாக இருக்கின்றது.

### விளக்கம்

கோழியின் கூவலும் காக்கையின் கரைதலும் கேட்டு மகிழ்ந்த கவிஞர் மற்றப் பறவைகளின் இசை விருந்தையும் அநுபவித்து இன்பமடைகிறார். 'துயிலெழுந்த பறவைக் கூட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தம் இறக்கைகளை அடித்துக் கொள்வது இன்னிசை அரங்கில் ஒழுங்காகத் தாளம் போடுவது போன்று உள்ளது' என்று கூறும் நயம் படித்து மகிழ்தற்குரியதாகும்.

### இலக்கணம்

பல்+நிறம் = பல்நிறம். சிறகர் — போலி. அங்கங்கு, முறைமுறை — அடுக்குத் தொடர்கள். அடியா — செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அறிமாக்கள் — வினைத்தொகை. இனிது — குறிப்பு வினைமுற்று.

" சரணம் என்றால் மரணம் இல்லை." — வ. வெ. சர்மா.

## கேள்வியும் பதிலும்

1. மனோன்மணீயம்—பொருளும் இலக்கணமும் கூறுக.

*2. மனோன்மணீய ஆசிரியர் யார்? அவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

3. மனோன்மணீய நூலின் பெருமைகள் யாவை?

இம் மூன்று வினாக்களுக்கும் உரிய விடைகளை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.

*4. கருகு இருள் நீங்கிய காட்சியை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?

சித்திரம் எழுத வல்லவன் ஒரு சீலையில் தீட்டத் தொடங்கிய சித்திரமானது அவன் வரைவதற்காகக் கொண்டிருக்கும் சித்திரக் கோல் படும்போதெல்லாம் எழுதும் சித்திரத்தின் உருவம் இன்னதென்று விளங்கும். அதுபோல் சூரியனின் கிரணங்கள் படும்போதெல்லாம் உலகில் உள்ள பொருள்களின் மேல் படர்ந்திருக்கும் இருள் நீங்கி அவை இன்னவை என்று புலப்படும்.

*5. சேவல் செய்த செயல் யாது? அஃது எதுபோல் இருந்தது?

சேவல் சுரைக் கொடி படர்ந்த வீட்டுக் கூரைமேல் கர்வத்துடன் கடந்து, பின்னர் இரண்டு இறக்கைகளையும் அடித்து வாயைத் திறந்து ஒரு முறை 'கொக்கரகோ' என்று கூவிச் சுற்றுமுற்றும் நோக்கும். அவ்வாறு செய்வது பக்கத்தில் வசிப்பவர்கள் தம்மைப் புகழவேண்டி கூர்ந்து பார்ப்பவரைப் போல இருக்கும்.

*6. காக்கைகள் பறந்து சென்ற காட்சியை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?

இருளுக்குப் பகைவனாகிய சூரியன் கரிய நிறத்தையுடைய தங்களையும் இருள் கூட்டங்கள் என்று கருதிக் கொன்றுவிடுவானோ என்று சந்தேகித்துக் காக்கைக் கூட்டங்கள் தம் இரண்டு இறக்கைகளாகிய கைகளினால் மார்பில் அடித்துக்கொண்டு கலக்கத்துடன் தாம் இருட் கூட்டங்கள் அல்ல என்பதைக் காட்டுவதற்காக, 'கா' 'கா' என்று தம்பெயரைக் கூவிக்கொண்டே எல்லாத் திசைகளிலும் தனித்தனியாகப் பறந்து ஓடும்.

*7. பறவைகளின் பாடலைக் குறித்து ஆசிரியர் என்ன கூறுகிறார்?

பல நிறங்களோடு கூடிய இறக்கைகளை உடைய பறவைகளின் கூட்டம் அதனதன் இனங்களோடு சேர்ந்து வானத்தில் சுற்றிலும் வட்டமிட்டுக் கொண்டு அவ்வவ்விடங்களில் இருந்து கொண்டு முன்னர் எழுந்தவை முன்னரும், பின்னர் எழுந்தவை பின்னருமாகப் பாட்டுக்கேற்றபடி தாளம் போடுவது போலத் தம் அழகிய இறக்கைகளை அடித்துக் கொள்ளுகின்றன. இந்நிகழ்ச்சி குறைவில்லாத இசைபாடுபவர்கள் ஒன்றாகக் கூடிக் குற்றமில்லாத பாடல்கள் பாடுவதுபோல் இருக்கும்.

**8. கீழ்வரும் உவமைகளை உவமேயத்துடன் பொருத்தி விளக்குக.**

(1) "தூரியம் தொடத் தொடத் துலங்குதல் போல"

(2) "உழையுளார் புகழ உற்றுநோக்குவார் போல"

(3) "இசையறிமாக்களின் ஈட்டம் போல"

1. ஓவியம் வல்லவனின் எழுதுகோலானது படும்போதெல்லாம் அவன் எழுதும் சித்திரம் இன்னதென்று புலப்படுவது போல, சூரியனின் கிரணங்கள் உலகிலுள்ள பொருள்களின்மீது படும்போதெல்லாம் அவற்றின் மீதுள்ள இருள் நீங்கி அவை இன்னவை என்று விளங்கும்.

2. சுரைக் கொடி படர்ந்த வீட்டுக் கூரையின் மேல் கர்வத்துடன் நடந்து இறக்கைகளை அடித்துக்கொண்டு கூவும் சேவல் சுற்றுமுற்றும் நோக்குவது பக்கத்தில் வசிப்பவர்கள் தம்மைப் புகழ வேண்டிக் கூர்ந்து பார்ப்பவரைப் போல இருக்கிறது.

3. விடியற் காலையில் பறவைக் கூட்டங்கள் தத்தம் இடங்களிலிருந்து இறக்கைகளை அடித்துக்கொண்டு கூவும் காட்சி இசைவாணர்கள் தாளத்தோடு சேர்ந்து பாடுவது போல் இருக்கும்.

**9. பொருள் கூறுக:** (விடை எதிரெதிரே காண்க)

(1) பரிதி—சூரியன்
(2) சாலவும்—மிகவும்
(3) தூரியம்—ஓவியம் எழுதும் கோல்
(4) அயிர்த்து—ஐயம் கொண்டு
(5) ஈட்டம்—கூட்டம்
(6) வாயசம்—காக்கை
(7) தொழுதி—கூட்டம்
(8) அடியா—அடித்து
(9) ஒத்து—தாளம்
(10) வசை—குற்றம்

**10. இலக்கணக் குறிப்பு வரைக:** (விடை எதிரெதிரே காண்க)

(1) சால—உரிச்சொல்
(2) செல்வோம்—தன்மைப் பன்மை வினைமுற்று
(3) திட்டுவான்—'வான்' ஈற்று வினையெச்சம்
(4) துலங்குதல்—தொழிற் பெயர்
(5) தொடத் தொட—அடுக்குத் தொடர்
(6) நோக்குவர்—வினையாலணையும் பெயர்
(7) சிறகர்—போலி
(8) நெடுவாய்—பண்புத் தொகை
(9) இனிது—குறிப்பு வினைமுற்று.

4. நாட்டுக்கவி சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய

# பாரத தேசம்

## முன்னுரை

### ஆசிரியர் வரலாறு

**ஆசிரியர் பிறப்பிடம் :** எட்டையபுரம் ; திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது.



**பெற்றோர் :** தகப்பனார் :—சின்னசாமி ஐயர்.
தாயார் :—இலட்சுமி அம்மாள்.

**காலம் :** 1882-ல் பிறந்து 1921-ல் மறைந்தார்.

**பெயர்க் காரணம் :** கலைமகளைப் போல் கல்வியில் சிறந்து விளங்கியதால் பாரதி என்று அழைக்கப்பட்டார்.

**வாழ்க்கையும் பண்பும் :** பாரதியார் இளமையிலிருந்தே வறுமையாலும் அந்நிய அரசாங்கத்தாராலும் பல இன்னல்களுக்கு உள்ளானவர். மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் நிறைந்தவர் ; சமரச நோக்கமுடையவர்.

---

“ கையெழுத்தில் உன் தலையெழுத்தும் அடங்கும்.” — தணிகை.

**வேறு நூல்கள் :** பாரதியார் சிறந்த தேசிய கீதங்களையும், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, முருகன்பாட்டு முதலிய பாடல் நூல்களையும் எழுதி யுள்ளார். ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை நூல் களும் பாரதியாரால் எழுதப்பட்டவை.

**ஆசிரியர் பெருமை :** "பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா" என்னும் கீதம் திக்கெட்டும் பரவும் இக்காளில் பாரதியாரை அறியாதவர் யாருமே இருக்கமாட்டார்கள். பாரதியார் என்றாலே நம் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறதல்லவா ? தூங்கியிருந்த மக்களுக்கு வீர உணர்ச் சியை ஊட்டிய பெருமை பாரதியாருக்கே உரியது. புதுமைக்கவி, புரட்சிக் கவி, உயிர்க்கவி, அமரகவி, தேசீயக்கவி, வரகவி என்று எப்படிச் சிறப் பித்துக் கூறினாலும் அது பாரதியாருக்குப் பொருத்தமாகவே இருக்கும். இந்த நாளில் அவர் பாட்டுகள் சினிமா, நாடகம், இசை அரங்கு, பிரசங்க மேடை, இசைத்தட்டு முதலான எல்லா இடங்களிலும் பாடப்படுவதே அவரு டைய சிறப்பை விளக்கும். தமிழர்கள் பொருளுதவியால் பாரதியாருக்கு எட்டையபுரத்தில் ஒரு ஞாபகக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

## பொருள் விளக்கம்

### 1. பாலம் அமைப்போம், பயிர்த் தொழில் வளர்ப்போம்

#### உரைநடை

**சிங்களத் தீவினுக்கு, ஓர் பாலம், அமைப்போம் : சேதுவை மேடு உறுத்தி வீதி சமைப்போம்; வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.**

#### பதவுரை

சிங்களத் தீவினுக்கு - இலங்கைத் தீவுக்கு (இந்தியாவை இணைக்கு மாறு)
ஓர் பாலம் - ஒரு பாலத்தை
அமைப்போம் - கட்டுவோம்
சேதுவை - (இலங்கைக்கும் இராமேசுவரத்துக்கும் இடையே யுள்ள) சேது என்னும் அணையை
மேடு உறுத்தி -மேடாக்கி
வீதி - ஒரு பெரிய தெருவாக
சமைப்போம் - அமைப்போம்
வங்கத்தில்- வங்காள மாகாணத்தில்
ஓடிவரும் - பாய்ந்து வருகின்ற (கங்கை நதியின்)
நீரின் மிகையால் - பெருவெள்ளத் தினால்
மையத்து நாடுகளில் - இந்தியாவின் மத்தியில் உள்ள நாடுகளில்
பயிர் செய்குவோம் - பயிர்த் தொழிலைச் செய்வோம்

#### தெளிவுரை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு பாலத்தைக் கட்டுவோம்; அவற்றின் இடையே உள்ள அணையை மேடாக்கி ஒரு பெரிய வீதியாக்கு வோம் ; வங்காள மாகாணத்தில் ஓடும் கங்கை நதியின் பெரு வெள்ளத்தினால் இந்தியாவின் மத்திய நாடுகளில் பயிர்த் தொழில் செழிக்குமாறு செய்வோம்.

#### விளக்கம்

தாய் நாட்டின் வாணிப முன்னேற்றத்தையும் பயிர் வளத்தையும் விரும் பும் பாரதியார் அவற்றுக்கு வேண்டிய வழிகளை இப்பாட்டில் அழகாகக் கூறி யுள்ளார். இலங்கை இந்தியாவுக்கு மிகவும் அண்மையில் உள்ள ஒரு தீவு. அதற்கு ஒரு பாலம் அமைத்துவிட்டால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும்

கூட்டுறவு உண்டாகி வாணிபம் வளரும்; மக்கள் போக்கு வரவு மிக எளிதாக இருக்கும்.

சிங்களர் என்னும் மரபினர் வசிக்கும் நாடாகையால் இலங்கைக்குச் சிங்களத் தீவு என்று வேறு ஒரு பெயரும் உண்டு. நெடு நாட்களாகவே தமிழர்களுக்கும் இலங்கை மக்களுக்கும் தொடர்பு உண்டு என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

வங்காள மாகாணத்தில் பாயும் கங்கை நதி எக்காலத்திலும் வற்றாத ஜீவநதி அல்லவா? அவ்வாற்றின் நீர் கடலில் ஓடி வீணாகாமல் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டும் என்கிறார். இந்திய நாட்டின் இடையே உள்ள பிரதேசங்கள் நீர் வளமின்றி வறண்டு இருக்கின்றன. ஆகையால், இந்நதியின் வெள்ளத்தை மத்திய நாடுகளுக்கும் திருப்பிப் பாய வைத்து அங்கெல்லாம் பயிர்த் தொழிலை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்று பாரதியார் விரும்புகிறார்.

### இலக்கணம்

செய்வோம், வளர்ப்போம் — தன்மைப் பன்மை வினைமுற்று. நல்ல — குறிப்புப் பெயரெச்சம். உவந்து — வினையெச்சம். தொழில் + அனைத்தும் = தொழிலனைத்தும்.

## 2. கைத்தொழில் வளர்த்து நாட்டைக் காப்போம்

### உரைநடை

காவியம் செய்வோம்; நல்ல காடு வளர்ப்போம்; கலை வளர்ப்போம்; கொல்லர் உலை வளர்ப்போம்; ஓவியம் செய்வோம்; நல்ல ஊசிகள் செய்வோம்; உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்.

### பதவுரை

**காவியம்** - இனிய கவிதை நூல்களை
**செய்வோம்** - இயற்றுவோம்
**நல்ல** - பயன்படும்படியான
**காடு** - காடுகளை
**வளர்ப்போம்** - நாட்டின் பலவிடங்களிலும் வளர்ப்போம்
**கலை** - பல வகையான வித்தைகளை
**வளர்ப்போம்** - நாட்டில் பரவச் செய்வோம்
**கொல்லர்** - கொல்லர்களுடைய
**உலை** - உலைக் கூடங்களை
**வளர்ப்போம்** - பல இடங்களிலும் ஏற்படுத்துவோம்

**ஓவியம்** - சித்திரக் கலையை
**செய்வோம்** - வளர்ப்போம்
**நல்ல** - உயர்தரமான
**ஊசிகள்** - ஊசிகளை
**செய்வோம்** - உண்டாக்குவோம்
**உலகத் தொழில்** - உலகத்தில் அவ்வவ்நாட்டில் நடைபெறும் தொழில்கள்
**அனைத்தும்** - எல்லாவற்றையும்
**உவந்து செய்வோம்** - மகிழ்ந்து செய்வோம்.

### தெளிவுரை

நம் பாரத நாட்டில் இனிய கவிதை நூல்களை இயற்றுவோம்; பயனுள்ள காடுகளை வளர்ப்போம். கலைகள் பலவற்றையும் போற்றுவோம்; கொல்லர்கள் பணியாற்றும் உலைக்கூடங்களை அங்கங்கே உண்டாக்குவோம்; சிறந்த ஓவியங்களை வரைவோம்; உயர்தரமான ஊசிகளைச் செய்வோம்; உலகத்தில் நடைபெறும் பலவகையான கைத்தொழில்களையும் மகிழ்ச்சியோடு செய்வோம்.

---

**“ கவிஞரைப் போற்றின் புவி நலம் பெருகும்.” — அறிவழகனார்.**

## விளக்கம்

நாட்டு மக்கள் உண்மையான தேசப் பற்றுடன் வாழ்வதற்குக் கவிதை நூல்கள் இன்றியமையாதவை. அக்காவியங்கள் நம் நாட்டின் பெருமையையும் முன்னோர்களின் வீரம், கொடை, பண்பாடு முதலியவைகளையும் பற்றியனவாக இருப்பது நல்லது. இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்றவை சிறந்த காவிய நூல்களாகும். காடுகள் ஒரு நாட்டின் இயற்கைச் செல்வங்கள் ஆகும். காடுகள் வளர்ந்தால் நாட்டில் மழை வளம் அதிகரிக்கும். அதனால்தான் பாரதியார், 'காடு வளர்ப்போம்' என்றார். கலைகள் நிறைந்த நாடு உலகம் புகழ்பெற்ற நாடாக விளங்கும். தொழில்களில் உயர்வு தாழ்வு கருதாமல் எல்லாத் தொழில்களையும் வளர்க்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறார் பாரதியார். கலைகள் மொத்தம் அறுபத்து நான்கு என்பர். அவற்றின் பெயர்களை **அபிதான சிந்தாமணி** என்னும் நூலில் விளக்கமாகக் காணலாம். இப்பாடலால் நாட்டு வளர்ச்சிக்குக் கைத்தொழில்கள் மிகவும் இன்றியமையாதவை என்று அறியலாம்.

## இலக்கணம்

செய்வோம், வளர்ப்போம்—தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள். உவந்து—வினையெச்சம். நல்ல—குறிப்புப் பெயரெச்சம். நாம் - தோன்றா எழுவாய்.

## கேள்வியும் பதிலும்

1. பாரதியாரின் பெற்றோர், பிறப்பிடம், காலம் முதலியவற்றைக் குறிப்பிடுக.
2. பாரதியாரின் பெருமைகள் யாவை ?
3. பாரதியார் இயற்றிய வேறு நூல்கள் யாவை ?

இம்மூன்று வினாக்கட்கும் உரிய விடையை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.



***4. பாரதியார் நம் நாட்டு வாணிப வளர்ச்சிக்கும், பயிர்த்தொழில் முன்னேற்றத்துக்கும் என்னென்ன செய்ய வேண்டுமென விரும்பு கிறார்?**

நம் நாட்டுக்கும் இலங்கைத் தீவுக்கும் ஒரு பாலம் அமைக்க வேண்டும். இலங்கைக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையே உள்ள அணையை மேடாக்கி ஒரு வீதியாகச் செய்ய வேண்டும். வங்காளத்தில் பாயும் கங்கையாற்றின் வெள்ளத்தை வீணாகக் கடலில் சென்று கலக்கவிடாமல் நாட்டின் மத்தியப் பிரதேசங்களில் பாய்ச்சிப் பயிர்த்தொழிலை வளர்க்க வேண்டும்.

***5. நம் நாட்டு முன்னேற்றத்துக்குப் பாரதியார் கூறும் அடிப்படையான கைத்தொழில்கள் யாவை ?**

நம் நாட்டைப்பற்றியும் முன்னோர்களைப்பற்றியும் இனிய கவிதைகள் இயற்றுவோம்; பயனுள்ள காடுகளை வளர்ப்போம்; கலைகள் பலவற்றையும் வளர்ப்போம்; ஆங்காங்கே உலைக்கூடங்களை அமைப்போம்; சிறந்த ஓவியங்களைத் தீட்டுவோம்; உயர்ந்த ஊசிகளைச் செய்வோம். இவ்வாறு உலகில் நடைபெறும் பலப்பல தொழில்களையும் புரிவோம்.

**6. இலக்கணக் குறிப்பு எழுதுக :** (விடை எதிரெதிரே காண்க)

(1) அமைப்போம் - தன்மைப் பன்மை வினைமுற்று

(2) காடுவளர்ப்போம் - இரண்டாம் வேற்றுமைத் தொகை

(3) உவந்து - வினையெச்சம்

(4) நல்ல - குறிப்புப் பெயரெச்சம்

5. அரசன் சண்முகனார் இயற்றிய

# இன்னிசை இருநூறு



அரசன் சண்முகனார்

## முன்னுரை

**பெயர்க் காரணம் :** இனிய புகழைத் தரும் நீதிகளைக் கொண்ட இருநூறு செய்யுட்களாலாகிய நூலாகையால், இதற்கு இன்னிசை இருநூறு என்று பெயர்.

## ஆசிரியர் வரலாறு

**ஆசிரியர் பெயர் :** அரசன் சண்முகனார்.

**ஊர் :** மதுரை மாவட்டத்தைச் சார்ந்த சோழவந்தான்.

**காலம் :** இந்த 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர்.

**ஆசிரியர் பெருமைகள் :**

1. இவர் கவிகள் புனைவதிலும், இலக்கணம், சோதிடம் முதலிய கலைகளிலும் வல்லவர்.

2. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் முதலியபேரறிஞர்கள் பலரும் பாராட்டிய பெரும் புலவராவார்.

"தோட்டி போலுழைத்துத் துரைபோல் சாப்பிடு." — பழமொழி.

3. பிற புலவர்கள் இலக்கண, இலக்கியத் துறையில் வாதிடுவதற்கு அஞ்சுமாறு நிறைந்த புலமையும், கூரிய அறிவும் உடையவர்.

4. புதுக்கோட்டைச் சீமையில் மேலைச் சிவபுரி என்னும் ஊரில் சன்மார்க்க சபை என்னும் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி அதன் முதல் தலைமையாசிரியராக இருந்து பணியாற்றினர்.

## பொருள் விளக்கம்

### 1. ஒழுக்கத்தின் மதிப்பு

#### உரைநடை

கல்வி இலையேல் செல்வமும் சிறப்பு இல்லை; நுண்ணறிவு இன்றேல் கல்வியும் கணிப்பு இல்லை; வல்லார்க்கும் நல்லொழுக்கம் இல்லாயின் எல்லாம் இருப்பினும் மதிப்பு இல்லை.

#### பதவுரை

கல்வி இலையேல் - ஒருவனுக்குப் படிப்பு இல்லாவிட்டால்
செல்வமும் - நிறையச் செல்வம் இருந்தும்
சிறப்பு இல்லை - அச்செல்வத்துக்குப் பெருமையில்லை
நுண்ணறிவு இன்றேல் - நுட்பமான அறிவு இல்லையேல்
கல்வியும் - தாம் கற்ற மிகுந்த கல்விக்கும்
கணிப்பு இல்லை - மதிப்பு இல்லை
வல்லார்க்கும் - எல்லாத் துறைகளிலும் ஆற்றல் உடையவர்களுக்கும்
நல்லொழுக்கம் இல்லாயின் - நல்லொழுக்கம் இல்லாவிட்டால்
எல்லாம் இருப்பினும் - எல்லா வசதிகளும் இருந்தாலும்
மதிப்பு இல்லை - அவற்றால் பெருமை இல்லை

#### தெளிவுரை

நிறைந்த செல்வம் உடையவருக்கும் கல்வியறிவு இல்லையேல், பெருமை இல்லை. நிறைந்த கல்வியறிவு உடையவருக்கும் நுண்ணறிவு இல்லையேல் மதிப்பு இல்லை. நல்லொழுக்கம் இல்லாதவருக்கு எல்லா வசதிகள் இருப்பினும் பிறரால் மதிப்பு உண்டாகாது.

#### விளக்கம்

செல்வம் கல்வியினாலும், கல்வி நுண்ணறிவினாலும் பெருமை அடையும். எல்லா வசதிகளும் இருந்தாலும் நல்லொழுக்கம் இல்லாதவருக்கு இவ்வுலகத்தில் மதிப்பு இல்லை. 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் திருக்குறளும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

#### இலக்கணம்

இலையேல், இல்லையேல்—தொகுத்தல். சிறப்பு + இல்லை = சிறப்பில்லை. கணிப்பு + இல்லை = கணிப்பில்லை. எல்லாம்—பொதுப் பெயர். இல்லை—குறிப்பு வினைமுற்று. நுண்மை + அறிவு = நுண்ணறிவு. நன்மை + ஒழுக்கம் = நல்லொழுக்கம்.

### 2. அறிஞர் அடக்கம்

#### உரைநடை

காய்த்த விளை நெல் கதிர் இறைஞ்சி காண்டும்; கோத்த் பதர் கொள் குலை நிமிர்வே கொள்ளும்; ஏத்தும் அறிஞர்க்கு இயல்பு பணிவுடைமை; பேதை வயின் பணிவுடைமை வாய்த்தல் இலை. (ஆல்–அசை)

“உடல் சாகும்; உயிர் சாகாது.” — ஏகநாதர்.

## பதவுரை

காய்த்த - காய்த்து முற்றி
விளை நெல்கதிர் - விளையும் நெற்பயிரினது கதிரானது
இறைஞ்ச - வளைவதை
காண்டும் - நாம் காண்கிறோம் (அதுபோல)
ஏத்தும் - யாவராலும் புகழப்படுகின்ற
அறிஞர்க்கு - புலவர்க்கு
இயல்பு - குணமானது
பணிவுடைமை - அடக்கமுடைமையே ஆகும்
கோத்த - ஒன்றோடு ஒன்று சேர்ந்த
பதர்கொள் - பதர்களைக் கொண்ட
குலை - நெற்கதிரானது
நிமிர்வே கொள்ளும் - வளையாமல் எப்போதும் நிமிர்ந்தே நிற்கும் (அதுபோல)
பேதை வயின் - அறிவில்லாதவனிடத்தில்
வாய்த்தல் இலை - பணிவுடைமை என்னும் குணமானது பொருந்துவது இல்லை.

## தெளிவுரை

நன்றாக முற்றிய நெற்கதிரானது தலைவணங்கி நிற்கும். அதுபோல நன்கு படித்த அறிஞர்கள் அடக்கமாக இருப்பார்கள். நன்கு முற்றாத பதர்களை உடைய நெற்கதிர் எப்போதும் நிமிர்ந்தே நிற்கும். அதுபோல அறிவிலிகள் அடக்கம் என்னும் குணம் அற்றவர்களாகவே இருப்பார்கள்.

## விளக்கம்

நெற்கதிர் முற்றுதல் அறிவு முற்றுதலுக்கு உவமையாகக் கூறப்பட்டது.

'நிறை குடம் ததும்பாது ; குறை குடம் ததும்பும்' என்னும் பழமொழி இங்கு ஒப்பு நோக்குவதற்கு உரியதாகும்.

'சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ; ஆன்று அமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றி பெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி?'

என்னும் நீதிவெண்பாப் பாடலும் கற்றவர்கள் அடக்கமாகவும், அறிவிலிகள் ஆடம்பரமாகவும் இருப்பர் என்பதைப் புலப்படுத்துகின்றது.

## இலக்கணம்

விளைநெல்—வினைத்தொகை. காண்டும்—தன்மைப் பன்மை வினைமுற்று. ஆல்—அசை. காய்த்த, கோத்த, ஏத்தும்—பெயரெச்சங்கள். பதர்கொள்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

## கேள்வியும் பதிலும்

1. இன்னிசை இருநூறு—பெயர்க்காரணமும், ஆசிரியர் பெயரும் கூறுக.

2. அரசன் சண்முகனாரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

இவ்விரண்டு கேள்விகளுக்கும் உரிய விடையை முன்னுரைப் பகுதியில் படித்துணர்க.

3. செல்வமும், கல்வியும் எவ்வெவற்றால் சிறப்பை அடையும் ?

செல்வம் கல்வியினால் சிறப்பை அடையும். கல்வி நுண்ணறிவினால் சிறப்பைப் பெறும்.

---

" துன்பத்திலிருந்துதான் மனவலிமை பிறக்கிறது." — கி. ஆ. பெ.

**4. ஒழுக்கத்தின் உயர்வைப் பற்றி அரசன் சண்முகனார் கூறும் அறிவுரை யாது?**

ஒருவருக்குச் செல்வம், கல்வி முதலிய எல்லா வசதிகளும் இருந்தாலும் நல்லொழுக்கம் இல்லையேல், அவருக்கு அவற்றால் பெருமை ஒன்றும் இல்லை.

**5. 'காய்த்த விளைநெல் கதிரிறைஞ்சக் காண்டும் கோத்த பதர் கொள் குலை நிமிர்வே கொள்ளும்' இவ்வுவமைகளால் விளக்கப் படும் நீதிகளைப் புலப்படுத்துக.**

நன்றாக முற்றிய நெற்கதிர்கள் தலைவணங்கி நிற்கும். அதுபோல நிறையப் படித்துணர்ந்த பெரியோர்கள் எப்போதும் அடக்கமாகவே இருப்பார்கள்.

பதர்களைக் கொண்ட நெற்கதிர்கள் தலை வணங்காமல் எப்போதும் நிமிர்ந்தே நிற்கும். அதுபோல அறிவில்லாதவனிடத்தில் அடக்கம் என்னும் குணம் காணப்படாது.

**6. பொருள் கூறுக:** (விடை எதிரெதிரே காண்க)

| | |
|---|---|
| (1) கணிப்பு - மதிப்பு | (4) இறைஞ்ச - வளைய |
| (2) காண்டும் - பார்க்கிறோம் | (5) ஏத்தும் - புகழும் |
| (3) பேதை - அறிவில்லாதவன் | (6) வயின் - இடத்தில் |

**7. இலக்கணக் குறிப்பு எழுதுக.** (விடை எதிரெதிரே காண்க.)

| | |
|---|---|
| (1) இல்லை - குறிப்பு வினைமுற்று | (3) காண்டும் - தன்மைப் பன்மை வினைமுற்று. |
| (2) விளை நெல் - வினைத்தொகை | (4) கோத்த - பெயரெச்சம் |

6. *தமிழ்ப் பெரியார் திரு. வி. க. இயற்றிய*

# உலக ஒருமை

## ஆசிரியர் வரலாறு

**பிறப்பிடம்:** இவர்தம் முன்னோரின் ஊர் திருவாரூர். இவர் குன்றத்தூருக்கு அருகில் உள்ள துள்ளம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் இறுதிக் காலம் வரையில் சென்னை இராயப்பேட்டையில் வசித்து வந்தார்.

**தந்தை:** விருத்தாசல முதலியார்

**தாய்:** சின்னம்மாள்

**மரபு:** வேளாளர்

**பிறந்த காலம்:** 26—8—1883. எழுபது ஆண்டுகள் வரை வாழ்ந்திருந்தார். 1953-இல் மறைந்தார்.

**ஆற்றிய தொண்டுகள்:**

1. இவர் சில ஆண்டுகள் சென்னை வெஸ்லி உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார்.

2. தேசத் தொண்டில் ஈடுபட்டுப் பல இடங்களில் சுய ஆட்சிக் கிளர்ச்சிப் பிரசாரங்கள் புரிந்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து நாட்டு உரிமைக்காகப் பல துன்பங்களை அனுபவித்தார்.

3. தொழிலாளர் நலத்துக்கும், பெண்கள் முன்னேற்றத்துக்கும், சமூக வளர்ச்சிக்கும், மாணவர்கள் எழுச்சிக்கும் பல நற்பணிகள் புரிந்தார்.

4. தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்களின் உயர்வு இவற்றுக்காகப் பல சேவைகள் செய்தார். பற்பல நூல்களும், கட்டுரைகளும், கவிதைகளும் எழுதியுள்ளார்.

5. நவசக்தி, தேசபந்து முதலிய சிறந்த பத்திரிகைகளை நடத்தினர்.



ஆசிரியர் தணிகை உலகநாதன் திரு. வி. க. விற்கு மாலை சூட்டுகிறர்

**ஆசிரியரின் பெருமைகள் :**

1. தமிழ் மக்களால், 'தமிழ்ப் பெரியார்' என்று பாராட்டப் பெற்றார்.

2. எம்மதமும் சம்மதமென்னும் சமரச நோக்குடையவராய் வாழ்ந்தார்.

3. புதுமைக் கருத்துக்களும் சீர்திருத்தக் கருத்துக்களும் நிறைந்தவர்.

4. ஆடம்பரமற்ற எளிய வாழ்வு வாழ்ந்தவர்.

**ஆசிரியரின் நூல்கள் :**

இவருடைய நூல்கள் எளிய தமிழில் சொல்லழகும் பொருளழகும் தொடையழகும் நடையழகும் வாய்ந்த முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, இளமை விருந்து, பொதுமை வேட்டல் முதலிய நூல்

கள் இவரால் இயற்றப் பெற்றவை. நம் பாடப்பகுதி ஆசிரியரவர்கள் இயற்றிய 'முதுமை உளறல்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## பொருள் விளக்கம்

### உலக ஒருமை உணர்வு பெறுக

### உரைநடை

கண்ணும் காதும் மூக்கும் நாக்கும் கழுத்தும் தோளும் கையுங் காலும் குழப்பம் விளைத்தால் செழிப்புடல் ஏது? (அதுபோல) உலகம் பலப்பல உறுப்பு உடையது. உறுப்புப் போர் செயின் பொறுப்பு உலகு ஏது? (ஆகையால்) உலக உணர்வு நிலைபெறப் பயில்க.

### பதவுரை

**கண்ணும் காதும் மூக்கும் நாக்கும்** - கண், காது, மூக்கு, நாக்கு ஆகிய உறுப்புகளும்
**கழுத்தும் தோளும் கையும் காலும்** - கழுத்து, தோள், கை, கால் முதலிய உறுப்புகளும்
**குழப்பம் விளைத்தால்** - அதனதன் வேலையைச் செய்யாவிட்டால்
**செழிப்பு உடல் ஏது?** - வளப்பம் பொருந்திய நமது உடல் எவ்வாறு நிலை பெறும்? (நிலை பெறாது.) அது போல
**உலகம்** - இந்த உலகமானது,
**பலப்பல உறுப்பு உடையது** - பல பல நாடுகளையும் மக்களையும் அங்கங்களாக உடையது.
**உறுப்புப் போர் செயின்** - அந்தந்த நாடுகள் ஒற்றுமை இல்லாமல் போர் செய்தால்
**பொறுப்பு உலகு ஏது?** - அமைதியான உலகம் எவ்வாறு நிலை பெற்று இருக்கும்? (ஆகையால்)
**உலக உணர்வு** - உலகமக்கள் யாவரும் ஒரே குலம் என்னும் கருத்தை
**நிலைபெற** - நிலையாக
**பயில்க** - கைக்கொள்ள வேண்டும்.

### தெளிவுரை

நம் உறுப்புகளாகிய கண், காது, மூக்கு, நாக்கு, கழுத்து, தோள், கை, கால் முதலிய உறுப்புகள் தத்தம் வேலையைச் செய்யாமல் நின்றுவிட்டால் வளமான உடல் வளர்ச்சி ஏற்படாது. அதுபோல, உலகின் அங்கங்களாகிய பலப்பல நாடுகளும் தமக்குள் ஒற்றுமையின்றிப் போர் செய்யுமாயின் அமைதியான உலகம் நிலைபெறுவது அரிதாகும்.

### விளக்கம்

கண்ணால் பார்த்தலும் காதால் கேட்டலும் மூக்கால் முகர்தலும் முதலிய செயல்கள் இன்றேல் உடலின் பயனை நாம் அனுபவிக்க முடியாது. இவ்வுறுப்புகள் எல்லாம் அதனதன் வேலைகளைச் செய்து உடல் வளர்ச்சியாகிய ஒரே பயனை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த அங்கங்களில் ஊனமுடைய மனிதன் உடலின் பயனை அனுபவிப்பது அரிது.

உலகில் பலப்பல நாடுகள் இருக்கின்றன. அந்நாடுகளில் பலநிறப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். உலகில் அமைதி நிலைபெற வேண்டுமானால் எல்லா நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவி புரிந்து சகோதர மனப்பான்மையுடன் வாழவேண்டும். அவ்வாறின்றித் தமக்குள் போர் செய்தால், உலகம் அமைதி இல்லாமல் அழிந்துபோகும்.

"நன்றி மறப்பது நன்றன்று." — வள்ளுவர்.

உலகம் ஒரு குடும்பமாதல் வேண்டுமென்பது தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் தலைசிறந்த கொள்கை ஆகும். அந்த எண்ணத்தை மக்கள் உள்ளத்தில் புகுத்த வேண்டுமென்பதற்காகவே 'உலக உணர்வு நிலைபெறப் பயில்க' என்றார்.

### இலக்கணம்

பயில்க—வியங்கோள் வினைமுற்று. உணர்வு-தொழிற்பெயர். செழிப்புடல்—பண்புத்தொகை. செழிப்பு+உடல்=செழிப்புடல். பொறுப்பு+உலகு=பொறுப்புலகு.

## உறுப்புப் போர்கள் ஒழியவேண்டும்

### உரைநடை.

நாடு மொழிப்போர் கேடே பெருக்கும். நிறத்திமிர்ப் போரும் மறத்தைப் பெருக்கும். (ஆகையால்) உறுப்புப்போர்கள் ஒழிக, ஒழிக. உலக ஒருமை நிலைபெற உழைக்க.

### பதவுரை

நாடுமொழிப்போர் - நாட்டுச் சண்டையும் மொழிப்போரும்
கேடே பெருக்கும் - தீமையையே வளர்க்கும்
நிறத்திமிர்ப் போரும் - ஆணவத்தால் உண்டாகும் சாதிப்போரும்
மறத்தைப் பெருக்கும் - பாவத்தை அதிகரிக்கச் செய்யும் (ஆகையால்)
உறுப்புப்போர்கள்-இத்தகைய நாடு மொழி, நிறம் பற்றிய போர்கள்
ஒழிக, ஒழிக - விரைவில் ஒழிந்து போகவேண்டும்.
உலக ஒருமை - உலக மக்களின் ஒற்றுமையானது
நிலை பெற - நிலையாக நிற்கும்படி
உழைக்க - பாடுபடவேண்டும்.

### தெளிவுரை

உலகத்தில் நாடுகள் தமக்குள் மாறுபட்டுச் செய்யும் மொழிப்போரும் சாதிப்போரும் பாவத்தை மிகுவிக்கும். ஆகையால் நாடு, மொழி, நிறம் முதலிய உறுப்புப்போர்கள் உண்டாகாமல் உலகில் விரைவில் ஒழிதல் வேண்டும். உலக மக்கள் யாவரும் ஒரே குலம் என்னும் எண்ணம் உள்ளத்தில் நிலைபெறுமாறு அனைவரும் பாடுபடவேண்டும்.

### விளக்கம்

சில ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாவில் நடைபெற்ற இரண்டாம் உலகப் பெரும் போரினால் உலகமக்கள்பட்ட துன்பத்துக்கு அளவில்லை. ஹிட்லர், முசோலினி போன்ற சர்வாதிகாரிகளின் நாடு பிடிக்கும் ஆசையே அப்போரின் காரணமாகும். புத்தர், மகாத்மா காந்தி போன்ற பெரியார்களின் தொண்டுகளால் உலகில் அன்பு நெறி பரவி அமைதி ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. அவர்கள் கூறிய கொள்கைகளைக் கடைப்பிடித்து உலக மக்கள் யாவரும் ஒரே குலம் என்று கூறுமாறு இக்கால மக்கள் பாடுபடவேண்டுமென்று திரு. வி. க. விரும்புகிறார். நிறத்திமிர்ப் போர்—சாதிச்சண்டை.

### இலக்கணம்

ஒழிக, உழைக்க—வியங்கோள் வினைமுற்றுக்கள். கேடு—முதல் நிலை திரிந்த தொழிற்பெயர். பெருக்கும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. கேடே—ஏகாரம் தேற்றப்பொருள்.

## அன்பு நெறியே அவனியில் வெல்க

### உரைநடை

பொருளறம் உலகை ஒருமைப்படுத்தும்; அருளறம் என்றும் அஹிம்சை வளர்க்கும்; மனிதக் குறிக்கோள் புனித அஹிம்சை; அஹிம்சா தர்மம் அகிலம் ஆக; அஹிம்சை வெல்க; அஹிம்சை வெல்க.

### பதவுரை

பொருளறம் - பொருளாகிய தர்மம்
உலகை - உலக மக்களை
ஒருமைப் படுத்தும் - ஒருமை உணர்ச்சி கொள்ளுமாறு செய்யும்
அருளறம் - அருளாகிய தர்மம்
என்றும் - எப்போதும்
அஹிம்சை - அன்பு நெறியை
வளர்க்கும் - மக்களிடையே பரவச் செய்யும்
மனிதக் குறிக்கோள்-மனிதனுடைய இலட்சியமானது
புனித - தூய்மையான
அஹிம்சை - அன்பு நெறியே ஆகும்.
அஹிம்சா தர்மம் - அன்பு நெறியாகிய தருமம்
அகிலம் ஆக-உலகமெல்லாம் பரவ வேண்டும்.
அஹிம்சை வெல்க - அன்பு நெறி ஓங்குக.
அஹிம்சை வெல்க - அன்பு நெறி ஓங்குக.

### தெளிவுரை

பொருளாகிய அறம் உலக மக்களை ஒன்றுபடுத்தும்; அருளாகிய அறம் உலகில் அன்பு நெறியை வளர்க்கும். மனித வாழ்க்கையின் இலட்சியம் தூய்மையான அன்பு நெறியேயாகும். அவ்வன்பு நெறியானது, உலகம் முழுவதும் பரவவேண்டும். அன்பு நெறி ஓங்குக! அன்பு நெறி ஓங்குக!

### விளக்கம்

வாழ்க்கைக்கு அருளும் தேவை, பொருளும் தேவை. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்னும் வள்ளுவப் பொன்மொழி இங்குக் குறிப்பிடத்தக்கது. பொருளறம்: உலகமக்கள் அனைவரும் அவரவர்கட்குத் தேவையான செல்வத்தைப் பெற்றிருத்தல். ஒரு பகுதியில் செல்வம் நிறைந்து மற்றொரு பகுதியில் தேவைக்குப் போதிய செல்வமில்லாவிடில் உலகில் அமைதி நிலவாது; குழப்பம் ஏற்படும். ஆகையால், 'பொருளறம் உலகை ஒருமைப்படுத்தும்' என்றார். அஹிம்சை என்பது மகாத்மா காந்தியடிகள் போன்றோர் பின்பற்றிய அன்பு நெறிக் கொள்கையாகும். அன்பு நெறியினால் பிறருக்குத் துன்பம் உண்டாகாத வகையில் எல்லாக் காரியங்களிலும் வெற்றிபெறலாம் என்பது திரு. வி. க. அவர்களின் உறுதியான நம்பிக்கை ஆகும்.

### இலக்கணம்

ஆக, வெல்க—வியங்கோள் வினைமுற்றுக்கள். அருளறம், பொருளறம்—இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள். உலகை—உலகமக்களை —இடவாகுபெயர்.

"புத்தகம் சட்டைப் பையின் பூந்தோட்டம்." — சீனப் பழமொழி.

## கேள்வியும் பதிலும்

1. தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் பிறப்பிடம், பெற்ருேர் காலம் முதலியவற்றைக் குறிப்பிடுக.

2. திரு. வி. க. அவர்கள் செய்த தொண்டுகள் யாவை ?

3. அவருடைய பெருமைகளைக் குறிப்பிடுக.

4. ஆசிரியர் இயற்றிய சிறந்த நூல்கள் யாவை ? நம் பாடப்பகுதி எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது ?

மேற்கண்ட கேள்விகளுக்கு உரிய விடைகளை முன்னுரைப் பகுதியில் படித்துணர்க.

*5. உறுப்புப் போர்களினுல் உண்டாகும் தீமை யாது? அதற்கு ஆசிரியர் காட்டிய உவமையை விளக்குக.

உடம்பின் உறுப்புக்களாகிய கண், காது, மூக்கு முதலியவை தத்தம் வேலையைச் செய்யாமல் விட்டுவிட்டால் உடல்வளர்ச்சி குன்றி அழியும். அது போல உலகில் வாழும் பலதிறப்பட்ட மக்களும் நாடு, மொழி, சாதி முதலிய வேற்றுமைகளால் போர் விளைத்தால் உலகம் அமைதி இல்லாமல் அழிந்து போகும்.

6. மொழிப் போராலும் நிறப்போராலும் ஏற்படும் துன்பங்கள் யாவை ?

மொழிப்போரால் நாட்டு வளம் குன்றும். நிறப்போரால் பாவம் அதிகமாகும்.

7. பொருளறத்தாலும், அருளறத்தாலும் உண்டாகும் நன்மைகள் யாவை ?

பொருளறம் உலக மக்களை ஒன்றுபடுத்தும். அருளறம் உலகில் அன்பு நெறியை வளர்க்கும்.

8. பொருள் கூறுக: (விடை எதிரெதிரே காண்க.)

(1) மறத்தை - பாவத்தை
(2) ஆக - உண்டாகட்டும்
(3) அஹிம்சை - அன்பு நெறி
(4) அகிலம் - உலகம் முழுவதும்

9. இலக்கணக்குறிப்பு வரைக: (விடை எதிரெதிரே காண்க.)

(1) பயில்க - வியங்கோள் வினைமுற்று
(2) கேடு-முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்
(3) செழிப்புடல் - பண்புத்தொகை
(4) பெருக்கும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

7. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இயற்றிய

# கவியமுதம்

## முன்னுரை

பெயர்க் காரணம்: அமுதம், உண்டவருக்குப் பேரின்பம் அளித்துச் சாவா வாழ்க்கையைத் தருவதுபோல, புலவர்கள் இயற்றும் கவிதைகள் உள்ளத்துக்கு விருந்தாகி என்றும் அழியாத இன்பத்தைக் கொடுக்கும். ஆதலால் இதற்கு இப்பெயர் வந்தது. கவியமுதம் — கவியாகிய அமுதம்— உருவகம்.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் பெயர்: தேசிக விநாயகம் பிள்ளை.

ஊர்: தேரூர். திருவாங்கூரை அடுத்த சுசீந்திரத்துக்கு அண்மையில் உள்ளது. இவர் இறுதிக் காலத்தில் நாகர்கோயிலை அடுத்த புத்தேரியில் வசித்து வந்தார்.

பெற்றோர்: சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி அம்மாள்.

காலம்: இவர் கி. பி. 1876-இல் தோன்றி 1954-இல் மறைந்தார்.

தொழில்: இவர் பல கல்லூரிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றி 1931 முதல் ஓய்வு பெற்றுக் கவிதைகள் இயற்றும் பணியில் ஈடுபட்டார்.



பெருமைகள்: (1) சிறுவர்களுக்கும் புரியுமாறு எளிய இனிய நடையில் புதிய கருத்தமைந்த பாடல்களைப் பாடுவதில் வல்லவர்.

(2) கவிமணி என்று பலராலும் பாராட்டப் பெற்றவர்.

(3) ஆங்கிலப் பாடல்களைத் தமிழில் இனிமையாக மொழி பெயர்த்துள்ளார்.

(4) ஆங்கிலம், தமிழ், மலையாளம் முதலிய மொழிகளில் வல்லவர்.

அருங்குணங்கள்: (1) இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்து பாடுபவர். (2) நாட்டுப் பற்று மிக்கவர்.

ஆசிரியரின் புனை பெயர்கள்: ஆண்டான், கவிராயன், ஐயம் பிள்ளை, குயில்.

---

## 1. கனலால் அழியாக் கவியமுதம்

### உரைநடை

ஓலை எரியும்; தாள் எரியும்; உள்ளத்து எழுதி வைத்து, நிதம் காலை மாலை ஓது கவி, கனலில் வெந்து கரிந்திடுமோ?

### பதவுரை

ஓலை எரியும் - கவிதைகள் எழுதப் பட்ட ஓலைகள் நெருப்பில் எரிந்து போகலாம்
தாள் எரியும் - காகிதங்கள் எரிந்து போகலாம் (ஆனால்)
உள்ளத்து - மனத்தில்
எழுதி வைத்து - பதிய வைத்து (மனப்பாடமாகச் செய்து)
நிதம் - தினந்தோறும்
காலை மாலை - காலையிலும், மாலையிலும்
ஓது கவி - பாடுகின்ற கவிதைகள்
கனலில் - நெருப்பில்
வெந்து - எரிந்து
கரிந்திடுமோ? - கருகி விடுமோ? (கருகா)

### தெளிவுரை

கவிதைகள் எழுதப்பட்ட ஓலைகள் நெருப்பில் எரியலாம். காகிதங்கள் எரியலாம். ஆனால் உள்ளத்தில் தெளிவாகப் பதிய வைத்து நாள்தோறும் காலை மாலை வேளைகளில் பாடிவரும் பாடல்கள் நெருப்பில் வெந்து கருக மாட்டா.

### விளக்கம்

ஒருவன் எவ்வளவுதான் பாடல்களை ஏட்டில் எழுதி வைத்தாலும் பயனில்லை; அவற்றைப் பொருள் உணர்ந்து மனப்பாடம் செய்து, நாள்தோறும் காலை மாலை வேளைகளில் பாடிவரின் அவை பசுமரத்தாணி போல் நம் உள்ளத்தில் பதிந்துவிடும். இவ்வாறு உள்ளத்தில் பதிந்த கவிதைகள் கல்லில் செதுக்கிய எழுத்துக்களைப் போல என்றும் அழிய மாட்டா. ('கல்வி வெள்ளத்தால் போகாது 'வெந்தணலால் வேகாது' என்னும் விவேக சிந்தாமணிச் செய்யுள் அடி இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்.)

### இலக்கணம்

எரியும் — செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. வைத்து — வினையெச்சம். காலை மாலை - காலையும் மாலையும் — உம்மைத் தொகை. ஓது கவி — வினைத்தொகை. கரிந்திடுமோ? — ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

## 2. தீயில் அழியாத் தெள்ளமுதம்

### உரைநடை

உள்ளத்து உவகை பொங்கி எழ, உரைகள் சொல்லப் பொருள் ஏறி தேன்னத் தெளிந்த கவியமுதம், தீயில் வெந்து பொடியாமோ?

### பதவுரை

உள்ளத்து - மனத்தில்
உவகை பொங்கியெழ - மகிழ்ச்சி பெருக
உரைகள் சொல்ல - பொருத்தமான, உரைகளைக் கூறுவதால்
பொருள் ஏறி - பொருள் சிறந்து

தெள்ளத் தெளிந்த - மிகவும் விளக்கமான
கவியமுதம் - கவியாகிய அமுதம்
தீயில் வெந்து - நெருப்பில் எரிந்து
பொடியாமோ ? - சாம்பலாகுமோ ? (ஆகாது.)

## தெளிவுரை

மனத்தில் மகிழ்ச்சி பெருகப் பொருத்தமான உரைகளைச் சொல்லுவதால் பொருளில் சிறப்படைந்து மிக்க விளக்கம் அடைந்த கவியாகிய அமுதம் நெருப்பில் எரிந்து சாம்பலாகாது.

## விளக்கம்

முதல் பாடலில் கவிதைகளை மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியத்தைக் கூறிய கவிஞர் அவற்றைப் பொருளுணர்ந்து பாடுவதால் உண்டாகும் பேரின்பத்தை இப்பாடலால் விளக்குகின்றார். கவிதைகளின் பொருள் நயத்தை உணர உணர உள்ளத்தில் உவகை ஊற்றுப்போல் சுரக்கும். இங்ஙனம் பொருள் சிறந்த கவிதைகள் எழிலோவியமாக உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். எல்லாப் பொருள்களையும் எரித்துச் சாம்பலாக்கும் வல்லமையுடைய நெருப்பினால் புலவர்களின் உள்ளத்திலே தேங்கி இருக்கும் கவியமுதத்தை என்ன செய்ய முடியும்? கவியமுதம் என்றென்றும் அழியாது. உள்ளத்தே நிலைத்து நிற்கும் தன்மை உடையதாகும்.

## இலக்கணம்

உவகை—தொழிற் பெயர். கவி + அமுதம் = கவியமுதம். பொருள் + ஏறி = பொருளேறி. பொடியாமோ — இங்கும் ஓகாரம் எதிர் மறைப் பொருளில் வந்தது. தெளிந்த — பெயரெச்சம்.

## கேள்வியும் பதிலும்

**1.** கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பிறப்பிடம், தொழில், காலம் முதலியவைகளைக் குறிப்பிடுக.

**2.** தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் எவை?

***3.** கவிமணியின் பெருமைகள் யாவை ?

இம்மூன்று கேள்விகளுக்கும் உரிய விடைகளை முன்னுரைப் பகுதியில் படித்தறிக.

***4.** கவியமுதத்தின் சிறப்புக்கள் யாவை ?

கவிதைகள் எழுதப்பட்ட ஓலை எரிந்து போகும்; காகிதமும் எரிந்து போகும்; ஆனால் ஒருவர் உள்ளத்திலே பதிய வைத்து நாடோறும் காலை மாலை வேளைகளில் ஓதும் கவிதைகள் நெருப்பில் எரிந்து கருகமாட்டா.

மனத்தில் மகிழ்ச்சி மிகுதியாக, சிறந்த உரைகள் இயற்றுவதால் பொருள் சிறப்புற்று மிகவும் விளக்கமாக அமைந்த கவியமுதம் நெருப்பில் எரிந்து சாம்பலாகாது.

**5.** இலக்கணக் குறிப்பு எழுதுக: (விடை எதிரெதிரே காண்க)

(1) எரியும் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று
(3) வெந்து - வினையெச்சம்
(3) காலை மாலை - உம்மைத்தொகை
(4) கவியமுதம் - உருவகம்.

" துறவும் தொண்டுமே தேசிய லட்சியங்கள்." — விவேகானந்தர்.

8. கவிஞர் வாணிதாசனர் இயற்றிய

# எழிலோவியம்

## முன்னுரை

**பெயர்க் காரணம்:** இயற்கை அழகைப் படம் பிடித்தது போல் சொல்லழகும் பொருளழகும் பொருந்த இனிய எளிய நடையில் அமைந்த நூலாகையால் இதற்கு எழிலோவியம் என்று பெயர்.

## ஆசிரியர் வரலாறு

**ஆசிரியர் இயற்பெயர்:** எதிராஜ், அரங்கசாமி என்றும் கூறுவர்.

**பெற்றோர்:** திருக்காடு நாயுடு, துளசி அம்மையார்.

**ஊர்:** புதுச்சேரியை அடுத்த சேலியமேடு.

**காலம்:** 1915-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22-ஆம் நாள் பிறந்து தளராமல் தமிழ்ப் பணி புரிந்து வருகிறார்.



**வரலாறு:** பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களால் தமிழ் நாட்டுத் தாகூர் எனப் புகழப் பெறும் நம் கவிஞர் இளமைப் பருவத்திலேயே இனிய கவிதைகள் இயற்றும் வன்மை பெற்றவர். இவர் தொடக்க முதல் புதுவையிலேயே கல்வி கற்றுத் தேறினர். இவர் பிரஞ்சிந்தியத் தமிழ் வித்துவான் (B.I.), ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றில் தேர்ச்சியடைந்துள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனரிடம் நெடுங்காலம் கல்வி பயின்றார். நம் கவிஞர் சென்னைப் பல்கலைக் கழக பி. ஏ. தேர்வுக்குச் சமமான பிரெஞ்சிந்திய பி. ஏ. வரையிலும் பயின்றுள்ளார். 1935-ஆம் ஆண்டில் அன்பும் அருங்குணங்களும் நிறைந்த ஆதிலட்சுமி அம்மையாரை மணந்தார். 1948-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டமும் பெற்றார். புதுவைக் கல்வே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக மூன்றாண்டுகள் பணியாற்றினர். தற்போது இவர் புதுவை அரசாங்கப் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். கவிஞர் அவர்கள் இசையிலும் புலமையுடையவர். இவர் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்தவர். படித்தவரும் பாமரரும் எளிதில் பொருள் உணருமாறு இசைப் பாடல்களும் சிறு காப்பியங்களும் இயற்றியுள்ளார்.

---

கவிஞர் வாணிதாசனரின் வரலாற்றை உதவிய அறிஞர் அறிவழகனர்க்கு எங்கள் உளமார்ந்த நன்றி. — தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

**இவர் இயற்றிய நூல்கள் :** தமிழச்சி, கொடி முல்லை, தொடு வானம், எழிலோவியம் என்பன.

**கவிஞரின் அருங்குணங்கள் :** (1) கவிஞர் இடையறாத மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும், கலைப்பற்றும் உடையவர். (2) சுதந்திரமிக்க பயிர்த் தொழிலை இவர் விரும்பிப் புரிந்து வருகிறார். (3) விருந்து போற்றுவதில் இவர் தலை சிறந்தவர்.

**கவிஞரின் பெருமைகள் :** (1) தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களாலும், சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்றவர். பத்திரிகைகளும் இவர் பாவன்மையை மதித்துப் புகழ்ந்துள்ளன. (2) இவரது பாடல்கள் அடிக்கடி வானொலி நிலையத்தாரால் ஒலிபரப்பப்படுகின்றன.

## *பொருள் விளக்கம்

### 1. கொன்றை கொடுக்கும் குளிர்ந்த காட்சி

#### உரைநடை

**தம்பி :** கொன்றைப் பூங்கொத்து பொன்மணிக்கோவை ஆம்; அக் கொத்தின் கீழ் முன் நீண்டு தொங்கும் காய்கள் குரங்கின் வால்; குமட்டி முன்னர் பொன் செய்யும் கொல்லன் ஊதாங்குழல் எனில் பொருந்தும்; காட்டுப் பன்மலர் மொய்க்கும் வண்டோ கருநாவல் பழம் (ஏ - அசை.)

#### பதவுரை

கொன்றை - கொன்றை மரத்தினது
பூங்கொத்து - மலர்க் கொத்துக்கள்
பொன் மணி - பொன்னால் ஆகிய மணிகள் சேர்த்துச் செய்யப்பட்ட
கோவை - மாலைபோல் விளங்கும்
அக்கொத்தின் கீழ் - அந்தப் பூங் கொத்துக்களின் கீழ்
முன் - முன்னே
நீண்டு தொங்கும்-நீளமாகத்தொங்குகின்ற
காய்கள் - கொன்றைக் காய்கள்
குரங்கின் வால் - குரங்குகளின் வால்களைப் போல் விளங்கும் (அக் காய்களே)
குமட்டி முன்னர் - உலையின் முன் அமர்ந்து ஊதுகின்ற
பொன் செய்யும் - பொன் ஆபரணங்களைச் செய்கின்ற
கொல்லன் - தட்டானுடைய
ஊதாங்குழல் எனில் - ஊதாங்குழலைப் போல் இருக்கும் என்று கூறினால்
பொருந்தும் - பொருத்தமாகும்
காட்டு - காட்டு மரங்களில் பூத்திருக்கும்
பன் மலர் - பல மலர்களில்
மொய்க்கும் - தேனுக்காக மொய்க்கின்ற
வண்டோ - வண்டுகளோ
கரு நாவல்பழம் - கருமையான நாவல் பழங்களைப்போல இருக்கும்

#### தெளிவுரை

கொன்றை மரத்தினது பூங்கொத்துக்கள் பொன் மணிகளால் செய்யப்பட்ட அழகிய மாலையைப் போல இருக்கும். அக்கொத்துக்களின் கீழே தொங்குகின்ற கொன்றைக் காய்கள் குரங்குகளின் வால்களைப் போல இருக்

---

* இவ்வுரைப் பகுதியைத் தாமே படித்துப் பார்த்துத் தம் கருத்துக்கேற்பத் திருத்தித் தந்த கவிஞர் வாணிதாசனார்க்கு எங்கள் மனமார்ந்த நன்றி.
— தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

கும். அக்காய்களே தட்டானின் ஊதாங்குழலைப் போலவும் இருக்கும். காட்டிலுள்ள பல மலர்களில் மொய்க்கும் வண்டுகள் கருமையான நாவல் பழங்களைப் போல இருக்கும்.

### விளக்கம்

கொன்றை மரத்தினது பூக்களையும் காய்களையும் மலர்களில் மொய்க்கும் வண்டுகளையும் கண்டு களித்த வாணிதாசனர் அவைகளுக்குக் கூறும் உவமைகள் படிப்பவருக்கு இனிய விருந்தாகும். கொன்றைப் பூக்கள் பொன் மயமான மஞ்சள் நிறமுடையவை. அதனல் கவிஞர் கொன்றைப் பூங் கொத்துக்களைப் பொன்மணிக் கோவை என்றார்.

கொன்றைக் காய்கள் நீளமாகத் தொங்கும். அவற்றைக் குரங்கின் வால்களுக்கும் ஊதாங்குழலுக்கும் உவமை கூறியது மிகவும் பொருத்தமாகும்.

மலர்களில் மொய்க்கும் வண்டுகள் கரிய நிறமுடையவை. ஆகையால் அவற்றைக் கருநாவல் பழம் என்றார்.

### இலக்கணம்

பூ+கொத்து=பூங்கொத்து. பொன் : இங்கு ஆபரணங்களைக் குறிக்கும் —ஆகு பெயர். பல+மலர்=பன்மலர். கருநாவல் — பண்புத் தொகை. நாவல்பழம் — இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

## 2. இன்பம் அளிக்கும் எழிலோவியம்

### உரைநடை

களி மயில் அகவும்; புள்ளிக் கருங்குயில்பாட்டு இசைக்கும்; துணை பிரிந்த புள்ளினம் விளித்திடும்; விளாமரத்தில் ஒளித்துண்ணும் அணிலோ கிள்ளை ஒளி மூக்கை மிளகாய் என்று களித்து உண்ண பாயும்; காட்டில் எழிலோவியத்தைக் காண்.

### பதவுரை

களிமயில் - களிக்கின்ற மயிலினங்கள்
அகவும் - இன்புத்தால் கூவும்
புள்ளி - புள்ளிகளையுடைய
கரும்குயில் - கருமையானகுயில்கள்
பாட்டு இசைக்கும் - பாட்டுப் பாடும்
துணை பிரிந்த - தம் துணைப் பறவைகளைப் பிரிந்திருக்கும்
புள்ளினம் - பறவைக் கூட்டங்கள்
விளித்திடும் - தம் துணைப் பறவைகளைக் கூவி அழைக்கும்
விளாமரத்தில் - விளாமரத்தின் மேல்
ஒளித்து உண்ணும் - மறைந்து உண்ணும்
அணிலோ - அணில் பிள்ளையானது
கிள்ளை - கிளியினுடைய
ஒளிமூக்கை - அழகிய அலகை
மிளகாய் என்று - சிவந்த மிளகாய்ப் பழம் என்று எண்ணி
களித்து - மகிழ்ந்து
உண்ண - உண்பதற்காக
பாயும் - அந்த அலகின் மீது தாவும்
காட்டில் - காட்டில் இவ்வாறு விளங்குகின்ற
எழில் ஓவியத்தை - இயற்கை அழகின் படத்தை
காண் - (தம்பி!) நீ பார்ப்பாயாக.

### தெளிவுரை

காட்டில் இன்பமாக உள்ள மயில்கள் கூவும். கரிய குயில்கள் பாட்டுப் பாடும். துணைப் பறவைகளைப் பிரிந்த பறவைகள் அவற்றைக் கூவி அழைக்

கும். விளாமரத்தில் ஒளித்துண்ணும் அணில் கிளியினது அலகை மிளகாய்ப் பழம் என்றெண்ணி ஆசையோடு அதைக் கடிப்பதற்குத் தாவும். இவ்வாறு காட்டில் விளங்கும் இயற்கையழகின் படத்தைக் காணலாம்.



## விளக்கம்

காட்டில் மரங்களும் செடி கொடிகளும் அடர்ந்து படர்ந்து வளர்ந்திருப்பதால், அவ்விடம் வெப்பமில்லாமல் குளிர்ச்சியாக இருக்கும். அதனால் இன்பத்துடன் மயில்கள் அகவுகின்றன. குயில்கள் இனிமையாகப் பாடுகின்றன. அணில் எப்பொழுதும் பயந்த சுபாவமுள்ள பிராணி. ஆகையால் அது விரோதிகளுக்குப் பயந்து விளாமரத்தில் ஒளித்துண்பது இயல்பு. கிளியின் மூக்கு மிளகாய்ப்பழம் போன்ற சிவப்பு நிறமும், கூரிய நுனியும் உடையது. அதனால் அணிற்பிள்ளை அதை மிளகாய்ப்பழம் என்று எண்ணி, அதைத் தின்பதற்காகத் தாவுகிறது. இந்த உவமை எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள். காட்டின் இயற்கை அழகைக் கவிஞர் எழிலோவியம் என்று கூறுவது மிகவும் பொருத்தமானது அல்லவா? மயிலின் குரலை அகவுதல் என்று குறித்தல் மரபாகும்.

## இலக்கணம்

தளிமயில் — வினைத்தொகை. அகவும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. கருங்குயில் — பண்புத்தொகை. ஒளித்து - வினையெச்சம். காண் — முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று.

"பொருளறம் உலகை ஒருமைப்படுத்தும்." — திரு. வி. க.

## கேள்வியும் பதிலும்

1. எழிலோவியம் — பெயர்க்காரணமும் ஆசிரியர் பெயரும் எழுதுக.

2. கவிஞர் வாணிதாசனாரின் பெற்றோர் பெயர், பிறப்பிடம், இயற்பெயர் முதலியவற்றைக் குறிப்பிடுக.

3. வாணிதாசனாரின் பெருமைகள் யாவை?

*இம் மூன்று வினாக்களுக்கும் உரிய விடையை முன்னுரைப்பகுதியில் படித்தறிக.*

*4. கொன்றைமரத்தின் பூங்கொத்துக்களைப் பற்றியும், காய்களைப் பற்றியும் வாணிதாசனார் எவ்வாறு வருணிக்கிறார்?

கொன்றை மரத்தின் பூங்கொத்துக்கள் பொன்மணிகளால் செய்யப்பட்ட அழகிய மாலையைப் போல இருக்கின்றன. அக்கொத்துக்களின் மேலே தொங்குகின்ற கொன்றைக் காய்கள் குரங்குகளின் வால்களைப் போல இருக்கும். அக்காய்களே தட்டானின் ஊதுகுழலைப் போலவும் இருக்கும். காட்டில் உள்ள பல மலர்களில் மொய்க்கும் வண்டுகள் கருமையான நாவல் பழங்களைப் போல் இருக்கும்.

5. காட்டில் காணப்படும் எழிலோவியத்தை விளக்குக.

காட்டில் உள்ள களிக்கும் மயில்கள் இன்பமாகக் கூவும்; கரிய குயில்கள் பாட்டுப் பாடும்; தம் துணைப்பறவைகளைப் பிரிந்திருக்கும் பறவைகள் அவற்றைக் கூவி அழைக்கும். விளாமரத்தில் ஒளித்து இரையைத் தின்னும். அணில் கிளியின் அலகை மிளகாய்ப்பழம் என்று எண்ணி, ஆசையோடு அதைக் கடிப்பதற்குத் தாவும். இவ்வாறு காட்டில் விளங்கும் இயற்கை அழகின் படத்தைக் காணலாம்.

6. பிரித்து எழுதுக: (விடை எதிரெதிரே காண்க)

(1) பூங்கொத்து - பூ + கொத்து.
(2) கருநாவல் - கருமை + நாவல்
(3) ஒளித்துண்ணும் - ஒளித்து + உண்ணும்
(4) பாட்டிசைக்கும் - பாட்டு + இசைக்கும்
(5) முன்னீண்டு - முன் + நீண்டு
(6) புள்ளினம் - புள் + இனம்

7. இலக்கணக் குறிப்பு வரைக: (விடை எதிரெதிரே காண்க)

(1) கருங்குயில் - பண்புத்தொகை
(2) காண்-முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று
(3) களி மயில் - வினைத்தொகை
(4) பிரிந்த - பெயரெச்சம்



# 2. உரைப் பகுதி

## 1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம். ஏ., பி. எச். டி., தமிழ்த் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

அரும்பதவுரை

### பக்கம் 11

முழங்கினர் - வற்புறுத்திக் கூறினர்
உற்ற - பொருந்திய
நிறைவாழ்வு - வளமிக்க வாழ்வு
தறுவாயில் - சமயத்தில்
பணித்தார் - கட்டளையிட்டார்.
முகத்தால் - முறையால்
நொய்ம்மை - மென்மை
திரண்டு - ஒன்று கூடி
இற்று - ஒடிந்து
மிக்கு - மிகுந்து
பெருந்தகையார் - பெருங்குண முடையவர்

### பக்கம் 12

திருக்குறள் உரை
பீலிபெய் . . . . . பெயின் - மயில் தோகை ஏற்றிய வண்டியும் அம் மயில்தோகையை அவ்வண்டி தாங் கும் அளவுக்குமேல் ஏற்றினால் அதன் அச்சு முறிந்துபோகும்.
பீலி - மயில் தோகை
சாகாடு - வண்டி
ஏவல் செய்வோர் - பணியாளர்
பிறிதொன்று - வேறொன்று
இன்னல்கள் - துன்பங்கள்
ஒருதலை - நிச்சயம், உறுதி.
மூப்பு - முதுமை, கிழத்தனம்.
பிசிராந்தையார் - இவர் பாண்டி நாட்டில் உள்ள பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தவர். உறை யூறைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டுவந்த கோப்பெருஞ் சோழனின் உயிர்த் தோழர். இவர் கோப்பெருஞ் சோழனை நேரில் காணாதவரா யினும் அவன் அருங் குணங்களை அறிந்து அவன்பால் நீங்கா அன்பு பூண்டு ஒழுகினர். சோழன் தன் மக்கள் மேல் கொண்ட பகை காரணமாக இவரும் உறையூரை அடைந்து அவனுடன் வடக்கி ருந்து உயிர் நீத்தார்.
யான் கண்ட அனையர் - யான் கருதிய அதனையே கருதுவர்
பூசல் - சிறு சண்டை
கலாம் - பகை, குழப்பம்
தாயத்தார் - பங்காளிகள்
ஆற்றல் - திறமை
முற்றுகை - வளைத்துக் கொள்ளுதல்

### பக்கம் 13

அழகிது - நன்றாக இருக்கிறது
பொதிந்த - அடங்கிய
புறநானூறு - புறப்பொருள் பற்றி நானூறு பாடல்களால் ஆகிய ஒரு தொகை நூல்
பொர - போர் செய்ய
சோழர் ஆத்திமாலை, சூடுவதும் சேரர் பனம்பூமாலை அணிவதும், பாண்டியர் வேப்பமாலை தரிப்ப தும் அரச சின்னங்களாகும்
வடுவினை - இழிவை
வசை - இகழ்ச்சி
மாறுபாட்டினை - பகைமையை
தவிர்க்க - தடுக்க
உவகை - மகிழ்ச்சி
எய்துவர் - அடைவர்
இளிவரல் - இழிவு
ஏற்றதன்று - தக்கதன்று
இகல் - பகைமை

இற்றை நாள் - இந்நாள்
அறவுரை - நீதியுரை
பகர்ந்துள்ளார் - கூறியுள்ளார்
துஞ்சிய - இறந்த

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்னும் சோழமன்னனும் நெருங்கிய நட்பினர்கள் ஆவார்கள். அவர்கள் இருவரையும் பற்றிக் காரிக் கண்ணனார் பாடினர். காரி - கரிக்குருவி. கரிக்குருவி போன்ற கண்ணை உடையவராகையால் இப்புலவர்க்கு இப்பெயர் வந்தது போலும். இவர் ஒரு வணிகர்; திருமாலடியார்.

### பக்கம் 14

எல்லை இல்லை - அளவில்லை
பால் நிறக் கடவுள் - பலராமன்
நீல நிறக் கடவுள் - கண்ணன்
இயைந்திருப்பது - சேர்ந்திருப்பது
பேருலகு - பெரிய உலகம்
கையகப்படுவது - ஆட்சிக்குட்படுவது
துலங்கும் - விளங்கும்
பிரியன்மின் - பிரியாதீர்கள்
எயிற்றியனர் - இவர் புல்லாற்றூர் என்னும் ஊரைச் சார்ந்தவர்; இம்மை மறுமைப்பயன் நன்கு அறிந்தவர்
மாறு - பகைமை
விளித்தவுடன் - அழைத்தவுடன்
விறல் கெழு - வீரம் மிகுந்த
பொருளுரை - அறவுரை
சாரம் - கருத்து, சுருக்கம்
அமர் - போர்
மேம்பட்ட - மேலான, சிறந்த
அல்லை - நீ இல்லை.

### பக்கம் 15

களிறு - ஆண் யானை
பிடி - பெண் யானை
உயர்ந்த உலகு - மோட்சம்
உரித்தாகும் - உரிமையுடையதாகும்
தோற்றிற்று - தோன்றியது
நாட்டமுடையோய் - விருப்பம் உடையவனே
குன்றி - குறைந்து
அறிவை - அறிவாய்
உரைக்குக் காலே - சொல்லும் போதே
வேம்பு - வேப்பங்காய்
பெய்து - சேர்த்து
வியக்கற்பாற்று - ஆச்சரியப்படத் தக்கது

### பக்கம் 16

கூற்றை - சொல்லை
எளிது - சுலபம்
வெகுண்டு - கோபித்து
மறன் - பகைமை

### செய்யுள் உரை

அமர்வெஞ்செல்வ ... நின்மறனே!

போரில் விருப்பமுள்ள செல்வ, நீ உன் புதல்வர்க்குத் தோற்றால் நீ உலகில் பழியையே வைத்துச் செல்ல நேரும். ஆதலால் உன் வீரம் உன்னை விட்டு இப்போது நீங்கி இருப்பதே என் விருப்பம்.

நில் - எனக்கு விருப்பம்
அத்தை - அசை
மருங்கு - பக்கத்தில்

### பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

உதாரணமாகத்தான்
நிரம்ப நிரம்ப
மேலும் மேலும்
ஒரு சேர
இடையிடையே
வியக்கற்பாற்று
இருமருங்கும்.

## பதப் பிரிவு

மயில் + தோகை = மயிற்றோகை
பயன் + இன்றி = பயனின்றி
பெருமை + தகை = பெருந்தகை
அச்சு + இறும் = அச்சிறும்
அறம் + உரை = அறவுரை
கை + அகம் = கையகம்
பசுமை + தமிழ் = பைந்தமிழ்
பல + பல = பற்பல
தண்மை + தமிழ் = தண்டமிழ்.

## கேள்வியும் பதிலும்

**1. ஒற்றுமையின் பயனைக் குறித்து, பாரதியார், தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசனர் ஆகியோரின் கருத்தை விளக்குக.**

நாம் ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் நல்வாழ்வு வாழலாம். இல்லையேல் யாவர்க்கும் தாழ்வே உண்டாகும் என்னும் பொருளில் பாரதியார், 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று கூறினர்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள், "ஒற்றுமையாக உழைத்திடுவோம்; நாட்டில் உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்" என்றார். நாம் யாவரும் ஒற்றுமையாகப் பாடுபட்டால் நாட்டின் சிறந்த துணைவராக வாழலாம் என்பது" இதன் கருத்து.

பாரதிதாசனர், "நேசத்தாலே நாமெல்லோரும் ஒன்றாய் நின்றால் நிறை வாழ்வடைவோம் வாரீர்" என்றார். இதனல் கவிஞர், தமிழ் மக்களை "அன்பால் ஒன்றுபட்டு வாழ்ந்தால் எல்லா வளமும் உடையவராக வாழலாம், வாருங்கள்" என்று அழைக்கிறார்.

**2. முதியவர் ஒருவர் தம் மைந்தர்க்கு எவ்வாறு ஒற்றுமையை உணர்த்தினர்?**

இறக்கும் சமயத்தில் இருந்த அந்த முதியவர், தம் பிள்ளைகளை அழைத்து விறகை ஒவ்வொன்றாகக் கொடுத்தும் பின்பு கட்டாகக் கொடுத்தும் ஒடிக்குமாறு கட்டளையிட்டார். ஒவ்வொன்றாக இருக்கும் விறகை ஒடித்த பிள்ளைகள், அவை கட்டாக இருந்தால் ஒடிக்க முடியாத காரணத்தை உணருமாறு செய்தார். அக்கட்டின் வலிமையே அதனை ஒடிக்க முடியாததற்குக் காரணம் என்பதை அறிவித்து, பிள்ளைகள் ஒற்றுமையின் வலிமையை உணரச் செய்தார்.

**3. திருவள்ளுவர் ஒற்றுமையை விளக்கக்கூறும் உதாரணத்தை விளக்குக.**

வலிமை மிகுந்த ஒரு வண்டியாக இருப்பினும் அது தாங்கும் அளவுக்கு மேல் மென்மையான மயில்தோகை நிரப்பினுல்கூட வண்டியின் பருத்த அச்சும் முறிந்து போகும். அதுபோல் பகைவர்கள் வலிமையில்லாதவர்களேயானுலும் பலர் சேர்ந்து கூட்டமாக வருவாராயின் நாம் வலிமை உடையவராயினும் தோல்வியடைய நேரும்.

**4. நல்ல வேலையாட்கள் இருப்பதன் அவசியம் என்ன?**

வேலையாட்கள் நம் கருத்துக்கு ஒத்தவராக இருக்க வேண்டும். நாமொன்று நினைக்க நம் வேலைக்காரர் வேறொன்று நினைத்தால் நமக்கு இழிவு உண்டாகும். நன்மை உண்டாவதற்குப் பதிலாகத் துன்பங்கள் உண்டாகும். துன்பங்களினுல் கவலை ஏற்படும். கவலை காரணமாகக் கருமயிர்

நரைத்து நாம் முதியவரைப்போல் தோன்றுவோம். ஆகையால் நமக்குப் பொருத்தமான நல்ல வேலேயாட்கள் இருக்க வேண்டும்.

5. "யான் கண்டனையர் என் இளையரும்"—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.

முற்காலத்தில் பிசிர் என்னும் ஊரில் பிசிராந்தையார் என்னும் ஒரு புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும் நரை தோன்றவில்லை. ஒரு நாள் புலவர் சிலர் அவரைப் பார்த்து அதற்குக் காரணம் கேட்டனர். அதற்குப் பிசிராந்தையார் சில காரணங்கள் கூறினார். அவற்றில் ஒன்று, 'யான் கண்டனையர் என் இளையரும்' என்பது. நான் நினைக்கிறபடியே நினைத்து, என்னுடைய கட்டளையைச் செய்யும் பணியாளர்களும் என்னோடு பொருந்தித் தக்க முறையில் வேலை செய்கின்றனர். எங்கள் இல்லத்தில் சண்டைத் தொல்லைகள் இல்லை. அதனால் கவலையற்று வாழ்கின்றேன்'. கவலையின்மையால் தம் தலைமயிர் நரைக்கவில்லை என்னும் கருத்துத் தோன்றப் புலவர் இவ்வாறு கூறினார்.

6. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்போர் யாவர்? அவர்களுக்குள் எவ்வாறு போர் நேர்ந்தது?

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய இரு சோழ மன்னர்களும் தாயத்தார்கள். அவர்களுள் நலங்கிள்ளி மிகவும் வீரம் உடையவன். அவன் சேர பாண்டிய மன்னர்களை வென்று வஞ்சி, மதுரை ஆகிய ஊர்களைப் புலவர்க்கு வழங்கத்தக்க ஆற்றல் உடையவன். அவன் நெடுங்கிள்ளியின்பால் பகைமை கொண்டு அவன் தங்கியிருந்த உறையூரை முற்றுகையிட்டான்.

*7. நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நேர்ந்த போரைக் கோவூர் கிழார் எவ்வாறு விலக்கினர்?

(அல்லது)

கோவூர் கிழார் நலங்கிள்ளிக்குக் கூறிய அறவுரைகள் யாவை?

புலவர் நலங்கிள்ளியைப் பார்த்து, "உன்னோடு போர் செய்ய நினைக்கும் அரசன் சேரனும் அல்லன்; பாண்டியனும் அல்லன். அவனும் உன்னைப்போலவே ஆத்திமாலை சூடிய சோழன். இருவரில் யார் தோற்றாலும் தோற்பது நும் குடியேயன்றோ? இருவரும் வெற்றி பெறுவதோ இயலாத செயலாகும்.' சோழர் குடிக்கு வரும் இழிவை நீக்க வேண்டுமானால் உடனே போரை நிறுத்த வேண்டும். நீங்கள் இருவரும் போர் செய்யின் உங்கள் பகைவர் உடம்பு பூரித்து இன்பம் அடைவார்கள். நீங்கள் போர் குறித்து நிற்பது உங்கள் குடிக்குத் தக்க செயல் அன்று" என்றார்.

புலவர் பொன்மொழிகளைக் கேட்ட நலங்கிள்ளி போர்க்கோலம் நீங்கினன். நெடுங்கிள்ளியும் பகைமை நீங்கினன்.

*8. காரிக்கண்ணனார் யார் யாரை ஏன், எவ்வாறு பாராட்டினர்?

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனும், குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் என்னும் சோழ மன்னனும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் அவர்கள் இருவரும் ஒரு சேர இருப்பதைக் கண்ட காரிக்கண்ணனார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பகைமை பாராட்டாமல் அவர்கள் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டு, "பால்நிறக் கடவுளாகிய பலராமனும் நீலநிறக் கடவுளாகிய

கண்ணனும் ஒன்றாக இருப்பதுபோல நீங்கள் இருவரும் சேர்ந்திருப்பது இனிது. இதைவிடச் சிறந்த காட்சி வேறு ஒன்றும் இல்லை. நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ வேண்டும். நீங்கள் ஒற்றுமையாக இருப்பின், இப்பெரிய உலகமே உங்கள் ஆட்சிக்கு உட்பட்டதாகும். நீங்கள் இங்ஙனம் அன்புற்று இணைந்திருப்பதைக் கண்டு, சிலர் பொறாமை கொண்டு, நல்லவை கூறுபவர்களைப்போல உங்களுக்குச் சில சொற்கள் கூறிப் பிரிக்கப் பார்ப்பார்கள். நீங்கள் இன்றுபோல் என்றும் வாழவேண்டும் என்பதே என் விருப்பமாகும். அங்ஙனம் இருப்பின் வெற்றி என்றும் உங்கள் பக்கமே சேரும். உலகில் உள்ள பிறநாடுகளிலும் உங்கள் கொடிகளே விளங்கும். ஆகையால் என்றும் பிரியாதீர்கள்!" என்று கூறினர்.

**9. கோப்பெருஞ்சோழன் தன் மைந்தரோடு போர் செய்யக் கருதி எழுந்த காரணம் என்ன? அதனைத் தடுத்த புலவர் யார்?**

தன்மீது பகைமை கொண்ட இரு மைந்தர் மீதும் போர் தொடுக்கக் கருதினன் கோப்பெருஞ்சோழன். அதனையறிந்த புல்லாற்றூர் எயிற்றியனர் கோப்பெருஞ்சோழனை அடைந்து அவனுக்கு அறவுரைகள் கூறிப் போரை நிறுத்தினர்.

**10. கோப்பெருஞ்சோழன் தன் மைந்தருடன் போர் செய்யப் புறப்பட்டபோது புல்லாற்றூர் எயிற்றியனர் கூறிய நல்லுரைகள் யாவை?**

புலவர் அரசனைப் பார்த்து, "பற்பல போர்களில் வென்று சிறப்படைந்த அரசே! உன்னோடு போர் செய்யவந்து நிற்போர் நின் பகைவர் அல்லர். நீயும் அவர்களுக்குப் பகைவன் அல்லை; பகைவரைக் கொல்லும் ஆண் யானையை உடைய அரசே, நீ இவ்வுலகில் புகழை எய்தி, முதியடைந்த பின்னர் உன் அரசு உன் மக்களுக்குத்தானே உரித்தாகும். இதனை நீ அறிவாய். உன் மைந்தர் ஆலோசனை இன்றி, அறிவு குன்றி நின்னை எதிர்க்கின்றனர். அவர்கள் தோற்பின் உன் செல்வத்தை வேறு எவருக்குக் கொடுப்பாய்? போரினை விரும்பும் செல்வ, ஒரு கால் நீ அவர்க்குத் தோற்பின், உன் பகைவர் யாவரும் உன்னை இகழ்வர்; இகழ்ந்து மகிழ்வர். நீ இவ்வுலகத்தில் பழியையே வைத்துச் செல்ல நேரும். நான் உன் ஆற்றலில் சந்தேகப்படவில்லை. உன் ஆற்றலை இவர்களிடம் காட்ட வேண்டா என்பதே என் வேண்டுகோள். உன் வீரம் இப்போது உன்னை விட்டு நீங்கி இருக்கட்டும். உன் ஊக்கம் வேறு செயல்களில் செல்லட்டும். நீ நன்மையான செயல்கள் பலவற்றைச் செய்வாயாக" என்று கூறினர்.

**11. புல்லாற்றூர் எயிற்றியனர் நயம்படப் பேசுவதில் வல்லவர் என்பதைப் புலப்படுத்துக.**

புலவர் அரசர்க்கு அறவுரை கூறும் போதெல்லாம் வேம்பும் கரும்பும் போல இடையிடையே கடுஞ்சொல்லும் புகழ்மொழியும் கூறினர். அவர் அரசனை அழைக்கும்போதே அவன் பெருமை, வீரம், வெற்றி முதலியவற்றைக் கூறி அழைத்தார். இடையிடையே அவன் ஆற்றலைக் குறிக்கும் சொற்களை மொழிந்தார். "உனக்குத் தெரியாததன்று" என்று நயமாக எடுத்துக் கூறினர். புகழில் விருப்பமுடைய அவ்வரசன் இழிவைத் தரும் செயலைச் செய்யக்கூடாது என்பதை வற்புறுத்தினர். அவன் மக்களை வெறுத்துக் கூறுபவரைப் போலவும் சில சொற்களைக் கூறினர். இறுதியில் புலவர் "அமரில் விருப்பமுள்ள செல்வ" என்று விளித்து, "வீரம் இப்போது

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே." — பொன்முடியார்.

உன்னைவிட்டு இருக்கட்டும்" என்று கூறியது மிகவும் மகிழ்ச்சிக்குரிய உரையாகும். ஓர் அரசனுக்கு முன்னர் நின்று ('நீ உன் புதல்வர்க்குத் தோற்றாய்') என்று கூறுவது எளிய செயலன்று. அரசன் சினவாதிருப்பதற்கும், சினந்து மைந்தர்களையே அழித்துவிடாதிருப்பதற்கும், போருக்கு எழுவதைத் தடுப்பதற்குமே புலவர் இவ்வாறு நயமுண்டாகப் பேசினார். போரும் நின்றது.

## பயிற்சியும் முயற்சியும்

I. இப்பாடம் நடிப்புக்கலைக்கு நல்ல வாய்ப்பு அளிப்பது. இதில் வரும் புலவர், அரசர் ஆகிய பாத்திரங்களை ஏற்று வகுப்பில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நாடகமாக நடித்துப் பாருங்கள்.

II. தமக்கு வயது பலவாகியும் நரையில்லாமைக்குப் பிசிராந்தையார் கூறிய காரணத்தை விளக்கும் புறநானூற்றுப் பாடலைக் கீழே காணலாம் :

" யாண்டு பல ஆக நரையில ஆகுதல்
யாங்(கு) ஆகியர் " எனவினவுதி ராயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்ட அனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்(று) அவிந்(து) அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.

III. இப்பாடத்திலிருந்து கீழ்வருவனவற்றிற்கு உதாரணங்கள் வேண்டும் :

(1) வியங்கோள் வினைமுற்று (4) அடுக்குத்தொடர்
(2) பெயரெச்சம் (5) தன்மை ஒருமை வினைமுற்று
(3) வினையெச்சம் (6) வினையாலணையும் பெயர்

IV. கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக :

பார்த்தார் புலவர் | | அழகிது | | என நினைத்தார் | நலங்கிள்ளியிடம் | | | ஒன்றுபட்டால் வாழ்வுண்டு | இன்றேல் இருவர்க்குந் தாழ்வே | | என்று கூறினர்.

(விடையை பாடப் புத்தகத்தில் 13-ஆம் பக்கம் பார்க்க.)

V. நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரொடு பொருதற்கு அரசர் மனம் இயைந்திருக்குமோ ?—இவ்வினா வாக்கியத்தைச் சாதாரண வாக்கியமாக மாற்றி எழுதுக.

நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையை மறுத்துப் புதல்வரொடு பொருதற்கு அரசர் மனம் இயைந்திராது.

---

# 2. புகழ் பாடச் சொன்ன புல்லர்

(ஔவை டி. கே. சண்முகம்)




அரும்பதவுரை

### பக்கம் 17

ஆழ்ந்த - மிகுந்த
தெய்விக - தெய்வத்தன்மை பொருந்திய
நிரம்பவும் - மிகவும்
புரளி - பொய், கற்பனை
மடு - பள்ளம்

### பக்கம் 18

செருக்குடன் - கர்வத்துடன்
மூன்றுகால் மூதாட்டி - முதியவள் தன் இரண்டு கால்களுடன் நடப்பதற்கு உதவியாக ஒரு கைத்தடியையும் ஊன்றிச் செல்ல வேண்டியிருப்பதால் இவ்வாறு கூறப்பட்டாள்.
மெச்சுகிறது - பாராட்டுகிறது

### பக்கம் 19

இடைமறித்து - பேச்சுக்கு இடையில் தடுத்து
குறுநகை - புன்னகை
இணைத்து - சேர்த்து

### பக்கம் 20

பெருமிதத்துடன் - கம்பீரத்துடன்
முறுவல் - புன்னகை
வேழத்தை - யானையை
களம் - போர் செய்யும் இடம்
பண் - பாட்டு
பாணர் - பாட்டுப்பாடும் குலத்தினர்

### பக்கம் 21

மகர யாழ் - மகர (மீன்) உருவத்தை உடைய யாழ்

---

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே.” — பாரதியார்.

ஒப்பாரி - பாடி அழுதல்
புலம்புகிறீர்கள் - அழுகிறீர்கள். (இவ்விடத்தில் வேண்டிக் கேட்கிறீர்கள் என்று பொருள்)

பக்கம் 22

எளனமாக - கேலியாக
மடியும் - இறக்கும்
கசிந்து உருகும் - மனம் நெகிழ்ந்துருகும்
இளங்கோக்கள் - இளவரசர்கள்
அகம் குழைந்து - மனம் உருகி

பக்கம் 23

களிறு - ஆண் யானை
அவிழ்ச் சுவை - உணவின் சுவை
ஓவா - அழியாத
துவ்வா - உண்ணப்படாத
வெளிறுபடு - சுரைக் குடுவையால் செய்யப்பட்ட
பனுவல் - இசைப் பாட்டு
உடீஇர் - நல்ல ஆடைகளை உடுக்க மாட்டீர்
உண்ணீஇர் - நல்ல உணவை உண்ணமாட்டீர்.

மூவர் கோவையும்.........நீரே : மூவேந்தராகிய சேர சோழ பாண்டியரைப் பாடிய இசைப்பாடல்களைப் பாடும் என் வாயால் நீங்கள், "எங்களைப் பற்றியும் பாடுங்கள்" என்று கேட்கிறீர்கள். உங்களைப் பற்றி நான் எப்படிப் பாடுவேன்? யானைகள் மடியும் போர்க் களத்தை நீங்கள் கண்ணாலும் கண்டதில்லை; இனிமையான யாழின் இசையின்பத்தினையும் நீங்கள் விரும்பிக் கேட்டதில்லை; உங்களுக்கு உணவின் சுவையே தெரியும்; தமிழின் சுவை தெரியாது; உங்கள் செல்வத்தைக் கொண்டு நன்றாக உடுக்கவும் மாட்டீர்; உண்ணவும் மாட்டீர்; பிறருக்கும் கொடுக்கவும் மாட்டீர்: பிறரிடம் வாங்கவும் மாட்டீர்; காட்டில் உள்ள மிக உயர்ந்த மரத்தின் உச்சியில் பழுத்து உண்ண முடியாத கனியைப் போல நீங்கள் இவ்வுலகில் பிறந்திருக்கிறீர்கள்.

## பயிற்சிக்குரிய சொற்றொடர்கள்

உற்று நோக்கிய
அசட்டுச் சிரிப்புடன்
இடம் மறித்து
அகம் குழைந்து
நெடுந் தொலைவில்
கசிந்துருகும்
பெருமிதத்துடன்

## பதப் பிரிவு

சிறுமை + ஊர் = சிற்றூர்
பொன் + காசுகள் = பொற் காசுகள்
ஒழிவு + ஏது = ஒழிவேது
கோல் + ஊன்றிய = கோலூன்றிய
கசிந்து + உருகும் = கசிந்துருகும்
இளம் + கோக்கள் = இளங்கோக்கள்

## கேள்வியும் பதிலும்

1. இப்பாடத்தில் வரும் இரு பெரும் செல்வர் யாவர்? அவர்கள் என்ன பேசிக்கொண்டு சென்றார்கள்?

இப்பாடத்தில் வரும் இரு பெரும் செல்வர்களில் ஒருவர் பெயர் ஆளுடைய பிள்ளை. மற்றவர் பெயர் அம்பலத்தாடியார். அவர்கள் இருவரும் தம் ஊருக்கு ஔவையார் வந்திருப்பதைப் பற்றிப் பேசிக்கொண்டு சென்றார்கள்.

*2. ஔவையாரைப்பற்றி இருவரும் என்ன பேசிக் கொண்டார்கள்?

செல்வர்கள் இருவரும் ஔவையார் ஆழ்ந்த புலமை நிறைந்தவர் என்றும், தெய்வ அருள் பெற்ற கவியரசி என்றும் பேசிக்கொண்டார்கள். அவர்

வாயால் பாடிப் புகழ் பெறுவது மிகவும் பெருமை தரும் என்றும், அவர் எளிதில் யாரையும் பாடமாட்டார் என்றும் பேசிக்கொண்டார்கள்.

**3. ஔவை எளிதில் யாரையும் பாடமாட்டாள் என்று கூறக் கேட்ட அம்பலத்தாடியார் கூறியது என்ன?**

அம்பலத்தாடியார் பரிகாசமாகச் சிரித்தார். ஔவையைப் பற்றி அவ்வாறு கூறியது வெறும் புரளி என்றும், சிறியதைப் பெரிதாக்கிக் கதை கட்டுவது மக்கள் இயல்புதான் என்றும் கூறினர். அவர், 'செல்வத்துக்குப் பாடாத புலவர்களே பூமியில் கிடையாது. ஔவையும், சில பொற்காசுகளை விட்டெறிந்தால் ஏதாவது உளறி விட்டுப் போகிறாள்' என்று கூறினர்.

**4. 'மடுவை மலையாக்கிக் கதை கட்டுவது மக்கள் இயல்புதானே!' இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.**

ஆளுடைய பிள்ளையார் அம்பலத்தாடியாரை நோக்கி ஔவையார் சிறந்த புலவர் என்றும், அவர் எளிதில் யாரையும் புகழ்ந்து பாடுவதில்லை என்றும் கூறினர். அது கேட்ட அம்பலத்தாடியார் ஔவையாரைப்பற்றி மக்கள் புகழ்ந்து கூறுவனவெல்லாம் வெறும் புரளியாக இருக்கும் என்றும், சிறிய செய்தியைப் பெரியதாக்கிக் கூறுவதே மக்கள் இயல்பு என்றும் கூறினர். இத்தொடரை விளக்குவதற்காகவே அம்பலத்தாடியார், "மடுவை மலையாக்கிக் கதை கட்டுவதுதானே மக்கள் இயல்பு" என்றார். மடு பள்ளமானது. மலை மேடானது.

***5. ஔவை தம்மைப் பாடவேண்டுமென்று அவர்கள் விரும்பியது ஏன்?**

அவர் வாயால் பாடிப் புகழ் பெறுவது அரிய சிறப்பாகும். மக்கள் ஔவையாரைப் பெரிதும் புகழ்கிறார்கள். அதனால் ஔவையார் அவர்களைப் புகழ்ந்து பாடினால் அவர்களுடைய மதிப்பு மிகுதியாகும். ஆகவே அவர்கள் ஔவை தம்மைப் பாட வேண்டும் என்று விரும்பினர்கள்.

**6. அம்பலத்தாடியார் செருக்குடையவர் என்று எப்படி அறியலாம்?**

அம்பலத்தாடியார் பொருளைச் செலவிட்டுப் புகழ் பெற எண்ணினர். ஔவை எளிதில் யாரையும் பாடமாட்டாள் என்று தெரிந்தும், "பாடிப் பிழைப்பவள்தானே" என்று எண்ணி, 'பொற் காசுகளை விட்டு எறிந்தால் பாடிவிட்டுப் போகிறாள்' என்றார். ஔவையாரைப் பார்த்தவுடன் "பூ! இவள்தானா? இந்த மூன்று கால் கிழவியா கவியரசி?" என்று கேட்டார். இதனால் அவர் செருக்கு உடையவர் என்பது புலப்படுகிறது.

**7. இருவரும் தம்மை எவ்வாறு ஔவையாருக்கு அறிமுகம் செய்து கொண்டார்கள்?**

ஔவையார் அருகில் வந்தவுடன் அவரை வணங்கி, 'உங்களுக்காகத் தான் காத்துக்கொண்டிருக்கிறோம்' என்றனர். ஆளுடையபிள்ளை தம்முடைய நண்பர் மிகப் பெரிய செல்வர் என்றார். அவருடைய நண்பர் ஆளுடைய பிள்ளைக்கு ஊரில் பாதி சொந்தம் என்றார். ஆளுடைய பிள்ளை ஔவையின் திருவாயால் தம் நண்பரைப் புகழ்ந்து பாட வேண்டும் என்றார். புகழுரைக்குத் தக்கவாறு பொற்காசுகள் தருவதாக அம்பலத்தாடியார் கூறினர்.

"தூய வாழ்வே மனிதனுக்கு நல்ல ஆடை." — நபி.

***8. செல்வர்கள் ஔவையாரை எதைப் பற்றிப் பாடச் சொன்னார்கள்?**

செல்வர்கள் ஔவையாரைத் தங்களுடைய நிலவளத்தையும், உடல் வளத்தையும் புகழ்ந்து இரண்டு பாடல் பாடிப் போகச் சொன்னார்கள். ஒரே பாடலில் தங்கள் இருவரையும் சேர்த்துப் பாடினாலும் சரியென்று ஒத்துக் கொண்டார்கள்.

***9. ஔவையார், 'உங்களைப்பற்றி ஊரில் கேள்விப்பட்டேன்' என்றதற்கு இருவரும் என்ன கூறினர்?**

ஔவையார் அவர்களைப்பற்றி ஊரில் கேள்விப்பட்டதாகக் கூறினார். அதற்கு அவர்கள் இருவரும் பெருமிதத்துடன் அந்தப்பகுதியில் தம்மைப் பற்றித் தெரியாதவர்களே கிடையாது என்றார்கள். ஆளுடையார், 'நமது புகழ் நாடறிந்ததல்லவா' என்று கூறி, பாடலைத் தொடங்கும்படி ஔவையாருக்குக் கூறினார்.

***10. ஔவையார் வெற்றி, இசைச்சுவைபற்றி அவர்களை என்னென்ன வினவினார்? அவர்கள் அவ்வினாக்கட்கு என்ன பதில் கூறினர்?**

முதலில் ஔவையார் செல்வர்களைப் பார்த்து அவர்கள் கூர்வேல் பிடித்துப் போரில் யானையைக்கொன்று வெற்றி பெற்றதுண்டா என்றார். 'களத்தைக் கண்டதும் இல்லை; காணமுயன்றதும் இல்லை' என்றார்கள். பிறகு நல்ல பண்ணோடு இனிய குரலில் பாடும் பாணர்களின் மகரயாழின் இனிய ஒலியைக்கேட்டு மகிழ்ந்ததுண்டா, என்று கேட்டார். இசையைக் கேட்கத் தமக்கு நேரமில்லை என்றார் ஆளுடைய பிள்ளை. மகர யாழ் என்றால் என்ன என்றே அறியாத அம்பலத்தாடியார், 'ஓ, மகர யாழா? அதற்கெல்லாம் நமக்கு ஓய்வு ஏது?' என்று கூறினார்.

***11. செல்வர்களுடைய இரக்கமின்மையை ஔவையார் எவ்வாறு கேட்டறிந்தார்?**

ஔவையார் அவர்களைப் பார்த்து, "தம் வறுமையை இனிய தமிழில் சொல்லும் புலவர்களுக்கு ஏதும் பொருள் தந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். ஆளுடையார் தங்களைத் தேடிப் புலவர்கள் வருவதேயில்லை என்றார். அம்பலத்தாடியார் அப்படி வந்தாலும் தாம் தருவது கிடையாது என்றார். தங்களைப் புகழ்ந்துபாடாத புலவர்களுக்குத் தாங்கள் எப்படிப் பரிசு தரமுடியும் என்றார் அவர். 'தன் வீடு, வாசல், மனைவி மக்கள் என்று இப்படியே அழுகின்ற புலவர்களுக்கு எங்களிடம் என்ன வேலை?' என்றார். இதனால் அவர் இருவரும் இரக்கம் இல்லாதவர் என்று ஔவையார் அறிந்தார்.

***12. ஔவையார் செல்வர்களிடம் கண்ட குறைபாடுகள் யாவை?**

(1) செல்வர்கள் போர்க்களத்தைக் கண்ணால்கூடக் கண்டதில்லை; காண முயன்றதும் இல்லை.

(2) பாணர்கள் பாடும் மகர யாழின் இனிய ஒலியைக்கேட்டு மகிழ்ந்ததில்லை.

(3) எந்தப்புலவரும் அவர்களைத் தேடிச் செல்வதில்லை. சென்றாலும் செல்வர்கள் அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை.

இக்காரணங்களால் அச்செல்வர்களிடம் வலியின்மையும், இசைச்சுவையின்மையும், தமிழ்ச்சுவையின்மையும், இரக்கமின்மையும் ஆகிய குறைபாடுகள் இருப்பதை ஔவையார் உணர்ந்தார்.

**13. தம்மிடம் உள்ள குறைபாடுகளை ஔவையார் சுட்டிக்காட்டிய போது செல்வர்கள் என்ன கூறினர்கள்?**

வீரம், இசையுணர்ச்சி, இரக்கம், தமிழ்ச்சுவை ஆகிய குணங்கள் இல்லாத செல்வர்களைக் குறித்து வருந்தினர். ஆனல் அச்செல்வர்கள் அதற்காக வருந்த வேண்டாமென்றும், அவருக்கு வேண்டியது பொருள் தான் என்றும், எவ்வளவு வேண்டுமானலும் தருவதாகவும் கூறினர்கள்.

**14. ஔவையார் பொருளைப் பெரிதாக மதிப்பவர் அல்லர் என்பதை எவ்வாறு அறியலாம்?**

அம்பலத்தாடியாரும் ஆளுடைய பிள்ளையும் எவ்வளவு பொருள் வேண்டினலும் தருவதாகச் சொல்லித் தம்மைப்பற்றிப் பாடும்படி கேட்டார்கள். ஆயிரம் பொற்காசுகள் கொடுப்பதற்கும் முன் வந்தார்கள்.

ஆனல், ஔவையார் அவர்களைப் பார்த்து, "பாட்டிற்கு நீங்கள் பொருள் கொடுக்கலாம். பாடப்படுவதற்குரிய பொருள் அல்லவா எனக்கு வேண்டும். அஃது உங்களிடம் கிடைக்கவில்லையே." என்ருர்.

வலிமையும், இசைச்சுவையும், தமிழ்ச் சுவையும், இரக்கமும் ஔவையார் பாடுவதற்குரிய பொருள்களாகும். இவை அந்தச் செல்வர்களிடம் இல்லாமையால் ஔவையார் அவர்களைப் பற்றிப் பாட விரும்பவில்லை.

**15. "பாட்டிற்கு நீங்கள் பொருள் தாலாம்; பாடப்படுவதற்குரிய பொருள் அல்லவா எனக்கு வேண்டும்?"—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.**

(14-ஆம் கேள்வியின் விடையே இதற்கும் பொருந்தும்.)

**16. ஔவையார் செல்வர்களை நோக்கிக் கூறிய உரைகளைத் தொகுத்து எழுதுக.**

விடை அரும்பத உரைப்பகுதி இறுதியில் காண்க.

**17. ஔவையார் தம்மைப் பற்றிப் பாடாவிட்டாலும் அவர் தம்மைப் பற்றிப் பாடியதாகவே செல்வர்கள் மன அமைதி கொள்ளக் காரணம் என்ன?**

ஔவையார் அந்தச் செல்வர்களைக் குறித்துத் தாம் பாட இயலாமையை, "மூவர் கோவையும்.........தோன்றிய நீரே" என்னும் பாட்டுப் பாடி விளக்கினர்.

அது கேட்ட செல்வர்கள் 'தமக்கென்று ஒரு பாடல் ஔவையார் வாயிலிருந்து வெளி வந்ததே. அதுவே போதும். அதுவே யாங்கள் விரும்பியது. அவரும் பாட்டுப் பாடினர்; எங்கள் பொருளும் மீந்தது' என்று மன அமைதி அடைந்தார்கள்.

## பயிற்சியும் முயற்சியும்

I. இப்பாடத்தைப் படர்க்கைப் பேச்சாக மாற்றி எழுதுக.

II. இந்நாடகத்தை உங்கள் வகுப்பில் நடித்துப் பயிலுங்கள்.

III. கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக:

ஔவை | | | இரக்கத்துடன் | | அடடா | இசை கேளாத செவிகளா இவை | இசை நுகராத செவிகட்கு என் பாடல் இனிக்காதே | சரி | இருக்கட்

"பழக்கம் இயற்கைக்கு அடுத்ததாகும்." — ஆங்கிலப் பழமொழி

டும் | தம் எளிய நிலையை இனிய தமிழால் எடுத்துச் சொல்லும் புலவர்க்கு ஏதாவது பொருள் வழங்கி இருக்கிறீரா |

VI. வலிமை இல்லை ; இசைச் சுவை இல்லை ; தமிழ்ச் சுவை இல்லை; இரக்கமில்லை—இவற்றைத் தனி வாக்கியமாகச் சேர்த்து எழுதுக.

வலிமையும், இசைச் சுவையும், தமிழ்ச் சுவையும் இரக்கமும் இல்லை.

## 3. 'தம் மக்கள்'

பண்டித பி. ஆர். மீனுட்சிசுந்தரம் பிள்ளை, M. A.,
(முன்னுள் தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை)

அரும்பதவுரை

பக்கம் 24

யாண்டு விழா - ஆண்டு விழா
பணி - தொண்டு, சேவை
அக்காலை - அச்சமயம்
வழக்குரைஞர் - வழக்கறிஞர் ('வக்கீல்')
மழலை - குழந்தைப் பேச்சு
அன்னூர் - அவர்
ஆர்ந்து - நிறைந்து
இறை - தலைவர்
கூற்று - மொழி
குழல்......கேளாதவர் - தம் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாத பெறறோர்களே குழலோசையும் யாழ் இசையும் இனியவை என்று கூறுவார்கள்.
சுட்டிக் குறித்து - சிறப்பாகக் குறிப்பிட்டு
களையுமாறு - நீக்குமாறு
சொற்பெருக்கு - சொற்பொழிவு
ஐயத்தை - சந்தேகத்தை
வகையான் - முறையில்
பொதி - அடங்கியுள்ள
இயல்பு - இயற்கை
பேசுங்கால் - பேசும்போது
அளாவிய - துழாவிய
கூழ் - உணவு

பக்கம் 25

ஏனைய - மற்ற
ஒப்ப - சமமாக
வீறு - தனிப் பெருமை
எங்ஙனம் - எவ்வாறு
பொருந்தும் - ஏற்படும்
மாற்றம் - பதில்
படைப்பு......வாழும் நாளே - செல்வம் பலவற்றையும் பெற்றுப் பலரோடு கூடி உண்ணும் மிகுந்த செல்வத்தை உடையோராயினும் இடையே சிறிது காலம் கழியக் குறுகக் குறுக நடந்து சென்று சிறிய கையை நீட்டிக் கலத்திலே இருக்கும் உணவைத் தரையிலே போட்டும், கூடப் பிசைந்து தோண்டியும், வாயால் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யை உடைய சோற்றை உடல்படுமாறு சிதறியும் இவ்வாறு தம் அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குத் தம் வாழ்க்கையால் அடையும் பயன் இல்லை.
பாண்டியன் அறிவுடை நம்பி - அரசனுக இருந்தும் கவிதை யியற்றுவதிலும் வல்லவன். பிசிராந்தையார் காலத்தில் வாழ்ந்தவன்.
ஊற்றின்பம் - தொடுதலால் உண்டாகும் இன்பம்
மனைக்கு - வீட்டுக்கு
நன்கலம் - அழகு
எடுப்பினை - மிகுதியை
குழவி - குழந்தை
தெளிந்து - தெளிவாக உணர்ந்து
நகைமுகத்தாராய் - புன்சிரிப்புடைய முகத்தை உடையவராய்
ரசிப்பது - அனுபவிப்பது

பக்கம் 26

இணை - சமம், ஒப்பு
பயிற்றி - தொட்டு
பேறு - செல்வம்
வலியுறுத்தல் - வற்புறுத்திச் சொல்லுதல்
அமிழ்தினும்......கூழ் - தாய் தந்தையர் உண்ணும்போது அவர் தம் குழந்தைகள் உடனிருந்து தம் சிறிய கைகளால் துழாவிய உணவானது சுவை மிகுந்த அமிழ்தத்தை விட இனிமை உடையதாகும்
அடை - சிறப்பித்துக் கூறும் சொல்
வேற்றவர் - அயலார்
கையதாயினும் - கைகளை உடையதானாலும்
துணிபு - முடிவு, கொள்கை
குலைத்துவிடும் - அழித்துவிடும்
இயற்கைத்து - தன்மையை உடையது
உள நூல் - மனத்தைப் பற்றிய சாஸ்திரம்
இன்னொலி - இனிமையான ஓசை
தமர் - சுற்றத்தார்
மிடற்றொலி - குரல் ஓசை
இன்பு - இன்பம்
இயலாது - முடியாது
புலனாகும் - விளங்கும்
மதி நுட்பத்தால் - கூரிய அறிவால்
இயக்கினலன்றி - அசைத்தாலன்றி

பக்கம் 27

வேறுபாடு - வித்தியாசம்
ஒப்புமை - உவமை
விழிப்பாக - எச்சரிக்கையாக
எத்துணை தான் - எவ்வளவுதான்
கோடலாம் - கொள்ளலாம்
குதலை - பொருளில்லாத சொல்
முதிர்ந்து - நிரம்பி
பொருட் செறிவு - பொருள் நிறைவு
பயனில் சொல்......எனல் - பயனில்லாத சொற்களைப் பல முறையும் சிறப்பித்துச் சொல்லுகின்ற ஒருவனை மக்களுள் ஒருவன் என்று சொல்லுதல் கூடாது. மக்களுள் பதர் என்று சொல்லுதல் வேண்டும்
வெற்றுரை - பொருளில்லாத சொல்
விலக்கும் - நீக்கும்.

பக்கம் 28

சீற்றம் - கோபம்
ஏனையோரால் - பிறரால்
சலிக்கின்றோம் - வெறுக்கிறோம்
பயிற்றுகிறுள் - பயிலுகிறுள்
குறியீடு - பொருள்
இம்மை...செம்மலோர் - பகைவரும் விரும்பத்தக்க குற்றமில்லாத அறிவினை யுடைய மக்களைப்பெற்றவர்கள் இந்தப்பிறவியில் புகழோடு விளங்கி மறுபிறப்பில் குற்றமின்றி முத்தியை அடைவார்கள்.
உடைத்து - உடையது
கிட்டும் - கிடைக்கும்
இயங்காது - இடத்தைவிட்டு அசையாமல்
பொலிவால் - அழகால்
பொதியா - நிரம்பாத
விதந்து - தனிப்பட
ஐயம் - சந்தேகம்
அகற்ற - நீக்க
வியப்பு - ஆச்சரியம்
வலியுறுத்த - வற்புறுத்த

பக்கம் 30

பணியை - தொண்டை
சொல்திறன் - சொல்வன்மை
சிந்தித்து - ஆராய்ந்து
உரைகல் - பொன்னின் மாற்றை அறிய உதவும் கல்
மிளிர்வதை - விளங்குவதை
சுவடி - புத்தகம்
மாற்றுயர்ந்து - சிறப்பு மிகுந்து

பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

| | |
|---|---|
| சுயம்பட | வெவ்வேறு |
| காணப்பெறின் | ஒருவாறு |
| எத்துணையும் | பேரின்பம் |
| ஓரளவு | அடிப்படை |

## பதப்பிரிவு

சில + ஆண்டு = சில்லாண்டு
ஊறு + இன்பம் = ஊற்றின்பம்
பிறிது + ஒருவர் = பிறிதொருவர்
இனிமை + ஒலி = இன்னொலி

பொருள் + செறிவு = பொருட்செறிவு
வேறு + வேறு = வெவ்வேறு
சிறுமை + அறிவு = சிற்றறிவு
குறள் + பா = குறட்பா



## கேள்வியும் பதிலும்

1. ஆசிரியர் 'நம் மக்கள்' என்பதற்கு விளக்கம் கூற நேர்ந்த சந்தர்ப்பம் யாது ?

ஆசிரியர் ஒரு சமயம் திருச்சித் திருவள்ளுவர் தமிழ்க் கழக ஆண்டு

" பொது நலம் அதனுள் தன்னலம் பொருந்தும்." — நாமக்கல் கவிஞர் -

விழாவுக்குத் தலைமை தாங்கினார். அப்போது வழக்கறிஞர் ஒருவர் மழலை இன்பம் என்னும் பொருள் பற்றிப் பேசினார். அவர் தமது சொற்பொழிவில் 'குழல் இனிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்னும் குறட்பாவின் பொருள் நயத்தை விளக்கினார். திருவள்ளுவர் மக்கள் என்று பொதுவாகக் கூறாமல் தம் மக்கள் என்று சுட்டிக் குறித்த காரணம் தமக்குப் புலப்படவில்லை என்று கூறித் தமது ஐயத்தைத் தலைவர் களையுமாறு வேண்டிக் கொண்டார்.

**2. மழலை இன்பத்தைக் குறித்துத் திருவள்ளுவர் கூறுவது என்ன ?**

தம் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாத பெற்றோர்களே குழலோசையும் யாழ் இசையும் இனியவை என்று கூறுவார்கள்.

***3. குழந்தை இன்பத்தைப் பற்றிப் பேசும்போது மற்றப் புலவர்களிடமின்றி வள்ளுவரிடம் காணப்படும் தனிச் சிறப்பு யாது ?**

குழந்தை இன்பத்தைப்பற்றிப் பேசும்போது மற்றைய அறிஞர்கள் எல்லாம் பொதுவாகவே மக்கள் என்ற சொல்லை அமைக்கின்றார்கள். ஆனால் வள்ளுவரோ, 'தம்மக்கள் மழலை', 'தம் மக்கள் சிறுகை' என்றெல்லாம் சுட்டிக் காட்டி அமைக்கிறார். இங்ஙனம் வள்ளுவர் ஏனைய புலவர்களைவிடத் தனிச் சிறப்புப் பெறுகிறார்.

***4. குழந்தை இன்பத்தைப்பற்றிப் பாண்டியன் அறிவுடை நம்பி பாடிய பாட்டின் பொருளை எழுதுக.**

விடை அரும்பதவுரைப் பகுதியில் படித்தறிக.

**5. குழவி இன்பமே ஏனைய இன்பங்களை விட உயர்ந்தது என்று பாண்டியன் அறிவுடை நம்பி எவ்வாறு தெளிந்தான் ?**

சிறு குழந்தைகள் பெரியோர் செயல்களை யெல்லாம் தாமும் செய்தல் வேண்டும் என்று விரும்பி அவ்வாறே செய்ய முயலுகின்றன. அம் முயற்சி சிறு குறும்புகளாக நமக்குக் காணப்படுகின்றது. இத்தன்மையை நன்கு அறிந்து இக்காட்சி இன்பத்தையும், சுவையின்பத்தையும், ஊற்றின்பத்தையும் பெறுவதே இல்லறத்தின் பயன் என்று ஒவ்வொருவரும் தெளிதல் வேண்டும். பெரும் செல்வம் தரும் இன்பத்தைவிட மனைவிக்கு அழகைத் தரும் மக்களால் பெரும் பேரின்பத்தை ஒப்பு நோக்கிய பாண்டியன் குழவி இன்பமே உயர்ந்தது என்று தெளிந்தான்.

***6. மெய் பயிற்சிச்சுவை பெறுதற்குக் குழவிப்பேறு இன்றியமையாதது என்பதை வள்ளுவர் எங்ஙனம் விளக்கியுள்ளார் ?**

"பெற்றோர்கள் உண்ணும்போது அவர் தம் குழந்தைகள் உடலிருந்து சிறிய கைகளால் துழாவிய உணவானது சுவை மிகுந்த அமிழ்தத்தைவிட இனிமை உடையதாகும்" என்று வள்ளுவர் கூறியுள்ளார். குழந்தையின் உடல் பெற்றோர் உடலுடன் உறவுகொண்டதாகையால் வள்ளுவர் கூறும் இவ்வுண்மை மிகவும் பொருத்தமாகும்.

***7. குழந்தை ஊற்றின்பத்தை அதன் பெற்றோர்மட்டுமே உணர முடியும் என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார் ?**

நோயுள்ள பிறருடைய குழந்தை ஒருவர் உணவில் கைவிட்டால் அக் குழந்தையின் நோயுருவம் வேற்றார் கண்களுக்குப் புலப்பட்டுக் குழவியின்

"தவற்றைச் சரிப்படுத்துவதில் அவமானம் இல்லை." — ராஜாஜி.

ஊற்றின்பத்தை அழித்துவிடும். ஆனால் பெற்றோரோ தம் குழந்தை சிரங்கி னால் அழுகிய கையை உடையதாக இருந்தாலும் தாம் உண்ணும் சோற்றை அது துழாவினால், வேற்றுமையும் வெறுப்பும் அடையார். அதற்குக் காரணம் குழந்தையின் உடல் பெற்றோர் உடலுடன் உறவுகொண்டதேயாம்.

**8. ஓசை நயத்தின் இன்பத்தைக் குறித்து ஆசிரியர் என்ன கூறுகிறார் ?**

ஓசைநயம் இயல்பாகவே எல்லாருக்கும் இன்பம் தரும். சுற்றத்தாரோ, பிறரோ இனிய குரலெடுத்துப் பாடினால் அப்பாட்டு நமக்கு இன்பததைக் கொடுக்கும். இங்ஙனமே நிரம்பா நிலையில் மொழி பயிலும்போது குழந்தை எல்லோருக்கும் தன் குரலால் இன்பம் உண்டாக்கும். இதுவே அறிஞர்களால் மழலை இன்பம் என்று கூறப்படுகிறது.

***9. யாழ், குழல் ஆகிய இசைக் கருவிகளின் ஓசைக்கும் குழந்தையின் மழலை மொழிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.**

யாழும் குழலும் மனிதன் தன்னுடைய நுண்ணறிவைப் பயன்படுத்தி இயக்கினாலன்றி இனிய ஓசையைத் தரமாட்டா. அவற்றிலிருந்து ஓசை உண்டாகும்வரையில் அவற்றுக்கும் விறகுக்கும் வேற்றுமை இல்லை. இவ் விரு கருவிகளும் பிறர் இயக்குவதால் ஒலிதருவன. ஆனால் குழந்தையோ தானாகவே ஒலியினை உண்டாக்கும். ஆகையால் குழல், யாழ் என்னும் இசைக்கருவிகளின் ஓசை நயத்தைவிடக் குழந்தையின் மழலைமொழி இன்பம் பயப்பதாகும்.

**10. வள்ளுவர் குறிக்கும் இனிமை எதைப்பற்றியது ? எவ்வியல்பை அடிப்படையாகக் கொண்டது ? (அல்லது) வள்ளுவர் மிடற்றொலியால் எழுப்பும் இசையைக் குறிக்காமல் நரம்புக் கருவியாலும் தொளைக்கருவியாலும் உண்டாக்கும் ஓசையைக் குறித்தது ஏன் ?**

வள்ளுவர் குறிக்கும் இனிமை ஓசை பற்றியதன்று. ஒலியால் உண்டாகும் உணர்ச்சி பற்றியதே ஆகும். ஓசை, இனிமை, மென்மை, உணர்ச்சி —இவற்றோடு அவ்வோசை உண்டாகும் கருத்துக் கிளர்ச்சியாகிய சிறப்புத் தன்மையினையே அடிப்படையாகக் கொண்டதாகும். இதனால்தான் வள்ளுவர் மிடற்றொலியால் உண்டாக்கும் இசையைக் குறிக்காமல் நரம்புக் கருவியாலும், தொளைக்கருவியாலும் உண்டாக்கும் ஓசையைக் குறித்தார்.

***11. திருவள்ளுவர் மழலைக்குச் சிறப்புக் கொடுத்தது சரியே என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார் ?**

ஒலி இனிமையும் மென்மையும் மட்டுமின்றிக் கருத்துவளமும் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அறிஞர்கள் ஒலிக்கு மதிப்புத்தருவர். மழலை நிலையில் உள்ள ஒலி உருவம் நிரம்பாத சொல்லேயொழிய, கருத்து நிரம்பாத சொல் அன்று. குதலை நிலை முதிர்ந்து மழலை ஆகும்போது பொருள் நிறைகின்றது. “பயனில்லாத சொற்களைப் பல முறையும் சிறப்பித்துச் சொல்லும் ஒருவனை மக்களுள் ஒருவன் என்று சொல்லுதல் கூடாது. மக்களுள் பதர் என்றே சொல்லுதல் வேண்டும்” என்று திருவள்ளுவர் வெற்றுரையை விளக்கியுள்ளார். ஆகையால் இங்கு மழலை என்பது மழலை நிலையில் உள்ள பொருள் நிறைந்த சொல்லே ஆகும்.

*12. பொருள் புரியாத சொற்களின் ஓசையிலினிமை இருப்பினும் பயனில்லை என்பதற்கு ஆசிரியர் எடுத்துக்காட்டிய நிகழ்ச்சியை விளக்குக.

சென்ற 1935-ஆம் ஆண்டில் ஆசிரியர் பேசிய அதே நகர மன்ற வெளியில் திருமதி சரோஜனி அம்மையார் இனிய ஒலியுடன் அழகிய ஆங்கிலத்தில் பேசினர். ஆங்கிலம் தெரியாத ஒரு வண்டியோட்டி இடையில் எழுந்து நின்றன். "அம்மையார் பேச்சு நன்ருகத்தான் இருக்கிறது. ஆனல் ஒன்றும் புரியவில்லை. யாராவது தமிழில் பேசினல் நன்ருக இருக்கும்" என்று தன் ஆவலை வெளியிட்டான். அவன் கூறியது அம்மையாருக்குப் புரியாததால் அவன் தம்மை எதிர்த்துக் கூச்சல் போடுவதாக எண்ணிக் கோபத்தோடு பேசினர். அம்மையார் பேச்சு வண்டிக்காரனுக்கும், வண்டிக்காரன் பேச்சு அம்மையாருக்கும் புரியாமையே இந்தத்தொல்லைக்குக் காரணமாயிற்று.

*13. மக்கள் மழலையைப் பெற்ருேரே அநுபவிக்க முடியும் என்பதை விளக்குக.

ஆசிரியர் உயர்திரு. P. R. மீனட்சி சுந்தரனர்க்குச் சிலம்பம்மை என்ெருரு குழந்தை உண்டு. அக்குழந்தை பயிலும் மழலையின் பொருளை அவரும்அவர் மனைவியாருமே நன்கு அறிவர். ஏனையோரால் அறிய இயலாது. ஆசிரியரின் நண்பர்களில் சிலர் ஏதோ இனிமை காரணமாகவும், அவரிடம் கொண்டுள்ள மதிப்பின் காரணமாகவும் அம்மழலை மொழிகளை ஓரளவு சுவைக்கலாம். ஆனல் அவர் கீழ்வருமாறு அவற்றின் பொருளை எடுத்துக் கூறினல் அவர்கள் இன்பம் முன்னைவிட அதிகமாகும்.

(1) கா - தொட்டில்
(2) இமிண்டு - பூண்டு
(3) மூங்கு - முருங்கைக் காய்
(4) ட்டர் - Sister (சகோதரி)
(5) மீ - பழம்
(6) ஈஞ்சி - சீனி
(7) பித்த பித்தா - நிலக்கடலை

இதனல் மக்கள் மழலையைப் பெற்ருேரே நன்கு அனுபவிக்க முடியும் என்பது புலப்படுகிறது.

*14. திருவள்ளுவர் 'தம் மக்கள்' என்பதில் 'தம்' என்னும் அடைமொழி கொடுத்தது எங்ஙனம் பொருந்தும்?

ஒவ்வொரு குழவியின் மழலைக்குரிய பொருளை அதன் பெற்ருேரே நன்கு அறிவர். தம் குழந்தைகள் அறிவு நுட்பத்தோடு பொருள்களை உணர்ந்து அவற்றைக் குறிக்க வெவ்வேறு ஒலிகளைப் பயன்படுத்துகின்றன என்று பெற்ருேர்கள் கருதுகிறர்கள். அதனல் அவர்கள் வேற்று இசையால் பெறும் இன்பத்தைக் குறையுடையதாகவே மதிக்கிருர்கள். அவ்விசையும் கருவியிசையாக இருப்பின் அதனை இசையாகவே மதிக்கமாட்டார்கள். 'அறிவறிந்த' குழந்தைகளைப் பெற்ற பெற்ருேர்கள் மக்களின் அறிவையே மதிப்பார்கள். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்தே திருவள்ளுவர் 'தம் மக்கள்' என அடைமொழி கொடுத்துக் கூறினர்.

15. செல்லூர்க் கௌசிகன் தாமோதரனர் மக்கள் பேற்றைக் குறித்து என்ன கூறியுள்ளார்?

செல்லூர்க் கௌசிகன் தாமோதரனர் மக்கட் பேற்றைக் குறித்து, பகைவரும் விரும்பத்தக்க குற்றமில்லாத அறிவினை உடைய மக்களைப் பெற்ற நல்ல பெற்ருேர்கள் இப்பிறவியில் அடைய வேண்டிய புகழோடும

விளங்கி, மறுபிறவியில் முத்தி உலகைக் குறைவின்றி அடைவார்கள்" என்று கூறியுள்ளார்.

**16. செல்லூர்க் கௌசிகன் தாமோதரனர் பாடலால் குழந்தையின் காட்சி இன்பம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?**

இப்பாடலில் அவர் குழந்தையின் காட்சியின்பத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். சொற்பொருள் இன்பத்தைக் குறிப்பிடவில்லை. சிற்றறிவு படைத்த பொருள்களிலேனும், இயங்காமல் நிலைத்திருக்கும் பொருள்களிலேனும் இனிய காட்சி எளிதில் கிடைக்கும். இன்பமும் ஏற்படும். இவ்வாறு அயலாரது குழவியாயினும் பகைவரது குழவியாயினும் காட்சி அழகால் இன்பம் தருவதில் வியப்பு இல்லை.

***17. சொல்லின்பத்தின் சிறப்புத் தோன்ற வள்ளுவர் தம் குறளை அமைத்துள்ளார் என்பது எப்படிப் பொருந்தும்?**

சொல்லின்பம் பொருள் தெரியாவிட்டால் சிறக்காது. பெற்றோர் சொல்வடிவம் விளங்காததாயினும், கருத்துடைய தம் மக்களின் மழலை இன்பத்தை அநுபவித்து இன்பம் அடைவர். மற்ற இசைகளோடு ஒப்பிட்டு நோக்குகையில் கருவி ஓசை பொருள் பொதியாதது. எனவேதான் திருவள்ளுவர், பொருள் பொதியாக் கருவி ஓசையை தம் மக்களின் மழலையுடன் பெற்றோர் ஒப்புக் கொள்ளார் என்பதற்காகவே,

" குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் "

என்று சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறினர்.

**18. திருக்குறளின் உண்மைப் பொருளை எவ்வாறு உணர முடியும்?**

ஒவ்வொரு குறட்பாவினையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் வாழ்க்கை நிகழ்ச்சியாகிய உரை கல்லில் அக்குறளின் பொருள் மாற்று மிகுந்து விளங்குவதைக் காணலாம். திருக்குறள் உரையைச் சுவடிகளில் படிக்கலாம். ஆனல் உணர்வது குறைவு. ஆனல் உலகப் பயிற்சியால்தான் திருக்குறளின் உண்மைப் பொருளை உணர முடியும். இவ்வின்பமே இலக்கியப் பேரின்பம்.

## பயிற்சியும் முயற்சியும்

I. பேராசிரியர் P. R. மீனாட்சிசுந்தரனர் அவர்கள் தம் அறிவு நுட்பத்தில் 'தம் மக்கள்' என்ற ஒரு சொற்றொடரை ஆராய்ந்து அழகிய கட்டுரை எழுதியிருக்கிறார் பாருங்கள். நீங்களும் இவ்வாறே செய்யுட்களைப் படிக்கும்போது ஒவ்வொரு சொல்லின் அமைப்பைக் கூர்ந்து நோக்கி அதன் நயத்தை உணர முற்படவேண்டும்.

II. உங்கள் குழந்தை இருப்பின் அதன் மழலை மொழிகளை எடுத்தெழுதுக. அவற்றின் பொருளையும் சிந்தித்து எழுதுக.

III. திருக்குறள் உரையைச் சுவடிகளில் படிக்கலாம்; ஆனல் உணர்வது குறைவு—இதனைத் தனி வாக்கியமாக மாற்றி எழுதுக.

திருக்குறள் உரையைச் சுவடிகளில் படித்தாலும் உணர்வது குறைவு.



PUBLIC LIBRARY

12 NOV

## 4. ஸ்விட்ஸர்லண்ட்

(சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி.ஏ., உலகம் சுற்றிய தமிழர்)

அரும்பதவுரை

பக்கம் 31

நீத்த - திறக்துவிட்ட
மனக்கண் - கற்பனை
கருதுவர் - நினைப்பர்
வாழ்க்கைத் துணைவி - மனைவி
அஞ்சல்கள் - தபால்கள்
வெள்ளமாக - அதிகமாக
சுணக்கமின்றி - தாமதமின்றி
கடிதில் - விரைவில்
அஞ்சல் - கடிதம்
நேர்மை - தகுதி
சீட்டு - ரசீது
விநாடி - செகண்டு
1 கிலோமீடர் - 1144 கெஜ தூரம்

பக்கம் 32

ஏனைய - மற்ற
அலுவலகங்கள் - வேலை செய்யுமிடங்கள்
விருந்தோம்பல் - விருந்தினரை உபசரித்தல்
முற்பகல் - காலை
ஆவலோடு - ஆசையோடு
பண்பாடுகளை - வழக்கங்களை
மாற்றம் - பதில்
ஆர்வம் - ஆசை
மின் ஆற்றல் - மின்சார சக்தி

பக்கம் 33

ஊழியர் - சிப்பந்தி, பணியாளர்
பொருத்தப்பட்டிருக்கும் - அமைக்கப்பட்டிருக்கும்
வாய்ப்பாக - வசதியாக
மகிழ் பயணம் - உல்லாசப் பிரயாணம்
கால் நடைகள் - ஆடு மாடுகள்
திங்கள் - மாதம்
பொறிகள் - இயந்திரங்கள்
காலக் குறிப்புச் சுவடி - கால அட்டவணை (Time Table)
வாயிலாக - மூலமாக
நாள் தாள் - காலண்டர்

பக்கம் 34

ஊர்தி - வண்டி
முன்னணியில் - முற்போக்கில்
பயணம் - பிரயாணம்
பாராட்டத் தக்கது - புகழத் தக்கது
பாடச் சுவடிகள் - பாடப் புத்தகங்கள்
அமைப்புகள் - ஏற்பாடுகள்
ஓவியம் - சித்திரம்
ஸ்விஸ் மக்கள் - ஸ்விட்ஸர்லாந்து மக்கள்
நிகழும் - நடைபெறும்
உயிரினக் கூடம் - மிருகக் காட்சி சாலை

பக்கம் 35

பூங்கா - பூஞ்சோலை (பார்க்)
எழிலில் - அழகில்
மன்பதை உணர்ச்சி - குடிமை உணர்ச்சி
வரைவர் - தீட்டுவர்
ஓம்புதல் - பாதுகாத்தல்
எழில் - அழகு
பயில - கற்க
மனப்பான்மை - எண்ணம்
பயிற்றும் - கற்பிக்கும்
வணிகர் - வியாபாரிகள்
நிறுவி - ஏற்படுத்தி
ஈடுபடா - சம்பந்தப் படாத
விளைவாக - பயனாக

பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

உறுதியாக
பெரும்பாலும்
ஏனைய
வாயிலாக
முன்னணியில்
அடிப்படை
மனப்பான்மை.

## பதப் பிரிவு

அலுவல் + அகம் = அலுவலகம்
சிறுமை + ஊர் = சிற்றூர்
சுணக்கம் + இன்றி = சுணக்கமின்றி
பூ + கா = பூங்கா.

## கேள்வியும் பதிலும்

*1. ஸ்விட்ஸர்லண்ட் என்றவுடன் எழும் நினைவுகள் யாவை?

ஸ்விட்ஸர்லண்ட் என்றவுடன் இயற்கை அழகுகள் பொருந்திய அமைதிக்கு அடையாளமான சிறுநாடு என்ற நினைவு பலருக்கு ஏற்படும். அரும் பெரும் தலைவர் நேருவின் மனைவி கமலாநேரு உயிர் துறந்த நாடு என்று சிலருக்கு நினைவுவரும். ஆனால் எல்லோருக்குமே தம் கைக் கடிகாரங்கள் அந்த நாட்டில் செய்யப்பட்டனவா? என்ற எண்ணம் எழும். அந்நாட்டில் அழகு நடமாடுகிறது. நீர்வளமும் இலக்கிய விஞ்ஞான வளமும் அங்கே பெருகி உள்ளன.

*2. ஸ்விஸ் நாட்டில் எல்லாம் எவ்வாறு விரைவாக நடைபெறுகின்றன?

ஸ்விஸ் நாட்டில் மக்கள் எல்லாக் காரியங்களையும் வெகு விரைவாகச் செய்கின்றனர். வாடகை மோட்டார்கள் கூட மணிக்கு 65 மைல் வேகத்தில் போகின்றன. தந்தி, ரிஜிஸ்தர் கடிதம் இவைகளுக்குச் சீட்டுத் தருவதில்லை. ஏனெனில் அதற்குள் காலதாமதம் ஆகிவிடுமாம். ஜப்பானியப்போர் நிறுத்த உடன்படிக்கையை ஸ்விஸ் மக்கள் பதினொரு விநாடிகளில் அமெரிக்காவுக்கு அறிவித்துப் போரை நிறுத்தினர். ஒரு டைப் மிஷினில் சில எழுத்துக்களை ஒரு ஸ்விஸ்காரர் ஐந்து விநாடிகளில் மாற்றித் தந்தார்.

*3. அந்நாட்டின் தபால் முறையைப் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார்?

ஸ்விஸ் நாட்டில் தந்தி ரிஜிஸ்தர் இவைகளுக்குச் சீட்டுக் கொடுப்பதில்லை. தனிக் கட்டணம் கட்டினால் சீட்டுக் கொடுப்பர். சீட்டு வாங்கினாலும் வாங்காவிட்டாலும் தந்தியும் ரிஜிஸ்தர் கடிதமும் கட்டாயமாக உரியவருக்குக் கிடைத்துவிடும். அஞ்சல்கள் விரைவில் அனுப்பப்பட வேண்டுமென்று ஒவ்வொரு ரயில் நிலையத்துக்கு எதிரிலும் அஞ்சல் நிலையங்கள் அமைத்துள்ளனர்.

4. ஸ்விஸ் அலுவலக வேலை நேரம் பற்றி உனக்கு என்ன தெரியும்?

ஸ்விஸ் அலுவலகங்கள் காலை 8 மணி முதல் 12 வரையிலும், பிற்பகலில் 2 மணி முதல் 6-30 மணி வரையிலும் திறந்திருக்கின்றன. சனிக்கிழமையும் நாள் முழுவதும் மக்கள் வேலை செய்வர். எல்லா நாடுகளிலும் உள்ளது போல ஞாயிறன்று வார விடுமுறை ஆகும்.

5. தமிழருக்கும் ஸ்விஸ் மக்கட்கும் உள்ள ஒற்றுமை என்ன?

தமிழ் மக்களைப் போலவே ஸ்விஸ் மக்களும் பெரும்பாலும் கிராமங்களில் வசிக்கின்றனர். கற்பனை, நகைச்சுவை உணர்ச்சி, விருந்தினரை உபசரித்தல், இசைப்பயிற்சி, கலையில் விருப்பம் முதலிய பண்பாடுகள் அவர்களிடமும் உண்டு. பழந்தமிழரைப் போலவே ஸ்விஸ் நாட்டு மக்களும் சிற்பக் கலையில் ஆர்வம் உடையவர்.

“ஜாதி இல்லை; அது சமூக ஏற்பாடே.” — விவேகானந்தர்.

***6. குடும்ப வாழ்க்கைபற்றி ஸ்விஸ் மக்கள் கருத்து என்ன ?**

ஸ்விஸ் மக்கள் சிறிய குடும்பமே வாழ்வை இன்பமளிக்கும் என்று அறிந்துள்ளனர். ஆசிரியரிடம் ஒருவர் மூன்றே குழந்தைகள் உள்ள குடும்பத்தைப் பெரிய குடும்பம் என்று குறிப்பிட்டார். "இது பெரிய குடும்பமா," என்று ஆசிரியர் கேட்டார். ஸ்விஸ் நாட்டில் இரண்டு குழந்தைகள் இருப்பதே அருமை என்று அவர் பதில் கூறினாராம்.

**7. ஸ்விஸ் நாட்டு ரயில்வேக்களைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

ஸ்விட்ஸர்லண்ட் நாட்டு ரயில்கள் எல்லாம் மின்சக்தியால் ஓடுகின்றன. டிக்கட் வாங்கும் பிரயாணி ஒரு தட்டில் பணத்தை வைத்து ஒரு பொத்தானை அமுக்குவர். பிரயாணிகளுக்கு டிக்கட்டும் ரயில் சிப்பந்திக்குப் பணமும் கிடைத்துவிடும். ரயில் இன்ன பிளாட்பாரத்தில் நிற்கிறது என்பதைத் தினத்தாள்களிலிருந்து எளிதாகக் கண்டு கொள்ளலாம். ரயில் ஓடும்போது மட்டும்தான் ரயில் கண்டக்டர் டிக்கட்டை வாங்கிப் பார்ப்பார்.

***8. ஸ்விஸ் நாட்டு ரயில்வேக்களின் சிறப்பியல்புகள் என்னென்ன ?**

இங்கு எல்லா ரயில்களும் டிக்கட் கொடுக்கும் கருவிகளும் மின்சக்தியால் இயங்குகின்றன. வெளி நாட்டு, உள்நாட்டு ரயில்களுக்காகத் தனித் தனி பான் ஷாப்புகள் உள்ளன. பிரயாணி ஒரு தட்டில் பணம் வைத்ததும் மற்றொரு தட்டில் டிக்கட் வரக்கூடிய கருவியொன்றும் இருக்கிறது. வெளி நாட்டு மக்கள் நன்மைக்காக ஏரி, மலைப்பயணங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். 90 ரூபாய் டிக்கட் ஒன்று வாங்கிவிட்டால் ஒரு மாதம் வரை எங்கு வேண்டுமானாலும் இரண்டாம் வகுப்பில் செல்லலாம். பிளாட்பாரத்துக்கென்று தனி டிக்கட்டோ, பிளாட்பாரத்தில் டிக்கட்டை வாங்கிப் பார்க்கும் வழக்கமோ கிடையாது. ரயில்வே காலக் குறிப்புச் சுவடியிலும் தினசரித் தாள்களிலும் ஒவ்வொரு ரயில் நிற்கும் பிளாட்பாரம் எண் இன்னதென்று குறிக்கப்பட்டிருக்கும்.

***9. புனிகுலர், ஏர்கேபிள் : குறிப்பு வரைக.**

இவை இரண்டும் ஸ்விஸ் நாட்டிலுள்ள போக்கு வரவு சாதனங்கள்.

**புனிகுலர் :** மாடிப்படி போல் வழி செய்யப்பட்டுள்ள மலைகள் மீது செங்குத்தாகச் செல்லும்.

**ஏர்கேபிள் :** இது மின்சார லிப்ட் போன்றது. சிறிய மலையிலிருந்து பெரிய மலைக்கு மின்சாரம் கம்பி மூலம் செல்லும். இதன் மூலம் தான் கோடையில் கால் நடைகளுக்கு உணவும் அனுப்பப்படுகிறது; அவற்றின் பாலும் இதன் வழியாகக் கொண்டு வரப்படும்.

**10. ஸ்விஸ் நாட்டில் தண்ணீர் மார்க்கங்களைப் பற்றிக் குறிப்பு வரைக.**

ஸ்விட்ஸர்லண்ட்டில் ஏரிகள் அதிகம். எனவே படகுகளே மிகுதியாகப் பயன்படுகின்றன. இந்நாடு உள் நாட்டில் உள்ளதால் கப்பல்கள் இல்லை. ஆனால் கப்பல் கட்டுதலும் அதைப் பற்றிய ஆராய்ச்சியும் இங்கு அதிகம்.

**11. ஸ்விஸ் நாட்டின் விமானங்களைப் பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?**

இந்த நாட்டு விமானங்கள் உள்நாடு, வெளி நாடுகளுக்குப் போகின்றன. மற்ற நாட்டு விமானங்களை விட இவற்றில் வசதி அதிகம். மேலும் இவைகளில் பிரயாணிகளுக்குச் சுவை மிக்க உணவும் பழங்களும் தரப்படும்.

**12. இந்நாட்டுப் பொது ஊர்திபற்றி உனக்கென்ன தெரியும் ?**

இந்நாட்டுப் பொது ஊர்தி சைக்கிள்தான். ரயிலில் போகும்போது கூட இவர்கள் சைக்கிளைத் தம்மோடு கொண்டு போவார்கள். சைக்கிள் நிறுத்தி வைப்பதற்கென்றே ரயிலில் தனி இடம் உண்டு. பொது இடங்கள், சாலைச் சந்திகள் இவைகளில் நிறைய சைக்கிள்களை நிறுத்த வசதிகள் உள்ளன.

**13. ஸ்விஸ் நாட்டில் மாணவர்களுக்கு என்னென்ன கற்றுக் கொடுக்கப்படுகின்றன ?**

குழந்தைகள் மாண்டிஸோரி முறையில் கற்பிக்கப்படுகின்றனர். சிறு கைத்தொழில்களும் கற்றுக் கொடுக்கப்படும். மாணவர்கள் விளையாட்டு, தொழில், படிப்பு இவற்றில் விருப்பம்போல் ஆராய்ச்சி செய்து கற்பர். வெளியிடங்களுக்குச் செல்வது, இயற்கையை அநுபவிப்பது, பொம்மை செய்தல் இவையும் கட்டாயக் கல்வியின் உட்பகுதிகள் ஆகும்.

***14. ஸ்விட்ஸர்லண்டு நாட்டுக் கல்வி முறையின் சிறப்பு இயல்புகள் யாவை ?**

புத்தகங்கள் மூலம் இல்லாமல் சூழ்நிலையைக் கவனித்துப் பொது அறிவு பெறுவதே சிறந்தது என்று எண்ணுகின்றனர். ஓவியப் பாடங்கள் உயிர்ப் பொருள்களை நேரில் வைத்தே நடைபெறும். மான் படம் வரைவதாய் இருந்தால் உயிரினக் கூட்டத்தில், மான் இருக்கும் இடத்துக்குப் போவார்கள். மாணவர் மான்களைப் பார்த்தே அதை வரைவார்கள்.

மேலும் " பிறர் கருத்தை மதிக்க வேண்டும். சமூக உணர்வு பெருகி, பொறாமையை ஒழித்து, உலக அமைதிக்காக உழைக்கவேண்டும்." என்ற உணர்ச்சி ஊட்டப்படுகிறது. அரசியலார் எட்டு ஆண்டு இலவசக் கட்டாயக் கல்வி முறையை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

**15. உயர்நிலைப் படிப்புக்கு உள்ள வசதிகள் யாவை ?**

இங்கு ஒன்பது பல்கலைக் கழகங்கள் உள்ளன. வைத்தியம், பொறியியல், ஓவியம், பயிர்செய்தல், இசை, காடு வளர்த்தல் முதலிய கலைகளைப் போதிக்கும் கல்லூரிகள் உள்ளன. ஜினிவாவில் உள்ள மொழி பெயர்ப்பாளர் கல்லூரியில் இருபத்து நான்கு மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. இந்நாட்டு வணிகர் ஏற்றுமதி இறக்குமதி ஆராய்ச்சிக்குரிய கல்லூரி ஒன்று ஏற்படுத்தியுள்ளனர்.

***16. இங்குக் கடிகாரத் தொழில் சிறந்துள்ளதற்குக் காரணம் என்ன?**

இந்நாட்டில் உள்ள நீயூச் சேட்டால் பல்கலைக் கழக ஆராய்ச்சி நிலையமும், அரசியலாருடைய வான்நிலை ஆராய்ச்சி நிலையங்களும் செய்யும் பேருதவி காரணமாகவே, இங்குக் கடிகாரத் தொழில் சிறந்துள்ளது.

***17. ஸ்விட்ஸர்லண்ட் சிறந்துள்ள காரணம் என்ன ?**

இந்நாட்டு மக்களின் உழைப்பு, நாட்டு வளம், போர் செய்யாத தன்மை, குறைவான மக்கள் தொகை, கைத்தொழில்கள் சிறந்து இருப்பது இவைகளால் ஸ்விட்ஸர்லண்டு சிறந்து விளங்குகிறது.

## பயிற்சியும் முயற்சியும்

1. என்னே அவர்களுடைய நேர்மை — இதைச் சாதாரண வாக்கியமாக மாற்றி எழுதுக.

அவர்களுடைய நேர்மை சிறப்பானது.

" பணியுமாம் என்றும் பெருமை." — வள்ளுவர்.

II. சுணக்கமின்றி அஞ்சல்களை............அந்த நாட்டின் மற்றொரு சிறப்பு —இதைத் தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

எல்லா ஊர்களிலும் ரயில் நிலையத்துக்கு எதிரிலேயே அஞ்சல் நிலையத்தை அமைத்திருக்கிறார்கள். இது அஞ்சல்களைச் சுணக்கமின்றி அனுப்ப உதவியாய் இருக்கிறது. இது அந்த நாட்டின் மற்றொரு சிறப்பு.

III. கோடிட்ட இடங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடுக :

ஒரு ஸ்விஸ் அன்பர் மற்றொருவரைப் பற்றிக் குறிப்பிடும்போது | | அவர் குடும்பம் பெரியது | என்றார் | | எத்தனை குழந்தைகள் | | என்று யான் ஆவலோடு கேட்க | | மூன்று | என்று அவர் குறிப்பிட்டார் | (பாடப் புத்தகத்தில் 32-ஆம் பக்கத்தைப் பார்த்து விடை அறிக.)

IV. ஸ்விட்ஸர்லண்டைப் பற்றி ஒன்றரைப் பக்கத்தில் ஒரு கட்டுரை எழுதுக.

V. தேசப்படத்தில் ஸ்விட்ஸர்லாந்து இருக்குமிடத்தைக் கண்டுபிடி.

## 5. பால் பண்ணை

(ம. ராதா கிருஷ்ண பிள்ளை, பி. ஏ., பி. எல், சென்னை கூட்டுறவு கூட்டுறவுக் கழகத்து முன்னாள் தலைவர்)

அரும்பதவுரை

**பக்கம் 36**

'அமுத மதுரப்பால்' - அமுதம் போன்ற இனிமையான பால்
நினைவூட்டுகிறது - ஞாபகப்படுத்துகிறது
உணவுற்றோர் - உண்பவர்கள்
பாரில் - உலகில்
பிணியற்றோர் - நோயில்லாதவர்
வல்லுநர் - வல்லவர், அறிஞர்
கருவுற்ற - கர்ப்பமுள்ள
முதியோர் - கிழவர்
இன்றியமையாத - அவசியமான
உண்டியாக - உணவாக

**பக்கம் 37**

திரிபு - ஒன்று வேறொன்றாக மாறி வருதல்
ஆன் — பசு
ஆன் ஐந்து - பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவை.
உகந்தவை - விருப்பமானவை
உறுதி - வலிமை
பயக்கும் - கொடுக்கும்
பேணி - காப்பாற்றி
தொடர்நிலைச் செய்யுள் - பொருளால் ஒரு கதையாகத் தொடர்ந்து வரும் காவியம்.
ஆக்கம் - உற்பத்தி

**பக்கம் 38**

ஒன்றிய - முதன்மையான
விழுக்காடு - விகிதம்
கறவை மாடுகள் - பால் கறக்கும் மாடுகள்
யாண்டில் - வருஷத்தில்
புலனாகிறது - விளங்குகிறது

**பக்கம் 39**

சிந்தியுங்கள் - யோசியுங்கள்
ஆறுதல் - மன அமைதி (திருப்தி)
நற்பேறு - அதிருஷ்டம் (பாக்யம்)

**பக்கம் 40**

அனைத்து நாட்டு - எல்லா நாட்டு
உடலுரம் - உடல் வலிமை
கணக்கிட்டு - அளவிட்டு
ஏறத்தாழ - சுமார்
தலைக்கு - ஓர் ஆளுக்கு
எஞ்சியதில் - மிகுந்ததில்

பருகப்படுகிறது - குடிக்கப்படுகிறது
பொதுக் கணக்கில் - சராசரியில்

பக்கம் 41

வாய்ப்பு - வசதி
ஊதியம் - வருவாய்
சார்பாக - உதவியாக
செட்டான - சிக்கனமான
உரிமையானவை - சொந்தமானவை
சிற்றூர் - கிராமம்
தொலைவிலுள்ள - மிகவும் தூரத்தில் உள்ள
கருத்து - கவனம்

பக்கம் 42

விரிவுற - அதிகரிக்க, பெருக்க
ஆக்கத்தை - பெருக்கத்தை
நலியாமல் - அழியாமல்
விழிப்பாய் - எச்சரிக்கையாக
பால் முட்டு - பால் பஞ்சம்
முட்டுப்பாடு - பற்றாக்குறை
மலிந்து - அதிகரித்து
கூட்டுமுறை பலர் சேர்ந்து முதல் வைத்துக் கூட்டாக வாணியம் செய்தல்
நகராட்சி மன்றம் - நகராளும் சபை (Municipality)
நிறுவனம் - ஸ்தாபனம்
இடரின்றி - தடையின்றி.

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

நினைவூட்டுகிறது
சுருங்கச் சொல்லின்
ஏறத்தாழ
ஓரளவு
முதன்மையான
நற்பேறு

## பதப் பிரிவு

நினைவு + ஊட்டுகிறது = நினைவூட்டுகிறது
நோய் + அற்ற = நோயற்ற
பெருமை + துணை = பெருந்துணை
கரு + உற்ற = கருவுற்ற
நன்மை + பேறு = நற்பேறு
கூட்டு + உறவு = கூட்டுறவு

## கேள்வியும் பதிலும்

*1. பாலின் சிறப்பு தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது?

(1) 'அமுத மதுரப்பால்' என்று சேக்கிழார் பாலை அமிழ்தமென்று பாராட்டியுள்ளார்.

(2) 'பாலும் நெய்யும் உணவுற்றோர், பாரில் கொடிய பிணியற்றோர்' என்று மற்றொரு தமிழறிஞரும் பாலுணவு கொள்ளுவோர் நோயற்ற வாழ்வு பெறுவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

2. பால் யார் யாருக்கு மிக இன்றியமையாத உணவாகும்?

சிறப்பாகக் குழந்தைகளுக்கும், கருவுற்ற பெண்டிருக்கும், முதியோர்க்கும், நோயாளிகளுக்கும் பால் மிக இன்றியமையாத உணவுப் பொருளாகும்.

*3. உணவுப் பொருள்களில் மிகச் சிறந்தது பால் என்பதற்குரிய காரணங்கள் யாவை?

(1) உடல் வளர்ச்சிக்கும் நோயற்ற வாழ்வுக்கும் பால் பெருந்துணையாக இருக்கிறது.

(2) குழந்தை, கருவுற்ற பெண்டிர், முதியோர், நோயாளி ஆகியோருக்குப் பால் மிக இன்றியமையாததாகும்.

(3) அரிசியுணவினால் கிடைக்காத பல உணவுச் சத்துக்கள் பாலைப் பருகுவதால் கிடைக்கின்றன.

(4) பாலில் வைட்டமின் ஏ, கொழுப்புச்சத்து, கால்ஸியம், பாஸ்பரஸ், புரோட்டீன் போன்ற பலவகையான உணவுச்சத்துக்களும் கலந்திருக்கின்றன.

(5) பாலின் திரிபுகளான தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியனவும் நம் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை.

*4. பால் குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும், நோயாளிகட்கும் தக்க உணவாவது எப்படி ?

குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின் ஏ. யைப் பாலிலிருந்து எளிதாகப் பெறலாம். பற்களும், எலும்புகளும் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய கால்ஸியமும், பாஸ்பரஸும் பாலில் காணப்படுகின்றன. இக்காரணங்களால் பால் குழந்தைகளின் சிறந்த உணவாக விளங்குகிறது.

பாலில் உள்ள கொழுப்புச்சத்துக்கள் எளிதில் சீரணிக்கக் கூடியவை. ஆகையால் இது முதியோர்க்கும் நோயாளிகளுக்கும் தக்க உணவாகப் பயன்படுகிறது.

*5. 'ஆனைந்து' என்பவை யாவை ? அவற்றின் சிறப்புக்கள் யாவை?

பாலும் அதன் திரிபுகளான தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியனவும் ஆன் ஐந்து எனப்படும். பால் அனைவருடைய உடல் வளர்ச்சிக்கும் ஏற்ற பூரண உணவாகும். பாலில் உள்ள உடல்வளர்ச்சிச் சத்துக்களான புரோட்டீன்கள் தயிரிலும் மோரிலும் அதிகமாகக் கலந்துள்ளன. நெய்யிலும் வெண்ணெயிலும் மிகச் சிறந்த வைட்டமின் ஏ என்னும் உணவுச் சத்துக் காணப்படுகிறது

கடவுளர்க்கும் இவை மிகவும் விருப்பமானவை என்று முன்னோர்கள் பாராட்டினர்.

6. பசுக்களை நம் நாட்டு மக்கள் எவ்வாறு மதிக்கின்றனர் ?

உடலுக்கு உறுதியளிக்கும் பாலைத்தருதவும் பசுக்களை நம் நாட்டினர் அன்போடு வளர்த்துப் போற்றி வந்திருக்கின்றனர். இக்காலத்திலும் மக்கள் பசுவைத் தெய்வமாக எண்ணிப் போற்றுகின்றனர். மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில் உள்ள சில அடிகள் பழங்கால மக்கள் பசுக்களை எவ்வாறு பாராட்டி வந்தார்கள் என்பதை விளக்குகின்றன.

*7. நம் நாட்டில் பால் தொழில் ஒரு முதன்மையான தொழில் என்பதை எவ்வாறு அறியலாம்?

பயிர்த் தொழில் நாடாகிய நம் தேசத்தில் இன்றும் பால் தொழிலே சிறந்த தொழிலாக விளங்குகிறது. டாக்டர் வ்ரைட் என்பவர் கணக்குப்படி நம் நாட்டில் ஏறக்குறைய 70 கோடி மணங்குப் பால் உற்பத்தியாகிறது என்று கணக்கிட்டுள்ளார். ஆகையால் இந்நாட்டில் பால் ஆக்கத்தின் மதிப்பு ஏறத்தாழ 300 கோடி ரூபா என்று அவர் கணக்கிடுகிறார்.

டாக்டர் அக்ராயிட் என்னும் அறிஞர் 2 கோடியே 20 லட்சம் டன் உண்டாகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நம் நாட்டில் பால் தொழில் ஒரு முதன்மையான தொழில் என்பதை அறியலாம்.

**8. நம் நாடு பால் பெருக்கத்தில் உலகத்தின் பிறநாடுகளின் எந்தெந்த அளவில் உள்ளது ?**

பால் பெருக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதன்மையானவை. அமெரிக்க நாடுகளுக்கு அடுத்த நிலையில் நம் இந்திய நாடே பால் பெருக்கத்தில் சிறந்தது. அமெரிக்காவைத் தவிர மற்ற நாடுகளெல்லாம் நம் நாட்டை விடக் குறைவாகத்தான் பால் தருகின்றன.

பாரதநாடு இங்கிலாந்து ஸ்காட்லந்தைப் போல் நான்கு மடங்குப் பாலேயும், டென்மார்க் நாட்டைவிட ஐந்து மடங்குப் பாலேயும், ஆஸ்திரேலியாவைவிட ஆறு மடங்குப் பாலேயும், நியூஸீலண்டைவிட ஏழுமடங்குப் பாலேயும் தருகிறது.

**9. நம் நாட்டில் என்னென்ன வகையான பால் எந்தெந்த விகிதத்தில் கிடைக்கின்றன ?**

நம் நாட்டுக் கூடுதல் பாலில் நூற்றுக்கு எருமைப்பால் 50 விழுக்காடு ; ஆட்டுப் பால் 3 விழுக்காடு ; பசுவின் பால் 44 விழுக்காடு.

***10. நம்முடைய மாடுகளின் கறவை மிகவும் குறைவு என்பதற்குச் சான்றுகள் தருக.**

(1) ஐரோப்பா, ருஷ்யா முதலிய நாடுகளில் எவ்வளவு கறவை மாடுகள் உள்ளனவோ, அவ்வளவு மாடுகள் நம் நாட்டிலும் இருக்கின்றன. ஆனல், அந்த மாடுகள் கொடுக்கும் பாலில் $\frac{1}{8}$ பங்குதான் நம்முடைய மாடுகள் கொடுக்கின்றன.

(2) கனடாவில் கிடைக்கும் பாலேப்போல் நான்கு மடங்கு பால் நம் பாரதநாட்டில் கிடைக்கிறது. ஆனல் அதற்காகக் கனடா நாட்டைவிட 18 பங்கு மாடுகளே நம் நாடு பெற்றிருக்கிறது.

(3) டாக்டர் வ்ரைட் கணக்குப்படி நம் நாட்டில் ஒரு கறவை மாடு ஓர் ஆண்டில் பொதுக் கணக்கில் 600 பவுண்ட் பாலேத்தருகிறது.

(4) அமெரிக்காவில் மாடு ஒன்று ஓர் ஆண்டில் 4 ஆயிரம் பவுண்ட் பாலும், எகிப்தில் 2500 பவுண்ட் பாலும் நியூஸீலண்டில் 5 ஆயிரம் பவுண்ட் பாலும் கிடைக்கிறது. 4 ஆயிரம் 5 ஆயிரம் எங்கே ? 600, 700 எங்கே ?

இக்காரணங்களால் நம் மாடுகளின் கறவை பிற நாடுகளேவிட மிகவும் குறைவு என்பதை அறியலாம்.

***11. நம் நாட்டுப் பாலின் தன்மை எவ்வாறு உயர்ந்திருக்கிறது ?**

நம் நாட்டுப் பசுப்பாலில் உள்ள கொழுப்புச் சத்து ஐரோப்பியப் பசுப்பாலில் உள்ள கொழுப்புச் சத்தைவிட நூற்றுக்கு 25 முதல் 50 பங்கு வரையில் மிகுதியாக இருக்கிறது. நம் நாட்டு எருமைப் பாலிலோ 2 மடங்கு மிகுந்த கொழுப்புச் சத்து காணப்படுகிறது. நம் நாட்டில் உள்ள

மாடுகள் கறக்கும் பாலின் அளவு மிகக்குறைவாக இருந்தாலும், அதில் உள்ள கொழுப்புச் சத்து மிகுதியாக இருப்பதனால் நம் நாட்டுப் பாலின் தன்மை உயர்ந்திருக்கிறது.

**12. நல்ல பால் தரும் பசு இனங்கள் யாவை?**

(1) சிந்துப் பிரதேசத்தில் உள்ள சிந்தி, தார், பர்கார் என்னும் இனங்களும், (2) பஞ்சாப்பில் சஹிவால் என்னும் இனமும், (3) கத்தியவாரில் காணப்படும் கிர் இனமும், (4) சென்னையில் உள்ள ஒங்கோல் இனமும் நல்ல பால் தரும் இனப் பசுமாடுகள்.

**13. எருமை மாடுகளில் நல்ல பால்தரும் இனங்கள் எவை எவை?**

எருமை மாடுகளில் (1) பஞ்சாப், ஐக்யமண்டலம், ராஜபுதனம், வடசிந்து ஆகிய மண்டலங்களில் உள்ள முர்ரா அல்லது டெல்லி எருமையும், (2) கத்தியவாரிலுள்ள ஜபாராபாடி என்னும் இனமும், (3) குஜராத்திலுள்ள சுர்த்தி அல்லது சரோட்டார் என்னும் இனமும், மேஹசானு என்னும் இனமும் நிறையப் பால் தரும் எருமை இனங்களாம்.

**14. இந்திய மக்களின் உணவு சத்தாகவும், சிறந்ததாகவும் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?**

1943-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உணவு,உணவுச் சத்து சம்பந்தமாக நடைப்பெற்ற அனைத்து நாடுகளின் மாநாட்டில் ஒவ்வொருவரும் பொதுக் கணக்கில் 24 அவுன்ஸ் பாலையாவது தினந்தோறும் உட்கொண்டால்தான் உடல் வலிமையுள்ளவராக வாழ முடியும் என்று கணக்கிட்டுள்ளார்கள்.

வளரும் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் 9 அவுன்ஸ் பாலாவது பருக வேண்டும்.

***15. ஒவ்வொருவரும் உட்கொள்ளும் பாலின் அளவு நம் நாட்டில் மிகவும் குறைவு என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.**

(1) ஆஸ்திரேலியாவில் ஒவ்வொருவரும் ஒவ்வொருநாளும் உட்கொள்ளும் பாலின் அளவு 44 அவுன்ஸ். (2) கனடாவில் 56 அவுன்ஸ், (3) டென்மார்க்கில் - 40 அவுன்ஸ், (4) இங்கிலாந்தில் 40 அவுன்ஸ், (5) நியூஸிலண்டில் 55½ அவுன்ஸ், (6) ஸ்விட்ஸர்லாண்டில் 49 அவுன்ஸ், (7) அமெரிக்காவில் 35¼ அவுன்ஸ். பாரதநாட்டிலோ 9 அவுன்ஸ்தான். அதிலும் சென்னையிலோ 4½ அல்லது 5 அவுன்ஸ். அந்த அளவிலும் ஏறத்தாழ நூற்றுக்கு 27 பங்குதான் பாலாக உட்கொள்ளப்படுகிறது. மற்றைய பகுதி நெய், வெண்ணெய் முதலிய உருவங்களில் உட்கொள்ளப்படுகிறது.

இக்காரணங்களால் நம் நாட்டில் பால் மிகவும் குறைந்த அளவிலேயே உட்கொள்ளப்படுகிறது என்பதை நன்கு உணரலாம்.

**16. பால் தொழில் பெருக்கப்பட வேண்டிய அவசியத்தை விளக்குக.**

ஒவ்வொருவரும் சரியான சத்துள்ள உணவில் ஒரு நாளுக்கு 8 அவுன்ஸ் பால் பாலாகவே உட்கொள்ள வேண்டும். அதன்படி கிடைக்கவேண்டிய 320 லட்சம் டன், பாலுக்குப் பதிலாக நம் நாட்டில் 230 லட்சம் டன் பால் மட்டுமே கிடைக்கிறது. அதிலும் கன்றுகள் குடித்ததுபோக மீதியில் 26 சதவீதமே பாலாகப் பருகப்படுகின்றது. அவ்வாறின்றிக் கிடைக்கும் மொத்தப் பாலில் மக்கள் பாதிப்பாலைப் பருகுவதாகக் கணக்கிட்டால் கூட 320 லட்சம்

டன் பாலை நாம் குடிக்கவேண்டும். அதற்குத் தற்போதைய பால் உற்பத்தியை 3 மடங்காகப் பெருக்கவேண்டியது மிக அவசியமாகும். அப்போது தான் மக்கள் நோயின்றி உறுதியாக வாழமுடியும்.

***17. பால் பண்ணை என்றால் என்ன? நம் நாட்டில் உள்ள பால் பண்ணைகளின் அமைப்பைக்குறித்து ஆசிரியர் கூறுவன யாவை?**

சிறந்த பால் பண்ணை என்பது தகுதியான முறையில் நில இட வசதிகளுடனும், சரியான கட்டிட ஏற்பாட்டுடனும், ஊதிய முறையில் பால் தொழில் புரிவதற்குச் சார்பாக 75 மாடுகளுடனும் நடத்தப் பெறுவதாகும். ஆனால் நம் நாடு முழுவதும் இத்தகைய பண்ணைகள் 80-க்கு மேல் இல்லை. அதிலும் பன்னிரண்டு பண்ணைகளே தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. மற்றவை ராணுவ, சிவில் பிரிவினர்களாலும், சமஸ்தானங்களாலும் நடத்தப்படுகின்றன.

***18. நம் நாட்டில் பால் பண்ணைகளைப் பெருக்குவதற்கு ஆசிரியர் கூறும் ஆலோசனைகள் யாவை? கூட்டுறவுப் பால் பண்ணைகள் எந்நாட்டில் சிறந்த முறையில் நடைபெறுகின்றன?**

நம் நாட்டில் பயிர்த்தொழில் புரிவோர் வறுமை நிலையில் இருக்கின்றனர். அதனால் அவர்களால் தனிப்பட்ட முறையில் பால் பண்ணைகளை நடத்த முடியவில்லை. சிற்றூர்களில் வேளாளர்கள் கூட்டுறவு முறைகளில் பால் பண்ணைகளை நடத்துவது நல்லது. அதனால் கால் நடைத் தீவனங்களை விலை குறைவாகப் பெறலாம். பாலைத் தகுந்த முறையில் விற்று நல்ல வருவாய் பெறலாம். சிறந்த முறையில் தொலைவில் உள்ள நகரங்களுக்குக் கூட அனுப்பலாம்.

இத்தகைய கூட்டுறவுப் பண்ணைகள் டென்மார்க் நாட்டில் மிகச் சிறந்த முறையில் நடைபெறுகின்றன.

***19. பால் தொழிலை விரிவுறச் செய்ய என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்?**

(1) மாடுகளுக்குத் தீவனங்கள் எளிதாகக் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

(2) இச் செயலில் அரசாங்கம் பேருதவி புரிய முன்வர வேண்டும்.

(3) மாடுகளின் தீனிப்பொருள்களைப் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

(4) நல்ல இனமாடுகளைப் பெருக்கிக் காப்பாற்ற வேண்டும்.

(5) மாடுகள் பலவகை நோய்களால் பிடிக்கப்பட்டு அழியாமல் எச்சரிக்கையாக இருந்து தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். அந்த அறிவைப் பலரிடமும் பெருக்கவேண்டும்.

**20. நகரங்களில் பால் பஞ்சத்தைப் போக்க என்னென்ன செய்தல் வேண்டும்?**

(1) நகரங்களில் பால் பஞ்சத்தைப் போக்க நகர்ப்புறங்களில் பால் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும்.

(2) பால் பண்ணைகளைக் கூட்டுமுறையில் அமைக்கலாம். இயலாவிட்டால் தனிப்பட்டவர்களே நடத்தலாம்.

(3) அரசாங்கம் அவர்களுக்குப் பலவகையிலும் உதவி புரியவேண்டும்.

(4) நகராட்சி மன்றங்களும் பால் பண்ணைகளை நடத்தலாம்.

**21. உலகத்தில் மிகப்பெரிய பால் பண்ணைகள் உள்ள நகரங்கள் யாவை?**

நியூஸிலேண்டில் வெல்லிங்டன் நகரமன்றம் நடத்தும் பால் பண்ணையில் ஓர் ஆண்டில் 7,053 பவுன் ஊதியம் மிஞ்சுகிறது. இலண்டன் முதலிய நகரங்களிலும் மிகப்பெரிய பால் பண்ணைகள் உண்டு.

**22. பால் பண்ணைகள் பெருகுவதால் உண்டாகும் நன்மை யாது?**

பால் பண்ணைகள் பெருகிக் குறைந்தவிலையில் தடையில்லாமல், எல்லோருக்கும் நல்ல பால் கிடைக்குமாறு செய்தால் இந்நாட்டு மக்களும் வீரராகவும், அறிஞராகவும் தனி வாழ்க்கை பெற்று அதனைச் சிறப்பாக நடத்துவார்கள்.

## பயிற்சியும் முயற்சியும்

I. நம் நாட்டுப் பால் பண்ணைகளை விருத்தி செய்யும் முறைகளைப் பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

II. முற்காலத்தில் மாத்திரமல்ல; இக் காலத்திலும் மாடு கன்றுகளைச் செல்வமாகவே நம்மவர் கருதுகிருர்கள்.—ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக.

முற்காலத்தில் மட்டுமன்றி இக்காலத்திலும் மாடு கன்றுகளைச் செல்வமாகவே நம்மவர் கருதுகிருர்கள்.

III. மக்களின் உடலுக்கு.......பேணி வந்திருக்கின்றனர்.—இதைத் தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

மக்களின் உடலுக்கு உறுதி பயப்பது பால். அப்பாலைத் தந்து உதவி செய்கின்றன பசுக்கள். அப் பசுக்களை நம் நாட்டினர் பெரிதும் அன்புடன் பேணி வந்திருக்கின்றனர்.

IV. உங்கள் ஊரில் பால் பண்ணை இருப்பின் அங்குச் சென்று அங்கு வளர்க்கப்படும் மாடுகள் என்ன இனத்தைச் சேர்ந்தவை என்றும், அவை எவ்வளவு கறக்கின்றன என்றும் விசாரித்துத் தெரிந்துகொள்.

V. உங்கள் வீட்டில் கறவை மாடு இருப்பின் அது கறக்கும் பாலின் அளவையும் உங்கள் குடும்பத்தினருக்குச் சுகாதார முறைப்படி வேண்டிய பாலின் அளவையும் ஒப்பிட்டுப்பார்.

# 6. அனலும் ஆவியும்

(N. K. வேலன், B. A.)

## அரும்பதவுரை

பக்கம் 43

பயன்படுத்துகிறோம் - உபயோகம் செய்கிறோம்
வான் ஊர்தி - ஆகாய விமானம்
நின்றுபோம் - நின்றுவிடும்
கனி - பழம்
மீண்டும் - மறுபடியும்
இறுக - கெட்டியாக, பலமாக
இடையில் - நடுவில்
இங்ஙனம் - இப்படி
இல்லாவிடில் - இல்லாவிட்டால்
குவித்து - ஒன்றாகச் சேர்த்து

பக்கம் 44

பொறிகள் - இயந்திரங்கள்
இயங்குகின்றன - வேலை செய்கின்றன
பல்வேறு - பலவிதமான
மிகுந்த - அதிகமான
ஆற்றல் - திறமை
எளிதாய் - சுலபமாக
ஞாயிறு - சூரியன்
ஏனைய - மற்ற
வான உலகங்கள் - கிரகங்கள்

நாம் வசிக்கும் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று நீங்கள் அறிவீர்கள் அல்லவா? நம் பூமியைப் போலவே வேறு அநேகம் கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சனி, செவ்வாய் முதலிய இத்தகைய கிரகங்கள் வான் உலகங்கள் என்று கூறப்படுகின்றன.

பக்கம் 45

தொலைவில் - தூரத்தில்
பெறுவது - அடைவது
கடுமையாக - மிகவும் அதிக உஷ்ணமாக
அனல் - நெருப்பு, சூடு
சிறிது சிறிதாக - கொஞ்சம் கொஞ்சமாக
சிவந்த - சிவப்பான
வெண்மையான - வெளுப்பான
மின் ஆற்றலினால் - மின்சார சக்தியினால்
சுடர்விட்டு - ஒளிவிட்டு
பெறினும் - அடைந்தாலும்
தீங்குகள் - கெடுதல்கள்
மிகுதியாக - மிக அதிகமாக
மடிவதையும் - இறந்து போவதையும்
அனைத்தும் - எல்லாம்
பயன்படுகின்றன - உபயோகம் ஆகின்றன.

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

பயன்படுத்துகிறோம்
இயங்குகின்றன
நாளடைவில்
இல்லாவிடில்
மிகுந்த ஆற்றலுடையன
சிறிது சிறிதாக

## பதப் பிரிவு

இரும்பு + பட்டை = இரும்புப்பட்டை
பல + ஆயிரம் = பல்லாயிரம்
பல + வேறு = பல்வேறு
ஆயிரம் + கணக்கான = ஆயிரக்கணக்கான

"மனத்தனையர் மக்கள் என்பார்." — நாலடியார்.

## கேள்வியும் பதிலும்

**1. உலகில் வெப்பம் இல்லாவிட்டால் ஏற்படும் விளைவுகள் யாவை ?**

உலகில் வெப்பம் இல்லாவிட்டால் நாம் நம் உணவுகளைச் சமைக்க முடியாது. இயற்கையில் கிடைக்கும் காய், கனி, கிழங்கு இவைகள்தான் உணவாகக் கிடைக்கும். மோட்டார், ரயில், கப்பல் முதலிய எல்லா இயந்திரங்களும் வேலை செய்யாமல் நின்றுவிடும்.

**2. வெப்பத்தினால் பொருள்கள் விரிவடைவதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.**

(1) இரும்புப் பட்டையைச் சூடாக்கிச் சககரத்தில் மாட்டுவது.

(2) வெப்பத்தினால் தண்டவாளம் விரிவடையும். ஆதலால் இரு தண்டவாளங்களுக்கிடையில் இடம் விட்டிருக்கிறது. இவற்றால் பொருள்கள் வெப்பத்தினால் விரிவடையும் என்பதை அறியலாம்.

***3. சக்கரங்களுக்கு இரும்புப் பட்டை போடுவது எப்படி ?**

போடவேண்டிய இரும்புப் பட்டையைச் சூடாக்கிச் சக்கரத்தில் மாட்டுவார்கள். பிறகு அதை மறுபடியும் குளிர வைப்பார்கள். முதலில் பட்டை, சூட்டினால் விரியும். இப்போது குளிர்ச்சியினால் சுருங்குவதால், சக்கரத்தை இறுகப் பிடித்துக்கொள்ளும்.

**4. தண்டவாளங்களுக்கு இடையே இடம் விட்டுவைப்பது ஏன் ?**




1, 2. தண்டவாளம்
3. இடைவெளி
4. மரக்கட்டை

வெப்பம் அதிகமானால் தண்டவாளங்கள் விரியும். அவை விரிவதற்கு இடம் வேண்டும். எனவே தண்டவாளங்களுக்கு நடுவில் இடம் விட்டு வைக்கிறார்கள். இல்லையேல் தண்டவாளம் மேற்புறம் வளைந்து விடும்.

***5. விறகிலிருந்து கரி உண்டாக்குவது எப்படி ?**

விறகில் தீ மறைந்து நிற்கிறது. விறகு நன்றாக எரியக் காற்று வேண்டும். வேண்டிய காற்று இன்றேல், அது கரியாகும். காட்டு மரங்களை வெட்டிக் குவிப்பார்கள். பிறகு தீயிட்டுக் காற்றுப்படாதபடி மண்ணால் மூடிவிடுவார்கள். இதனால் விறகு கரியாக மாறுகிறது.

**6. கரி, நிலக்கரி இவைகளின் உபயோகம் என்ன ?**

கரி மிகுந்த சூட்டோடு எரியும். எனவே இரும்பு, பொன் இவற்றை உருக்கக் கரி உதவுகிறது. நிலக்கரி கப்பல், ரயில் இவைகளில் நீரை நீராவியாக்க உதவும். இந்நீராவியால் அவை ஓடுகின்றன.

**7. தார் எவ்வாறு கிடைக்கிறது ? அதன் பயன் என்ன ?**

நிலக்கரியைக் காற்று நுழையாத இடத்தில் வைத்துக் காய்ச்சினால் தார் எண்ணெய் கிடைக்கிறது. இத்தாரிலிருந்து சாயங்கள், மருந்துகள், வாசனைப் பொருள்கள் முதலியவை எடுக்கப்படுகின்றன.

***8. ஆகாய விமானத்தில் ஏன் பெட்ரோலை உபயோகிக்கிறார்கள் ?**

பெட்ரோலினால் ஓடும் பொறிகள் எடை குறைந்தும் ஆற்றல் மிகுந்தும் இருக்கும். இவை எளிதில் வேண்டும் போது எளியதாய் ஓட்டத்தக்கவையா

யும் உள்ளன. வான ஊர்தியில் உள்ள பொறிகள் எடை குறைந்தும் ஆற்றல் மிகுந்தும் இருத்தல் வேண்டும். ஆகையால்தான் வான ஊர்தியில் பெட்ரோலைப் பயன்படுத்துகிறார்கள்.

**9. தீயின் தன்மை எவ்வாறு படிப்படியாக வளர்ந்தது?**

தீயைக் கண்டுபிடித்த உடனே, ஆதிமனிதன் உலோகங்களைக் காய்ச்சிப் பல கருவிகளைச் செய்து வந்தான். பிறகு நீரைக் காய்ச்சி ஆவியாக்கி அதனால் பல இயந்திரங்களை ஓட்டினர். இதற்குப் பிறகு பெட்ரோல் தோன்றியது. இப்பெட்ரோலை உபயோகித்து மோட்டார், ஆகாய விமானம் ஆகியவை ஓட்டப்படுகின்றன.

**10. சூரியனின் வெப்பத்தைப் பற்றிக் குறிப்பு எழுதுக.**

வான உலகங்கள் யாவும் ஆவி வடிவமாகவே இருக்கின்றன. அவற்றில் சூரியனைப் போல் சூடு தரும் பொருளை இதுவரை யாருமே உண்டாக்கவில்லை. இது மிகத் தொலைவில் இருப்பதால் அதன் வெப்பம் முழுவதும் நம்மை அடைவதில்லை. அதன் வெப்பத்தின் மிகச் சிறு பகுதியே இவ்வளவு கடுமையாக இருக்கிறதென்னின் அதன் முழு வெப்பமும் எவ்வளவு கடுமையாக இருக்கும்? சூரியனின் வெப்பம் சுமார் 6000 டிகிரி என்று கணக்கிட்டுள்ளனர்.

***11. எண்ணெய் விளக்குகள் எவ்வாறு எரிகின்றன?**

எண்ணெய் விளக்குகளில் திரி வழியாக எண்ணெய் மேலே வந்து ஆவியாகி எரிகிறது. திரியின் மீது தீக்குச்சியைக் கொளுத்தி வைக்கிறோம். இதனால் திரியிலுள்ள எண்ணெய் ஆவியாகி எரிகிறது. இப்போது உண்டாகும் சூடு காரணமாக மேன் மேலும் வரும் எண்ணெய் ஆவியாகி எரிகிறது. இவ்வாறு எண்ணெய் முழுவதும் சிறிது சிறிதாக ஆவியாகிறது.

***12. மின்சார விளக்கு எரிவது எப்படி?**

இரும்பைப் பழுக்கக் காய்ச்சினால் அது சிவந்த ஒளியைக் கொடுக்கும். அதை மிக அதிக உஷ்ணத்துக்குக் காய்ச்சினால் அது வெண்மை ஒளி தரும். அதுபோல மின் விளக்கிலுள்ள மெல்லிய கம்பி மின்சாரத்தினால் சூடாகி வெண்மையான ஒளி தருகிறது. மின்சாரம் கம்பி மூலம் பாயும் போது மட்டும்தான் இக்கம்பி சூடாகி ஒளிதரும். மின்சாரம் நின்றவுடன் கம்பி ஒளிதராது.

**13. அனலும் ஆவியும் பெரும்பாலும் அழித்தல் தொழிலுக்கே பயன்படுகின்றன? எப்படி?**

வெடிகுண்டுகள் போடுவதால் ஏற்படும் அனலினால் பல அழகிய பட்டணங்கள் இடிந்து பாழாகின்றன. லட்சக் கணக்கான மக்கள் உயிர் இழந்து மடிகின்றனர். நெருப்பைக் கக்கும் பல்வேறு வகையான குண்டுகளும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதலால் அனலும் ஆவியும் பெரும் தீங்கே விளைவிக்கின்றன.

## பயிற்சியும் முயற்சியும்

**1.** அதன் சிறு பகுதியே இவ்வளவு கடுமையாக இருந்தால், முழுவதும் எவ்வாறு இருக்கும்?—இதனைப் பொருள் மாறுபடாமல் செய்தி வாக்கியமாக மாற்றுக.

அதன் சிறு பகுதியே இவ்வளவு கடுமையாக இருந்தால், முழுவதும் மிக மிகக் கடுமையாக இருக்கும்.

"செல்வம் மிகுந்தால் கவலையும் மிகும்." — பெர்னார்ட் ஷா.

II. தீயின் தன்மைகளை அறிந்து கொள்வதற்கு முன் மக்கள் கற்களையே போர்க் கருவிகளாகக் கொண்டிருந்தனர்.—இதிலுள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றி எழுதுக.

தீயின் தன்மைகள் அறிந்து கொள்ளப்படுவதற்கு முன் மக்களால் கற்களே போர்க் கருவிகளாகக் கொள்ளப்பட்டிருந்தன.

III. தெரிந்து கொள்ளுங்கள்; அனலினாலும் ஆவியினாலும் தீங்கே மிகுதியாக விளைவது எப்படி என்று தெரிந்துகொள்ளுங்கள்; முதல் உலக மகாயுத்தத்திலும், இரண்டாம் உலக மகாயுத்தத்திலும் கோடிக்கணக்கான மக்கள் மடிந்துபோனார்கள். வி-1, வி-2 போன்ற குண்டுகளும் விஷ குண்டுகளும் வெளிவிட்ட அனலினாலும் ஆவியினாலும் கணக்கற்ற மக்கள் மாண்டனர். ஜப்பானின் அழகிய நகரமான நாகசாகி என்பது ஒரே அணுகுண்டில் பாழாய்ப் போயிற்று. இந்த நாட்களில் அணுகுண்டை விடப் பயங்கரமான ஹைடிரஜன் குண்டு, கோபால்ட் குண்டு என்பவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால், அனலும் ஆவியும் செய்யும் தீங்கே மிகுதி என்று தெரிகிறதல்லவா?

## 7. அருந்தமிழ்க் கலைஞர்

(T. செங்கல்வராய பிள்ளை, பி. ஏ., எல். டி., தலைமையாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சென்னை)

### அரும்பதவுரை

பக்கம் 46

மண்டிலம் - மாகாணம்
நிறுவி - ஏற்படுத்தி
தோற்றுவித்தவர் - ஏற்படுத்தியவர்
பண்டைய - பழமையான
புரவலர் - காப்பாற்றுபவர்
நுண்ணிய - நுட்பமான
வேள் - வள்ளல்
இடையறுது - இடைவிடாது
பெற்றியும் - தன்மையும்
ஈட்டுவதையே - சம்பாதிப்பதையே
இணங்கி - ஒப்புக்கொண்டு
ஆண்டகை - ஆண்களிற் சிறந்தவர்
கூர்த்த மதி - கூறிய அறிவு
நாவன்மை - பேச்சுத் திறமை
பல்கலைத்திறன் - பல வித்தைகளிலும் ஆற்றல்

பக்கம் 47

போாற்றல் - மிகுந்த திறமை
பொறிந்துள்ள - அடங்கியுள்ள
வருத்து - பிரித்து
தொடர்புறுத்தி - சம்பந்தப்படுத்தி
பொறித்துள்ள - எழுதிவைத்துள்ள
மாண்பு - சிறப்பு
பட்டயங்கள் - சாஸனங்கள்
கொணர்வார் - கொண்டுவருவார்
மதிப்புக்குரிய - பாராட்டுக்குரிய
ஈழநாடு - இலங்கை
ஒப்பற்று - நிகரில்லாமல்
பயின்றவர் - கற்றவர்
வியப்பன்று - ஆச்சரியமன்று
ஓதி உணர்தல் - படித்து உணர்தல்
பன்னிரு திருமுறை - தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரண்டு சைவ சாஸ்திர நூல்கள்
தலைப்பட்டார் - தொடங்கினார்
ஈர்த்தது - இழுத்தது
நயம் செறிந்த - இனிமை நிறைந்த
சொற்பெருக்கு - சொற்பொழிவு
கெழுமியது - நிறைந்தது
முன்னணியில் - முற்போக்கில்
திகழ்ந்தார் - விளங்கினார்
புலனுகும் - விளங்கும்

“இன்பம் துன்பத்தின் இடைவெளி.” — ஸெல்டன்.

### பக்கம் 48

எய்தவேண்டும் - அடைய வேண்டும்
பரவசம் - தன்னை மறந்த இன்பம்
செப்பியுள்ளார் - சொல்லியிருக்கிறார்
உவக்குமாறு - மகிழும்படி
தில்லை - சிதம்பரம்
சிற்றம்பலத்தான் - நடராசப் பெருமான்
சேவடி - சிவந்த பாதம்
சிற்றம்பலத்தான் சேவடி அடைந்தார் - இறந்துவிட்டார்
குழைய - உருக, இளக
விளிக்கும் - அழைக்கும்
ஓதும் வண்ணம் - பயிலும்படி
நிகழ்ந்திலது - நடக்கவில்லை
குருமணி - ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்
சிவிகை ஏந்துவோர் - பல்லக்குத் தூக்கிகள்
பான்மை - தன்மை

### பக்கம் 49

குன்றி - குறைந்து
எள்ளளவும் - சிறிதும்
திளைத்து - மூழ்கி
பொருளற்ற - அர்த்தமில்லாத
பரிபக்குவம் - சிறந்த பக்குவநிலை
கிரியைகள் - மதசம்பந்தமான அலுவல்கள்
நீழல் - நிழல்
கசிந்தனர் - உருகினர்
பொன்முகம் - அழகிய முகம்
நினைந்து - எண்ணி
மாண்புமிக்க - பெருமை மிகுந்த
விண்ணுலகு - வானுலகம்
தொகுத்து - சேர்த்து
சொற்பொலிவு - சொல்லழகு
விளித்து - அழைத்து
முடங்கல் - கடிதம்

### பக்கம் 50

பெருந்தகை - பெரியார்
பழகினும் - பழகினாலும்
ஈறாக - முடிவாக
பற்றற்ற - ஆசையில்லாத
தகைமை - தன்மை
இளஞ்சிறார் - சிறுவர்கள்
குழாத்தில் - கூட்டத்தில்
"உவப்பத் தலைக்கூடி...தொழில்"
பலரும் மகிழும்படியாக மக்களிடம் கூடிப் பழகி இனி இவரை மறுபடியும் எப்போது பார்ப்போமோ என்று எண்ணி மனம் வருந்தும்படி அவர்களை விட்டுப் பிரிதலே கல்வியில் சிறந்த புலவர்களின் தொழிலாகும்.
எடுத்துக்காட்டு - உதாரணம்
விருந்து புரந்து - விருந்து கொடுத்து
தமர் - தம்மைச் சேர்ந்தவர், உறவினர்
பாராட்டுவது - நினைப்பது
நைந்து - வருந்தி
ஒத்த - ஒரே தன்மையான
அருந்தவக்குரிசில் - அரிய தவம் உடைய, ஆண்களிற் சிறந்தவர்
இணையடி – இரண்டடிகள், பாதங்கள்.

### பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

அளவிலா
ஈடுபட்டு
ஒப்பற்று
சிந்தை
செலுத்து
அழியாப்புகழ்
தலைப்பட்டார்
மேன்மேலும்
எள்ளளவும்
ஒப்புயர்வின்றி
உளம்நைந்து
முதன் முதல்
பரவசம்

"அமிழ்திலிருந்தே தோன்றியது தமிழ்." — நாமக்கல் கவிஞர்.

### பதப் பிரிவு

| | |
|---|---|
| அளவு + இலா = அளவிலா | எள் + அளவும் = எள்ளளவும் |
| ஆண் + தகை = ஆண்டகை | இளமை + சிறுர் = இளஞ்சிறுர் |
| பெருமை + ஆற்றல் = பேராற்றல் | பற்று + அற்ற = பற்றற்ற |

## கேள்வியும் பதிலும்

**1. கரந்தையில் புலவர் கல்லூரி நிறுவியவர் யார் ?**

கரந்தையில் புலவர் கல்லூரி நிறுவியவர் 'தமிழ்ப் புரவலர்', 'தமிழ் வேள்' என்று புகழ்பெற்ற கரந்தை த. வே. உமாமகேஸ்வரன் பிள்ளையவர்கள் ஆவார்.

**2. கோவிந்தசாமிப் பிள்ளையின் பெருமைகள் யாவை ?**

கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் சிறந்த தமிழ்க் கலைஞர். அவர் உமா மகேஸ்வரன் பிள்ளையின் மதிப்புக்குரியவர். அவருடைய அளவற்ற அன்புக்கு ஆளாகி, தமிழ்நாடும் தமிழ்க் கலையும் பழம் பெருமை ஓங்கிச் சிறந்து வளரப் பெருந்தொண்டு செய்தவர் கோவிந்தசாமிப் பிள்ளை ஆவார்.

**3. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களின் கல்விப் பயிற்சியைப்பற்றிச் சுருக்கி வரைக.**

அவர் சிறந்த அறிவும் இடையறாத கல்விப் பயிற்சியும் பெற்றவர். 1920-இல் பள்ளியிறுதி வகுப்புத் (S.S.L.C) தேர்வில் பெரும் புகழுக்குரிய முறையில் வெற்றி பெற்றார். பிறகு திருச்சியிலுள்ள ஸெயின்ட் ஜோஸப் கல்லூரியில் இண்டர்மீடியட், பி. ஏ. ஆனர்ஸ் ஆகிய தேர்வுகளுக்கும் பயின்று இரு பரீட்சைகளிலும் சிறப்புடன் விளங்கிப் பட்டம் பெற்றார்.

**4. பிள்ளையவர்கள் செய்த தொழில்கள் யாவை ? அவற்றினின்று வெளியாகும் அவர் பண்புகள் எவை ?**

முதலில் அவர் தம் நண்பர்களுடைய விருப்பத்திற்கு இணங்கி சென்னை சட்ட சபையில் வேலை செய்தார். அங்கேயே இருந்திருப்பின் அவர் சிறந்த பதவியைப் பெற்றிருக்கலாம். ஆனால் விரைவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராக அமர்ந்தார். இதனால் அவர் பொருள் ஈட்டுவதையே முதல் நோக்கமாகக் கொண்டவரல்லர் என்பது விளங்கும்.

**5. பிள்ளையவர்களின் அறிவாற்றல் எவ்வாறு விளங்கியது ?**

பிள்ளையவர்கள் கணக்கற்ற நூல்களைத் தொடர்ந்து கற்று வந்தார். அதனால் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் சிறந்த புலமை உடையவராக விளங்கினார். நம்நாடு, மற்றைய நாடுகள் வரலாற்று ஆராய்ச்சியிலும் இலக்கிய ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கினார். இலக்கியங்களில் செறிந்துள்ள கருத்துக்களையும், குறிப்புக்களையும் சேர்த்துப் பொருள்களை வகைப்படுத்தி உணர்வதிலும், உணர்ந்து அவற்றைத் தெளிவாகப் பிறர்க்கு உரைப்பதிலும் பேராற்றல் உடையவரானார். மேலும் கல் வெட்டுக்கள், பழங்காலப் பட்டயங்கள், செப்புத் தகடுகளில் உள்ள கருத்துக்கள் இவற்றை ஆராய்ந்தார். பழங் கோயில்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் இவைகளிலும் இவர் ஆராய்ச்சி செய்தார்.

"உண்மை நண்பன் உடலின் உறுப்பு."—ஔவை.

***6. பிள்ளையவர்களின் ஆராய்ச்சித் திறமையை விளக்குக.**

இவர் பழங்காலக் கோயில்களிலும் குகைகளிலும் சென்று, இருளடைந்த குகைக் கோயில்களிலெல்லாம் உள்ள சிற்பம், ஓவியம் இவற்றை ஆராய்வார். ஓவியத்தில் திறமை பெற்ற இவர், விளக்கு வெளிச்சத்தில் அவ்வோவியங்களையெல்லாம் அப்படியே ஏட்டில் வரைந்து கொள்வார். இவ்வாறான ஆராய்ச்சி இவர்க்கு வடநாட்டிலும் பெரும்புகழ் தேடித்தந்தது. இவர் இலங்கைக்குச் சென்று அங்குச் செய்த தமிழ் உரைகளினால் அங்கும் அழியாப் புகழ் பெற்றார்.

***7. அவருடைய தமிழ்த் திறமை பெருகியதெப்படி ?**

அவர் சங்கத் தமிழ் நூல்கள், மெய்கண்ட சாத்திரங்கள், பன்னிரண்டு திருமுறைகள் இவைகளைப் பெரு முயற்சியுடன் ஓதி உணரத் தொடங்கினார். இதனால் அவர் தமிழ் மகாநாடுகள், சைவசித்தாந்த மகாநாடுகள் ஆகியவற்றில் பெரிதும் பங்கு கொள்ளலானார். நயங்கள் நிறைந்தனவும், பொருள் நிறைந்தனவுமான இவர் சொற்பொழிவுகளின் காரணமாக அவர் தமிழ்ப் புலவர் அவைகளின் முன்னணியில் வைக்கப்பட்டார். இக்காரணங்களால் அவருடைய தமிழறிவின் மேன்மை புலப்படுகின்றது.

**8. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் இரு மொழிகளிலும் வல்லவர் என்று எவ்வாறு தெரிகிறது ?**

அவர் ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் புலமை மிகுந்தவராக விளங்கினார். அவருடைய இருமொழித் திறமை, அவர் திரிசிரபுரம் வானொலியில் பேசியுள்ளவை, தமிழ்ப் பொழில், கரந்தை வெளியீடுகள், கரந்தை வெள்ளி விழாக் கட்டுரைகள் ஆகியவற்றால் விளங்குகிறது.

**9. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் இசையிலும் நாடகத்திலும் திறமை உள்ளவர் என்பது எப்படி விளங்கும் ?**

காவியங்கள் எழுதி, ஓவியங்கள் தீட்டிப் புகழும் சிறப்பும் பெற்ற அவர், இசைத் தமிழ்ப் பாடல்களைப் பண்ணோடு பாடிப் பரவசமடைவார். தமிழ் நாட்டு நாடகக்கலை மேன்மை பெற்று வளர்ந்து, பழங்காலத்தில் இருந்த சிறப்பை அடைய வேண்டும் என்று அவர் பலமுறையும் கூறுவார். பல்கலைக் கழக மாணவர்களோடு சேர்ந்து நாடகத்தில் நடிப்பார். மாணிக்க வாசகர் வரலாற்றைத் தில்லைத் தமிழ்க் கழகத்தார் நடிக்கவிருந்தனர். அதில் அவர் ஞானாசிரியனாக நடிக்க இருந்தார். நாடகம் நடிப்பதற்குள் இறைவன் திருவடிகளை அடைந்தார்.

**10. பிள்ளையவர்கள் ஞானியாரிடம் மிகவும் அன்புடையவர் என்பதை எங்ஙனம் அறியலாம் ?**

பிள்ளையவர்கள் திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளோடு மிகுந்த தொடர்பு கொண்டு பழகி வந்தார். பிள்ளையவர்கள் ஞானியார் தலைமையில் உரை நிகழ்த்தும் போதெல்லாம் அடிகளை " என் குருமணி " என்று அகங் குழைய விளிப்பார்.

***11. பிள்ளையவர்கள் அடிகளின் சொற்பொழிவில் ஆர்வம் மிக உடையவர் என்பதைப் புலப்படுத்துக.**

சென்னையிலிருந்த பிள்ளையவர்கள் கோவூரில் சுவாமிகள் உரை நிகழ்த்துவதறிந்து அதைக் கேட்க விரைந்து சென்றார். அன்று சொற்

" அன்பெனும் அச்சே உலகிற்கு உறுதுணை." — எஸ். ஜே.

பொழிவு செய்யாமல் அடிகள் சேக்கிழார் விழாவைக் காணக் குன்றத்தூருக் குப் பல்லக்கில் போனார். பல்லக்குத் தூக்கிகள் "வேல் முருகா சாம்பசிவம் சாம்பசிவம் வேல் முருகா" என்று பாடிக்கொண்டு வேகமாகப் போயினர். கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் பல்லக்கோடு அவ்வளவு விரைந்து நடக்கும் உடல் நலங்கொண்டவராக இல்லை. ஆனாலும், குன்றத்தூர் சென்று அடிகளைக் காணவேண்டுமென்ற எண்ணத்தால் சிறிதும் களைப்பும் சலிப்பும் இல்லாமல் அப்பாடலின் இன்பத்தில் தாமும் ஈடுபட்டுக் களிப்போடு வழி நடந்தார்.

**12. பிள்ளையவர்கள் மறைவு குறித்து மக்கள் எவ்வாறு துன்புற்றனர்?**

பிள்ளையவர்கள் பரமன் அடியை அடைந்துவிட்டது வருந்துவதற்குரிய தன்று. ஆனால் தமிழ்நாடு மிகச் சிறந்த ஒரு தமிழ்த் தொண்டரை இழந்துவிட்டது; அவருடைய குடும்பமக்கள் ஆதரவற்றுப் போய் விட்டனர்; நண்பர்கள் ஈடும் உயர்வும் இல்லாத அன்பர் இறந்ததால் பெரு வருத்தம் உற்றனர்; மாணவர்கள் சிறப்பு மிக்க ஆசிரியர் மறைந்து விட்டதால் மனம் தடுமாறித் தேம்பினர்.

***13. பிள்ளையவர்களின் சிறந்த தமிழ்த் தொண்டுகள் யாவை?**

பிள்ளையவர்கள் தம்முடைய ஆராய்ச்சித் திறமையாலும், சங்க நூல்களில் இருந்த புலமையாலும் எழுதிய நம்நாட்டு வரலாற்று ஆராய்ச்சி நூல் முதற் பகுதியை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் வெளியிட்டனர். தமிழ் ஓதி மாணவர்கள் பெரும்பயன் அடையவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு சிதம்பரத்தில் தில்லைத் தமிழ்க் கழகம் ஏற்படுத்தி வளரச் செய்தார். தென்னாட்டுச் சிற்பக்கலை, ஓவியக்கலை வரலாறு இவை பற்றிய அரிய விரிவான நூல் ஒன்று வெளியிடுவதற்குப் பல குறிப்புக்களைச் சேர்த்து வைத்திருந்தார். ஆனால் நூல் வெளியாகுமுன் மறைந்தார்.

**14. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களின் கடிதம் எழுதும் திறம் பற்றி எழுதுக.**

அவர் யாருக்குக் கடிதம் எழுதினாலும் தமிழ் மொழியிலேயே எழுதத் தொடங்கினர். அவருடைய கடிதங்களைப் படிக்கையில் மேல் நாட்டு அறிஞர்களின் கடிதத் தொகுதிகளைப் படிக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறதோ, அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதற்குக் காரணம் அவருடைய கடிதங்களில் காணப்படும் எளிய இனிய நடையும், பொருட்செறிவுமே ஆகும். தம் கடிதமொன்றில் ஒரு நண்பரை, கல்வியினும் இனிய நண்ப என்று அழைத்திருக்கிறார். இது போல் புதிய இனிய சொற்றொடர்கள் அவர் கடிதங்களில் நிறைந்திருக்கும்.

***15. அவர் பிறருடன் பழகும் தன்மையை விளக்குக.**

அப்பெரியாருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாலும், அதுவரையில் தாம் படித்தும் கேட்டும் அறியாத பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். அதனால் சில விநாடிகள் பழகியவரும் உள்ளம் பண்படுவார்கள். சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரும் அவருடைய இனிய, அரிய பேச்சுக்களில் ஈடுபடுவார்கள். ஓய்வு நேரங்களில் அவர் மிகவும் வேடிக்கையாகப் பேசி, தம்முடைய நண்பர்களையும் சிறு குழந்தைகளையும் மகிழச் செய்வார். அவருடன் இருப்பினும் நடப்பினும் சில

நாட்களே பழகினாலும் அவர் நட்பு பலகலை உணர்ந்த புலவர்கள் பலர் நடுவில் இருந்து பழகியது போன்ற பலனைத் தரும். அவர்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில்"—என்னும் குறட்பாவுக்கு உதாரணமாக விளங்கினார்.

*16. பிள்ளையவர்களின் அருங்குணங்களை விளக்குக.

15-ம் கேள்வியின் விடையோடு கீழ் வருவனவற்றையும் சேர்த்து எழுதுக.

அவர் கூர்த்த மதியும், குறைவிலாக் கல்வியும், பல்கலைத் திறனும் நாவன்மையும் படைத்தவர். அவருடைய வீட்டிற்குச் செல்பவர்களுக்கு எல்லாம் விருந்தளித்துக் காப்பார். உறவினர் அயலார் என்ற வேற்றுமை பாராட்டவே மாட்டார். எத்தகையவராயினும் பிறருக்குத் துன்பம் வந்தால் தாம் மனம் நொந்து வருந்திக் கண்ணீர் விடுவார். மகிழ்ச்சிக்கு உரியதைப் பிறர் பெற்றுவிட்டால், தாமே அதைப் பெற்றதாக எண்ணி மனம் களிப்பார். அவர் உள்ளம் கனிந்து முறுவலிக்கும்போது பிறர்க்கு ஓர் இன்பம் உண்டாகும். அவர் தம் அன்னை சொல்லை எந்த நாளிலும் சிறிதும் மீற மாட்டார். அவருக்கு அன்னை சொல்லே அமிர்தம் ஆகும்.

17. நூல்களை வாங்குவதில் பிள்ளையவர்களுக்கு மிக்க ஆவல் உண்டு என்பதை எப்படி அறிவாய்?

அவர் மிகச் சிறந்த புலவராயினும், தம்முடைய ஊதியத்தில் பெரும் பாகத்தைப் புத்தகங்கள் வாங்குவதிலேயே செலவு செய்தார். அவர் பிற நண்பர்களுக்கு உணவு உடை தரும் வழக்கம் போல் அவர் அரிய நூல்களைத் தம் நண்பர்களுடைய சுவைக்குத் தக்கபடி தாமே வாங்கி, வாங்கிய நூல்களை அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விடுவது வழக்கம்.

## பயிற்சியும் முயற்சியும்

I. ஓவியத்திலும் திறமைபெற......அமைத்துக் கொணர்வார்—இதைத் தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

இவர் ஓவியத்திலும் திறமை பெற்றவர். இருளடைந்த கோயில்களிலெல்லாம் செல்வார். விளக்கு வெளிச்சத்தில் சுவர் ஓவியங்களாக உள்ளவற்றைக் காண்பார். அவற்றை உள்ளது உள்ளவாறே ஏட்டில் தீட்டியமைத்துக் கொணர்வார்.

II. அவர் புன்னகைபூத்த பொன்முகம் மறைந்துவிட்டது; ஆனால் அவர் புகழ் அழியாதது — ஒரே வாக்கியமாக எழுதுக. அவர் புன்னகைபூத்த பொன்முகம் மறைந்துவிட்டாலும் புகழ் அழியாதது.

III. பிள்ளையவர்களின் சிறப்புக்கள்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

IV. உங்கள் பள்ளிக்கூட நூல் நிலையத்தில் பிள்ளையவர்கள் இயற்றிய தமிழ் நாட்டு வரலாறு இருப்பின் அதனை வாங்கிப் படித்துப் பாருங்கள்

V. பிள்ளையவர்கள் கடிதம் எழுதும்போது தம் நண்பர்களைக் 'கல்வியினும் இனிய நண்ப' என்று விளித்ததுபோலவே 'அன்புக்களஞ்சியமாகிய நண்ப', 'அன்புருவமான நண்ப' என நீங்கள் புதிய சில தொடர்களை எழுதப் பயிலுங்கள்.

"கிட்டாதாயின் வெட்டென மற." — ஔவையார்.

# 8. ஊர்ச் சபையமைப்பும் அதன் கடமையும்

(பண்டித. எல். உலகநாத பிள்ளை,

பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு)

அரும்பதவுரை

**பக்கம் 51**

ஆணைப்படி - கட்டளைப்படி
அரசிறை - அரசனுக்குக் கட்ட வேண்டிய வரி
ஊர்தோறும் - ஒவ்வொரு ஊரிலும்
ஈராண்டு - இரண்டு வருடம்
காணிக்கடன் - நிலவரி
தண்டம் - அபராதம்
பரிச்சாரகம் - ஏவல்
அன்னவரை - அவர்களை
சாசனங்கள் - கல்வெட்டுக்கள்
ஈண்டு - இங்கு
உரைப்பாம் - கூறுவோம்
வேலி - ஐந்து காணிநிலம்
ஈட்டிய - சம்பாதித்த

**பக்கம் 52**

தூய - பரிசுத்தமான, குற்றமில்லாத
இத்தகையோர் - இப்படிப்பட்டவர்
மறை - வேதம்
பாடியம் - சங்கரர், இராமானுஜர், மத்வர், நீலகண்ட சிவாசாரியார் ஆகியோர் வேதங்களுக்கும் பிரம சூத்திரத்துக்கும் எழுதிய பேருரைகள்.
இறுத்தற்கு - செலுத்துவதற்கு
அறத்தாற்றில் - தரும வழியில்
இழுக்கின்றி - தவறில்லாமல்
வல்லுநர் - வல்லவர்கள்
கோடற்கு - கொள்ளுவதற்கு
சிற்றவ்வை - சிறிய தாயார்
பேரவ்வை - பெரிய அன்னை
வவ்வினோர் - அபகரித்தவர்
ஆராய்வின்றி - யோசியாமல்
கழுவாய் - பிராயச்சித்தம்
கூடலேகை - கள்ளக் கையெழுத்துப் போடுதல்

**பக்கம் 53**

பாத்தைமை ஒழுக்கம் - பொது மகளிருடன் பழகும் ஒழுக்கம்
தர்மகிருத்தியம் - அறச்செயல்
விதி - திட்டம்
குறைவற - குறைவில்லாமல்
கடை காணும் - நிறைவேற்றும்
வாயோலை - கட்டின் மேலாக எல்லா ஓலைகளையும் ஒன்று சேர்த்துக் கட்டப்பயனாகும் ஓலை.
இன்னதென்று - இப்படிப்பட்டதென்று
பிறிதொரு - மற்றொரு
கரணத்தான் - ஊர்ச் சபையினர் கட்டளையைச் செய்பவன், கணக்கன்
அகங்கையில் - உள்ளங்கையில்

**பக்கம் 54**

முன்னையிற் போல் - முன்போல்
பதினெண்மர் - பதினெட்டுபேர்
அன்று தொட்டு - அன்றுமுதல்
தளை - விலங்கு மாட்டுதல்
திரட்டப்படும் - சேர்க்கப்படும்
ஒழுங்குற - தக்க முறையில்

**பக்கம் 55**

சதுர் வேதி மங்கலம் - நான்கு வேதங்களையும் உணர்ந்த அந்தணர்களுக்கு அளிக்கும் வரியில்லாத நிலம்.
காளம் - ஒருவகை வாத்தியம்
இன்றியமையாத - மிக அவசியமான
பணித்தவற்றை - கட்டளையிட்டவைகளை
நாழி - ஒரு படி
கழஞ்சு - பன்னிரண்டு பண எடையுள்ள நிறை
இணை - இரண்டு
கூறை - புதிய ஆடை
ஊறுபாடு - துன்பம்
ஆக்கினை - தண்டனை

---

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

ஊர் தோறும்
குறைவற
பழுதுருமல்
உறுதி மொழி
தனித்தனி
ஒருங்கு சேர்த்து
இன்றியமையாத
பணித்தவற்றை

## பதப் பிரிவு

தம் + தம் = தந்தம்
அரசு + இறை = அரசிறை
அறத்து + ஆறு + இல் = அறத்தாற்றில்
இழுக்கு + இன்றி = இழுக்கின்றி
பழுது + உருமல் = பழுதுருமல்

## கேள்வியும் பதிலும்

**1. இராசராசன் சாசனங்களிலிருந்து ஊர்ச்சபையினர் காரியங்களைப் பற்றி அறிவன யாவை?**

(1) ஊர்ச்சபையினர் தங்கள் ஊர்களில் உள்ள நிலங்கட்கு வரி விதித்து அதை வாங்கி அரசனுக்குச் செலுத்தினர். (2) இரண்டு மூன்றாண்டுகள் வரி கொடுக்காதவர் நிலங்களைப்பறித்து ஊர்ப் பொதுவாக்கி விற்றனர். (3) நாட்டைச் சுற்றிப்பார்த்து நன்மை தீமைகளை அறிந்து ஏற்றவாறு குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுத்தார்கள். (4) இராசராசேச்சுரத்துக்கு மெய்க்காப்பாளர், கணக்கப்பிள்ளைகள், பணியாளர்கள் ஆகியோரை அனுப்பி வந்தார்கள்.

**2. ஊர்ச்சபை உறுப்பினர்கள் யாவர்?**

சம்வத்சரவாரியர், தோட்டவாரியர், ஏரிவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியர் என்போர் ஊர்ச்சபை உறுப்பினர் ஆவர்.

**3. ஊர்ச்சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் தகுதிகளை விளக்கிக் கூறுக.**

(1) காணிக்கடன் செலுத்துதற்குத் தகுந்த கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவர்.

(2) மறைகளையும் ஆகமங்களையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்து அவற்றைப் பிறர்க்குணர்த்த வல்லவர்.

(3) காரியம் நிறைவேற்றுவதில் திறமை உடையவர்.

(4) முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டு எழுபத்தைந்து வயதுக்கு உட்பட்டவர்.

(5) நல்வழியில் சம்பாதித்த பொருளும் தூய வாழ்க்கையும் உடையவர்.

(6) மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்டு எந்தக்காரிய நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராக இருக்கிராதவர்.

(7) மேலும் அரைக்கால்வேலி நிலமே உடையவராய் ஒரு மறையைக் கற்றவராய் நான்கு பாடியங்களுள் ஒரு பாடியத்தைப் பிறர்க்கு உணர்த்தும் ஆற்றல் உடையவராய் இருப்பவரும் ஊர்ச்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தற்கு உரியவராவர்.

"ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன் இனிதே."—பூதஞ்சேந்தனர்.

**4. ஊர்ச்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் தகுதிகளைச் சுருக்கிக் கூறுக.**

சுருங்கக் கூறுமிடத்து (1) காணிக்கடன் செலுத்துதற்கேற்ற நிலமும் (2) சொந்த மனையும் (3) தரும வழியில் சம்பாதித்த பொருளும் உடையவராய் (4) கல்விநிரம்பி (5) ஒழுக்கத்தில் இழுக்கின்றி (6) காரிய நிறைவேற்றுதலில் வல்லுநரே உறுப்பினராகத் தேர்ந்து கொள்ளுதற்குரியவராவர்.

***5. ஊர்ச்சபை உறுப்பினராகத் தேர்ந்திடத்தக்கவரல்லார் யாவர்?**

(1) எந்த நிறைவேற்றுக் கழகத்திலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவர்.

(2) அவருக்குச் சிறிய தாய், பெரிய தாய், அத்தை, மாமன் முதலியோரும் அவர்மக்களும், தந்தையும், தாயுடன் பிறந்தவன், தந்தையோடு பிறந்தவன், தம்முடன் பிறந்தவன், மனைவியோடு பிறந்தவன், பெண் கொடுத்த மாமன், உடன்பிறந்தாள் கணவன், மகளை மணந்தவன் ஆகியோர் அவர்கள் சுற்றத்தினர்...

(3) பார்ப்பனரைக் கொலைசெய்தவர், கள்ளுண்டல், திருடுதல், விபசாரம் முதலிய பாதகங்களைச் செய்தவர் என்று கிராமக்குற்றப் பதிவுப்புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டவர்; அவருக்கு உறவினர்.

(4) யோசியாமல் காரியத்தில் துணியும் தன்மை உடையவர்.

(5) பிறர் பொருளை அபகரித்தவர்.

(6) கள்ளக் கையெழுத்திடுதலாகிய கூடலேகை செய்தவர்.

(7) தீமையான செயல்களைச் செய்ததற்காகக் கழுதைமீதேற்றப்பட்டவர்.

(8) இழிகுலத்தவரின் தொடர்பு காரணமாகச் சாதியினின்றும் விலக்கப்பட்டுப் பிராயச்சித்தம் செய்யப்பெறுதவர்.

(9) எத்தகைய கையூட்டும் கொண்டவர்.

(10) கிராமத்துரோகி எனக்கருதப்பட்டவர்.

(11) வேசியருடன் பழகிப் பிராயச்சித்தம் செய்யப்பட்டவர்.

ஆகிய இவர்கள் ஊர்ச்சபை உறுப்பினராகத் தேர்ந்திடத் தகாதவர்கள் ஆவார்கள்.

**6. குடவோலை வாயிலாகத் தேர்தல் நடக்கும் முறையை விளக்குக.**

தேர்தல் நடக்குமிடத்தில் தர்மகிருத்தியம் கடைகாணும் வாரியர் அரசன் ஆணைப்படி நாட்டில் சபை கூடுவதற்காக அமைக்கப்பட்ட பெரிய மாளிகையில் இளைஞர்முதல் முதியோர்வரை எல்லோரையும் குறைவில்லாமல் கூட்டுவர். அன்று அவ்வூர் நம்பிமார் எல்லோரையும் வரவேற்று அம்மாளிகையில் இருக்கச்செய்து அவர்களுக்கு நடுவில் குடத்தினை வைப்பர். அவருள் முதியவர் ஒருவர் அக்குடத்தினை மேலே உயர்த்தி அதனுள் ஒன்றுமில்லை என்பதை எல்லோருக்கும் காட்டிக் கீழேவைப்பார்.

பின்னர் ஒவ்வோர் ஊரையும் முப்பது பகுதியாகப்பிரித்து ஒவ்வொரு பகுதியில் உள்ள ஒவ்வொருவரும் தகுதியுடையவரெனத் தமக்குத்தோன்றும் ஒருவர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, எழுதிய ஓலைகளை ஒன்றுகச் சேர்த்து, இன்ன பகுதியைச் சார்ந்த ஓலை என்பது விளங்க, அப்பகுதியின் பெயர் எழுதப்பட்ட வாயோலை பூட்டிக்கட்டிக் குடத்தில் இடுவர்.

இவ்வாறு முப்பது பகுதியைச் சார்ந்தவர்களும் இட்டபிறகு அம் முதியார் அங்கு நடைபெறும் நிகழ்ச்சியை இன்னதென்று உணராத ஒரு சிறுவனை அழைத்து, அக்குடத்திலிருந்து ஓர் ஓலைக்கட்டினை எடுப்பித்து, அதனை அவிழ்த்து மற்றொரு குடத்திலிட்டுக் குலுக்குவார். அவற்றில் அவனைக் கொண்டே ஓர் ஓலையை எடுக்கச்செய்வார். அதனைத் தாம் வாங்கி, அங்கு இருக்கும் கரணத்தான் கையில் கொடுப்பர். அவன் தன் ஐந்து விரல்களை யும் அகலமாக விரித்து அதைத் தன் உள்ளங்கையில் வாங்குவான். அவ் வோலையில் எழுதப்பட்டுள்ள பெயரை எல்லோரும் அறியுமாறு படிப்பான். அங்கிருந்த நம்பிமார்கள் எல்லோரும் அவ்வோலையைப் படிப்பர். அதன் பின்னர் அப்பெயர் வேறோர் ஓலையில் எழுதிக்கொள்ளப்படும்.

இவ்வாறு மற்றைய கட்டுகளையும் ஒன்றன்பின் ஒன்றாக முன்போல எடுப்பித்துப் பிரித்துக் குடத்திலிட்டுக் குலுக்கி முன்போலவே ஒவ்வோர் ஓலை யாக எடுக்கச் செய்து எழுதிக்கொள்வார்கள். இங்ஙனம் ஊர்ச்சபை உறுப் பினர் முப்பதின்மர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**7. ஐவகைப்பட்ட வாரியர்களும் அவர்கள் தொகையும் குறிப்பிடுக.**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச்சபை உறுப்பினர் முப்பதின்மருள் பன்னிரு வரைச் சம்வத்சரவாரியர் எனத் தேர்ந்தெடுப்பர். மற்றப் பதினெண்மருள் பன்னிருவரைத் தோட்டவாரியர் எனத் தேர்ந்தெடுப்பர்; அறுவரை ஏரிவாரி யராகத் தேர்ந்தெடுப்பர். மீண்டும் இம்முறையில் முப்பது ஓலைகளைத் தேர்ந்து குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் பன்னிரண்டினை எடுப்பித்து அறுவரைப் பொன்வாரியராகவும், அறுவரைப் பஞ்சவாரியராகவும் ஏற்படுத்துவார்கள்.

ஆகக் காரிய நிறைவேற்றுக் கழகம், சம்வத்சரவாரியர், தோட்டவாரியர். ஏரிவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியர் என ஐவகைப்பட்ட வாரியரும் அடங்கியதாகும்.

***8. ஐவகைப்பட்ட வாரியரின் வேலைகளைத் தனித்தனியே எடுத் தெழுதுக.**

(1) **சம்வத்சரவாரியர்**, நியாய விசாரணை செய்து கொலைக்குக் கொலை யும், ஏனைய குற்றங்களுக்குச் சிறை, தளை, சங்கிலி புகுவித்தல் முதலிய தண்டனைகளை விதித்தலும், கோயில் அலுவல்கள் ஒழுங்காக நடக்கின்றவா என்று ஆராய்தலும், ஊரைச் சுற்றிப் பார்த்து நன்மை தீமைகளை அறிந்து வேண்டுவன செய்தலும், பொதுக் காரியங்களை மேற்கொள்வதும் ஆகிய கடமைகளைச் செய்வர்.

(2) **ஏரிவாரியர்**, ஏரி முதலிய நீர் நிலைகள் பழுதடையாமல் பாதுகாத் தலும், விளைச்சலுக்கு வேண்டும் நீரைச் சரிவரப் பாய்ச்சுதலும் ஆகிய கடமைகளைப் புரிவர்.

(3) **தோட்டவாரியர்**, நிலத்தைப் பொறுத்த காரியங்களைச் செய்வர்.

(4) **பொன்வாரியர்**, பல வழிகளிலும் சேர்க்கப்படும் காணயங்களைச் சரியானவையா என்று ஆராய்ச்சி செய்வர்.

(5) **பஞ்சவாரியர்**, கடமை இன்னதென்று திட்டமாகத் தெரியவில்லை.

**9. ஊர்ச்சபை உறுப்பினர்க்கு வழங்கும் வேறு பெயர் என்ன ? அவர் கள் கூடுதற்கு ஊர்தோறும் மாளிகை அமைக்கப் பெற்றிருந்தது என்பதற்குச் சான்று தருக.**

ஊர்ச்சபை உறுப்பினருக்குப் பெருமக்கள் என்னும் பெயர் உண்டு. இவர்கள் கூடுவதற்கு ஊர்தோறும் மாளிகை அமைக்கப் பெற்றிருந்தது.

“ குரு பக்தியே சகல சக்தியும்.” — தணிகை.

நல்லூர் என்னும் சிற்றூரில் இருந்த பெரிய மாளிகைக்கு இராசராசன் எனப் பெயர் இருந்தது. மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தில் இருந்த பெருமண்டபத்துக்கு இராசராச சோழன், செம்பியன் மாதேவிப் பெரு மண்டபம் எனப் பெயரிட்டான்.

**10. ஊர்ச்சபை கூடுவது எவ்வாறு அறிவிக்கப்பட்டது? சபை எவ் வெப்போது கூடும்?**

ஊர்ச்சபையார் அவை கூடுதற்குரிய நாளைக் காளம் ஊதுவித்து உறுப் பினருக்குத் தெரிவித்தனர். ஊர்ச்சபையார் பெரும்பாலும் பகற்காலத் திலேயே அவை கூட்டினர். இன்றியமையாததாயின் பகற்காலத்திலன்றி இராக்காலத்திலும் அவை கூட்டிக் காரியங்களை நடத்தினர்.

***11. கணக்கன் என்பவன் யார்? அவன் தகுதி, தொழில், ஊதியம் முதலியவற்றை விளக்கி எழுதுக.**

ஊர்ச்சபையார் பணித்தவற்றைச் செய்பவன் **கணக்கன்** என்று கூறப் படுவான்.

(1) அவன் நல்ல வழியில் சம்பாதித்த பொருளும் நல்லொழுக்கமும் உடையவனாக இருக்க வேண்டும்.

(2) அவன் எழுதிய கணக்கைப் பெருமக்கள் வேண்டும்போது அவனே வந்து காட்ட வேண்டும். பிறரைக் கொண்டு காட்டலாகாது.

(3) அவர்களால் நன்கு மதிக்கப்பட்டாலன்றி அடுத்த ஆண்டில் கணக்கு எழுதும் உரிமை அவனுக்கு உண்டாகாது.

(4) ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும், வருடத்துக்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறையும் கணக்கனுக்குச் சம்பளமாக அளிக்கப் பெறும்.

(5) கணக்கை ஆராய்தற்குப் பெருமக்களிடம் தரும்போது கணக்கன் மழுவைக் கையிலேந்தி உறுதிமொழி கூறிக் கொடுக்க வேண்டும். அதனால் அவனுக்குக் கையில் ஊறுபாடு ஏற்படாவிடில் ஏழு கழஞ்சு பொன்னுடன் மேலும் காற் பங்கு பொன் சேர்த்துக் கொடுப்பர். ஊறுபாடு நேரின் பத்து கழஞ்சு பொன் அபராதமும் ஆக்கினையும் ஏற்படுத்துவர்.

## பயிற்சியும் முயற்சியும்

I. குடவோலை முறை பற்றிச் சுருக்கமாக ஒரு கட்டுரை எழுதுக.

II. அவர்களால் நன்கு மதிக்கப்பட்டாலொழிய அடுத்த யாண்டில் கணக்கு எழுதும் உரிமை அவனுக்கு உண்டாக மாட்டாது.—இதில் உள்ள எதிர்மறை வினைகளைப் பொருள் மாறாமல் உடன்பாட்டு வினைகளாக மாற்றி எழுதுக.

அவர்களால் நன்கு மதிக்கப்பட்டால்தான் அடுத்த யாண்டில் கணக்கு எழுதும் உரிமை அவனுக்கு உண்டாகும்.

III. அங்கிருந்த நம்பிமார் அனைவரும் அவ்வோலையைப் படித்திடுவர். அதன் பின்னர் அப்பெயர் ஓர் ஓலையின்கண் எழுதிக் கொள்ளப்படும்—இவ் வாக்கியங்களிலுள்ள செய்வினை, செயப்பாட்டுவினைகளை மாற்றி எழுது.

அவ்வோலை அங்கிருந்த நம்பிமார் அனைவராலும் படிக்கப்படும். பின் னர் அப்பெயரை ஓர் ஓலையின்கண் எழுதிக் கொள்வார்கள்.

IV. உங்களூரில் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஒன்றைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 9. அன்பும் அருளும்

(பேராசிரியர் சரவண. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.)

அரும்பதவுரை

பக்கம் 56

பேறு - செல்வம்
கூறுகள் - பிரிவுகள்
அகம் - மனத்து உணர்வினாலேயே அறியப்படும் தலைவன், தலைவி அன்பு பற்றிய செய்தி.
புறம் - பிறர்க்கு உணர்த்தப்படக் கூடியதாய் அறம், பொருள் இவை பற்றி நிகழ்வன.
வீடு - மோட்சம்
வகுக்கும் - பிரிக்கும்
பனுவல்கள் - பாடல் நூல்கள்
வினவுகின்றார் - கேட்கிறார்
கற்றதனாலாய...எனின்? - தூய்மையான அறிவினையுடைய கடவுளின் சிறந்த திருவடிகளை நாம் வணங்காவிடில், நாம் கற்ற கல்வியினால் என்ன பலன்? ஒன்றுமில்லை.
இறுதிக்கண் - கடைசியில்
பசுமரத் தாணிபோல் - பசுமையான மரத்தில் ஆணி அடித்தால் அழுத்தமாகப் பதிவதுபோல்
துய்த்து - அனுபவித்து
இம்மை - இப்பிறவி
பயின்று - கற்று
மெய்யுணர்வு - கடவுள் உணர்வு

பக்கம் 57

விந்தை - அற்புதம்
நாயனார் - திருவள்ளுவர்
அன்பின் குழவி - அன்பு பெற்றெடுத்த குழந்தை
அறிவுச் செறிவு - அறிவு மிகுதி
அன்பின் வழியது.........உடம்பு - அன்பின் வழி நின்ற உடலே உயிரோடு கூடிய உடலாகும். அன்பின் வழி செல்லாத வரையில் உடல் வெறும் எலும்பைத் தோலால் போர்த்து வைத்ததற்கு ஒப்பாகும்.
இயங்க - நடக்க
மாக்கள் - பிராணிகள்
எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும்
பதிந்து - நிலைத்து
பிணக்கம் - வேற்றுமை
இணக்கம் - ஒற்றுமை
நேர்மை - நீதி
நிலவுவது - விளங்குவது
நேசம் - நட்பு
பூசல் - சண்டை
மெய்ப்பாடு - நடிப்பு

பக்கம் 58

ஆர்வம் - விருப்பம்
முதிர்ச்சி - நிறைவு
கண்கூடாக - வெளிப்படையாக
இன்னார் - இனியரல்லாதவர்
சமயச் சான்றோர் - மதத் தலைவர்
உயிர்கள்மாட்டு - உயிர்களிடம்
அருள் வாக்கு - அருள் நிறைந்த பேச்சு
சேய் - பிள்ளை
உருவகப் படுத்தி - ஒன்றை அதன் தன்மை உடைய மற்றொன்றாகச் சொல்லி
ஆன்றோர் - பெரியோர்
அருளறம் வீட்டில் பிறக்கிறது - Charity begins at home என்னும் ஆங்கிலப் பழமொழியின் மொழி பெயர்ப்பு
ஒப்பனை - அழகு
பேணுகிறது - காப்பாற்றுகிறது
சீராட்டி - சிறப்புகள் செய்து
அவையத்து - சபையில்
முந்தி இருக்க - கல்வி கேள்விகளால் முன்னே இருக்க
நெறியில் - வழியில்
நன்கலம் - அழகு

பக்கம் 59

நம்பால் - நம்மிடம்
களைந்து - நீக்கி
பீடுற்ற - பெருமை அடைந்த
செந்தண்மை - நல்லருள்
பெருந்தகையார் சான்றோர்

" தருமம் தலை காக்கும்." — பழமொழி.

அந்தண்மை - அறத் தன்மை
மிளிரும் - விளங்கும்
இறுதியில் - முடிவில்
பற்று - ஆசை
பொழிகிருன் - பெய்கிருன், புரிகிருன்
தாம் - நிலை
கேளிர் - நண்பர், உறவினர்
முற்றத் துறந்த - எல்லாம் துறந்த
வித்து - விதை
அடிப்படை - ஆதாரம்
சுரக்கும் - ஊறுகின்ற
தமிழ்மறை - திருக்குறள்
மன்பதை - மக்கட் கூட்டம், சமூகம்
யாதும் ஊரே யாவரும் கேளிர் - எமக்கு எல்லா ஊரும் சொந்த ஊரே; எல்லா மக்களும் உறவினர்களே.
துய்ப்பது - அநுபவிப்பது
அன்புத்தோணி - அன்பாகியபடகு
அருட்கரை - அருளாகிய கரை

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

இறுதிக்கண்
குறிக்கோள்
பசுமரத்தாணி போல்
எம்மருங்கும்
கண்கூடாக
அவரவர்

## பதப் பிரிவு

நான்கு + நிலை = நானிலை
பெருமை + இன்பம் = பேரின்பம்
அருள் + கரை = அருட்கரை
தன் + நலம் = தன்னலம்

## கேள்வியும் பதிலும்

***1. மக்கள் அடையவேண்டிய உறுதிப்பொருள்கள் எவை? எல்லோரும் அடையவேண்டிய முடிவான குறிக்கோள் எது?**

மக்கள் அடையவேண்டிய உறுதிப் பொருள்களை அகம், புறம் என்று இரண்டாகக் கூறலாம். அவற்றை நான்காக்கி அறம், பொருள், இன்பம், வீடு என்று கூறுவதும் வழக்கமாகும். ஆனால் இந்நான்கும் அவ்விரண்டுள் அடங்கும். இந்நான்கினுள் கடைசியில் வைக்கப்பட்ட வீடுதான் எல்லோரும் அடையவேண்டிய முடிவான குறிக்கோளாகும்.

**2. கல்வியின் பயனாக வள்ளுவர் எதனை எவ்வாறு கூறுகின்றார்?**

வள்ளுவர் 'கற்றதனாலாய பயன் என்கொல்?' என்ற வினாவை எழுப்புகிறார். அதற்கு விடை தூய்மையான அறிவை உடைய இறைவனைத் தொழுதல் என்பது. இதை 'வாலறிவன் நற்றாள் தொழூஉல்' என்பதன் மூலம் கூறிக் கற்றோர் மனத்தில் பச்சை மரத்திலடித்த ஆணிபோல் நன்கு விளங்கச் செய்கிறார்.

***3. இந்த நாற்பொருள் வழியில் செல்லும் மக்கள் அடையும் பேற்றை விளக்குக.**

இந்த நாற்பொருள் வழியில் செல்லும் மக்கள் இல்லறம் என்னும் அறத்தில் நிலைப்பர். பிறகு பொருள் சேர்த்து, அன்பு நிறைத்து, இன்பம் அநுபவித்து அதனால் இப்பிறவிப் பயனான புகழை அடைவர். கடைசியில் மெய்யுணர்வு பெற்றுப் பேரின்பம் அடைவர். இந்நெறியின் தோற்றம், வளர்ச்சி பயன் ஆகியவை அன்பில் தொடங்கி அருளில் முடிகின்றன என்று கூறலாம்.

***4. உலகில் அன்புடையான் பின் அருளுடையான் ஆகும் விந்தையை விளக்குக.**

அன்பு என்பது வீட்டில் தோன்றி, வளர்ந்து, பரந்த நோக்கமும் விரிந்த பண்பும் உடையவராகச் செய்யும். பின் ஊரையும், நாட்டையும் அதன் பின்

"கடுமொழியாளர் தொடர்பு இன்னா." — கபிலர்.

னர் உலகினையும் ஆட்படுத்தும். இல்லறத்தில் அன்பென்பதைக் கற்க வேண்டும். பின்னர், அதைத்தனக்கென்றில்லாது பிறர்க்குப் பயன்படுத்தும் அறிவு பெறும்போதுதான் அருளாளன் என்ற பெயரை ஒருவன் அடைகிருன். இதுதான் அன்புடையான் பின் அருளுடையான் ஆகும் விந்தை ஆகும்.

5. அன்பு, அருள் இவை பற்றிக் கம்பரும் வள்ளுவரும் கூறுவன யாவை ?

அன்பும் அருளும் மனிதனுக்குப் பிறப்பிலேயே உண்டாகவேண்டும். இவையற்றவர் மக்கள் அல்லர் என்று எண்ணிய வள்ளுவர்,

"அன்பின் வழியது உயிர்நிலை, அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு" என்ருர்.

கம்பரோ "அன்பு என்பது ஒன்றன் தன்மை அமரரும் அறிந்தது அன்ருல்" என்கிருர். வள்ளுவர் அருள் அன்பின் முதலாகவே உண்டாகும் என்பதை 'அருள் என்னும் அன்பின் குழவி' என்பதால் வெளிப்படுத்து கிருர்.

*6. அன்புடைமையால் உண்டாகும் பெரும் பயன்கள் யாவை ?

அன்பு நெறியில் உலகம் என்று நடக்க ஆரம்பிக்குமோ அன்று உலகில் இன்றுள்ள பகைமை ஒழியும்; நட்பு வளரும்; போரும் பூசலும் மறையும்; ஒற்றுமையும் நேர்மையும் ஓங்கி உயரும். அன்புடைமையே பல உருவங்களில் பலவிதமான வழிகளில் பல இடங்களிலும் நன்மையைச் செய்து வருகிறது. வீட்டிலும், சமூகம், நாடு இவைகளிலும் பல நன்மைகளைச் செய்வது அன்பே.

7. அன்பென்பது பல பொருள்களில் சிறப்பாக வழங்குவதெப்படி ?

நாம் அன்பைப் பொதுப் பெயரால் குறித்தாலும், அது பல சிறப்பு நிலைகளில் வழங்கி வருகிறது. நண்பர்களிடையே உள்ள அன்பு நட்பு. பெற்ருேர் மக்கள் இவரிடையே உள்ளது பாசம். கணவன் மனைவிக்கு இடையே இருப்பது காதல். இறைவன் அடியார் ஆண்டவன் மேல் செலுத்தும் அன்பு பக்தியாகும். ஆண்டவன் அடியார் மாட்டுச் செய்வது அருள் ஆகும். இவற்ருல் அன்பு பல பொருள்களில் வழங்குகிறது என்பதை நன்கு அறியலாம்.

8. 'காட்டலாகாப் பொருளாகிய அன்பு' எவ்வாறு வெளிப்படுகிறது ?

அன்பு தன்னை உடையவரின் உணர்ச்சி, செயல் இவற்ருலேயே வெளிப்படும். மேலும் அன்பு மிகுதியால் ஒருவருக்கொருவர் செய்யும் அன்புச் செயல்களின் ஆர்வ மிகுதியையும் ஆழத்தையும் நாம் வெளிப்படையாகக் காண்கிருேம்.

9. சமயச் சான்ருேர்களின் அருள்வாக்கில் நாம் காணக்கூடியவை யாவை ?

கடவுள் மீது உயிர்ப் பொருள்கள் காட்டும் பக்தியாகிய அன்பின் செயல்களையும், கடவுள் உயிர்களிடத்தில் நல்லவர், தீயவர், வேண்டியவர், வேண்டாதார் என்ற வேற்றுமை பாராட்டாமல் அவரவர்கள் தகுதிக்குப் பொருத்தமாகக் காட்டும் அன்பின் முதிர்ச்சியாகிய அருளையும் அதன் செயல்களையும் சமயச் சான்ருேரின் அருள் வாக்கில் காண்கிருேம்.

***10. தாயன்பின் சிறப்பு எவ்வாறு வெளியாகிறது ?**

கடவுள் உயிர்கள்மீது காட்டும் அன்பின் முதிர்ச்சியாகிய அருளுக்கு, தாய் தன் மக்கள் மேல் காட்டும் அன்பின் பெருக்கே உவமையாகக் காட்டப் பட்டுள்ளது. இதனால் தாயன்பின் சிறப்பு வெளியாகிறது. மேலும் கடவுளையே தாயாகவும், அருள் சக்தியாகவும் கூறுவதுண்டு. இதனாலும் தாயன்பின் பெருமை வெளியாகிறது.

***11. அருளுக்கு அடிப்படையானது எது ? இதனை விளக்கும் ஆங்கிலப் பழமொழியின் கருத்தினை எழுதுக.**

உலகையே சென்று வளைக்கும் அருளுக்கு அடிப்படையாக இருப்பது குடும்ப வாழ்வில் அன்புடன் இருப்பதே ஆகும். ‘அருளறம் வீட்டில் பிறக்கின்றது’ (Charity begins at home) என்னும் ஆங்கிலப் பழமொழியாலும் இது தெரிகிறது.

***12. ஒவ்வொருவர் வாழ்விலும் அரும்பு, மலர், காய், கனியாக முறைப்படி வருவன யாவை ?**

முதலில் கல்வி கற்கும் மாணக்கர் பருவம் அரும்பு. கல்வி கற்றபின் இல்வாழ்க்கை ஏற்பது மலர்ப்பருவம் எனலாம். அதன் பின்னர் அன்பும் அருளும் கொண்டு படிப்படியாக எல்லா உயிர்கள் பாலும் செம்மையான பண்பு கொண்டு நன்முறையில் வாழ்வு நடத்துவது காய், கனிப் பருவங்கள் என்று கூறலாம்.

***13. அருள்’என்பது எவ்வாறு உண்டாகிறது ? அது எவர் எவரிடம் உள்ளது ?**

இல்லறத்தில் அன்பு தோன்றும். அது விரிந்து கொண்டே சென்று உயர்நிலை அடையும். கடைசியில் ஒருவர்மீது உள்ள பற்றுக் காரணமாக வெளிப்படும் தன்மை இல்லாமல் விருப்பு, வெறுப்பு நிலையைக் கடந்து குலம், நாடு, மொழி, காலம் முதலியவற்றையும் கடந்து எல்லா உயிர்கள் மேலும் இயல்பாகவே செல்லும். இந்நிலையில் உள்ளதையே நாம் அருள் என்கிறோம். கடவுள் தம் அன்பர்களுக்கு அவரவர்கள் தகுதிக்குத் தகுந்தபடி கருணை பொழிவது அருளே ஆகும். தூய உள்ளமுடைய துறவிகளின் தன்மையையும் நாம் அருள் என்கிறோம்.

***14. அன்பின் சிறப்புக்கள் யாவை ?**

முற்றும் துறந்த முனிவர்களும் அருள் கொள்ள அன்பே ஆதாரம் ஆகும். ஆகையால் அருள் உடையவர்கள் யாவரிடத்தும் அன்பு செய்பவராய், ‘யாதும் ஊரே ; யாவரும் கேளிர்’ என்ற முறையில் நிற்பார்கள். அன்பே அருளுக்கு விதை. அன்புதான் அருள் நீர் சுரக்கும் இன்ப ஊற்று. அன்பு இல்லையானால் அருள் இல்லை. அருள் இன்றேல் உலகமும் இல்லை. ஆகையால் மக்கள் எல்லோரும் வாழ்வில் அன்பெனும் தோணி கொண்டு அருட்கரை அடைய வேண்டும்.

## பயிற்சியும் முயற்சியும்

I. நாயனார் திட்பநுட்பத்தோடும் அறிவுச் செறிவோடும் கூறியது போன்று வேறு யாரே கூறவல்லார் ?—செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

நாயனார் திட்பநுட்பத்தோடும் அறிவுச் செறிவோடும் கூறியது போன்று வேறு யாரும் கூற முடியாது.

“ தாழ்விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்.”

II. இந்த அன்பு முதன் முதலில்..............உலகையும் வளைத்து விடுகிறது. சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

இந்த அன்பு முதன் முதலில் வீட்டில் தோன்றுகிறது. இது சிறிது சிறிதாக வளர்கின்றது. பின்னர் பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் பெறுகிறது. கடைசியில் ஊரையும், நாட்டையும், உலகையும் வளைத்து விடுகிறது.

III. படித்துப் பாருங்கள் :

திருக்குறளில் அன்புடைமை, அருளுடைமை என இரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றைப் பற்றியும் உள்ள பப்பத்துக் குறட்பாக்களின் உரையைத் தொகுத்து உங்கள் கட்டுரைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

## 10. பொப்பண காங்கேயன்

(புலவர் அ. மு. குழந்தை, தமிழாசிரியர், பவானி)

### அரும்பதவுரை

**பக்கம் 60**

தோன்றிற் புகழொடு தோன்றுக - புகழுக்குக் காரணமாக வாழ்க
வழிவழி - பரம்பரை பரம்பரையாக
தலைமுறை - பரம்பரை
அரிது - அருமை
மாறு - அழியாத
தொல் குடும்பங்கள் - பழமையான குடும்பங்கள்
மரபு - பரம்பரை
தொன்று தொட்டு - பண்டை நாளிலிருந்து
கோட்டம் - மாவட்டம்
பொலிந்த - விளங்கிய
வேளாண் குடும்பம் - தருமம் செய்யும் குடும்பம்
வாய்ந்த - பொருந்திய, பெற்ற
சொற்பொருள்-சொல்லின் பொருள்
நிகண்டு - சொல்லின் பொருளை விளக்கும் நூல்

**பக்கம் 61**

பெருந்தகையாளன் - பெருந்தன்மையுடையான்
முறையாக - தொடர்ச்சியாக
ஆர்வம் - விருப்பம்
களிப்புறுவான் - மகிழ்வடைவான்

**பக்கம் 62**

இன்புற - இன்பம் அடைய
சீரிய - சிறந்த
உறுதுணை - சிறந்த உதவி
கோவை - கோயம்புத்தூர்
கடினம் - அருமை
இல்லையேல் - இல்லாவிட்டால்

**பக்கம் 63**

ஏதுவாகும் - காரணமாகும்
தொண்டு - சேவை
வரையாது - அளவில்லாமல்
ஊக்கி - ஊக்கப்படுத்தி
இறும்பூது - பெருமிதம்
பல பகல் - பல நாட்கள்
எய்தினன் - அடைந்தான்
வியந்தான் - அதிசயித்தான்
அளவளாவினன்-கலந்து பேசினன்
ஐம்பெரும் காப்பியங்கள் - சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி
தலையாய - முதன்மையான
விரிவுரை - விளக்கவுரை

**பக்கம் 64**

பேருரை - விரிவுரை, விளக்கவுரை
திங்கள் - மாதம்

முறையல்ல - தகுதியன்று
செல்வக்குடி மகன்-செல்வக் குடும்பத்தில் தோன்றிய மகன்
இடையூறு - தடை
செருக்கு - பெருமிதம்
நலமென - நல்லதென்று
மூதுவேனில் - ஆனி ஆடி மாதங்கள்

பக்கம் 65

இன்மையால் - இல்லாததால்
விசையாக - வேகமாக

இருக்கை - ஆசனம்
கார் - மழை
எல்லை - முடிவு
பொன் முழுங்காட்டி-அவர் மூழ்கும் அளவு பொன் கொடுத்து
தமிழ்ப் பற்று - தமிழார்வம்
சிவிகை - பல்லக்கு
கார்வளக்கை - மழை போன்று உதவும் வள்ளல் தன்மை உடைய கைகள்.

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

*வழிவழி*
*மாறாப்புகழ்*
*தொன்றுதொட்டு*
*எண்ணி எண்ணி*
*உறுதுணையாக*
*தலையாய*
*அவ்வப்போது*
*அள்ளி அள்ளி*

## பதப் பிரிவு

பழமை + பெருமை = பழம் பெருமை
சொல் + பொருள் = சொற் பொருள்
மூன்று + தமிழ் = முத்தமிழ்
செய்யுள் + கருத்து = செய்யுட் கருத்து

## கேள்வியும் பதிலும்

***1. 'மரபு' என்னும் சிறப்புப் பெயருக்குப் பொருத்தமான குடும்பம் எத்தகையது? சில உதாரணங்கள் தருக.**

தோன்றிற் புகழொடு தோன்றுக என்னும் திருவள்ளுவர் வாக்கின்படி புகழொடு வாழும் மக்கள் ஒரு சிலரே. அவருள்ளும் பரம்பரையாகப் புகழுடன் வாழ்வோர் குடும்பங்கள் மிகச் சிலவே. அக்குடும்பங்களும் இரண்டு மூன்று தலைமுறைக்கு மேல் புகழொடு வாழ்தல் அரிது. சில குடும்பங்களே என்றும் மாறாத புகழொடு விளங்கும். இத்தொல் குடும்பங்களுக்கே மரபு என்று பெயர். சேரர் மரபு, சோழர் மரபு, பாண்டியர் மரபு, மலையமான் மரபு, அதியமான் மரபு, மோரூர்க் காங்கேயர் மரபு என்பவை சிறந்த மரபுகளாகும்.

***2. மோரூர்க் காங்கேயர் மரபின் சிறப்புகள் யாவை?**

மோரூர் என்பது சேலத்தில் திருச்செங்கோட்டுக்கு எட்டு மைல் தூரத்தில் உள்ள பழமையான ஊர். இது புலவர் பலர் புகழ்ந்து பாடிய ஊர். மோரூர்க் காங்கேய மரபினர் பழம் பெருமை மிகுந்த வேளாளர் குடியினர். படையும் கொடையும் ஆகிய இருவகைப் புகழும் உடையவர். தமிழ் வளர்ப்பதே தம் குலப் பெருமை என்று கொண்டு, தமிழ் மொழிக்குப் பல அரும் பெரும் தொண்டுகள் செய்துள்ளனர்.

***3. இம்மரபினர் செய்துள்ள சிறந்த தமிழ்ப் பணிகள் எவை?**

(1) இம் மரபினரில் ஒருவனை காங்கேயன் என்பவன்தான் உரிச் சொல் நிகண்டு செய்தான். இவன் பெருவீரன்; கொடையாளி; பாடல் வல்லவன்.

(2) குமார காங்கேயன் என்பவன் படிக்காசுப் புலவருக்குத் தந்தப் பல்லக்கைப் பரிசாக அளித்தான்.

(3) நல்லதம்பி காங்கேயன் என்பவன் எம்பெருமான் என்னும் புலவரைக் கொண்டு தக்கை என்னும் இசையில் தக்கை ராமாயணம் பாடச் செய்தான். இங்ஙனம் இவர்கள் மரபினர் தமிழ்ப்பணி செய்தனர்.

**4. நிகண்டு: குறிப்பு எழுதுக.**

தற்காலத்தில் அகராதி வருவதற்கு முன் மக்கள் சொற்பொருளை அறி வதற்குப் பயன்பட்ட செய்யுள் வடிவத்தில் உள்ள நூல் நிகண்டு ஆகும். தமிழில் பிங்கல நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, ஆசிரிய நிகண்டு என்று பல உண்டு. உரிச்சொல் நிகண்டு வெண்பாக்களால் ஆனது. இதைப்பாடிய வன் காங்கேயன் என்பவன்.

***5. பொப்பண காங்கேயனது சிறப்பியல்புகள் யாவை?**

பொப்பண காங்கேயன் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் படித்தவன். மிகுந்த தாய் மொழிப் பற்றுடையவன். தமிழ் வளர்ப்பதே தன் கடமை யென்று கருதியவன். தமிழ் வளர்ப்பதற்காகவே தமிழ்ப் புலவர் பலரைப் பாதுகாத்து வந்தான்.

**6. பொப்பண காங்கேயனுக்குப் பழந்தமிழ் நூல்கள்பால் இருந்த பற்றினை விளக்குக.**

பொப்பண காங்கேயன் பழந்தமிழ்ப் பாடல்களைக் கேட்பதில் விருப்பம் மிகுந்தவன். பரிசு பெற வரும் புலவர்களைப் பழந்தமிழ்ப் பாடல்கட்குப் பொருள் கூறுமாறு கேட்டு மகிழ்வான். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்களை மீண்டும் மீண்டும் கேட்டுப் பழந்தமிழரின் வாழ்க்கையை எண்ணி இன்பம் அடைவான். அன் னாரின் கொடை, வீரம், புகழ், ஒழுக்கம், அரசியல் முதலிய வாழ்க்கை முறை களை மனக் கண்ணால் கண்டு மகிழ்வான். தன்னைப் பழங்காலத்துத் தமிழ்ச் செல்வனாகவே எண்ணி வாழ்ந்து வந்தான். அவன் வாழ்க்கைமுறையும் அங்ஙனமே அமைந்திருந்தது.

***7. சிலப்பதிகாரத்திற்குள்ள இரண்டு உரைகள் எவை? அவற்றைப் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார்?**

சிலப்பதிகாரத்துக்கு 'அரும்பதவுரை', 'அடியார்க்கு நல்லார் உரை' என்று இரண்டு பழைய உரை நூல்கள் உண்டு. அவற்றுள் அரும் பதவுரை தமிழில் புலமை மிக்கவர்க்கே பயன்படுவதாகும். ஆனால் அடி யார்க்கு நல்லார் உரை எளியது. அதுவே சிலப்பதிகாரத்தின் அரிய கருத் துக்களை எல்லோரும் அறிந்து இன்புறப் பெருந்துணையாக இருக்கிறது.

**8. அடியார்க்கு நல்லாருடைய ஊர், நாடு, காலம் முதலிய வற்றைக் குறிப்பிடுக.**

அடியார்க்கு நல்லார் பொப்பண காங்கேயன் காலத்தவர். 12-ஆம் நூற் றாண்டினர். கொங்கு நாட்டில் உள்ள கோவைக்கோட்டத்தில் இருக்கும்

சிரம்பை என்னும் ஊரைச்சேர்ந்தவர். இவ்வூர் ஈரோடு கோவை வழியில் ஈரோட்டுக்கு மேற்கே 16-வது மைலில் உள்ள விசயமங்கலம் என்னும் ஊருக்குப் பக்கத்தில் இருந்தது.

**9. கொங்குவேளிர் என்பவர் யார் ? அவர்இயற்றிய நூல் எது ?**

இவர் கோவைக்கோட்டத்தில் உள்ள விசயமங்கலத்தில் தோன்றியவர். இவர் பெருங்கதை என்னும் உதயணன் கதை நூலை இயற்றினர்.

***10. பழந்தமிழ்ப் புலவர் எத்தனை வகைப்படுவர் ? அவரில் சிறந்தவர் யார் ? ஏன் ?**

பழந்தமிழ்ப் புலவர்கள் நூலாசிரியர், உரையாசிரியர் என்று இரு வகைப்படுவார்கள். நூல் செய்வதைவிட ஒருவர் செய்த நூலுக்கு நூலாசிரியர் கருத்து அறிந்து பொருள் கூறுவது கடினமாகும். மேலும் சிறந்த உரை நூலினுல்தான் ஒரு நூலின் பெருமை வெளிப்படும். ஆகையால் நூலாசிரியர் பெருமைக்குக் காரணமாகிய உரையாசிரியரே நூலாசிரியரை விட மேலானவர் ஆவர்.

***11. அடியார்க்கு நல்லார் உரையாசிரியர் ஆகக் காரணம் என்ன ? (அல்லது) உரை கூறுவது சிறந்த தமிழ்த்தொண்டு ஆவது எப்படி ?**

அடியார்க்கு நல்லார் புதிய நூல்கள் பாடுவதைவிடப் பழைய தமிழ் நூல்களின் பொருளை விளக்குவதில் மிக்க ஆர்வமுடையவர். அதுவே சிறந்த தமிழ்ப் பணியும் என்று கருதுபவர். உரை செய்யாவிடில் அப்பாக்கள் கற்பாரில்லாது பாழாகும். முன்னோர்கள் பெரும்பாடுபட்டுச் செய்த அரிய நூல்கள் மறைந்துவிடும். அப்படியானல் நம் முன்னோருடைய வாழ்க்கை வகைகளை நாம் அறிய இயலாது போய்விடும். பழந்தமிழ்ச் செய்யுட் கருத்துக்களை உரைகள் மூலம் மக்களிடையே பரப்பவேண்டும். இன்றேல் தமிழ் மக்களுடைய வாழ்வு நெறியே மாறிவிடும். இக்காரணங்களால் அடியார்க்கு நல்லார் உரை செய்தலே சிறந்த தமிழ்த்தொண்டு என்று எண்ணினர்.

**12. பொப்பண காங்கேயன் அடியார்க்கு நல்லாரை வேண்டியது என்ன ?**

பொப்பண காங்கேயன் "ஐம் பெருங்காப்பியங்களில் தலையாய சிலப்பதிகாரத்துக்கு விளக்கமான உரையில்லை. சிலப்பதிகாரம் தமிழன்னையின் கண்போன்றது. அதை மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனல் அப்பெரும் காப்பியத்துக்குத் தகுந்த சிறந்த உரையொன்றை இயற்றவேண்டும்" என்று அடியார்க்கு நல்லாரை வேண்டினன்.

***13. பொப்பண காங்கேயனின் கொடைச் சிறப்பை விளக்குக. (அல்லது) சிலப்பதிகார உரை நன்கு எழுதப்பட வேண்டிப் பொப்பண காங்கேயன் என்ன செய்தான் ?**

சிலப்பதிகாரப் பேருரை எழுதப் பல மாதங்கள் ஆகும். அத்தனை நாட்கள் புலவர் குடும்பம் தனியாக இருந்து வறுமையில் வாடலாகாது. குடும்ப நினைவு வந்தால் புலவருக்குக் கவலை உண்டாகும். அதனல் புலவர் தெளிவான உரை எழுத முடியாது. எனவே, பொப்பண காங்கேயன் புலவர் குடும்பத்தைத் தன் குடும்பத்தோடு சேர்த்து வாழச் செய்ய எண்ணினன். வறுமையில் வாடிய புலவர் குடும்பத்தைத் தன் அரண்மனைக்கு வரவழைத்

துச் செல்வச் சிறப்புச் செய்தான். பொப்பணன் குடும்பத்துடன் புலவர் குடும்பம் ஒன்றுபட்டது. குடும்பக் கவலையின்றிப் புலவர் உரை எழுதத் தொடங்கினர்.

**14. அடியார்க்கு நல்லார் உரை எவ்வாறு வளம் பெற்று உயர்ந்தது ?**

அடியார்க்கு நல்லார் குடும்பக் கவலை, சோற்றுக் கவலையின்றி உரை எழுதலானர். உரை எழுத எழுத, பொப்பண காங்கேயன் அவ்வப்போது படித்து மகிழ்வான். புலவருடைய திறமையை எண்ணி வியந்து உரையின் சிறப்பைப் பாராட்டுவான். புலவர், தம் வறுமையை மறந்து ஒரு செல்வக் குடிமகன் போல் வாழ்ந்து வந்தார். "பொப்பண காங்கேயர் சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்று உரை சொல்வித்ததே" என்று புலவரே கூறும் கூற்றால் அந்நூல் உரைவளம் நன்கு அறியலாம்.

**•15. "என்ன இருக்க என்ன செய்தீர்கள் ?.......தங்கள் தமிழன்புக்கு எல்லையே இல்லை போலும் !"—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.**

ஒரு நாள் புலவர் பகலுணவிற்குப் பின் உரையெழுதிக் கொண்டிருந்தார். அது முதுவேனிற்காலம். அக்காலத்தில் ஒரு பணியாள் புலவருக்கு விசிறி வீசிக் கொண்டிருந்தான். பொப்பணன் அப்போது அவனை வேறெங்கோ அனுப்ப வேண்டியிருந்தது. விசிறி வீசுவதை நிறுத்தச் சொல்வது முறையன்று. வேறு ஆளும் அருகில் இல்லை. ஆகவே பொப்பணனே புலவருக்குத் தெரியாமல் விசிறியைத்தான் வாங்கி வீச ஆரம்பித்தான். அவன் பெரிய விசிறியை வீசிப் பழக்கமின்மையால் விசையாக வீசினன். புலவர் 'மெதுவாக' என்றார். பொப்பணன் மிகவும் மெதுவாக வீசவும், புலவர் திரும்பினர். திடுக்கிட்டு எழுந்து பொப்பணனைப் பார்த்து, 'என்ன செய்தீர்கள்? தமிழ்ப் புலவர்க்கு அள்ளிக் கொடுக்கும் தங்கள் கார்வளக் கையா இத்தொழில் செய்தது. தங்கள் தமிழன்புக்கு எல்லையே இல்லை போலும்' என்றார். இதனால் பொப்பணன் தமிழ்ப் புலவர்க்குச் செய்யும் தொண்டே தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகக் கருதினன் என்பது விளங்கும்.

***16. "தங்களுக்குச் செய்யும் தொண்டு தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகும்"—இது யார் கூற்று ? இடஞ்சுட்டி விளக்குக.**

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை எழுதிக் கொண்டிருந்த சமயம் அவருக்கு விசிறி வீசிக் கொண்டிருந்த பணியாளனை வேறு இடத்துக்கு அனுப்பிவிட்டுப் பொப்பணன் தானே விசையாக விசிறினன். அதனால் புலவர் அவனை நோக்கி, தமிழ்ப் புலவர்க்கு அள்ளிக் கொடுக்கும் மழை போன்ற கையால் அவ்வாறு செய்யலாமா என்று கேட்டார். அதற்குப் பொப்பணன், "தங்களுக்குச் செய்யும் தொண்டு தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகும். இத்தமிழ்த் தொண்டு செய்யக் கொடுத்து வைத்ததற்கு நான் மிகவும் இன்பமடைகின்றேன்" என்று தன் அன்பை வெளியிட்டான். இதனால் காங்கேயனின் இடையறாத தமிழ்ப் பற்றை நன்கு அறியலாம்.

***17. சிலப்பதிகார உரை எழுதி முடித்த பின்னர் பொப்பணன் புலவரை எப்படிப் பாராட்டினன் ?**

உரை எழுதி முடித்ததும் பொப்பணன் புலவரைப் பொன்முழுக்காட்டினன்; முத்துப்பல்லக்கில் ஏற்றி ஊர்வலம் செய்தான் ; பல புலவர்கள் முன்னிலையில் "சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையை" அரங்கேற்றி மகிழ்ந்தான்.

### பயிற்சியும் முயற்சியும்

I. இல்லையேல் முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கு எங்ஙனம் விரிவுரை எழுதமுடியும்? — இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

இல்லையேல் முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கு விரிவுரை எழுத முடியாது.

II. கோடிட்ட இடங்களில் தக்க நிறுத்தக் குறிகளை இடுக.

புலவர் திரும்பிப் பார்த்தார் | திடுக்கிட்டார் | இருக்கையை விட்டெழுந்தார் | | என்ன இருக்க என்ன செய்தீர்கள் | தமிழ்ப் புலவர்க்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் தங்கள் கார்வளக் கையா இத்தொழில் செய்யத் தக்கது | தங்கள் தமிழன்புக்கு எல்லையே இல்லை போலும் | | என்றார் புலவர் |

(பாடப்புத்தகத்தில் 65-ஆம் பக்கம் பார்த்து விடை அறிக.)

III. இப்பாடம் வகுப்பில் நாடகமாக நடிப்பதற்கேற்ற வாய்ப்பை உடையது. தகுந்த பாத்திரங்களை அமைத்துக்கொண்டு நாடகமாக நடித்துப் பாருங்கள்.

## 11. பயிர் செய்தல்

(வேங்கடாசலம்)

### அரும்பதவுரை

**பக்கம் 66**

முன்னணிக்கு - முற்போக்குக்கு
பாமர மக்கள் - சாதாரண மக்கள்
எடுத்துக்காட்டு - உதாரணம்
இலாகாதார் - ஒரு துறையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்
வழங்க - கொடுக்க
கட்டளை - உத்தரவு
கூடுதல் விலை - அதிக விலை
உரிமையாளர் - சொந்தக்காரர்
தீவனம் - உணவு, தீனி
வேளாண்மை - பயிர்த் தொழில்

**பக்கம் 67**

உரம் - எரு
நெஞ்சுரம் - மனவலிமை
புனைந்து கூற - அழகுபடக் கூற, நன்கு கூற
பாவலர்கள் - கவிஞர்கள்
வளங்குன்றி - செழிப்பு குறைந்து
இணங்க - ஒத்துக்கொள்ள
கிளர்ச்சி - கலகம், சச்சரவு
மனப்பான்மை - எண்ணம்
தானம் செய்தல் - தருமமாகக் கொடுத்தல்
இயற்றப்படுகின்றன - செய்யப்படுகின்றன

**பக்கம் 68**

தலைதூக்கி - சிறப்படைந்து
எய்துவது - அடைவது
அருமை - அரிது
செவ்வையாக - நன்றாக, நல்ல முறையில்
அளவற்ற - கணக்கில்லாத
இசைவாய் - ஏற்றதாய்
வெப்ப தட்ப நிலை-சீதோஷ்ண நிலை
நுண்ணிய - மிகச் சிறிய
புலப்படா - தெரியமாட்டா

**பக்கம் 69**

அற்றுவிடும் - இல்லாமல் போகும்
படிப்படியாக - சிறிது சிறிதாக
பசுந்தாள் உரம் - தழை எரு
இசைவதான - ஏற்றதான

**பக்கம் 70**

உவப்பு - மகிழ்ச்சி
கூறுமிடத்து - சொல்லும்போது
வசதி - சௌகரியம்
பண்படுத்த - சீர் செய்ய
இன்றியமையாதது - மிக அவசியமானது
வடிகால் - நீர் அதிகமானால் வடிந்து செல்லும் சிறு கால்வாய்

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

முதன்மையான
புணைந்துகூற
வரவர
மனக்குறைவு
வரவும் செலவும்
தலைதூக்கி
அளவற்ற
அவ்வப்போது
சிறிது சிறிதாக
மெல்ல மெல்ல
இன்றியமையாதது
கவலையற்ற

## பதப் பிரிவு

பெருமை + முயற்சி = பெருமுயற்சி
முதன்மை + ஆன = முதன்மையான
இரும்பு + கலப்பை = இருப்புக் கலப்பை
பசுமை + புல் = பசும்புல்
பொருள் + கேடு = பொருட்கேடு
நெஞ்சு + உரம் = நெஞ்சுரம்
நிலத்துக்கு + உரியவர் = நிலத்துக் குரியவர்
மனம் + பான்மை = மனப்பான்மை
வேறு + வேறு = வெவ்வேறு
பயிர் + உணவு = பயிருணவு

## கேள்வியும் பதிலும்

***1. பயிர்த் தொழில் முன்னணிக்காக அரசியலார் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறாமைக்குக் காரணங்கள் யாவை ?**

(1) பயிர்த் தொழில் இலாகாவினர் மிகுந்த பணத்தைச் செலவு செய்து பயனடைகிறார்கள் என்னும் குடியானவர்களின் தவறான கருத்து.

(2) இலாகாதார் வாங்கச் சொல்லும் இரும்புக் கலப்பை மரக்கலப்பையைவிட விலையுயர்ந்தது. அதை இழுக்க விலையுயர்ந்த மாடுகளும் தேவை.

(3) அம்மாடுகளை வளர்க்கச் செலவு அதிகம். பசும்புல், பிண்ணாக்கு, பருத்தி விதை போன்றவை விலை அதிகமானவை.

***2. பயிரிடும் குடிகளின் நிலைமையை விளக்குக.**

தற்காலத்தில் பயிரிடும் ஏழைக் குடியானவனிடம் பதினைந்து ரூபா மதிப்புடைய இரண்டு எருதுகள்கூட இல்லை; இரண்டு அல்லது மூன்று அங்குல ஆழத்துக்குக் கூடுதலாக உழக்கூடிய கலப்பைகளும் இல்லை. நிலங்களுக்கு அவர்கள் எரு விடுவதும் இல்லை.

***3. நிலங்கள் வரவர வளங் குன்றுவதால் ஏற்படும் விளைவுகள் யாவை ?**

நிலங்கள் வரவர வளங் குன்றுவதால் நில உரிமையாளர் பொருள் கேடு அடைவதுடன் குடிகளும் மிகவும் மனக்குறைவு அடைகிறார்கள். நிலங்களைக் குத்தகைக்கு ஏற்றுப் பயிர் செய்வதால் கைமுதல் கெடுகிறது என்று எண்ணி வாரத்துக்குப் பயிர் செய்கிறார்கள். அதனாலும் வரவு செலவு சரிக்கட்டவில்லையென்று கூடுதலான வாரம் கேட்கிறார்கள். நில உரிமையாளர்கள் மறுத்தால் கிளர்ச்சி செய்து மாகாடுகள் நடத்துகிறார்கள். பல தீர்மானங்களும் நிறைவேற்றப்படுகின்றன. நில உரிமையாளர் இவற்றிற்கு இணங்க மறுத்தால் உடனே வேலை நிறுத்தம் தொடங்குகிறது. உரிமையாளர்களோ அவர்களுக்கு இணங்குவதைவிட நிலத்தையே தானம் செய்வது நலமென்று நினைக்கிறார்கள்.

***4. நிலத்தை வளமுடையதாகச் செய்வதெப்படி ?**

மண்ணில் கலந்துள்ள புழுக்கள் அதிகரித்து தங்களுடைய வேலையைச் செய்வதற்கு வெவ்வேறு நிலைமையை அடையவேண்டும். செடிகளுக்குத் தேவையான "நைட்ரோஜன்" என்னும் உப்புப் பொருளைப் பிரித்தெடுப்பவை இப்புழுக்களே. பயறுபோன்ற செடிகளை வளர்ப்பதனுல் நிலம் செழிப்படையும். பலவகை எருக்களையும் நிலத்தில் இடவேண்டும்.

***5. நெல்வயலில் புழுக்கள் புரியும் தொண்டு யாது ?**

நிலத்தில் எருவுக்காகத் தொழு எரு, பிண்ணுக்கு, பசுந்தாள் உரம் முதலியவைகளைச் சேர்த்து உப்புப் பொருளை மிகுதிப்படுத்துகிறோம். புழுக்கள் உதவியினுல்தான் பயிர்கள் இந்த உப்புப் பொருளை உட்கொள்ள முடியும். மேற்கூறிய பலவகை எருக்களும் சிறிதுசிறிதாக மக்கி அதனுல் பலவகைப் பொருள்கள் படிப்படியாக உண்டாகின்றன. அதற்குப் பலவகையான புழுக்களே காரணமாக இருக்கின்றன. ஒரே வகுப்புப் புழுக்கள் எருவிலுள்ள உப்புப் பொருளில் வேலை செய்து மெல்ல மெல்லத் தண்ணீரில் கரையக்கூடிய 'அமோனியா' என்னும் பொருளாக மாற்றுகின்றன. நெல் வயலில் காற்று அதிகமில்லை. ஆகையால் இப்புழுக்களால் ஏற்படும் மாறுதல் இத்துடன் நின்றுவிடும். நெற்பயிர் அமோனியாவாக உட்கொள்ளும் தன்மை உடையதாகையால் அதற்கு இதுவே போதுமானது.

***6. புன்செய் நிலம், தோட்டக்கால் நிலம் ஆகியவற்றில் புழுக்கள் செய்யும் மாறுதல் என்ன ?**

புன்செய் நிலம், தோட்டக்கால் நிலம் முதலியவற்றில், பல புழுக்கள் அமோனியாவை, 'நைட்ரேட்' என்னும் உப்பாக மாற்றும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த உப்பும் அமோனியாவைப் போல் நீரில் கரையும். பலவகைச் செடிகளுக்கு இதுவே சிறந்த உரமாகும்.

***7. புழுக்கள் நன்கு வேலை செய்வதற்கு என்ன செய்யவேண்டும்?**

அமோனியாவை உப்பாக மாற்றக்கூடிய புழுக்கள், மண்ணில் போதுமான அளவு காற்ளேட்டமும், மெதுவான ஈரமும், நிலத்தைப் புளிப்புக் கொடுக்கவிடாமல் தடுத்து, இனிப்புக் கொடுக்கும் சுண்ணும்பு போன்ற எருவும் இருந்தால்தான் உயிர் வாழ முடியும். அதற்கு நிலத்தைச் சரியான முறையில் பயிர் செய்யவேண்டும்.

**8. நிலத்துக்கு நன்மை செய்யும் புழுக்கள் எப்போது கெடும் ? அதனுல் ஏற்படும் தீமையை விளக்குக.**

நிலத்தைப் போதுமான அளவு உழாமல் புளிப்படையும்படி விட்டுவிடுவதாலும், வடிகால் வசதி இல்லாமற்போனுலும் நன்மை தரும் புழுக்கள் அழிந்து தீமை தரும் வேறு வகையான புழுக்கள் பெருகிவிடும். இப்புழுக்கள் செடிகளுக்கு உணவாக உதவக்கூடிய உப்பை அழித்து, அதை உப்புக் காற்ளுக மாற்றுவதால் அது காற்றில் கலந்து பயிருணவில் மிகுந்த கேட்டைத் தரும். ஆகையால் குடிகளுக்கு உதவியாக இருக்கும் புழுக்கள் வளர்வதற்கு நிலத்தைச் சரியானபடி பண்படுத்தவேண்டும்.

### பயிற்சியும் முயற்சியும்

I. என்ன செய்து என்ன பலன்?—செய்தி வாக்கியமாக்குக.

என்ன செய்தும் பலன் இல்லை.

II. செடிகள் உட்கொள்வதனால் உண்டாகும் குறைபாட்டிற்கு அவ்வப் போது ஈடு செய்தாலன்றி நிலத்தில் உப்புப் பொருள் அற்றுவிடும்.—இவ்வாக்கியத்தின் எதிர்மறை வினைகளை உடன்பாடாக மாற்றுக.

செடிகள் உட்கொள்வதனால் உண்டாகும் குறைபாட்டிற்கு அவ்வப் போது ஈடு செய்தால்தான் நிலத்தில் உப்புப் பொருள் நிலைத்து நிற்கும்.

III. சென்று பாருங்கள் :

உங்கள் ஊருக்கு அருகில் உள்ள வயல்களுக்குச் சென்று அங்குப் போடப்படும் உரங்களைக் கவனியுங்கள். பயிர்கள் செழிப்பாக வளராவிடின் அதன் காரணத்தை விசாரித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

## 12. நூலகத் தேவை

(வே. தில்லை நாயகம், B.A., DIP. LIB. Sc.,
நூலகத்தார்,
சென்னை மண்டிலக் கல்வித் துறைத் தலைவர் நிலையம்.)

### அரும்பதவுரை

**பக்கம் 71**

எழிலுற - அழகாக, கவர்ச்சிகரமாக
நூலகம் - நூல் நிலையம்
படி - பிரதி
சுவடிகள் - புத்தகங்கள்
ஏட்டகம் - நூலகம்
உசாவுங்கள் - கேளுங்கள்
அலுவல் - வேலை

**பக்கம் 72**

அலுப்பாக - களைப்பாக
ஏதும் - ஏதாவது
சடுதியான - அவசரமான
உடை - இங்கு மேலட்டை என்பது பொருள்
கடப்பாடுடையோம் . - நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்

**பக்கம் 73**

பணி - சேவை
பேணியும் - பாதுகாத்தும்
புத்தறிவு - புதிய அறிவு
காலப்போக்கோடு - காலத்துக்குத் தகுந்தபடி
வணக்கி - வளைத்து
கையொப்பம் - கையெழுத்து
வரலாறு - சரித்திரம்
குறிக்கோள் - நோக்கம்

**பக்கம் 74**

எடுத்துக்காட்டாக - உதாரணமாக
செப்பேடு - செம்பால் ஆகிய தகடு
துருவி - நுட்பமாக
ஆய்வு - ஆராய்ச்சி
வேட்கை - ஆவல்
பிணிக்கும் - கவரும்

**பக்கம் 75**

அருகி - குறைந்து
மறுமலர்ச்சி - புதுமை
உறு - நிறைந்த
ஓவா - நீங்காத
செறு - போர் செய்கின்ற
அடிகோலியதாய் - அடிப்படையானதாய்
தொலையா - நீங்காத
தலையாய - சிறந்த

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

| | |
|---|---|
| காலப்போக்கோடு | தலையாய |
| எடுத்துக்காட்டாக | அடிகோலி |
| வேறுபாடின்றி | வேட்கை |
| பெறுவதற்கான | மறுமலர்ச்சி |

## பதப் பிரிவு

| | |
|---|---|
| வேறு + வேறு = வெவ்வேறு | தேர்வு + எழுதி = தேர்வெழுதி |
| செம்பு + ஏடு = செப்பேடு | முடிவு + உருத = முடிவுருத |
| மூன்று + பெரும் = முப்பெரும் | எழில் + உற = எழிலுற |
| குடி + ஆட்சி = குடியாட்சி | |



## கேள்வியும் பதிலும்

*1. நூலகம் எவ்வாறு படிப்படியாகத் தற்கால நிலையை அடைந்தது ?

'நூலகம்' முதலில் சுவடி எழுதும் இடமாக இருந்தது, பின்னர் அது படி எடுக்கும் இடமாகி, அடுத்துச் சுவடி தொகுத்தும் பேணியும் வைக்கும் நிலையமாகி, பின்னர் நூல்கள் விரும்பிக் கேட்டார்க்குக் கொடுத்து உதவும் அமைப்பாகிப் பெருகி, தொடர்ந்து பொழுது போக்கில் அறிவும் பொருளும் தரும் மன்றமாகி, இன்று அறிவுக்கூடமாகவும் ஆராய்ச்சிச் சாலையாகவும் புத்தறிவூட்டும் பள்ளியாகவும் பல்கலைக் கழகமாகவும் 'எல்லாருக்கும் எல்லாம்' என்று இருக்கும் மக்கள் விரும்பும் நடு இடமாகப் பொது உடைமையாக வளர்ந்திருக்கிறது.

*2. பள்ளிப்படிப்பின் பயன் யாது ? மனிதன் எப்போது உண்மை அறிவைப் பெறுகிறான் ?

தொடக்கப்பள்ளியிலிருந்து பத்துப்பன்னிரண்டு யாண்டுகள் படித்ததும் பட்டம் கிடைக்கிறது. பின் குடும்ப நிலைமையும், மக்கள் இன அமைப்பும் எல்லோரையும் ஏதாவதொரு தொழில் துறையில் ஈடுபடச் செய்கிறது. பள்ளியில் படித்ததெல்லாம் "காகம் கருப்பு" "காகிதம் வெளுப்பு" என்ற அளவோடு வாழ்க்கைக்குப் பயன்படுகிறது.

மனிதன் உலக அனுபவத்தில் ஈடுபடும்போதுதான் உண்மை அறிவைப் பெறுகிறான்.

***3. நூலகம் எவ்வாறு தேவைப்படுகிறது?**

மக்கள் யாவரும் வாழ்க்கையிலும் தொழில் துறையிலும் அறிவு பெற ஆய்வுக்கூடமும் அறிவு மன்றமும் மிகமிகத் தேவையானது. அதுவே நூலகமாகும்.

***4. நூலகம் சிறந்து விளங்குவதற்கு என்னென்ன அமைப்புகள் வேண்டும்?**

நூலகம், (1) நம் நாட்டு ஆயிரக்கணக்கான மக்களின் ஆவலையும் அறிவு வேட்கையையும் நிறைவேற்ற வேண்டும்.

(2) மக்கட்குலம் பிழைப்பதற்கும் உயர்வடைவதற்கும் பணிபுரிய வேண்டும்.

(3) பண்டைய சிறப்புக்களை ஆராய்ந்து, திரட்டிப் பகுத்து, இன்றைய நடைமுறைகளையும் அறிந்து சேர்த்து எதிர்கால உயர்வுக்கும் வழிகாட்ட வேண்டும்.

(4) உலகியல் அறிவெல்லாம் தேடிக்கொண்டுவந்து தமிழில் தருதல் வேண்டும்.

(5) ஏழை—பணக்காரர், ஆடவர்—பெண்டிர், குழந்தை—முதியோர், பாமரர்—பண்டிதர், குடன்—குருடு—செவிடு என்னும் வேறுபாடு இல்லாமல் எல்லார்க்கும் எல்லா அறிவையும் பெறுவதற்கு உரிமை அளிப்பதாகவும், படித்தாரைக் கவர்ந்து படியாதவரையும் விரும்பிப் பணிபுரியச் செய்வதாகவும் இருத்தல் வேண்டும்.

***5. நூல்கள், படிப்பவர், நூலகப்பணி என்னும் முப்பெரும் ஆற்றலின் கூட்டுறவுக்குக் காட்டப்பட்ட உவமையை விளக்குக.**

கம்பிச் சுருள், இரும்புக் கட்டை, மின் ஆற்றல் ஆகிய இவை தனித் தனியாக இருக்கும்போது எத்தகைய பெரும் பயனும் காண முடிவதில்லை. ஆனால் இம்மூன்றும் தகுந்த முறையில் இரும்புத் தண்டத்தைச் சுற்றிக் கம்பிச் சுருளை அமைத்து, அதில் மின் அலைகளைப் பாயவிட்டால் மின் ஈர்ப்பு ஆற்றல் தோன்றுகிறது. அது எல்லோரும் ஆச்சரியப்படுமாறு பெரிய பாரமாகிய சுமைகளை எளிதில் தூக்கி நகர்த்தி, சுமை தூக்கும் ஆற்றலாகப் பயன்படுகிறது. அவ்வாறே நூல்கள், படிப்பவர், நூலகப் பணிபுரிபவர் என்னும் மூன்று பெரிய ஆற்றலும் தகுந்த முறையில் கலந்து பணியாற்றத் தொடங்கினால் ‘அறிவு’ என்னும் பேராற்றல் ‘அறியாமை’ என்னும் நீங்காத பெரும் சுமையை மக்கள் வாழ்விலிருந்தே நீக்கிவிடும்.

**6. நமது தலையாய கடமை யாது?**

அறிவுப் போராட்டத்தைத் தொடங்கி, அதைத் தொடர்ந்து நடத்தி, வெற்றி காணவேண்டும். இதுவே நம் தலையாய கடமையாகும்.

## பயிற்சியும் முயற்சியும்

**I. என் வீடென்ன நூலகமா?**

நான் என்ன நூலகமா வைத்து நடத்துகிறேன்.—**இவற்றைப் பொருள் மாறாமல் சாதாரண வாக்கியமாக மாற்றி எழுதுக.**

என் வீடு நூலகமன்று.

நான் நூலகமொன்றும் வைத்து நடத்தவில்லை.

II. நாம் இந்நிலைமையை மாற்றவேண்டும்—செய்வினையைச் செயப்பாட்டுவினையாக மாற்றி எழுதுக.

இந்நிலைமை நம்மால் மாற்றப்படவேண்டும்.

# 13. வீட்டிற் கலை

(ஓவியக் கலைஞர் சி. பெரியநாயகி, அண்ணாமலை நகர்.)

## அரும்பதவுரை

**பக்கம் 76**

கவர - வசிகரிக்க
கற்பனை - மனோசிருஷ்டி
பரிணமித்தல் - தோன்றுதல்
கவிதை - பாட்டு
கலைஞன் - வித்தையில் வல்லவன்
குன்றமல் - குறையாமல்
சோர்வு - தளர்ச்சி
மிளிர்கின்றது - விளங்குகின்றது

**பக்கம் 77**

பருமை - பருத்திருக்கும் தன்மை
தேர்ந்து - ஆராய்ந்து
ஒருவன் - (ஆண்பால்)
ஒருத்தி - (பெண்பால்) 'ஒருவள்' என்று சொல்வது பிழை
திலகம் - நெற்றிப்பொட்டு
ஏற்ப - பொருத்தமாக
வண்ணம் - வர்ணம்
முற்றம் - வீட்டின் முன்புறம்

**பக்கம் 78**

மலிவு - குறைவு
பரிணமித்தல் - தோன்றுதல்
செம்பு - சொம்பு
உன்னி - நன்கு சிந்தித்து
அளவளாவ - கலந்துபேச
அத்துணை - அவ்வளவு
மதியம் - சந்திரன்

**பக்கம் 79**

மின் ஆற்றல் - மின்சாரசக்தி
சுவடிகளை - புத்தகங்களை
குன்றாத - குறையாத
இன்றியமையாதது - மிக அவசியமானது
மாறுபடலாம் - வேறுபடலாம்
உண்கலம் - சாப்பிடும் பாத்திரம்
கமழ - விளங்க

**பக்கம் 80**

அலைச்சல் - துன்பம்
முறைப்படுத்தி - ஒழுங்குபடுத்தி
ஓவியம் - சித்திரம்
இயற்கை - கையால் செய்யப்படாதது
செயற்கை - கையால் செய்யப்படுவது
தோற்றுவிக்க - உண்டாக்க
படைத்த - உண்டாக்கிய

**பக்கம் 81**

எழுப்பிவிடுதல் - தூண்டுதல்
பொலிவு - அழகு
ஈடுபடுதல் - சம்பந்தப்படுதல்

## பயிற்சிக்குரிய சொற்களும் சொற்றொடர்களும்

குறைவற்ற
மிளிர்கின்றது
கவர்ச்சிகரமான
பரிணமித்து
ஒன்றோடொன்று
தோற்றுவிக்க
நோயற்ற

## பதப் பிரிவு

பூ + தோட்டம் = பூந்தோட்டம்
உள் + சென்றவுடன் = உட்சென்றவுடன்
சமையல் + அறை = சமையலறை
கலை + உணர்ச்சி = கலையுணர்ச்சி
அழகு + உணர்ச்சி = அழகுணர்ச்சி
நோய் + அற்ற = நோயற்ற

## கேள்வியும் பதிலும்

*1. **கலை என்பது யாது? அதன் தன்மைகள் யாவை?**

உள்ளத்தில் உண்டாகும் கற்பனையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்திக் கவரச்செய்வதே கலை எனப்படும். அதுகண்ட இடங்களில் கருத்துக்கிசையக் காணப்படும் பொருளைக்கொடுக்கும்; கண்டோரைத்தன் வசமாக்கும்.

*2. **கலையைச் சாதாரணமாக எங்கெங்கே காணலாம்?**

அழகிய கதை, கவிதை, ஓவியம், நாட்டியம், பேச்சு, சாதாரண வாழ்க்கை ஆகியவற்றில் கலையைக் காணலாம்.

3. **வீட்டில் எப்போது கலையைக் காணலாம்?**

கலைஞன் உள்ள இடத்தில் கலையுண்டு. வீட்டில் கலையுள்ளம் படைத்த ஒருவர் இருந்து தம் உணர்ச்சியை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப் படுத்தும் நிலை வாழ்ந்தால் வீட்டில் கலையைக் காணலாம்.

*4. **எப்படிப்பட்டவர் வீட்டில் கலை காணப்படுவதில்லை?**

சோம்பலும் சோர்வும் உள்ள மக்களுக்குக் கலையுணர்ச்சி அழிந்து விடுகிறது. அப்படிப்பட்டவர்கள் வீட்டில் கலை காணப்படுவதில்லை.

5. **வீட்டின் அமைப்பில் கலையைக் காணுதல் எப்படி?**

வீட்டின் உயரம், அதன் பருமை இவற்றில் கலையைக் காணமுடியாது. அதன் கம்பீரமான தோற்றம் கவர்ச்சியான அமைப்பு இவற்றிலேதான் கலையைக் காணலாம். அது வீடு கட்டுபவனுடைய கலையுள்ளத்தையும் பெரும்பாலும் பொறுத்திருக்கிறது.

*6. **அறையில் கலையழகு தோன்றுமாறு செய்வது எதுபோன்றது?**

மேல்நாட்டு உடையணிந்த பெண்ணின் நெற்றியில் உள்ள திலகம் அழகை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் கரிய கூந்தல் தவழ்ந்தோடும் அழகிய நெற்றியில் நம்நாட்டு உடைக்கேற்பக் குங்குமத்தைத் தரித்துக்கொள்ளும்போது அங்கே கலையைக் காணலாம். நெற்றிக்குப் பொருத்தமானபடி சிறியதாகவும், வர்ணம் பொருந்தியதாகவும் பொட்டிடுவதில் ஒருகலை இருக்கிறது. அதுபோலவே தேவையைப் பூர்த்தி செய்வதோடு நில்லாமல் அழகுணர்ச்சியுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அறைகளில் தேவையான பொருள்களை அமைத்து வைப்பது அறையில் கலையழகை உண்டாக்குவதாகும்.

7. **சாமான்களைப் பொறுக்கி எடுப்பதில் கலை காண்பது எப்படி?**

விலை மலிவுக்காகவும், பெருமைக்காகவும் பொருள்களை வாங்கி நிரப்பாமல் நம் அறையின் அமைப்பு, அமைப்புக்கேற்ற பொருத்தம், அழகு இவை தோன்றுமாறு நன்கு யோசித்துப்பார்த்துப் பொருள்களை வாங்குவதில் கலை இருக்கிறது. பொருள்களைத் தேர்ந்து வாங்குவதிலும் அவரவர் தகுதிக்கு ஏற்றவைகளையே வாங்கவேண்டும்.

*8. **ஒரு நடுத்தரமான வீட்டிற்குக் கலையுணர்ச்சியைக் கொடுக்கும் சில பொருள்களைக் கூறுக.**

நண்பர்கள் வந்தால் உட்கார்ந்து அளவளாவ ஒரு நல்ல அறைவேண்டும். அதற்கேற்ற சில நாற்காலிகள், அவற்றோடு பொருந்தும் ஒரு வட்டமேசை,

மேசையின்மீது விரிப்பு, அழகிய பூக்களைத் தாங்கி நிற்கும் ஒரு சிறியசெம்பு —இவற்றைப் பொருத்தமான முறையில் ஒரு நடுத்தரமான வீடு பெற்றிருப்பது கலையுணர்ச்சியைக் கொடுக்கும்.

**9. அறையின் தேர்வு, அமைப்பு, சாமான்களின் தேர்வு முதலியவை எவ்வாறு பொருந்தி இருக்கவேண்டும்?**




மாலைநேரத்தில் சந்திரனும் மலர்களும் தென்றல் காற்றும் பொருந்தி வருவதுபோலவும், அமாவாசையில் கள்ளிரவு, இடியின் முழக்கம், மின்னல் மினவு இவை பொருந்தி வருவது போலவும் அறையின் தேர்வு, அமைப்பு, சாமான்களின் தேர்வு முதலியவை பொருந்தியிருக்கவேண்டும்.

**10. படுக்கை அறை எவ்வாறு இருக்கவேண்டும்?**

படுக்கை அறை நல்ல காற்றோட்ட முள்ளதாக இருக்கவேண்டும். கட்டில் இருந்தால் அதன் அடியில் பெட்டியோ மரச்சாமான்களோ வைக்கக் கூடாது. உடைகள் வைக்கும் அலமாரி, ஒரு சாய்வு நாற்காலி, ஒரு விளக்கு முதலியவை இருக்கவேண்டும். படுக்கை விரிப்பு, தலையணை உறை, கொசு வலை இவற்றின் தையலில் கலையுள்ளம் விளங்கக் காணலாம்.

**11. வீட்டின் சுற்றுப்புறம் எவ்வாறு இருத்தல்வேண்டும்?**

வீட்டினைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குச் சென்றால் அங்கேதான் கலை மிக உயர்ந்த நிலையில் இருக்கக் காணவேண்டும். சுற்றுப்புற அமைப்பு பிறரைக் கவரக்கூடிய நிலையில் இருக்கும்போது அங்கே கலை காணப்படுகிறது.

**12. தோட்டம் அமைப்பதில் எவ்வாறு கலையைக் காணலாம்?**

வீட்டின் முன்பக்கம் பூந்தோட்டம்; பின்பக்கம் காய்கறித்தோட்டம் என அமைக்கவேண்டும். செடிகளை நட்டு வரிசைப்படுத்தி, முறைப்படுத்தி அமைப்பதில்தான் கலை இருக்கிறது. பாத்திகளிலும் தொட்டிகளிலும் செடிகளை நட்டுவைத்தலில் தனிக்கலையைக் காணலாம்.

"நெருப்பு இல்லாமல் நீள்புகை எழும்புமா?"

**13. கலையுணர்ச்சியை எவ்வாறு தோற்றுவிக்க வேண்டும்?**

இறைவன் படைத்த எல்லாப் பொருள்களிலும் கலை உண்டு. ஆகையால் அறிவுள்ள பொருள்களிலே கலையும், கலையுணர்ச்சியும் உண்டு. ஆகையால் அக்கலையுணர்ச்சியை எழுப்பிவிடுவதால் கலையைப் பெருக்கலாம்.

கலையின் அழகு நிறைந்த இடங்களைப் பார்த்தும் பலரோடு பழகியும்வரின் கலையுணர்ச்சி ஏற்படும்.

**14. கலை நிறைந்த வீடு அடையும் பயன்கள் யாவை?**

கலை நிறைந்த வீட்டில்தான் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். மகிழ்ச்சி நோயைப் போக்கும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்.' கலை நிறைந்த வீடே நல்ல வீடு எனப்படும்.

## பயிற்சியும் முயற்சியும்

I. உங்கள் படம் ஒட்டும் புத்தகத்தில் (Album) நல்ல கலையழகு வாய்ந்த அறை, தோட்டம், படுக்கையறை, படிப்பறை, சமையலறை முதலியவற்றின் படங்கள் கிடைத்தால் கத்தரித்து ஒட்டுக.

II. இவ்வளவு பொருட்கள் இருந்துவிட்டால் கலையென்று சொல்ல முடியுமா? —இதனைப் பொருள் மாறுமல் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

இவ்வளவு பொருட்கள் இருந்துவிட்டாலும் கலையென்று சொல்ல முடியாது.

———

... PUBLIC LIBRARY 12 NOV MADRAS

"எட்டாம் வகுப்புத் தமிழ்த் துணைவன்
இனிதாய் முற்றுப் பெற்றதுவே."

12 NOV

# 3. இலக்கணப் பகுதி

## அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தின் மொழி பெயர்ப்பு

### VIII வகுப்பு

(VI, VII வகுப்புப் பகுதிகளையும் திரும்பப் படித்தல் வேண்டும்)

### Standard VI

வாக்கியத்தின் உறுப்புக்களும் அவற்றின் அமைப்பும். எளிய வாக்கியங்கள். எழுவாய், பயனிலைகளின் வேற்றுமைகளும் பிற பிரிவுகளும்.

(உ-ம்) நிச்சயம் வேண்டிய முற்றுவினை, செயப்படுபொருள், வினையெச்சம், தழுவும் பெயரெச்சங்கள் முதலியன. உறுப்புக்கள் நிற்க வேண்டிய நேரான முறையில் அமைந்தனவும் செய்யுட்களில் உள்ளனபோல இடம் மாறியனவும் ஆகிய எளிய வாக்கியங்கள். வாக்கியத்தின் வகைகள்.

நிறுத்தக் குறிகள் : பிரயோகப் புள்ளிகள், முற்றுப் புள்ளி. காற்புள்ளி, முறைப் புள்ளிகள் : கேள்விக் குறி ? ஆச்சரியக் குறி ! நேர்ப் பேச்சுக் குறி " ".

### Standard VII

கலவை வாக்கியங்களும் அவற்றின் உட்பிரிவுகளும். பயிற்சிகள். சொல் இலக்கணம், பெயர் வகைகள், வினை வகைகள் முதலியவை. வினைச் சொற்களும் அவற்றின் பிரயோகங்களும். வேற்றுமை உருபுகள்.

நிறுத்தக் குறிகள் : முக்காற் புள்ளி (Colon) : அரைப் புள்ளிகள் (Semi Colon) ;

### Standard VIII

சந்தி விளக்கம். சில பொதுவான அணிகள். செய்யுளில் வரும் அணிகள்.

இலக்கணப் பயிற்சிகள். கீழ்வரும் பயிற்சிகள் பயன்படும் :

1. வாக்கிய மாற்றம்.
2. வாக்கியச் சேர்க்கை.
3. மாற்றி அமைத்தல்.
   - (*a*) செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குதல்.
   - (*b*) வினா வாக்கியத்தைச் சாதாரணமாக்குதல்.
   - (*c*) எதிர்மறையை உடன்பாடாக மாற்றுதல்.
   - (*d*) –நேர்ப் பேச்சை அயல் பேச்சாக மாற்றுதல்.
   - (*e*) ஆச்சரியத்தைச் சாதாரணமாக்குதல்.
   - (*f*) நுண் பொருளைப் பருப் பொருளாக மாற்றுதல்.

நிறுத்தக் குறிகள் : ஒற்றைக் கோடு (Dash) ——

இரட்டைக் கோடுகள் (Double Dash) —— ——

கக வளைவுகள் (Semilunes) ( )

---

" செல்வம் என்பது சிந்தை நிறைவே." — அமரன்,

## வாக்கியம்

சொற்கள் ஒன்றேடொன்று தொடர்ந்து ஒரு முடிந்த பொருளைத் தெரிவிப்பது **வாக்கியம்** அல்லது **சொற்றெடர்** என்று கூறப்படும்.

(உ-ம்) ஔவையார் ஆழ்ந்த புலமை உடையவர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

பிசிராந்தையார் நெடுங்காலம் உயிர் வாழ்ந்தார்.

இவற்றுள் சொற்கள் ஒன்றேடொன்று தொடர்ந்து, ஒரு முடிந்த பொருளைத் தெரிவிக்கின்றன.

எழுவாய், பயனிலை என்னும் இரண்டும் ஒரு வாக்கியத்தின் முக்கியமான உறுப்புக்கள். எழுவாய், பயனிலை இல்லாதவை வாக்கியம் ஆகா.

ஒரு வாக்கியத்தின் தோற்றத்துக்குக் காரணமாக இருக்கும் சொல் **எழுவாய்**. வாக்கியத்தின் கருத்து முடியும் சொல் **பயனிலை**.

1. **மதிவாணன்** படித்தான்.
2. **குருவிகள்** பறக்கின்றன.

இவற்றுள் **மதிவாணன், குருவிகள்** - இரண்டும் எழுவாய். **படித்தான், பறக்கின்றன** - இரண்டும் பயனிலை.

சில சமயங்களில் ஒரு வாக்கியத்தின் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. அதற்குத் **'தோன்ரு எழுவாய்'** என்று பெயர்.

(உ-ம்) அவனைப் பார்த்தாயா? இதில் **'நீ'** என்பது மறைந்துள்ளது. ஆகையால் இது தோன்ரு எழுவாய்.

எப்பொழுதும் பெயர்ச் சொற்களே எழுவாயாக வரும். வினைச் சொல், பெயர்ச் சொல், வினைச் சொல் மூன்றும் பயனிலையாக வரும்.

(உ-ம்) 1. ஸ்விஸ் நாட்டில் ரயில்கள் அனைத்தும் மின் ஆற்றலில் இயங்குகின்றன. இயங்குகின்றன - **வினைப் பயனிலை**.

2. என் பெயர் **அம்பலத்தாடியார்** - அம்பலத்தாடியார் - **பெயர்ப் பயனிலை**.

3. மகர யாழ் என்றால் **என்ன**? என்ன - **வினைப் பயனிலை**.

**செயப்படு பொருள்:** எழுவாய் செய்யும் தொழிலின் பயனை அடையும் பொருள் செயப்படு பொருள் எனப்படும்.

(உ-ம்) நான் **தமிழை** நன்கு கற்பேன்.

அணில் **நெல்லைக்** கொறிக்கும்.

இவற்றுள் **தமிழை, நெல்லை** என்னும் இரண்டு சொற்களும் செயப்படு பொருள்கள்.

### எழுவாய், பயனிலை, செயப்படு பொருளை அறியும் விதம்

ஒரு வாக்கியத்தில் பயனிலைக்குத் தக்கபடி **யார்? எது? எவை?** என்பன போன்ற கேள்விகளுக்கு வரும் விடையே **எழுவாய்** ஆகும்.

வாக்கியத்தின் பொருள் முடியும் சொல்லே **பயனிலை** ஆகும்.

அவ்வாக்கியத்தில் **யாரை? எதை? எவற்றை?** என்பன போன்ற கேள்விகளுக்கு வரும் விடையே **செயப்படு பொருள்** ஆகும்.

எழுவாய் எப்போதும் முதல் வேற்றுமையில்தான் வரும். செயப்படு பொருள் எப்போதும் இரண்டாம் வேற்றுமையில்தான் வரும்.

## வாக்கியத்தின் வகைகள்

வாக்கியம், தனிநிலை வாக்கியம், தொடர்நிலை வாக்கியம், கலவை வாக்கியம் என மூவகைப்படும்.

1. ஒரு வாக்கியத்தில் ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் மட்டும் இருப்பின் அது **தனிநிலை வாக்கியமாகும்.**

(உ-ம்) சென்னைக்கு வந்து சிவம் ஆனேன்.

2. ஒரு வாக்கியத்தில் ஓர் எழுவாயும் பல பயனிலைகளும் இருப்பின் அது **தொடர்நிலை வாக்கியமாகும்.**

(உ-ம்) கலை, காணும் இடங்களில் கருத்துக்கு இசையக் காணப்படும்; பொருளைக் கொடுக்கும்; கண்டோரைக் கவரும்.

3. முக்கியமான ஒரு வாக்கியத்துடன் சிறு வாக்கியங்களும் சேர்ந்து வருவது **கலவை வாக்கியமாகும்.** பல சிறு வாக்கியங்கள் கலந்து, ஒரு பெரும் வாக்கியமாக வருதலும் கலவை வாக்கியமாகும்.

(உ-ம்) 1. 'கற்றதனாலாய பயன் என்கொல்?' என வினவுகிறார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் வினவுகிறார் **முக்கியமான வாக்கியம்.**
கற்றதனாலாய பயன் என்கொல்? **சார்பு வாக்கியம்.**
என — **சேர்க்கும் சொல்.**

2. "இத்தமிழ்த் தொண்டு செய்யக் கொடுத்து வைத்ததற்கு நான் பெரிதும் மகிழ்கிறேன்" என்று தன் அன்பை வெளியிட்டான் பொன்னப்பன்.

### கலவை வாக்கியங்களைக் கட்டம் வரைந்து பிரித்துக் காட்டுதல்

என் அருமை மாமா ஆதரவற்ற என்னை உயிராக வளர்க்கிறார் என்பதை நான் நன்கு அறிவேன்.

| எழுவாய் | எழுவாய் அடைமொழி | பயனிலை | பயனிலை அடைமொழி | செயப்படு பொருள் | செயப்படு பொருள் அடைமொழி | சேர்க்கும் சொல் |
|---|---|---|---|---|---|---|
| (*a*) மாமா | என் அருமை | வளர்க்கிறார் | உயிராக | என்னை | ஆதரவற்ற | என்பதை |
| (*b*) நான் | | அறிவேன் | நன்கு | | | |

## சொல் இலக்கணம்

சொல் (1) பெயர்ச் சொல், (2) வினைச் சொல், (3) இடைச் சொல், (4) உரிச் சொல் என நான்கு வகைப்படும்.

பெயர்ச் சொல் (1) பொருட் பெயர், (2) இடப் பெயர், (3) காலப் பெயர், (4) சினைப் பெயர், (5) பண்புப் பெயர், (6) தொழிற் பெயர் என ஆறு வகைப்படும்.

(உ-ம்) 1. சீதை, கிளி, மரம் — பொருட் பெயர்.
2. பள்ளிக்கூடம், வீடு, சிதம்பரம் — இடப் பெயர்.
3. சித்திரை, நாள், மாலை — காலப் பெயர்.
4. மூக்கு, கிளை, தலை — சினைப் பெயர்.
5. வெண்மை, வாய்மை, ஆண்மை — பண்புப் பெயர்.
6. காய்தல், உவத்தல், செய்கை — தொழிற் பெயர்.

**வினையாலணையும் பெயர்**, வினைமுற்று வினையைக் குறிக்காமல் பெயர்த் தன்மை அடைந்து வேற்றுமை உருபுகளை ஏற்று வருவதாம்.

(உ-ம்) வந்தவன், கொடுத்தவை, தூங்கினவனுக்கு.

**ஆகு பெயர்**: ஒரு பொருளின் இயல்பான பெயர் அதனோடு சம்பந்த முடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருவதே ஆகு பெயர். அது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயரினடி யாகத் தோன்றும்.

1. ஒரு பொருளின் பெயர் அதன் சினைக்கு ஆகி வருவது **பொருளாகு பெயர்** அல்லது **முதலாகு பெயர்**.

(உ-ம்) **தாமரை** முகம்: இதில் தாமரை என்னும் பொருள் அல்லது முதலின் பெயர் அதன் சினையாகிய பூவிற்கு ஆனது.

2. ஓர் இடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகி வருவது **இடவாகு பெயர்**.

(உ-ம்) **சென்னை** சிரித்தது: சென்னையிலுள்ள மக்களுக்கு ஆகி வந்தது.

3. ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தில் தோன்றும் பொருளுக்கு ஆகி வருவது **காலவாகு பெயர்**.

(உ-ம்) **கார்** விளைந்தது: இதில் கார் என்னும் காலப் பெயர் கார் காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.

4. ஒரு சினைப் பெயர் முதலுக்கு ஆகி வருவது **சினையாகு பெயர்**.

(உ-ம்) **வெற்றிலை** நட்டான்: இதில் வெற்றிலை என்னும் சினைப் பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்தது.

5. ஒரு குணத்தின் பெயர் அக்குணத்தையுடைய பொருளுக்கு ஆகி வருவது **குணவாகு பெயர்** அல்லது **பண்பாகு பெயர்**.

(உ-ம்) வீட்டிற்கு **வெள்ளை** அடித்தான்: இதில் வெள்ளை என்னும் குணப் பெயர் அக்குணத்தையுடைய சுண்ணாம்பிற்கு ஆகி வந்தது.

6. ஒரு தொழிலின் பெயர் அந்தத் தொழிலையுடைய பொருளுக்கு ஆகி வருவது **தொழிலாகு பெயர்.**

(உ-ம்) **பொங்கல்** தின்றான்: இதில் பொங்குதலாகிய தொழிலின் பெயர் அத்தொழிலை உடைய உணவுக்கு ஆகி வந்தது.

**தொடர் மொழி :** சொற்கள் ஒன்றோடொன்று தொடரும்போது அவற்றின் இடையில் சில சொற்கள் மறைந்தும் மறையாமலும் நிற்கும். இடையில் சொற்கள் மறைந்துள்ள தொடர்மொழி **தொகைநிலைத் தொடர் மொழி** எனவும், மறையாமல் உள்ள தொடர்மொழி **தொகாநிலைத் தொடர் மொழி** எனவும் பெயர் பெறும்.

தொகைநிலைத் தொடர் மொழி **ஆறு** வகைப்படும் :

(உ-ம்) 1. யானைத் தந்தம், நீர்க் குடம் — **வேற்றுமைத் தொகை.**
2. காய் கதிர், செய் குன்று — **வினைத் தொகை.**
3. பெரிய மந்தை, கருங் கூந்தல் — **பண்புத் தொகை.**
4. முல்லைப்பல், பூந்தடங்கண் — **உவமத் தொகை.**
5. அறப்பொருள், கபிலபரணர் — **உம்மைத் தொகை.**
6. தேன்மொழி (வந்தாள்) — **அன்மொழித் தொகை.**

தொகாநிலைத் தொடர் **ஒன்பது** வகைப்படும் :

(உ-ம்) 1. பார்த்தன் வந்தான் — **எழுவாய்த் தொடர்.**
2. **வந்தான்** பாரி — **தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.**
3. **நல்லன்** அவன் — **குறிப்பு வினைமுற்றுத் தொடர்.**
4. **நொண்டிய** ஆடு — **பெயரெச்சத் தொடர்.**
5. **சாய்ந்து** செல்லும் — **வினையெச்சத் தொடர்.**
6. **இறையே** போற்றி — **விளித் தொடர்.**
7. **மற்று** ஒன்று — **இடைச்சொற்றொடர்.**
8. **நனி** பேதை — **உரிச்சொற்றொடர்.**
9. **போற்றி போற்றி — அடுக்குத் தொடர்.**

**வினைச்சொல்** வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என **மூன்று** வகைப்படும்.

1. பொருள் முற்றி நிற்கும் வினைச் சொல் **வினைமுற்றாகும்.**

(உ-ம்) பாரி **வந்தான்.** கலைவாணி **பாடுவாள்.** } **வந்தான், பாடுவாள் — இரண்டும்** வினைமுற்றுக்கள்.

2. பெயரைக் கொண்டு பொருள் முடியும் எச்ச வினை **பெயரெச்சமாகும்.**

(உ-ம்) **படித்த** பையன். **நல்ல** குதிரை. } **படித்த, நல்ல — இரண்டும்** பெயரெச்சங்கள்.

3. வினைமுற்றைக் கொண்டு பொருள் முடியும் எச்ச வினை, **வினையெச்சமாகும்.**

(உ-ம்) **ஓடி** வந்தான். **இனிது** நடத்தினர். } **ஓடி, இனிது — இரண்டும்** வினையெச்சங்கள்.

இரும்பைப் பழுக்கக் காய்ச்சினால் அது சிவந்த ஒளியைக் கொடுக்கிறது. பழுக்க, காய்ச்சினால் — **வினையெச்சம்**; சிவந்த — **பெயரெச்சம்**; கொடுக்கிறது — **வினைமுற்று.**

**1. உடன்பாட்டு வினையும் எதிர்மறை வினையும்:**

தொழில் நடந்ததைத் தெரிவிக்கும் வினை **உடன்பாட்டு வினை.**

(உ-ம்) என் தந்தை எனக்குப் பணம் கொடுத்தார்.

தொழில் நடவாததைத் தெரிவிக்கும் வினை **எதிர்மறை வினை.**

(உ-ம்) என் தந்தை எனக்குப் பணம் கொடுத்திலர்.

**2. செயப்படு பொருள் குன்றிய வினையும், செயப்படு பொருள் குன்றா வினையும் :**

செயப்படுபொருள் இல்லாத வினை, **செயப்படுபொருள் குன்றிய வினை**யாகும்.

(உ-ம்) ஐம்பெருங் காப்பியங்களில் தலையாய சிலப்பதிகாரத்துக்கு விளக்கமான உரை இல்லை.

செயப்படு பொருள் பெற்று வரும் வினை **செயப்படுபொருள் குன்றா வினை**யாகும்.

(உ-ம்) பொப்பணன் புலவரை அன்புடன் வரவேற்றான்.

**3. தன்வினையும் பிறவினையும் :**

கருத்தா, தானே செய்யும் வினை **தன்வினை** ஆகும்.

(உ-ம்) நான் உண்டேன்.

கருத்தா பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை **பிறவினை**யாம்.

(உ-ம்) நான் உண்பித்தேன்.

தன்வினை, பிறவினைகளாகும்போது வி, பி. என்று முடிவதுண்டு.

**4. செய்வினை :**

தொழிலைச் செய்யும் கருத்தாவே எழுவாயாக வரும் வினை **செய்வினை**யாகும்.

(உ-ம்) அணில் கிளியின் அலகை மிளகாய்ப் பழம் என்று நினைத்தது. பூனை எலியைக் கொன்றது.

**5. செயப்பாட்டு வினை :**

செயப்படு பொருள் எழுவாயாக வரும் வினை **செயப்பாட்டு வினை.**

(உ-ம்) கிளியின் அலகு அணிலால் மிளகாய்ப் பழம் என்று நினைக்கப்பட்டது. எலி பூனையால் கொல்லப்பட்டது.

**6. ஏவல் வினை :**

முன்னிற்போரைக் குறித்துக் கட்டளைப் பொருளில் வரும் வினை **ஏவல் வினை**யாகும்.

(உ-ம்) முருகா, வா. கண்ணு, போ.

**7. வியங்கோள் வினை :**

இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாக வரும் வினை, **வியங்கோள் வினை**யாகும். இதன் விகுதிகள் க, இய, இயர் முதலியன. இது வாழ்த்துதல், வைதல், மரியாதை, வேண்டல் முதலிய பல பொருள்களிலும் வரும்.

(உ-ம்) அரசே, வாழ்க. உலக உணர்வு நிலைபெறப் பயில்க. உறுப்புப் போர்கள் ஒழிக. எம்மையும் பாடுக.

## வாக்கியங்களை மாற்றி அமைத்தல்

**1. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குதல் :**

அணில் நெல்லைக் கொறித்தது. (செய்வினை)

நெல் அணிலால் கொறிக்கப்பட்டது. (செயப்பாட்டு வினை)

**2. வினாவைச் சாதாரணமாக மாற்றுதல் :**

இதனினும் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ ? (வினா)

இதனினும் சிறந்த காட்சி பிறிதொன்று இல்லை. (சாதாரணம்)

**3. எதிர்மறையை உடன்பாடாக ஆக்குதல் :**

ஔவையாரை அறியாதவர் தமிழ் நாட்டில் எவரும் இல்லை. (எதிர் மறை)

ஔவையாரைத் தமிழ் நாட்டில் எல்லோரும் அறிவர். (உடன்பாடு)

**4. நேர்ப் பேச்சைப் படர்க்கைப் பேச்சாக மாற்றுதல் :**

" தங்களுக்குச் செய்யும் தொண்டு தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகும்; இத்தமிழ்த் தொண்டு செய்யக் கொடுத்து வைத்ததற்கு நான் பெரிதும் மகிழ்கிறேன் " என்று தன் அன்பை வெளியிட்டான் பொப்பணன். (நேர்ப் பேச்சு)

அவருக்குச் செய்யும் தொண்டு தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகும் என்றும், அத்தமிழ்த் தொண்டு செய்யக் கொடுத்து வைத்ததற்குத் தான் பெரிதும் மகிழ்வதாகவும் தன் அன்பை வெளியிட்டான் பொப்பணன். (அயல் பேச்சு)

**5. ஆச்சரியத்தைச் சாதாரணமாக்குதல் :**

புத்தரின் அன்பை என்னென்போம் ! (ஆச்சரியம்)

புத்தர் மிகவும் அன்புடையவர். (சாதாரணம்)

**6. நுண்பொருளைப் பருப் பொருளாக மாற்றுதல் :**

துரியோதனன் மிகவும் வஞ்சனை உடையவன். (நுண் பொருள்)

துரியோதனன் மிகவும் வஞ்சகன். (பருப் பொருள்)

## சொல்லிலக்கண உதாரணம்

**தமிழுக்கும் தமிழர்க்கும் சேவை புரியும் பேராசிரியர் மயிலை சிவ முத்து தக்கோரால் சாலப் புகழப்படும் தகைமை எய்தினர்.**

**தமிழுக்கு** என்பது அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை ஒருமைப் பொருட் பெயர் ; இது நான்காம் வேற்றுமையில் வந்தது.

உம்—இஃது எண்ணும்மை.

**தமிழர்க்கு** என்பது உயர்திணைப் பலர்பால் படர்க்கைப் பன்மைப் பொருட் பெயர் ; இது நான்காம் வேற்றுமையில் வந்தது.

உம்—இஃது எண்ணும்மை.

**சேவை** யென்பது அஃறிணை யொன்றன்பால் படர்க்கை யொருமைத் தொழிற் பெயர் ; இஃது இரண்டாம் வேற்றுமையில் வந்தது.

"பேசுவோன் செய்யான் ; செய்பவன் பேசான்." — பெர்னார்ட் ஷா.

**புரியும்** என்பது நிகழ்காலப் பெயரெச்சம்; இது பேராசிரியர் என்னும் பெயர் கொண்டது.

**பேராசிரியர்** என்பது உயர்திணை ஆண்பால் படர்க்கை யொருமைப் பொருட் பெயர்.

**சிவமுத்து** என்பது உயர்திணை யாண்பால் படர்க்கை யொருமைப் பொருட் பெயர்; இஃது எழுவாய் வேற்றுமையில் வந்து எய்தினர் என்னும் பயனிலை கொண்டது.

**தக்கோரால்** என்பது உயர்திணைப் பலர்பால் படர்க்கைப் பன்மைக் குறிப்பு வினைப் பெயர்; இது மூன்றும் வேற்றுமையில் வந்தது.

**சால** என்பது உரிச் சொல்லடியாகப் பிறந்த செய வென்னும் வாய் பாட்டு வினையெச்சம்; இது புகழப்படும் என்னும் வினை கொண்டது.

**புகழப்படும்** என்பது செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம். இது தகைமை என்னும் பெயர் கொண்டது. மேலும், இது செயப்பாட்டு வினை.

**தகைமை** என்பது அஃறிணை யொன்றன்பால் படர்க்கை யொருமைப் பண்புப் பெயர். இஃது இரண்டாம் வேற்றுமையில் வந்தது. ஐயுருபு தொக்கியிருக்கிறது.

**எய்தினர்** என்பது உயர்திணை யாண்பால் படர்க்கை யொருமை இறந்தகால வினைமுற்று; இது சிவமுத்து என்னும் எழுவாய்க்குப் பயனிலை யாயிற்று.

## நிறுத்தக் குறிகள்

. இது **முற்றுப் புள்ளி**. ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

(உ-ம்) பொருள்களை எரித்து அதனால் ஏற்படும் வெப்பத்தினை நாம் பல வழிகளிலும் பயன்படுத்துகிறோம்.

, இது **காற்புள்ளி**. I. ஒரு வினையெச்சத்துக்கும், அதனோடு சம் பந்தப்பட்டு முடியும் வினைச் சொல்லுக்கும் இடையில் வேறு பதங்கள் வருமானால் அவ்வினையெச்சத்துக்குப் பக்கத்தில் காற்புள்ளி வைக்க வேண்டும்.

(உ-ம்) இராமன் முருகனைக் கண்டு, அவன் வாங்கின பேனாவைக் காட்டும்படி வேண்டினான்.

II. சில பெயர்களையோ வினைகளையோ வரிசை வரிசையாய்ச் சொல்ல வேண்டுமானால் கடைசி பதம் ஒழிய மற்றவைகளின் பக்கத்தில் காற்புள்ளி வைக்கவேண்டும்.

(உ-ம்) சில வீடுகளிலே அழகிய வண்ணம் பூசப்பெற்ற சுவர், விலை யுயர்ந்த கம்பளம் விரித்த தரை, அழகிய சாமான்கள், விலையுயர்ந்த பொருள் களின் குவியல்கள், இவற்றைக் காணலாம்.

இராமன் ஆற்றில் ஆடி, பாடி, குதித்து விளையாடினான்.

; இஃது **அரைப் புள்ளி**. I. ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடியும்போது ஒவ்வொரு பயனிலையின் இறுதியிலும் அரைப்புள்ளி இடவேண்டும்.

புலவர் திரும்பிப் பார்த்தார்; வள்ளல் விசிறிக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்; இருக்கையை விட்டு எழுந்தார்.

II. சிறுசிறு தனி வாக்கியங்களின் முடிவிலும் அரைப்புள்ளி இடவேண்டும்.

(உ-ம்) வாழ்க்கை இனிதே; சந்திர சூரியனும் இனியவை; புல் வெளியில் வீசும் காற்று இனியது.

பாட்டும் பாடினன்; பொருளும் மீந்தது; வாரும் போவோம்.

: இது முக்காற் புள்ளி. ஒரு தொகைச் சொல்லைக் கூறி அதில் மறைந்திருக்கும் சொற்களை எழுதும்போது தொகைச் சொல்லுக்கு முன்னல் முக்காற் புள்ளி இடவேண்டும்.

(உ-ம்) பாண்டவர் ஐவர்: அவர் தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்போர்.

? இது வினைக் குறி. வினச் சொற்றொடரின் இறுதியில் இதைக் குறிக்க வேண்டும்.

பாடுவதற்குப் பொருள் வேண்டுமல்லவா? நீவிர் வேழத்தை எதிர்த்துத் தாக்கி வெற்றி கண்டதுண்டா?

! இது ஆச்சரியக் குறி. வியப்பு, இரக்கம், விளி ஆகிய உணர்ச்சிகளைக் குறிக்கும் வாக்கியங்களுக்கு இறுதியில் இப்புள்ளி இடல் வேண்டும்.

என்னே காங்கேயன் தமிழ்ப் பற்று! தங்கள் தமிழன்புக்கு எல்லை இல்லை போலும்!

அடா! இசை கேளாத செவிகளா இவை!

" " இது நேர்ப் பேச்சுக் குறி. ஒருவர் கூறிய பகுதியை இக்குறிகளுக்குள் அடக்கி எழுத வேண்டும்.

புலவர் நலங்கிள்ளியிடம், "ஒன்றுபட்டால் வாழ்வு உண்டு; இன்றேல் இருவர்க்குந் தாழ்வே" என்று கூறினர்.

— இது ஒற்றைக் கோடு. கருத்து மாற்றம், பொருள் விளக்கம் இலக்கணக் குறிப்பு, வினு முதலியவற்றை உணர்த்துவதற்கு இக்குறிகளை உபயோகிக்கிறேம்.

— — இவை இரட்டைக் கோடுகள்.

( ) இவை நகவளைவுக் குறிகள்.

இவ்விரண்டும் முக்கியமான வாக்கியத்தோடு சம்பந்தமில்லாத சொற்றொடர்களைப் பிரிக்கவும், ஒரே பொருளைத் தரும் சொற்றொடர்களைப் பிரித்துக் காட்டவும் பயன்படுகின்றன.

உதாரணங்களை இப்புத்தகத்திலேயே ஆங்காங்குக் காண்க.

## சந்தி விதிகள்

### வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, எ என்ற இடைச் சொற்களுக்கு முன்வரும் வல்லெழுத்துக்கள் மிகும்:

அ+கடை=அக்கடை.

இ+பசு=இப்பசு.

எ+குதிரை=எக்குதிரை.

2. அந்த, இந்த என்பனவற்றின் முன்வரும் வல்லெழுத்துக்கள் மிகும்:

அந்த + கிளி = அந்தக் கிளி.
இந்த + சோலை = இந்தச் சோலை.
எந்த + பையன் = எந்தப் பையன்.

3. அங்கு, இங்கு, எங்கு, யாண்டு என்பனவற்றின் முன்வரும் வல்லெழுத்துக்கள் மிகும்:

அங்கு + போனான் = அங்குப் போனான்.
இங்கு + கண்டேன் = இங்குக் கண்டேன்.
எங்கு + சென்றாய் = எங்குச் சென்றாய்?
யாண்டு + பெற்றான் = யாண்டுப் பெற்றான்?

4. அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்களின் முன் வல்லெழுத்துக்கள் மிகும்:

அப்படி + செய்தேன் = அப்படிச் செய்தேன்.
இப்படி + பேசினான் = இப்படிப் பேசினான்.
எப்படி + கொடுத்தான் = எப்படிக் கொடுத்தான்.

5. இரண்டாம் வேற்றுமை உருபின் முன் வல்லெழுத்து மிகும்:

பாடத்தை + படித்தான் = பாடத்தைப் படித்தான்.
தோசையை + தின்றான் = தோசையைத் தின்றான்.

6. நான்காம் வேற்றுமை உருபுகளான கு, ஆக, பொருட்டு என்பனவற்றின் முன் வல்லெழுத்து மிகும்:

பள்ளிக்கு + போனான் = பள்ளிக்குப் போனான்.
அதற்காக + கொடுத்தான் = அதற்காகக் கொடுத்தான்.

7. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்னும் வினையெச்சத்தின் முன்னும் வல்லெழுத்து மிகும்:

அறியா + தாய் = அறியாத் தாய்.
தின்னா + பழம் = தின்னாப் பழம்.
ஓடா + குதிரை = ஓடாக் குதிரை.
பெய்யா + கொடுக்கும் = பெய்யாக் கொடுக்கும்.

8. இனி என்ற இடைச் சொல்லின் முன் வல்லினம் மிகும்:

இனி + சொல்லான் = இனிச் சொல்லான்.
இனி + பாடும் = இனிப் பாடும்.

9. சில வினையெச்சத்துக்கு முன் வல்லினம் மிகும்:

ஓடி + போ = ஓடிப் போ.
ஆட + கண்டான் = ஆடக் கண்டான்.
படிக்க + சென்றான் = படிக்கச் சென்றான்.
அதற்காக + கொடுத்தான் = அதற்காகக் கொடுத்தான்.
நின்பொருட்டு + செய்தேன் = நின்பொருட்டுச் செய்தேன்.

**10.** வன்றொடர்க் குற்றியலுகர விற்றுமொழிகளின் முன் வல்லெழுத்து மிகும் :

எடுத்து + கொடுத்தான் = எடுத்துக் கொடுத்தான்.
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு.
சுக்கு + தின்றான் = சுக்குத் தின்றான்.

**11.** குற்றியலுகரங்களின் ஈற்றில் சாரியையாகி வரும் ஐகாரத்தின் முன் வல்லெழுத்து மிகும் :

பண்டை + பொருள் = பண்டைப் பொருள்.
அற்றை + கூலி = அற்றைக் கூலி.

### வல்லினம் மிகாத இடங்கள்

**1.** ஒடு, அது என்ற வேற்றுமை உருபுகளுக்கு முன் வல்லினம் மிகாது :

கந்தனோடு + போனான் = கந்தனோடு போனான்.
இராமனது + புத்தகம் = இராமனது புத்தகம்.

**2.** அகர ஈற்றுப் பெயரெச்சங்களுக்கு முன் வல்லினம் மிகாது :

கொடுத்த + பந்து = கொடுத்த பந்து.
சிறிய + கோழி = சிறிய கோழி.
வந்த + சிறுமி = வந்த சிறுமி.
கொடிய + பாம்பு = கொடிய பாம்பு.

**3.** மென்றொடர்க் குற்றியலுகரத்துக்கு முன் வல்லினம் மிகாது:

பந்து + தந்தான் = பந்து தந்தான்.
மென்று + தின்றாள் = மென்று தின்றாள்.

**4.** எழுவாய், விளிச்சொல் இவைகளுக்கு முன் வல்லெழுத்துக்கள் மிகா :

பாரி + பாடினான் = பாரி பாடினான்.
தோழி + பாடு = தோழி பாடு.

### சென்ற ஆண்டுகளின் இலக்கணக் கேள்விகள்

### 1952

**1.** கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக :

அஸ்தின புரத்து அரசனே | கோபம் வேண்டா | நான் கூறுவதைக் கேள் | பாண்டவர்களுடைய இராச்சியம் முழுவதையும் கொடுக்க மனமில்லாவிட்டாலும் பாதி இராச்சியமாவது கொடு | அதுவே போதுமானது |

**2.** படர்க்கைப் பேச்சாக மாற்று : திரௌபதி கண்ணனை வணங்கி, "அண்ணா, அன்று அரசர் அவையில் என் மானத்தைக் காத்த நீங்களே இன்று இவ்வாறு கூறிவிட்டால், என் கதி என்னாவது?" என்று கூறி வருந்தினாள்.

## 1953

1. கீழ்க்கண்டவைகளுக்கு உதாரணங்கள் கூறுக:

பெயரெச்சம். ஆகுபெயர்.
தொழிற் பெயர். உருவக அணி.
வினையாலணையும் பெயர். உரிச்சொல்.
செயப்பாட்டு வினை.

2. படர்க்கைப் பேச்சாக மாற்றுக: சல்லியன் துரியோதனனை நோக்கி, "குருகுலக் கொழுந்தே! நீர் என்னைக் கைகூப்பிக் கும்பிடுவது அழகன்று; யான் தரத் தக்க வரம் யாதெனக் கூறும். உமது விருப்பப்படி அதனைத் தருகிறேன்" என்று கூறினன்.

## 1954

1. இலக்கணக் குறிப்பு எழுதுக: போற்றி போற்றி; செவிச் செல்வம்.

2. பெயரெச்சம், வினையெச்சம், தொழிற் பெயர் — இவற்றிக்குத் தனித்தனி உதாரணம் கூறுக.

3. பிரித்தெழுதுக: நல்லிசை; ஈத்துண்ணார்; இன்னலம்; வண்டமிழோர்; கருமுகில்; பொற்புள்.

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக: ஆர்க்காடு நவாபு படையெடுத்து | செஞ்சிக்கருகில் வந்தபோது | தேசிங்கு சென்று | அரங்கநாதரை வணங்கி | போர் மேற் செல்ல விடை கேட்க அப்பெருமான் | இன்று நின்று | நாளைக்குச் சென்றால் நலமுண்டு | என்று கூற | தேசிங்கு சிந்தை நொந்து திரும்பி விட்டான் |

## 1955

1. இலக்கணக் குறிப்பு எழுதுக: உரைகாலம், நின்றார், காப்பதாஉம்.

2. கீழ்வருவனவற்றிற்கு உதாரணம் தருக: ஏவல் வினை, வியங்கோள் வினை, ஆகுபெயர்.

3. பிரித்து எழுதுக: கவர்த்தற்று; கடிப்பிடு; ஒருலகு; பற்பல.

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக: இது | வகுப்பு வெறிகளோடு போர் | அயல் போரன்று | உட்போர் | சீறிர்க்கும் போரன்று | தன்னடக்கப் போர் | பிறரை அடக்குதல் எளிது | தம்மை அடக்கிக் கொள்ளல் அரிதாகலின் இது பெரியதொரு செயல் |

---

## பிழை நீக்கி எழுதுங்கள்

எட்டாம் வகுப்பு மாணவர்கள் எழுதும் கட்டுரைக் குறிப்புப் புத்தகங்களிற் காணப்படும் சில பிழைகள் இங்கே தரப்படுகின்றன. அவற்றை உணர்ந்து பிழை நீக்கி எழுதுங்கள். நல்ல பலன் உண்டாகும்.

### 1. ரகர—றகரச் சொற்பொருள் வேறுபாடு

அரம் - ஒரு கருவி
அறம் - தருமம்
அரி - திருமால், சிங்கம், வெட்டு
அறி - தெரிந்துகொள்
அரு - அருமையான
அறு - வெட்டு
அருகு - சமீபம்
அறுகு - ஒருவகைப் புல்
அருந்து - சாப்பிடு
அறுந்து - துண்டுபட்டு
அரை - பாதி, இடுப்பு, தூளாக்கு
அறை - வீட்டு அறை, சொல், அடி
இரங்கு - மனமிரங்கு
இறங்கு - கீழே இறங்கு
இரும்பு - ஓர் உலோகம்
இறும்பு - சிறிய காடு
இரை - தீனி
இறை - சிந்து, வரி, அரசன், கடவுள், பாய்ச்சு
உரல் - ஒரு கருவி
உறவு - கலந்து வசித்தல், சொந்தம்
உரிய - சொந்தமான
உறிய - உறிஞ்ச
உரை - சொல், தேய்
உறை - மூடி, இறுகு
எரி - நெருப்பு
எறி - வீசிப்போடு
கர - ஒளித்துகொள்
கற - பால் கற
கருத்து - எண்ணம்
கறுத்து - கோபித்து
கருப்பு - பஞ்சம்
கறுப்பு - கருமை நிறம்
கரை - ஓரம்
கறை - குற்றம்
குரங்கு - வானரம்
குறங்கு - தொடை
குரவன் - ஆசிரியன்
குறவன் - ஒரு குலத்தவன்
குருகு - நாரை
குறுகு - சமீபி
கூரிய - கூர்மையான
கூறிய - சொல்லிய
கூரை - வீட்டு உச்சி
கூறை - துணி
கோருதல் - விரும்புதல்
கோறுதல் - கொல்லுதல்
சுரா - கள்
சுறு - ஒருவகை மீன்
சேரல் - கிட்டுதல்
சேறல் - செல்லுதல்
திரை - அலை
திறை - கப்பம்
துரை - பிரபு
துறை - நீர்த்துறை
தெரு - வீதி
தெறு - அழி
நரை - வெண் மயிர்
நறை - தேன்
பரந்த - பரவிய
பறந்த - (பறவை) உயர்ந்து சஞ்சரித்த
பரி - குதிரை, விரும்பு
பறி - பிடுங்கு
பாரை - கடப்பாரை
பாறை - கற்பாறை
புரம் - பட்டணம்
புறம் - வெளி, முதுகு
பெரு - பெரிய
பெறு - அடை
பொரி - நெற்பொரி
பொறி - தீட்டு, எழுது, இயந்திரம், தீப்பொறி

மரி - சா
மறி - தடைசெய், மான், ஆடு
மரம் - விருட்சம்
மறம் - பாவம், வீரம்
மரை - ஒருமான், திருகு, தாமரை
மறை - ஒளித்து வை, வேதம்
மாரன் - காமன்
மாறன் - பாண்டியன்

மாரி - மழை
மாறி - வேறுபட்டு
வருத்தல் - துன்பப்படுத்தல்
வறுத்தல் - துவட்டுதல்
வீரகு - தந்திரம்
விறகு - எரி கட்டை
விரல் - கைவிரல்
விறல் - வெற்றி

## 2. ளகர—ழகர வேறுபாடு

அளகு - பெண் பறவை, கோழி
அழகு - அலங்காரம்
அளி - வண்டு
அழி - கெடு
அளை - தயிர், வளை, கல
அழை - கூப்பிடு

இளை - மெலி
இழை - தேய்

உளை - வருந்து, பிடரி மயிர்
உழை - வேலை செய்

கிளவி - சொல்
கிழவி - உரியவள், முதியவள்

குளவி - தேனீ
குழவி - குழந்தை
சுளி - கோபித்துக் கொள்
சுழி - வட்டமிடு
சோளம் - ஒரு தானியம்
சோழம் - ஒரு நாடு
தளை - கட்டு
தழை - இலை
தோளன் - தோளை உடையவன்
தோழன் - நண்பன்
வாளை - ஒரு மீன்
வாழை - ஒரு மரம்
உளுந்து - உழுந்து } வேறுபாடு
பவளம் - பவழம் } அற்றவை

## 3. லகர—ளகர வேறுபாடு

அலி - ஆண் பெண் பொது
அளி - கொடு, வண்டு
இலை - தழை
இளை - மெலி
எல் - சூரியன்
எள் - ஒரு தானியம், பரிகசி
ஒலி - சப்தம்
ஒளி - மறைத்து வை
கலம் - பாத்திரம், ஓரளவு
களம் - அடம் (போர்க்களம்)
குலம் - சாதி
குளம் - நீர் நிலை
தலை - ஓர் உறுப்பு
தளை - கட்டு

தாலம் - பாத்திரம்
தாளம் - இசை, அளவு
துலை - துலாக்கோல்
துளை - துவாரம்
நால் - நான்கு
நாள் - தினம்
நீலம் - ஒரு நிறம்
நீளம் - நெட்டளவு
மலிகை - விலை சரசப்படுதல், நிறைதல்
மளிகை - பல சரக்குக் கடை

## 4. ணகர—னகர வேறுபாடு

அண்ணம் - உள் மேல் வாய்
அன்னம் - ஒரு பறவை
ஆண் - காளை
ஆன் - பசு
உண் - சாப்பிடு
உன் - உன்னுடைய

எண்ண - நினைக்க, கணக்கிட
என்ன - எது
கணம் - கூட்டம்
கனம் - பளுவு, பெருமை
கண்ணன் - கிருஷ்ணன்
கன்னன் - கர்ணன்

"மனம் போன போக்கெல்லாம் போகாதே." — உலகநாதனர்.

தண்ணீர் - குளிர்ந்த ஜலம்
தன்னீர் - தன்னுடைய ஜலம்
பண்ணி - செய்து
பன்னி - பலவாகப் பேசி
பாணம் - அம்பு
பானம் - குடித்தல்
மண்ணி - கழுவி
மன்னி - நிலைபெற்று
மாண் - மாட்சிமை
மான் - மிருகம்
வண்ணம் - அழகு, விதம்
வன்னம் - நிறம்

## சொற் பிழைகளும் திருத்தங்களும்

நாம் பேசும்போதே சொற்களைப் பிழையில்லாமல் பேசுவதால் எழுதும்போதும் அவற்றைப் பிழையின்றி எழுதலாம். கீழ்வரும் திருத்தங்களை மாணவர்கள் நன்கு கவனித்துத் தாம் எழுதும் கட்டுரைகளிலும், கடிதங்களிலும், விடைத் தாள்களிலும், பிழையின்றி எழுத முயல வேண்டும்.

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | அகண்ட | அகன்ற |
| | அடமழை | அடை மழை |
| | அடமானம் | அடை மானம் |
| | அண்ணாக் கயிறு | அரைஞாண் கயிறு |
| | அதிர்சம் | அதிரசம் |
| | அதிஷ்டம் | அதிருஷ்டம் |
| | அமக்களம் | அமர்க்களம் |
| | அருகாமையில் | அருகில் |
| | அருமருந்த | அருமருந்தன்ன |
| | அருவாமனை | அரிவாள்மனை |
| | அழும்பு | அழிம்பு |
| | அவைக்கலம் | அவைக்களம் |
| | அவுங்க | அவர்கள் |
| 2. | ஆச்சு | ஆயிற்று |
| | ஆத்துக்கு | அகத்துக்கு |
| | ஆயிதம் | ஆயுதம் |
| | ஆருமுகம் | ஆறுமுகம் |
| | ஆக்ஷி | ஆட்சி |
| | ஆப்டுகிட்டான் | அகப்பட்டுக் கொண்டான் |
| 3. | இகழ்ட்சி | இகழ்ச்சி |
| | இடது கை | இடக்கை |
| | இடை (என்ன ?) | எடை (என்ன) |
| | இருபத்தியேழு | இருபத்தேழு |
| | இரும்பல் | இருமல் |
| | இளைமை | இளமை |
| 4. | ஈரெட்டு | ஈரோட்டு |

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 5. | உசிர் | உயிர் |
| | உடமை | உடைமை |
| | உத்திரவு | உத்தரவு |
| 6. | ஊர்சுத்து | ஊர்ச் சுற்று |
| 7. | எடஞ்சல் | இடைஞ்சல் |
| | எண்ணை | எண்ணெய் (எள் + நெய்) |
| | எழ்வு | இழவு |
| | எழுகு | எஃகு |
| | எளப்பம் | இளப்பம் |
| 8. | ஏழரை நாட்டுச் சனி | ஏழரை யாட்டைச் சனி |
| 9. | ஒண்டி | ஒன்றி |
| | ஒத்தடம் | ஒற்றடம் |
| | ஒருவள் | ஒருத்தி |
| 10. | கடகால் | கடைக்கால் |
| | கடப்பாறை | கடப்பாரை |
| | கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| | கயறு | கயிறு |
| | கருப்பட்டி | கருப்புக்கட்டி |
| | காக்கா | காக்கை |
| | காணும் | காணோம் |
| | கார்க்கும் | காக்கும் |
| | கார்ப்பார் | காப்பார் |
| | காக்ஷி | காட்சி |
| | கிடையும் | கிடைக்கும் |
| | கிணறில் | கிணற்றில் |

“அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.” — ட்ரைடன்.

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| | கிராணம் | கிரகணம் |
| | கினவு | கனவு |
| | குடக்கூலி | குடிக்கூலி |
| | (குடி இருப்பதற்குக் கூலி) | |
| | கூறை வீடு | கூரை வீடு |
| | கேழ்வி | கேள்வி |
| | கைமாறு | கைம்மாறு |
| | கொழும்பு | குழம்பு |
| | கோடாலி | கோடரி |
| | கோதும்பை | கோதுமை |
| | கோர்வை | கோவை |
| | கோர்த்து | கோத்து |
| | கோறுகிறேன் | கோருகிறேன் |
| | கோறை | கோரை |
| 11. | சங்கலி | சங்கிலி |
| | சந்தணம் | சந்தனம் |
| | சம்மந்தம் | சம்பந்தம் |
| | சமயல் | சமையல் |
| | சாக்ஷி | சாட்சி |
| | சாயரட்சை | சாயுங்காலம் |
| | சிகப்பு | சிவப்பு |
| | சிலவு | செலவு |
| | (செல்லுதல்) | |
| | சீக்கா | சிகைக்காய் |
| | சுக்கிரம் | சுக்கரம் |
| | சுவற்றில் | சுவரில் |
| | சொறி சிறங்கு | சொறி சிரங்கு |
| 12. | தடுமாட்டம் | தடுமாற்றம் |
| | தமயன் | தமையன் |
| | தலைகாணி | தலையணை |
| | தாவாரம் | தாழ்வாரம் |
| | திராசு | தராசு |
| | திரேகம் | தேகம் |
| | துகையல் | துவையல் |
| | துகை | தொகை |
| | துடங்கு | தொடங்கு |
| | துடப்பம் | துடைப்பம் |
| | துலைக்து | தொலைக்து |
| | துளிர் | தளிர் |
| | தெண்டம் | தண்டம் |
| | தெத்துவாய் | தெற்றுவாய் |
| | தொந்திரவு | தொந்தரவு |
| 13. | நஞ்சை | நன்செய் |
| | நல்லெண்ணை | நல்லெண்ணெய் |
| | நாசுவன் | நாவிதன் |
| | நாத்தம் | நாற்றம் |
| | நிலமை | நிலைமை |
| | நோம்பு | நோன்பு |
| 14. | பதட்டம் | பதற்றம் |
| | பச்சணம் | பட்சணம் |
| | பயிறு | பயறு |
| | பதிமூன்று | பதின்மூன்று |
| | பாவக்காய் | பாகற்காய் |
| | பாசை | பாஷை |
| | புஞ்சை | புன்செய் |
| | புட்டு | பிட்டு |
| | புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| | பெரளி | புரளி |
| | பேதமை | பேதைமை |
| | போறும் | போதும் |
| 15. | மனவி | மனைவி |
| | மகிட்சி | மகிழ்ச்சி |
| | மச்சான் | மைத்துனன் |
| | மாக்ஷி | மாட்சி |
| | முந்தாணி | முன்தானை |
| | (தானை—ஆடை) | |
| | முழிக்கிறான் | விழிக்கிறான் |
| | முழுங்கினான் | விழுங்கினான் |
| | முழிந்தான் | உமிழ்ந்தான் |
| | மெரித்தான் | மிதித்தான் |
| 16. | ரூபா | ரூபாய் |
| | ரொம்ப | நிரம்ப |
| 17. | வயறு | வயிறு |
| | வயிருற | வயிருர |
| | வலதுகால் | வலக்கால் |
| | வரான் | வாரான் |
| | (எதிர்மறை) | |
| | வாய்வு | வாயு |
| | விசிரி | விசிறி |
| | வைதீகம் | வைதிகம் |
| | வெங்கலம் | வெண்கலம் |
| | வெய்யல் | வெயில் |
| | | (அல்லது) வெய்யில் |
| | வெண்ணை | வெண்ணெய் |
| | வென்னீர் | வெந்நீர் |
| | (வெம்மை + நீர்) | |
| | வேணும் | வேண்டும் |

“கேட்பவனுக்குக் கொடு.” — ஏகநாதர்.

# 4. கட்டுரைப் பகுதி

## அரசியலார் பாடத் திட்டத்தின் மொழிபெயர்ப்பு

வாய்மொழிப் பயிற்சி—எழுத்துப் பயிற்சி—பின்வரும் விஷயங்களைப்பற்றியன :

1. வகுப்பறைக் குறிப்புக்கள்—பரிசோதனைகளைப்பற்றியும் படங்களைப்பற்றியும் உள்ள விவரங்கள்—பாட விளக்கத் திட்டங்கள் (Projects)—சுற்றுப் பிரயாணங்களைப்பற்றிய குறிப்புக்கள்.

2. இனிய செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் இவற்றை எளிய நடையில் அமைத்தல்.

3. சுருக்கமாகக் கொடுக்கப்பட்ட விஷயங்களை விளக்கி எழுதுதல்.

4. விரிவான பகுதிகளைச் சுருக்கி எழுதுதல்.

5. குறைக் கதைகளைப் பூர்த்திசெய்தல்.

6. பத்திரிகைகளையும், நூல் நிலையப் புத்தகங்களையும் படித்து ஒரு விஷயத்தைப்பற்றி எழுதுதல்.

7. வகுப்பு (அல்லது) பாட்சாலைப் பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுதல்.

குறிப்பு : மேற்கூறப்பட்ட துறைகளில் மாணவர்கள் தம் அறிவை வளர்த்துக்கொள்வது தேர்வில் மிக்க பயன் அளிக்கக்கூடியதாகும். கீழ்வரும் விஷயங்களை மனதில் பதிய வைத்துக்கொண்டு கட்டுரையைச் சிறந்த முறையில் எழுதப் பழக வேண்டும்.

1. எழுத வேண்டிய பொருளைப்பற்றி நன்கு சிந்தித்து, குறிப்புக்களைத் தயாரித்து, அவற்றைத் தொடர்பு படுத்திக்கொள்ள வேண்டும்.

2. நீண்டதும், சிக்கலான இலக்கணமுடையதுமான வாக்கியத்தை விலக்கி, சிறு சிறு வாக்கியங்களாக எழுத வேண்டும்.

3. எடுத்த விஷயத்தை நேராக விளங்க வைக்காமல், சொல் வலை வீசுவது கூடாது.

4. எழுதிய சொற்களையே அடிக்கடி உபயோகிக்கலாகாது.

5. கட்டுரையின் நடை எழுதுபவரின் சொந்த நடையாகவே இருக்க வேண்டும்.

6. குறிப்புக்களுக்குத் தக்கபடி சிறு சிறு பத்திகள் பிரித்து எழுத வேண்டும்.

7. வாக்கியங்கள்தோறும் தகுந்த இடங்களில் அவற்றிற்குரிய நிறுத்துக் குறிகள் இட வேண்டும்.

8. வருடம், மாதம், தேதி முதலியவை தவிர மற்ற எண்களை எழுத்தால் எழுத வேண்டும்.

9. எழுத்துப் பிழையும், இலக்கணப் பிழையும் விலக்க வேண்டும். இழிவழக்கும், கொச்சை மொழிகளும் கூடா.

"கற்கக் கற்கத் தமிழ் கனிபோல் இனிக்கும்." — உலகு.

# மாதிரிக் கட்டுரைகள்

## 1. தன் கையே தனக்கு உதவி

**குறிப்புக்கள் :** 1. முன்னுரை—பழமொழியின் பொருள். 2. கருத்தை விளக்கும் கதைக் குறிப்பு. 3. பிறர் உதவியை நாடுவது குற்றமாகும். 4. தன்னம்பிக்கையின் அவசியம். 5. மாணவர்களும் பாடமும். 6. முடிவுரை.

'தன் கையே தனக்கு உதவி' என்னும் பழமொழி பரம்பரை பரம்பரையாகத் தமிழ் நாட்டில் வழங்கி வருவதாகும். நம்மை ஒருவர் அடிக்க வரின் அந்த அடியைக் கை சென்று தடுத்து நம்மைக் காக்கின்றது. நம் உடை நழுவும்போதும் கை சென்று அதனைக் கட்டுகின்றது. இத்தகைய உதவிகளை நாம் பிறர் கைகளை எதிர்பாராமலே நம் கைகளாலேயே செய்து கொள்ளுகிறோம். பிறர் கையை எதிர்பார்த்திருப்பின் அதற்குள் குறிப்பிட்ட துன்பம் நம்மை வந்து பிடிக்கும். பிறர் கையை எதிர்பாராமல் தன் கையாலேயே வேண்டிய உதவியைச் செய்து கொள்பவர்கள் தன்முயற்சியும், தன்னம்பிக்கையும் சிறந்து விளங்குவர்.

சிலர் எதற்கெடுத்தாலும் பிறர் உதவியையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். மற்றோர் நம் காரியத்தை நாம் விரும்பும் சமயத்தில் வந்து செய்வர் என்று உறுதியாக நம்ப இயலாது. நாம் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமாயின் அதனை நம் சொந்த முயற்சியினால் செய்வதே உசிதமாகும். சிறு வயதில் படித்த வானம்பாடிக் கதையை எல்லோரும் அறிவார்கள். அது நெல் வயலில் கூடுகட்டித் தன் குஞ்சுகளுடன் வாழும் சமயம் ஒரு நாள் வயலின் சொந்தக்காரன் அங்கு வந்து மறுநாள் தன் உற்றார் உறவினர் உதவியால் அறுவடை செய்ய வேண்டும் என்றும், பின்னர் அவர்கள் வராமையால் அதுவரையில் வயலிலேயே தங்கியிருந்த வானம்பாடி அவனே அறுவடை செய்யத் துணிந்தது கேட்ட பிறகே தன் குஞ்சுகளுடன் வெளியேறியதும் அனைவருக்கும் தெரியும்.

பிறர் உதவி இல்லாமல் நாம் செய்யக்கூடிய காரியங்களுக்குப் பிறர் உதவியை நாடுவது பெருங் குற்றமாகும். அதனால் நமக்கு மானக்கேடும் உண்டாகும். பிறர் உதவியை நாடுவதற்குக் காரணம் சோம்பலும் தன்னம்பிக்கை இன்மையுமேயாகும். சில மாணவர்கள் தாமே எழுதிப் பயில வேண்டிய பாடங்களைப் பிறரிடம் எழுதிக்கொள்ளின் அவர்கள் கற்ற கல்விப் பயனை அடைவது அரிதாகும். அவரால் பிறருக்குத் தொல்லையும் ஏற்படும். பிறர் அவர்களை இழிந்தவராகவும் கருதுதல் இயல்பு.

ஒருவன் தன் அறிவு ஆற்றலை நன்கு உணர்ந்து ஒரு செயலைச் செய்யும் மன உறுதியை அடைவதற்குத்தான் தன்னம்பிக்கை என்று பெயர். "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர் திண்ணிய ராகப்பெறின்" என்னும் வள்ளுவர் வாக்கினை நாம் ஒவ்வொருவரும் பின்பற்றி நடக்க வேண்டும். தன்னை நம்பாதவன் பிறரையும் நம்பமாட்டான். மாணவர்கள் வீட்டுக்கணக்கு, விடுமுறைப் பயிற்சிகள் முதலியவற்றைப் பிறர் உதவியின்றித் தாமே செய்வது நன்று. இப்பழக்கம் இளமையிலேயே வேரூன்றி விடின் அது பிற்கால வாழ்வில் நல்ல பலனைக் கொடுக்கும்.

---

**"நன்றி மறப்பது நன்றன்று." — வள்ளுவர்.**

## 2. நான் படிக்கும் பள்ளிக்கூடம்

குறிப்புக்கள்: 1. முன்னுரை. 2. இட அமைப்பு. 3. கட்டட வசதிகள். 4. ஆசிரியர்களும் மாணவர்களும். 5. பள்ளியின் அமைப்புக்கள். 6. முடிவுரை.

நான் ஓர் எட்டாம் வகுப்பு மாணவன். நான் இந்து மத பாடசாலையில் படிக்கிறேன். எங்கள் பள்ளிக்கூடம் முதன் முதலில் 1916-ல் ஒரு சிறிய பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது சென்னை மாகாணத்திலேயே மிக உயர்ந்த பள்ளியாகிய இதில் படிக்கும் பேறு கிடைத்ததற்கு நான் பெருமை அடைகிறேன்.

எங்கள் பள்ளிக்கூடம் வாலாஜாபாத்தில் உள்ளது. வாலாஜாபாத் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிறது. இது சென்னையிலிருந்து 42 மைல் தொலைவில் உள்ளது. எமது பள்ளிக்கு அருகில் ஒரு தொடர் வண்டி நிலையமும், மோட்டார் வண்டி நிலையமும் இருக்கின்றன.

இது பாலாற்றங் கரையில் பசுமை நிறைந்த சோலை நடுவில் உள்ளது. சிறு சிறு கட்டடங்களில் மாணவர் இல்லமும் அமைந்துள்ளது. எங்கள் பாடசாலையில் ஒன்று முதல் எட்டு வரையிலும் வகுப்புக்கள் அமைந்துள்ளன. வகுப்புக்களில் பல இப்போது புதிய கட்டடங்களில் நடைபெறுகின்றன. எமது பள்ளியில் நூல் ஆலை நடைபெறும் கட்டடமும், தொழிற்சாலை நிலையமும் உண்டு. எங்கள் பள்ளிக்குச் சொந்தமான ஓர் அச்சகமும் இருக்கிறது.

எங்கள் பள்ளியை அல்லும் பகலும் உழைத்து வளர்த்து வருபவர் உயர்திரு. மாசிலாமணி முதலியார் அவர்களும், உயர்திரு. தணிகை அரசரும் ஆவர். எங்கள் ஆசிரியர்கள் எங்களுடைய தந்தையர்போல் இருந்து கருத்தாகப் பாடம் கற்பித்து வருகிறார்கள். வெறும் ஏட்டுப் படிப்பு மட்டுமல்லாமல் நூல் நிலையம், படிப்பகம், மாணவர் கழகம், இசையரங்கு, நாடக மன்றம், சாரணர் குழு, செஞ்சிலுவைச் சங்கம் முதலிய இயக்கங்களையும் ஏற்படுத்தி எங்களுக்கு அத்துறைகளில் நல்ல பயிற்சி தருகிறார்கள். கல்வியுடன் பலவகைக் கைத்தொழில்களையும் நாங்கள் பயில்கிறோம்.

எங்கள் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள வள்ளலார் ஏழை மாணவர் இல்லத்தில் 650 மாணவர்கள் தாங்கள் ஒரே குடும்பத்துச் சகோதரர்போல் ஒற்றுமையாக வாழ்கின்றனர். நானும் இவ்விடுதி மாணவனே. இந்த இல்லத்து வாழ்க்கை எனக்கு இன்பமாக இருக்கிறது. இளமையிலேயே பல நற்பழக்கங்களைக் கையாளுவது நல்லதல்லவா? இல்லத்து மாணவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து அமைச்சர்கள் சபையினால் இல்லம் நல்ல முறையில் ஆளப்படுகிறது. ஒவ்வொரு அமைச்சருக்கும் தனித் தனிப் பொறுப்பு உண்டு. எங்கள் பள்ளியை உள்ளூர் வெளியூர்ப் பொது மக்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அடிக்கடி வந்து பார்த்துப் பாராட்டிச் செல்கிறார்கள்.

ஆண்டு தோறும் அரசியலார் நடத்தும் எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கும் சென்னை மாணவர் மன்றத்தார் நடத்தும் தமிழ்ப் போட்டித் தேர்வுக்கும் பற்பல மாணவர்கள் சேர்ந்து வெற்றி பெற்றுப் பள்ளிக்குப் பெருமை அளிக்கிறார்கள். எமது பள்ளி விரைவில் உயர்நிலைப் பள்ளியாகவும் கல்லூரியாகவும் வளரவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

## 3. எங்கள் ஊரில் நடந்த பொதுத் தேர்தல் (E. S. L. C. 1952)

குறிப்புக்கள் : 1. முன்னுரை—தேர்தலின் நோக்கம். 2. தேர்தல் ஏற்பாடுகள். 3. தேர்தல் நிகழ்ச்சிகள். 4. மக்கள் கடமை. 5. முடிவுரை.

நம் நாடு பூரண சுதந்தரம் பெற்ற நாடு. இன்று எல்லாப் பதவிகளிலும் இந்தியரே பங்குகொள்ள வசதி இருக்கிறது. பஞ்சாயத்துப் போர்டு உறுப்பினர் முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் வரை அரசாங்கத் தலைவர்கள் எல்லாம் பொதுத் தேர்தலின் மூலமாகவே தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். மக்களுக்காக மக்களால் ஆளப்படும் ஆட்சியே குடியரசு ஆட்சியாகும். தேர்தலின் மூலமாக ஆட்சிப் பொறுப்பை நன்கு உணர்ந்து பொது நலம் கருதி உழைக்கும் உத்தமர்களையே தேர்ந்தெடுப்பது வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும்.

எங்கள் கிராமம் ஒரு பெரிய கிராமம். இது 'பஞ்சாயத்துப் போர்டு' என்னும் சபையாரால் ஆளப்படுகிறது. பஞ்சாயத்துச் சபைத் தலைவர் ஒரு படித்த இளைஞர். சபையில் மொத்தம் பன்னிரண்டு அங்கத்தினர்கள் உண்டு. இரண்டு மூன்று தெருக்கள் சேர்ந்தது ஒரு வட்டாரம். இப்படி ஒரு வட்டாரத்திற்கு ஓர் அங்கத்தினர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சென்ற மாதத்தில் எங்கள் கிராமப் பஞ்சாயத்துச் சபையிலிருந்து ஓர் அங்கத்தினர் தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அவர் பதவியை நிரப்புவதற்கு மறு தேர்தல் நடத்த வேண்டியதாக நேர்ந்தது. அப்பதவிக்கு இரண்டு அபேட்சகர்கள் போட்டி இட்டனர். இவ்விருவரில் ஒருவர் படித்தவர்; மற்றொருவர் பணக்காரர்.

தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே இரண்டு அபேட்சகர்களும் வாக்காளர்களிடம் சென்று தங்களுக்கே வாக்குரிமை யளிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஒவ்வொருவரும் வீடுவீடாய்ச் சென்று தங்களையே தேர்தலில் ஆதரிக்குமாறு வேண்டினார்கள். தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் இன்னின்ன நன்மைகளைச் செய்வோம் என்றும் வாக்குறுதி யளித்தார்கள். தெருக்களுக்கு இன்னும் அதிகமாக விளக்குகள் அமைப்பதாகவும், தெருச் சுகாதாரத்தை மிகவும் கவனிப்பதாகவும் கூறினார்கள். அட்டைகளில் விளம்பரங்கள் எழுதி ஊர்வலமாக வந்தார்கள். பணக்கார அபேட்சகரின் விளம்பரமே மிகவும் பலமாக இருந்தது.

தேர்தல் நடைபெறும் நாள் வந்துவிட்டது. வாக்காளர்கள் கூட்டம் தேர்தல் நடக்குமிடத்தைச் சூழ்ந்துகொண்டது. வெற்றிலைப் பாக்குக் கடைகளும், பலகாரக் கடைகளும், சோடாக் கடைகளும் அன்று புதியனவாக அங்கு அமைக்கப்பட்டிருந்தன. இரண்டு அபேட்சகரின் நண்பர்களும் உறவினர்களும் வந்து தேர்தல் பிரசாரம் செய்தார்கள். அவ்விரு அபேட்சகரின் பிரதிநிதிகளும் வாக்காளர்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்தார்கள். தேர்தல் காலை 11 மணிக்கு ஆரம்பமாயிற்று. இரண்டு அபேட்சகரில் ஒருவருக்குச் சைகிள் சின்னமுள்ள பெட்டியும், மற்றொருவருக்குத் தாமரைப்பூச் சின்னம் உள்ள பெட்டியும் வைக்கப்பட்டிருந்தன. வாக்காளர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து தம் வாக்குரிமைச் சீட்டைத் தமக்கு விருப்பமானவர் பெட்டியில் போட்டார்கள். மாலை 4 மணிக்கெல்லாம் தேர்தல் முடிவு பெற்றது. பெட்டிகள் 'சீல்' வைக்கப்பட்டுப் பத்திரமாக எடுத்துச் செல்லப்பட்டன.

மூன்றும் நாள் வாக்குரிமைச் சீட்டுகள் கணக்கெடுக்கப் பட்டன. எண்ணிக்கையின் முடிவில் படித்த அபேட்சகரே பஞ்சாயத்துச் சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்னும் செய்தி கேட்டு நான் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தேன். நண்பர்களும் கிராம முக்கியஸ்தர்களும் அவருக்கு மலர்மாலை சூட்டிப் பாராட்டினார்கள்.

## 4. மாட்டு வண்டியில் நான் செய்த பிரயாணம் (E. S. L. C. 1945)

குறிப்புக்கள்: 1. முன்னுரை. 2. பிரயாணத்தின் அவசியம். 3. புறப்பாடு—வழியில் நடந்த நிகழ்ச்சிகள். 4. குறிப்பிட்ட இடத்தைச் சேர்தல். 5. முடிவுரை.

மனிதன் ஒரே இடத்தில் தனியாக வாழமுடியாது. அவன் தனக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதற்கும், உறவினர்களுடன் பழகுவதற்கும், வியாபாரம், கைத்தொழில் முதலியன புரிவதற்கும், வெளியிடங்களுக்குச் செல்கிறான். தற்காலத்தில் எண்ணிய இடங்களுக்குத் துண்ணெனச் செல்வதற்குத் தகுந்த ஆகாய விமானம், புகைவண்டி, மோட்டார் வண்டி முதலிய போக்கு வரவுச் சாதனங்கள் இருக்கின்றன. எனினும் அவை இன்னும் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குப் பயன்படும் அளவுக்கு முன்னேற்றமடையவில்லை. கிராமத்தில் சுற்றுப்புறங்களில் சென்று வருவதற்குப் பெரும்பாலும் மாட்டு வண்டிகளே பயன்படுகின்றன.

நான் திருவத்திபுரத்துக்கு அடுத்த கோவிலூர் உயர்தர ஆரம்பப் பள்ளியில் படிக்கும் மாணவன். ஒரு சமயம் திருவத்திபுரத்தில் என் தமக்கைக்குத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு முன் நாள் திருவத்திபுரத்துக்குப் புறப்பட்டோம். பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் முன்னதாகவே கட்டி எடுத்துக்கொண்டோம். பெண் வீட்டார் எல்லோரும் திருமணத்துக்குச் செல்வதற்காக மூன்று மாட்டு வண்டிகளை ஏற்பாடு செய்து கொண்டோம். பாதைகள் மேடும் பள்ளமுமாக இருந்ததால் மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்வது கடினமாயிற்று. இரண்டு ஊருக்கும் இடையில் உள்ள தூரம் எட்டுமைல் தான். அதனால் நாங்கள் மத்தியான உணவு உட்கொண்டு மாலை மூன்று மணிக்குத் திருவத்திபுரத்துக்குப் புறப்பட்டோம். முதலில் சென்ற வண்டியில் மணப்பெண்ணாகிய என் தமக்கை, தாய், தந்தை முதலியவர்கள் சென்றார்கள். அவர்கள் சென்ற வண்டிமாடு சிறந்த மயிலைக் காளை. நானும், என் நண்பர்களில் சிலரும் மூன்றாவது வண்டியில் பிரயாணம் செய்தோம். மயிலைக்காளை திருமணத்துக்குப் போகும் உற்சாகத்தில் கலகலவென்று மணியொலித்துக்கொண்டு காற்றாய்ப் பறந்தது. நடுவில் சென்ற வண்டிமாடு என் சுற்றத்தினரைச் சுமந்து அதனைப் பின் தொடர்ந்து ஓடிற்று.

நாங்கள் சென்ற மாட்டுவண்டி முதலில் வேகமாகத்தான் ஓடிற்று. எங்கள் வண்டிக்காரன் பொல்லாதவன். புறப்படும்போதே மாட்டைச் சாட்டையால் ஓங்கியடித்து விரட்டினான். மூன்று மைல்கள் கடந்தோம். அதற்கப்புறம் எங்கள் வண்டி மாடு வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டது. மெதுவாக நடக்கத் தொடங்கியது. ஆனால் அந்த வண்டிக்காரன் அந்தச் சும்மாவிட்டானா? அதன் வாலை மடித்தும், சாட்டை முனையால் குத்தியும் வாட்டினான். அந்த மாடோ எலும்புக்கூடு கன்றாகத் தெரியுமாறு இளைத்து இருந்தது. பாவம், சிறிது தூரம் சென்றபின் அதன் கால்கள் பின்னி நடக்க

“அறிவுடையார் எல்லாம் உடையார்.” — வள்ளுவர்.

லாயின. வண்டிக்காரன் அடித்த அடி தாங்காமல் அது தரையில் படுத்தேவிட்டது. அதற்குள் முன் சென்ற இரண்டு வண்டிகளும் கண்ணுக்கெட்டாத தூரம் சென்று விட்டன. தரையில் படுத்த மாட்டை வண்டிக்காரனும், நாங்களும் சேர்ந்து பிடித்துத் தூக்கி நிறுத்தினோம். மீண்டும் வண்டியில் கட்டி ஓட்டினோம். இரண்டு பர்லாங்குகள் சென்றதும் மறுபடியும் மாடு படுத்துவிட்டது. அடுத்தாற்போல் ஓர் ஏரிக்கரையின்மேல் வண்டி செல்ல இருந்தது. அந்தச் சண்டி மாட்டை நம்பி ஏரிக்கரையில் போவது அபாயம் என்று நினைத்தோம். ஆனால் வண்டிக்காரன் "பயப்படவேண்டாம். வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள். புறப்படலாம்" என்றான். அதற்குள் வானம் இருண்டு சிறிது மழைத்தூறல் தொடங்கியது.

நாங்கள் கால் நடையாகவே செல்வதுதான் நல்லது என்று நினைத்துப் புறப்பட்டோம். ஏரிக்கரையில் இன்பமாகப் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் திருவத்திபுரத்துக்கு வந்து சேர்ந்தோம். முதல் இரண்டு வண்டியினரும் மாலை 6 மணிக்கே ஊர் போய்ச் சேர்ந்தார்கள். அதற்குள் பெண் அழைப்பு ஊர்வலம் சிறப்பாக நடந்துவிட்டது. எல்லோரும் சாப்பிடும்போது நாங்கள் சென்றோம். எங்கள் வண்டியின் கதையைக் கூறினோம். யாவரும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள்.

## 5. வீட்டில் வளர்க்கும் ஒரு பிராணி

குறிப்புக்கள்: 1. முன்னுரை—பசுவின் தோற்றம். 2. சிறந்த குணங்கள். 3. அதிகமாகக் காணப்படும் இடங்கள். 4. உணவுப் பழக்கம். 5. உபயோகங்கள். 6. முடிவுரை—நமது கடமை.

பசு ஒரு சாதுவான பிராணி. கிராமங்களில் பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டிலும் பசுவை வளர்ப்பது வழக்கம். பசு ஒரு சாகபட்சணி. நம் நாட்டினர் பசுவை ஒரு தெய்வமாகக் கருதி வணங்குவார்கள். பசுவுக்குத் தலை நீண்டிருக்கும்; குளம்புகள் பிளவுபட்டிருக்கும்; வாலும் நீண்டிருக்கும்; அதன் முனையில் உள்ள அடர்ந்த மயிர்க்குஞ்சத்தால் அது தன்மேல் உட்காரும் ஈ, கொசுக்களை ஓட்டும். அதன் மேல்வாயில் பற்கள் கிடையா. அது தன் கீழ்வாயிலுள்ள தட்டையான பற்களால் புல்லை அரைத்துத் தின்னும்.

உலகில் பல பாகங்களிலும் பசு வளர்க்கப்படுகிறது. இந்தியா, இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்விட்ஸர்லாந்து, ஆஸ்திரேலியா என்னும் இடங்களில் ஏராளமான பசுக்கள் வளர்க்கப் படுகின்றன. பசுக்களில் நெல்லூர்ப் பசு, காங்கயம் பசு, ஓங்கோல் பசு எனப் பலவகை உண்டு.

பசுவுக்குச் சிறந்த உணவு புல். பசுமையான புல்லைத் தின்பதில் பசுவுக்கு விருப்பம் அதிகம். வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு முதலியனவும் பசுவின் ஆகாரமாகும். பசு ஓர் அசைபோடும் பிராணி. தரையில் கண்ட புல்லை அது விரைவாக மேய்ந்து ஒரு மரநிழலில் உட்கார்ந்து உணவை மீண்டும் வாய்க்குள் கொண்டுவந்து நன்றாக மென்று அசைபோடும்.

வீட்டுப் பிராணிகளில் மிகவும் சிறந்தது பசு. அதனை யாவரும் எளிதாக வளர்க்க முடியும். பசுவின் பால் பாலர் முதல் வயது தளர்ந்த முதியோர் வரை அனைவருக்கும் சிறந்த உணவாகக் கருதப்படுகிறது. நோயாளிகளுக்கும் பசுவின் பால் நல்ல உணவாகும். பால் எல்லா உணவுச் சத்துக்களும் நிறைந்த ஒரு பூரண உணவுப் பொருளாகும். வெண்ணெய், நெய், பாலடைக்கட்டி முதலிய இனிய பொருள்கள் பாலிலிருந்தே தயாரிக்கப் படு

கின்றன. பசுவின் சாணம் உயர்ந்த எருவாகப் பயன் படுகின்றது. பசுவின் தோல், குளம்புகள், கொம்புகள் முதலியவை பணப்பை, விளையாட்டுச் சாமான்கள், செருப்புகள், சீப்புகள், கைப்பிடிகள், பொத்தான்கள் முதலியவை செய்ய உபயோகப்படுகின்றன.

பசு வளர்த்தல் ஓர் இலாபகரமான தொழிலாகும். ஒரு வீட்டில் ஐந்தாறு பசுக்களை வளர்ப்பது, அவர்கள் குடும்பச் செலவுக்குப் போதுமான வருவாயைத் தருவதாகும். பசுவுக்குத் தகுந்த காலங்களில் நல்ல உணவு கொடுத்து அன்புடன் வளர்த்து வரின், அது நம்மிடம் அன்பாக இருந்து நிறையப் பால் கொடுக்கும். அது தன் கன்றுக் குட்டியிடம் மிகவும் பாசமும் நேசமும் உடையது. தன் கன்றுக்குட்டிக்கு யாராவது துன்பம் செய்ய வந்தால் அது அவரைத் தன் கொம்புகளால் முட்டித் தள்ளும். கன்றுக்குட்டியை நாம் வளமுடன் பாதுகாக்கவேண்டும். சிலர் பேராசைகொண்டு கன்றுக்குப் பால் விடாமல் தாய்ப்பசுவின் பால் முழுவதையும் தாமே கறந்து விற்பனை செய்வர். பாவம்! வாயில்லாக் குழந்தையாகிய கன்றுக் குட்டியை இவ்வாறு துன்புறுத்தினால் அதன் உடல் மெலிந்து அது விரைவில் இறந்து விடக் கூடும். பசுவையும், கன்றுக் குட்டியையும் செல்வமாகப் பாராட்டி வளர்த்து வந்தால் நாம் நன்மையும், புண்ணியமும் அடைவோம்.

## 6. உழவுத் தொழில்

குறிப்புக்கள்: 1. முன்னுரை. 2. உழவுத் தொழிலின் சிறப்பு. 3. நன்மைகள். 4. முடிவுரை.

நாடோறும் ' பசி ' என்னும் கொடிய தீப்பிணியில் அகப்படாத உயிர் ஒன்றும் இவ்வுலகில் இல்லை. மக்களுக்குரிய மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, ஆசை ஆகிய பத்தும் பசி வந்திடப் பறக்கும் என்று குறித்தனர் புலவோர்.

இத்தகைய பசிப்பிணியை உணவென்னும் மருந்துகொண்டு ஒழித்து மானத்தோடு வாழவே மக்கள் பல்வேறு தொழில்களை மேற்கொள்ளுகின்றனர். ஆயினும் அத்தொழில்களில் வயிற்றுக்கு உணவளிக்கும் தொழிலாக இருப்பது உழவுத் தொழிலாகும். பிற தொழில் புரிவோர் அனைவரும் அன்றாட உணவுக்கு உழவுத் தொழிலாளரை நாடவேண்டியிருக்கிறது.

இங்ஙனம் மேன்மை நிறைந்த உழவுத் தொழிலால் ஏற்படும் நன்மைகள் பலப்பல. ஆதலால் இத்தொழிலை வளப்படுத்த மக்களும் அரசியலாரும் ஒன்றிப் பாடுபட வேண்டும். அப்போதுதான் நாட்டில் பசிப்பிணி நீங்கும்; பிறதொழில் வளரும்; பொருள்கள் குவியும்; நிலவளம் செழிக்கும்; நாட்டில் பொருளாதார நிலை உயரும்; வறுமை நீங்கும்; குடி ஓங்கும்; அரசும் உயரும்; நெறி முறை பிழையாது. சுருங்கக்கூறின் எல்லா நலன்களும் தாமே வந்தடையும். மகிழ்ச்சியும், அமைதியும் நாடெங்கும் கூத்தாடும். இவ்வளவு நன்மைகளையும் தரும் உழவைக் கைவிட்டு வேறு தொழிலில் ஈடுபடுவது உமி குற்றிக் கைகோதலைப் போலும். உலகில் பிறதொழிலுக்குக் கேடு வருவதுபோல இத்தொழிலுக்கு இல்லை.

உழவின் சிறப்பை நன்றாக உணர்ந்திருந்தும் நகரத்தார் மட்டுமல்லர்; நாட்டுப்புற மக்களும் தங்கள் மக்கள் இத்தொழிலை மேற்கொள்வதை வெறுத்து வருகின்றனர். அதன் விளைவு என்னையிற்று? உழவு குன்றியது; உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. உழவுத் தொழில் வசதி மண்டிக்

கிடக்கும் நம் நாட்டிலும் உணவுப் பஞ்சத்தால் மக்கள் துன்பப்படவேண்டிய நிலையும் வந்து சேர்ந்தது. இனியாவது, மீண்டும் உணவுப் பஞ்சம் ஏற்படாதபடி உழவுத்தொழிலை உயிர் எனப் போற்றவேண்டும். மேனாட்டுப் புது முறைகளைக் கையாளவேண்டும். உழவுத் தொழிலை உயர்த்தி அனைவரும் வாழவேண்டும்.

## 7. நம் நாட்டு உணவுப் பற்றாக் குறையும் அதை நீக்கும் வகைகளும் (E. S. L. C. 1952)

**குறிப்புக்கள் :** 1. முன்னுரை—உணவின் அவசியம். 2. உணவுப் பற்றாக்குறை ஏற்படக் காரணங்கள். 3. பற்றாக்குறையை நீக்கும் வழிகள். 4. மக்கள் கடமைகள். 5. முடிவு.

ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமாகும். உணவு இல்லையேல் பிராணிகளும் தாவரங்களும் உயிர் வாழா. நாம் பெரும்பாலும் தாவரங்களிலிருந்து உணவுப் பொருளாகிய அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களையும், காய்கறிகளையும் பெறுகிறோம். தாவரங்களின் வளர்ச்சிக்கு மழை இன்றியமையாததாகும். மேலும் நம் முக்கியமான உணவுப் பொருளாகிய நெல் விளைவதற்குப் பெருமழை வேண்டும். தண்ணீர் வசதி இன்றி நெல் பயிராகாது.

சென்ற சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் சரியான மழை இல்லை. அதனால் நாட்டில் உணவுப் பஞ்சம் தலைகாட்டலாயிற்று. விளைச்சல் குறைந்ததற்கு மேலும் பல காரணங்களும் உண்டு. கிராமத்தில் பயிர்த் தொழில் புரிவது கேவலம் என்று எண்ணிச் சில குடியானவர்கள் பட்டணங்களில் குடியேறியுள்ளனர். பரம்பரையாய்ப் பயிர்த்தொழில் புரிவோரும் இன்று அத்தொழிலில் கவனமின்றி, வேறு தொழிலை நாடியுள்ளனர். நிலத்தின் சொந்தக்காரர்கள் பயிரிடுவோரின் சுகத்தைக் கவனியாமல் அவர்களுக்குக் கடன் சுமையை அதிகமாக்கி, அக்கடனுக்காக விளைவு முழுவதையும் தாமே அனுபவிக்கலாயினர். நீர் வற்றிய கிணறுகளையும் ஏரிகளையும் சிறிதும் தோண்ட யாரும் கவனம் செலுத்தவில்லை. இத்தகைய காரணங்களால் பயிர்த்தொழில் குன்றி உணவுப் பற்றாக்குறை அதிகமாயிற்று.

இனி, உணவுப் பற்றாக்குறையைப் போக்கும் வழிகளைக் கவனிப்போம். குடியானவர்கள் பழங்கால ஆயுதங்களையே நம்பி இராமல், ஆழ உழுவதற்குப் பயன்படுகின்ற டிராக்டர்களைக் கொண்டு தங்கள் நிலத்தை நன்றாக உழுது கொள்ள வேண்டும். சத்துள்ள எருக்களை உபயோகிக்கவேண்டும். நீர்ப்பாசனத்திட்டத்திற்கு உதவுவதன் பொருட்டு அரசாங்கத்தார் தரும் விவசாய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வது நல்லது. வயல்களில் மாற்றுப் பயிர்கள் நடுவது நன்மை யளிக்கும். கூட்டுறவு விவசாயப் பண்ணையில் ஒவ்வொருவரும் உறுப்பினராகி அதனால் உண்டாகும் நன்மைகளை அனுபவித்தல் வேண்டும்.

பொது மக்கள், உணவுத் தானியங்களான நெல், கேழ்வரகு முதலியவற்றை வீணாக்கலாகாது. அரிசியே நமக்கு முக்கியமான ஆகாரமாயினும் கோதுமையையும் பக்குவப்படுத்தி உணவுப் பொருளாக உட்கொள்ளுவது நலம். நிலத்தின் சொந்தக்காரர்கள் மக்களுக்குப் பயன்படும் காய்கறிச் செடிகளையும் பயிரிடவேண்டும். மக்கள் தமக்குச் சொந்தமான வெற்றிடங்

**"வைகறைத் துயில் எழு." — ஔவையார்.**

களில் குரோட்டன்ஸ் முதலிய செடிகளை வைத்து அலங்கரிக்காமல் காய்கறிச் செடிகளைப் பயிரிடுவது நல்லது. காய்கறிச் செடிகளைப் பயிரிட இட வசதி இல்லாதவர்கள் தொட்டிகளில் நட்டுப் பயன் பெறலாம். பலகாரங்கள் முழுவதும் அரிசியிலேயே செய்ய வேண்டுமென்று இல்லாமல் மற்றத் தானியங்களிலும் செய்து உண்ணப் பழகுதல் வேண்டும். நிலத்தின் உரிமையாளரும் அரசாங்கத்தாரும் பயிரிடும் குடியானவர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தல், விதைகளையும் உழவுக் கருவிகளையும் இலவசமாக உதவுதல், கூட்டுறவுச் சங்கங்களை மேலும் முன்னேற்றமடையச் செய்தல் என்னும் இச் செயல்களால் உணவுப் பற்றுக்குறையை நீக்க முயலுதல் வேண்டும்.

## 8. நான் விரும்பும் புத்தகம் (E. S. L. C. 1947, 1951)

**குறிப்புக்கள் :** 1. முன்னுரை — புத்தகங்களின் அவசியம். 2. குறிப்பிட்ட புத்தகத்தின் பெயரும் ஆசிரியரும். 3. புத்தகத்தில் படித்த அரிய செய்திகள். 4. முடிவு.

கல்வி கற்கும் சாதனங்களில் புத்தகங்களே மிகவும் இன்றியமையாதவை. புத்தகங்கள் மொழி சம்பந்தமானவை, கலை சம்பந்தமானவை, வரலாறு சம்பந்தமானவை, விஞ்ஞானம் சம்பந்தமானவை எனப் பலவகைப்படும். புத்தகங்கள் கடல்போல அளவில்லாதவை. நம் அற்பமான வாழ் நாட்களில் அவற்றில் சிலவற்றையே நாம் கற்கமுடியும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் அறிவை வளர்க்கும் புத்தகங்கள் பலவற்றைப் படிப்பது நல்லது. மொழிப் பற்றையும், தேசிய உணர்ச்சியையும் ஊட்டவல்ல புத்தகங்களைப் படிப்பதில் எனக்கு ஆர்வம் அதிகம். நம் நாட்டு உயிர்க் கவிஞராகிய பாரதியாரின் நூல்கள் பலவற்றைப் படித்திருக்கிறேன்.

என் பாடசாலை நூல் நிலையத்திலிருந்து பல புத்தகங்களைப் படித்திருக்கிறேன். அவற்றில் நான் மிகவும் பெரிதும் விரும்புவது பாரதியார் இயற்றிய 'தேசிய கீதங்கள்' ஆகும்.

இந்நூலில் பாரதியாரின் சுவை மிக்க பாடல்கள் பல இருக்கின்றன. உரிமை உணர்ச்சியை ஊட்டி உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணும் செந்தமிழ்ப் பாடல்கள் என் மனதைக் கவர்ந்து விட்டன. 'பாப்பாப் பாட்டு', 'தாயின் மணிக்கொடி', 'விடுதலை, விடுதலை', 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்னும் பாடல்கள் பாடப் பாடத் தெவிட்டாத பண்பு வாய்ந்தவை.

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' என்று கவிமணி பாராட்டியது மிகவும் உண்மையே என்று கூறலாம். பாரதியாரின் பாடல்கள் மிகவும் எளிய நடையில் உள்ளவை; பாமரரும் பண்டிதரும் விரும்பிக் கற்கத் தகுந்த உயர்ந்த நீதிகளை உடையவை. அவர் பாடலுக்கு அகராதி வேண்டியதில்லை. பாரதியார் கூறும் உவமைகள் அத்தனையும் நமது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துவது போல் இருக்கும்.

நான் அவருடைய தேசிய கீதங்களைப் படித்தது ஒரு முறையல்ல; இரு முறையல்ல; பல முறையும் படித்திருக்கிறேன்.

நாம் பாரதியார் பாடல்களைப் படிப்பதோடு நின்றுவிடாமல், அவற்றின் கருத்துக்களை உணர்ந்து, அவற்றின் வழியே நாட்டுக்குச் சேவை புரிய வேண்டும்.

"புலி வந்தாலும் பொய் சொல்லாதே." — தணிகை.

## பயிற்சிக்குரிய சில கட்டுரைகள்

1. என் கிராமம்.
2. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்.
3. பொருட்காட்சி சாலைகள்.
4. புகைவண்டிப் பிரயாணம்.
5. நற்பழக்கங்கள்.
6. சுதந்திரத்துக்கு உழைத்த தேசத் தலைவரில் ஒருவர்.

---

## கட்டுரைக் குறிப்புக்கள்

1. **என் கிராமம் :** கிராமத்தின் அமைப்பு — நீர்வளம் — ஏரி, கால்வாய், குளம், குன்றுகள் முதலியன — மக்கள் தொழில், முக்கிய உற்பத்திப் பொருள்கள் — ஆட்சி முறை — முடிவுரை.

2. **இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் :** முன்னுரை — அமைப்பு முறை — அதனால் இளைஞர் உள்ளத்தில் அன்பு—பிறர்க்கு உதவுதல் — தாய்மையாக வாழ்தல் முதலிய நற்குணங்கள் — முடிவு.

3. **பொருட்காட்சி சாலைகள் :** பண்டைய நாள் திருவிழாக்கள் பொருட்காட்சி சாலைகளாகவும், வியாபார இடங்களாகவும் இருந்தன — விஞ்ஞானம், கைத்தொழில், சரித்திரம், பூகோளம் இவற்றின் விளக்கம் — பொருட்காட்சி சாலைகள், கிராமந்தோறும் வருஷத்திற்கொருநாள் ஏற்பாடு செய்தல் — பயன் — முடிவு.

4. **புகைவண்டிப் பிரயாணம் :** எந்த ஊரிலிருந்து — வழியில் கண்ட காட்சிகள் — இயற்கையின் வருணனை — மக்களுடன் பழகுவதால் ஏற்படும் அனுபவம் — முடிவுரை.

5. **நற்பழக்கங்கள் :** அன்றாட வேலைகள் — உடற் சுத்தம் — உணவு — பிறரோடு பழகல், உரையாடல் முதலியவற்றில் நற்பழக்கங்களைக் கைக்கொள்ளல் — உதாரணம் — காந்தியடிகள் — முடிவுரை.

6. **சுதந்திரத்துக்கு உழைத்த தேசத் தலைவரில் ஒருவர் :** வ. உ. சிதம்பரம் பிள்ளை — ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார் — பி. ஏ. படித்தார் — வக்கீல் தொழில் — தமிழ்ப் புலமை — கப்பல் வாணிபம் — காங்கிரஸில் தேச சேவை — சிறைப்பட்டார் — செக்கிழுத்தார் — தூத்துக்குடியில் கடைசி நாட்கள் — முடிவுரை.

## சென்ற ஆண்டுகளின் கட்டுரைக் கேள்விகள்

அடியிற்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் ஒரு வியாசம் எழுதுக :

**1942-ஆம் ஞு** 1. தபாலாபீஸ் 2. சமாசாரப் பத்திரிகை 3. உள்ளூரில் கூடும் சந்தை அல்லது நடைபெறும் திருவிழா.

**1943 ஆம் ஞு** 1. மழையின் நன்மைகள் 2. உங்கள் பாடசாலையில் கொண்டாடின ஒரு விழா 3. பிராணிகளிடத்தில் அன்பு பாராட்டும் விதங்கள்.

---

**1944-ஆம் ஞூ** 1. நவீன யுத்த முறைகள் 2. நீ பார்த்த விசேஷ ஸ்தலம் 3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**1945-ஆம் ஞூ** 1. நீ செய்த ஒரு பிரயாணம் 2. நீ பார்த்த ஒரு சந்தை அல்லது கடைத் தெரு 3. நீ கண்ட ஒரு போட்டி விளையாட்டு அல்லது பந்தயம்.

**1946-ஆம் ஞூ** 1. சமாசாரப் பத்திரிகைகள் 2. திருவிழா அல்லது பண்டிகை 3. உங்கள் பள்ளிக்கூட விழா அல்லது கொண்டாட்டம்.

**1947-ஆம் ஞூ** 1. உன் கிராமத்தில் கவனித்த ஒரு பிராணி அல்லது பட்சியின் பழக்க வழக்கங்கள் 2. வாசிக்கையில் உனக்கு அதிக இன்பம் அளித்த புத்தகம் 3. உன் கிராமத்தில் ஒரு மழை நாள்.

**1948-ஆம் ஞூ** 1. உனது ஊரில் நாட்டின் விடுதலைத் திருநாள் கொண்டாட்டம் 2. கிராம நூல் நிலையம் அளிக்கும் நன்மைகள் 3. கிராமச் சந்தை.

**1949-ஆம் ஞூ** 1. மதுவிலக்கால் ஏற்படும் நன்மைகள் 2. உன் வீட்டில் கொண்டாடிய ஒரு பண்டிகை 3. தேகப் பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள்.

**1950-ஆம் ஞூ** 1. உன் பள்ளிக்கூடத்தில் வருஷாந்திர விழா 2. நீ செய்த ஒரு ரயில் பிரயாணம் 3. தேச பக்தி.

**1951-ஆம் ஞூ** 1. உனக்கு விருப்பமான ஒரு புத்தகம் அல்லது ஆசிரியர் 2. செய்திப் பத்திரிகைகள் (newspapers) படிப்பதன் முக்கியம் 3. சாலைவழிப் பயணத்திற்கு ஸைகிள் வண்டியை (bicycle) உபயோகிப்பதன் நன்மைகள்.

**1952-ஆம் ஞூ** 1. உன்னுடைய கிராமத்திலாவது உனக்கு அருகிலுள்ள கிராமத்திலாவது நகரத்திலாவது சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் 2. இந்தியாவில் இப்போது உணவுப் பற்றுக்குறை ஏற்படக் காரணம் என்ன? இக்குறையை நீக்க நீ எவ்வாறு உதவி செய்வாய்? 3. நீ பார்த்த ஒரு "பள்ளி விளையாட்டுத் திருவிழா".

**1953-ஆம் ஞூ** 1. நீ கலந்துகொண்ட ஒரு திருவிழா 2. உன் ஊரில் கொண்டாடிய முதியோர் கல்வி வாரம் 3. உனக்கு வயது வந்தபோது நீ செய்ய விரும்பும் தொழில்.

**1954-ஆம் ஞூ** 1. வனமஹோத்சவம் 2. விளையாடுதலின் பயன் 3. நீ சென்ற ஒரு உல்லாசப் பிரயாணம்.

**1955-ஆம் ஞூ** 1. உங்கள் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற சுதந்திரக் கொண்டாட்டம் 2. பொது நூல் நிலையங்களினால் ஏற்படும் நன்மைகள் 3. சினிமாக்களினால் ஏற்படும் நன்மை தீமைகள்.

---

# 5. ஆசிரியர்களின் வரலாற்றுக் கண்ணாடி

| நூல் (அ) பாடல் | நூலாசிரியர் | ஊர் | பெற்றோர் | சமயமும், குலமும் | காலம் | பிற குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| திருவாசகம் | மாணிக்க வாசகர் | திருவாத ஊர் | ...... | சைவம், அமாத்திய பிராமணர் | நான்காம் நூற்றுண்டு (அ) ஒன்பதாம் நூற்றுண்டு | இவர் அரிமர்த்தன பாண்டியனுல் ஆதரிக்கப்பட்டவர். பாண்டியனின் முதலமைச்சராகப் பணியாற்றி வந்தார். திருக்கோவையார் என்னும் வேறு நூலும் இவரால் இயற்றப்பட்டது. திருவாசகம் போப்துரைமகனரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. |
| தமிழ்ப் பல்லாண்டு (மாரிவாயில்) | சோமசுந்தர பாரதியார் | எட்டைய புரம் | ...... | சைவம் | தற்காலம் | நாட்டுக்கவி சுப்பிரமணிய பாரதியாரின் நண்பர். பல மொழிப் புலமை உடையவர். தொல்காப்பிய உரை, மாரிவாயில், மங்கலக் குறிச்சியிற் பொங்கல் திருநாள் முதலியவை இவரால் இயற்றப்பட்டவை. அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அப்பல்கலைக் கழகத்தார் அண்மையில் இவருக்கு டாக்டர் என்னும் பட்டம் வழங்கியுள்ளனர். |
| திருக்குறள் | திரு வள்ளுவர் | மயிலாப் பூர் | ஆதி, பகவன் | ...... | கி.பி. 1 அல்லது 2-ஆம் நூற்றுண்டு | கடைச்சங்கப் புலவர், நெசவுத் தொழிலை மேற்கொண்டவர். சமரச மனப்பான்மை உடையவர்; இவர் மனைவியார் வாசுகி அம்மையார். திருக்குறள் உலகப் பொது மறை. பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. 1330 பாக்களை உடையது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நாலடியார் | சமண முனிவர் | ...... | ...... | சைனம் | கி.பி. 2-ஆம் நூற்றூண்டு | பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. நாலடி, நாலடி நானூறு, வேளாண் வேதம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இந்நூலின் தொகுப்பாசிரியர் பதுமனர். டாக்டர் போப் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். 400 பாக்களைக் கொண்டது. |
| இனியவை நாற்பது | பூதஞ் சேந்தனர் | மதுரை | மதுரைத் தமிழாசிரியர் பூதன் | சைனம் | கி.பி. 2-ஆம் நூற்றூண்டு | பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. 40 பாக்களை உடையது. |
| அறநெறிச் சாரம் | முனைப். பாடியார் | திருமுனைப் பாடி | ...... | சைனம் | 500 ஆண்டுகளுக்கு முற் பட்டவர் | சைன மதக் கொள்கைகளையே பெரும்பாலும் கூறுவது. 222 செய்யுட்களைக் கொண்டது. |
| கம்ப ராமாயணம் | கம்பர் | திருவழுந் தூர் (தேரழுந் தூர்) | ஆதித்தன் | வைணவம் | 9-ஆம் நூற்றூண்டு (அ) 12-ஆம் நூற்றூண்டு | கவிச் சக்ரவர்த்தி என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்; சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்; வட மொழி இராமாயணத்தைத் தழுவித் தமிழில் இயற்றினர். சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரஸ்வதியந்தாதி முதலிய நூல்களும் இவரால் இயற்றப் பெற்றவை. ஔவையார், புகழேந்தி, ஒட்டக் கூத்தர் முதலியவர் காலத்தவர். |
| புறநானூறு (ஒருநாள் பழ கினும்) | பல புலவர் கள் (ஔவை யார்) | சேர நாடு | ...... | பாணர் குலம் | கடைச்சங்க காலம் | சேர சோழ பாண்டியராலும் கடையெழு வள்ளல்களாலும் பெரிதும் ஆதரிக்கப்பட்டவர். அதியமானின் நண்பர். அவன் அளித்த நெல்லிக்கனியை உண்டு நெடுங்காலம் உயிர் வாழ்ந்தவர். இவர் பாடல்களை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய நூல்களிலும் காணலாம். |

# ஆசிரியர்களின் வரலாற்றுக் கண்ணாடி (தொடர்ச்சி)

| நூல் (அ) பாடல் | நூலாசிரியர் | ஊர் | பெற்றோர் | சமயமும், குலமும் | காலம் | பிற குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| சிலேடை (சென்னைக்கு) | இராமகவி | ...... | ...... | வைணவர் | 19-ஆம் நூற்றாண்டினர் | திருவாய்ப்பாடிப் புராணம், சாரப் பிரபந்தம் முதலிய நூல்களை இயற்றியவர். பிரம்பூர் ஆகத்தரங்களைப் பாடிப் பரிசு பெற்றவர். |
| மனோன் மணீயம் | பேராசிரியர் சுந்தரம் பிள்ளை | ஆலப்புழை | பெருமாள் பிள்ளை மாடத்தி அம்மாள் | வேளாளர் குலம் | கி. பி. 1855-1897 | திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவ சாத்திரப் போதகாசிரியராக இருந்தவர். ஆங்கிலம், தமிழ், மலையாளம் ஆகிய மும்மொழிப் புலமை உடையவர். ஆங்கில நாடக முறையைத் தழுவித் தமிழில் முதன் முதலாக நாடகம் எழுதியவர். |
| பாரததேசம் | பாரதியார் | எட்டைய புரம் | சின்னசாமி ஐயர், இலக்குமியம்மாள் | அந்தணர் | கி. பி. 1882-1921 | தேசிய கவி. 12-ஆம் வயதிலேயே பாடும் வன்மை பெற்றிருந்தார். தாய் மொழி, தாய் நாடு முன்னேற்றத்தில் பற்று மிக்கவர். காசியில் பயின்றார். 'சுதேசமித்திரன்', 'இந்தியா', 'பால பாரதம்' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, முருகன் பாட்டு, ஞானரதம், சந்திரிகையின் கதை முதலியவை இவரால் இயற்றப் பெற்றவை. |
| இன்னிசை இருநூறு | அரசன் சண்முகனர் | சோழ வந்தான் | ...... | சைவர் | 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் | கவிதை புனைதல், இலக்கணம், சோதிடம் முதலியவற்றில் வல்லவர். மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை இவரால் தொடங்கி நடத்தப் பெற்றது. நிரம்பிய புலமையும் மதி நுட்பமும் உடையவர். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உலக ஒற்றுமை | திரு. வி. க. | துள்ளம் (செங்கற் பட்டு மாவட்டம்) | விருத்தாசல முதலியார், சின்னம் மாள் | வேளாளர் | 1883-1953 | நாட்டு விடுதலைக்காக அரும்பாடுபட்டவர். தமிழ் உரைநடை, பத்திரிகை வளர்ச்சி, தொழிலாளர் நல்வாழ்வு, பெண்கள் முன்னேற்றம், சமய ஒற்றுமை ஆகிய பல துறைகளிலும் சேவை புரிந்தார். 'நவசக்தி'யின் ஆசிரியராக இருந்தார். முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, இளமை விருந்து முதலியவை இவருடைய சிறந்த நூல்களாகும். |
| கவியமுதம் | கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | சுசீந்திரம் | சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி அம்மாள் | வேளாளர் சைவர் | 1876-1954 | ஆங்கிலம், தமிழ், மலையாளம் முதலிய மொழிப் புலமை நிறைந்தவர். இனிய எளிய நடையில் கவிதைகள் இயற்றியவர். காந்தளூர்ச்சாலை, மலரும் மாலையும், ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூல்கள் இவரால் இயற்றப்பட்டவை. |
| எழிலோவியம் | வாணிதாசன் | சேலியமேடு | திருக்காடு நாயுடு, துளசி அம்மையார் | வைணவர் | 1915-ஆம் ஆண்டு பிறந்தவர் | பேராசிரியர் மயிலை சிவ. முத்து அவர்களால் தமிழ் நாட்டுத் தாகூர் எனச் சிறப்பிக்கப்பட்டவர். புரட்சிக் கவிஞர். சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டமும், ப்ரெஞ்ச் மொழியில் பி. ஐ. பட்டமும் பெற்றவர். புதுவையில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரது இயற் பெயர் எதிராஜ் என்பது. கொடிமுல்லை, தொடுவானம், தமிழச்சி, பெரிய இடத்துச் செய்தி முதலிய நூல்கள் இவரால் இயற்றப் பட்டவை. |

# 6. மனப்பாடப் பகுதி

## 1. செய்யுட் பாடத்தைக் கற்பது எப்படி ?

**அன்புள்ள மாணவ, மாணவி மணிகாள் !**

1. செய்யுள் பகுதியில் தரப்பட்டுள்ள உரை விளக்கங்கள் எல்லாம் உங்கள் உள்ளங்களில் எளிதில் பதியும்படி சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நன்கு படிப்பதுடன், நீங்கள் பாடப் புத்தகத்தில் உள்ள செய்யுட் பகுதிகளையும் ஊன்றிப் படிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு செய்யுளையும் பள்ளியிலாயினும் சரி, வீட்டிலாயினும் சரி, வாய்விட்டு இசையுடன் படியுங்கள்.

3. செய்யுட்களை அடிக்கடிப் படிக்கும் பழக்கம் வேண்டும். வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் எழுதிப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்வதால் பாடங்கள் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்; கருத்தும் விளங்கும்.

4. செய்யுட்களில் பொருள் நயம் புலப்படுமாறு பதம் பிரித்துப் படித்து ஒப்பித்தல் நல்லது. செய்யுட்களுக்குப் பொருள் கூறும்போது முதலில் உரை நடைப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

5. பாட்டைப் படிக்கும்போது அங்கங்கே காணும் கடின பதங்களைக் கவனித்து அவற்றின் பொருளை அறிந்து கருத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

6. மனப்பாடப் பகுதிகளை ஒவ்வொரு நாளும் தவறாமல் படித்துப் படித்து எழுதிப் பார்ப்பது நல்லது.

7. கீழே தரப்பட்டுள்ள முதற் குறிப்புக்களை எண்ணி நாடோறும் நீங்கள் மனப் பாடங்களை ஒப்புவித்தல் நலம்.

## பாட்டு முதற் குறிப்பு

**1.** **கடவுள் வாழ்த்து**
   முத்தானே

**2.** **மொழி வாழ்த்து**
   1. பொய்ம்மொழி
   2. நல்லதமிழ்

**3.** **திருக்குறள்**
   1. உள்ளத்தால்
   2. கூத்தாட்டு
   3. பரியது கூர்ங்
   4. இன்பம் விழை
   5. ஆக்கமும்
   6. ஈன்றாள் பசி
   7. தொகச் சொல்லித்
   8. குறிப்பில் குறிப்பு
   9. கற்றார் முன்
   10. உறுபசியும்
   11. அருளொடும்
   12. நவில்தொறும்
   13. கழாஅக்கால்
   14. அரம்பொருத
   15. நோய் நாடி

**4.** **நாலடியார்**
   யானை அனையவர்

**5.** **இனியவை நாற்பது**
   பத்துக் கொடுத்தும்

**6.** **அறநெறிச்சாரம்**
   காய்தல் உவத்தல்

---

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.” — வள்ளுவர்.

## 2. ஒவ்வொரு நாளும் மனப்பாடம் செய்யுங்கள்

### 1. கடவுள் வாழ்த்து

முத்தனே ! முவாத முதலானே முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே ! புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினல்
பேர்த்தேநீ ஆண்டவா றன்றேசம் பெருமானே !*

— *மாணிக்கவாசகர்.*

### 2. மொழி வாழ்த்து

*தமிழ்ப் பல்லாண்டு* *



1. பொய்ம்மொழியாப் புலமைவளம்
வள்ளுவர்போல் வாரும்
போற்றுமறி வறவுர்மை
கீரனனை யாரும்
மெய்ம்மொழியால் உயர்த்தபுகழ்
மடியல்வளர் தமிழை
மேதினியாள் முதல்மகளாய்
மேவுதலோர் வியப்போ!

2. நல்லதமிழ் நங்கைவளம்
நாடுதும்நாம் நாடி
நனிலத்து மேன்மொழிகள்
நல்குபல நலனும்
எல்லையறும் எழில்இளையாட்டு
அணிந்துமகிழ்ந்து ஏத்தி
என்றுமிசை வளர்க்குவம்பல்
லாண்டுநிதம் பாடி !

—*டாக்டர் சோமசுந்தர பாரதியார்,*
*எம்.ஏ., பி.எல்., டி.லிட்.*

---

*இப்பாடலைச் சேர்த்துக்கொள்ள அனுமதியருளிய 'முதுபெரும் புலவர்', 'நாவலர்', டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கட்கும், படத்தைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்தருளிய சென்னை மலர் நிலையத்தார்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

— தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

## 3. திருக்குறள்

1. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.
2. கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.
3. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.
4. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன்.
5. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.
6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.
7. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.
8. குறிப்பில் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.
9. கற்றாருள் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.
10. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.
11. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்
12. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
13. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.
14. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி.
15. நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி, வாய்ப்பச் செயல்.

— திருவள்ளுவர்.

## 4. நாலடியார்

யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

— சமண முனிவர்.

## 5. இனியவை நாற்பது

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே ;
வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிகவினிதே ;
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலில், காழ்இனியது இல்.

— பூதஞ் சேந்தனார்.

## 6. அறநெறிச்சாரம்

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருள்கண்
ஆய்தல் அறிவுடையர் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

— முனைப்பாடியார்.

---

## வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத மணித்திரு நாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மைவந் தெய்துக தீதெலாம் நலிக !
அறம்வளர்ந் திடுக ! மறம்மடி வுறுக !
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக !
நந்தே யத்தினர் நாடோறும் உயர்க !
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

— தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்.

குறுகிய பகுதி : *முதல் இரண்டு வரிகளும், இறுதி வரியும் அமைந்த பகுதி.*

# 7. மாதிரி வினாத்தாள் பகுதி

## முன் குறிப்பு

**அன்பு மிக்க தம்பிகளே, தங்கைகளே!**

பாடப் புத்தகம் முழுவதையும் கற்றுத் தெளிந்த பின்னர் நீங்கள் செய்ய வேண்டிய இன்றியமையாத—பொறுப்புள்ள—கடமையொன்றை இங்கு நினைவுபடுத்துகிறோம்.

அடுத்துவரும் ஐந்து வினாத்தாள்களையும் ஒவ்வொரு வாரத்திலும் ஒவ்வொரு வினாத்தாளுக்குப் புத்தகத்தைப் பாராமல் விடையெழுதி உங்கள் ஆசிரியரிடம் காட்டித் திருத்திக்கொள்வது நல்லது.

மாதிரி வினாத்தாள்கள் யாவும் அரசாங்கப் பொதுத் தேர்வு வினாத்தாள்களின் போக்கை ஊன்றிக் கவனித்து, அடுத்த டொதுத் தேர்வுக்கு எதிர்பார்க்கக் கூடியனவாக அமைத்து எழுதப்பட்டவை. எனவே இவற்றில் பயிற்சி பெறும் மாணவர்கள் அரசாங்கத் தேர்வில் நிறைய மதிப்பெண்களைப் பெறுவார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

உங்கள் பாடப் பகுதிகளின் வினாக்களுக்குக் கீழ்வருமாறு மதிப்பெண்கள் பங்கிடப்பட்டுள்ளன என்பதையும் நீங்கள் சிந்தித்து அதற்கேற்றபடி தேர்வுக்குப் பயில்வது நலமன்றோ?—

| | | | |
|---|---|---|---|
| I. | செய்யுட் பகுதி | ஏறக்குறைய | 45 |
| | 1. மனப்பாடப் பகுதிக்கு 10 | | |
| | 2. பதவுரைப் பகுதிக்கு 8 | | |
| | 3. பிறவகை வினாக்கட்கு 27 | | |
| II. | உரைநடைப் பகுதி | ஏறக்குறைய | 25 |
| III. | இலக்கணப் பகுதி | | 10 |
| IV. | கட்டுரைப் பகுதி | | 20 |

1955-ஆம் ஆண்டு முதல் வினாத்தாளில் மனப்பாடக் கேள்வியில் ஒரு புதுமுறை கையாளப்படுவதை மறவாதீர்கள். செய்யுளின் இறுதிச் சொற்களைக் கொடுத்துப் பாடல்களை எழுதச் சொல்கிறார்கள். ஆகையால் பாடல்களைத் தெளிவாக மனப்பாடம் செய்க. ஏனைய விடைகளை நெட்டுருச் செய்யாமல் சொந்த வாக்கியங்களில் எழுத வேண்டும் என்பதும் அவ்வினாத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

## தேர்வில் வெற்றி பெற உற்ற வழிகள்

1. வினாத்தாளைப் பெற்றது முதல் ஒரு வினாடியும் வீணாக்காமல் சிந்தித்துப் பதில் எழுதத் தொடங்க வேண்டும்.

2. கேள்விகளுக்குள் தேர்வு வினாக்கள் (choice) உள்ளனவா என்பதையும் கவனிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்கும் உள்ள மார்க்குகளைக் கவனித்து ஏற்றபடி விடையைச் சுருக்கமாகவோ விளக்கமாகவோ எழுத வேண்டும்.

4. 'முதற் கோணல் முற்றும் கோணல்' என்பது பழமொழி. எனவே, மாணவர்கள் முதலில் அளிக்கும் விடை பரிசோதகரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத் தக்க வகையில் இருக்க வேண்டும்.

5. கேள்வி எண்களும் உட்பிரிவுகளும் தெளிவாக ஆங்காங்குக் குறிப்பிடப்படவேண்டும்.

6. கையெழுத்து அழகே நல்ல பயனை அளிப்பது; வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் இடம் விட்டு அழகாக எழுத வேண்டும்.

7. சுருக்கமான தெளிவான விடைகளே எப்போதும் எதிர்பார்க்கப்படுகின்றன.

8. சொந்த சொற்களைக் கொண்டே விடை தெளிவாக எழுதப் பழக வேண்டும்.

9. முன்பே எழுதிய விடைகளைத் திரும்பப் படித்துப் பிழைகளைத் திருத்தித் தேர்வு நிலையத்தாரிடம் விடைத்தாளைக் கொடுத்துவிட வேண்டும்.

# மாதிரி வினாத்தாள்

## VIII STANDARD PUBLIC EXAMINATION

### FIRST LANGUAGE—TAMIL

*Time—Two hours.*

[குறிப்பு :—முதற்கேள்வியைத் தவிர மற்றைக் கேள்விகளுக்கு விடைகள் சொந்த வார்த்தைகளில் அல்லது வாக்கியங்களில் எழுதப் படவேண்டும். நெட்டுருச் செய்து எழுதப்படின் புறக்கணிக்கப்படும்.]

## மாதிரி வினாத்தாள் 1

I. அடி மாறாமல் எழுதுக :—

(1) "பொய்ம் மொழியா" என்று தொடங்கும் பாட்டு. 4

(2) "நோய் நாடி" என்று தொடங்கும் குறள். 2

(3) "வால் குழைக்கும் நாய்" என்று முடியும் செய்யுள். 4

II. பதவுரை எழுதுக :—

(1) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார் 2
உள்ளத்துள் எல்லாம் உளன்.

(2) விரிமழைக் குலங்கிழித்து ஒளிரும் மின்எனக் 4
கருநிறத்து அரக்கியர் குழுவில் கண்டனன்;
உருநிறத்து ஒருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத்து உற்றஎற்கு இயைந்த காந்தத்தை.

III. (1) மாணிக்கவாசகர் இறைவன் தன்மைகளைக் குறித்துக் கூறுவன யாவை? 3

(2) கவியமுதத்தின் சிறப்புக்கள் யாவை? 4

(3) "கூத்தாட்டு அவைக்குழாத்து" என்று தொடங்கும் குறட்பாவில் உள்ள உவமைகளை எடுத்து விளக்குக. 4

IV. (1) திருக்குறளில் எத்தனைப் பால்கள் உள? அவை யாவை? திருவள்ளுவரின் பெருமைகளைக் குறிப்பிடுக. 4

(2) ஒரு பொருளை எங்ஙனம் ஆய்தல் வேண்டும்? ஏன்? 3

(3) பொருளறம், அருளறம்—இவற்றால் உண்டாகும் பயன்கள் யாவை? 4

V. (1) கோவூர் கிழார் போரை நிறுத்துவதற்காக நலங்கிள்ளியிடம் கூறிய அறவுரைகள் யாவை? 4

(2) புகழ்பாடச் சொன்ன புல்லர் யாவர்? அவர்களைப்பற்றி ஔவையார் ஏன் பாடவில்லை? 3

(3) மழலை இன்பம் குழலையும் யாழையும்விட இனிமையான ஓசையுடைய தென்பதை விளக்குக. 3

மார்க்குகள்

.VI. (1) ஸ்விட்ஸர்லண்டில் இளைஞரிடையே வளர்க்கப்படும் நல்ல மனப்பான்மையைப் புலப்படுத்துக. 3

(2) நகரங்களில் பால் பஞ்சத்தைப் போக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? 3

(3) "தங்கள் தமிழன்புக்கு எல்லையே இல்லை போலும்"— சந்தர்ப்பம் கூறி விளக்குக. 2

(4) கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் யாவை? 4

VII. (1) இடம் சுட்டி விளக்குக:—
"காலையில் தங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். காண முடியவில்லையே?" 3

(2) பொருள் கூறுக:—
வாயசம், இறைஞ்ச, விளித்திடும், தூரியம், உவந்து, விலங்கல். 3

(3) இருவரைப்பற்றிக் குறிப்பு எழுதுக:—
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை; சோமசுந்தர பாரதியார்; திரு. வி. க.; வாணிதாசனர். 3

VIII. (1) இலக்கணக் குறிப்பு எழுதுக:—
கருநாவல், பயில்க, வீடுவேன், நண்பொரீஇ, காய்தல், கனிமயில். 3

(2) கீழ் வருவனவற்றிற்கு உதாரணம் தருக:—
ஏவல்வினை, ஆகுபெயர், வினையாலணையும் பெயர், அடுக்குத் தொடர், உம்மைத் தொகை, தொழிற் பெயர். 3

(3) பிரித்து எழுதுக:—
பாங்குடைய, பற்பல, இரு சிறை, கோட்டிடை. 2

(4) கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக:— 4
| நாங்கள் விரும்புவதெல்லாம் குறிப்பறிந்து முழு விவரமும் தருகிறீர்களே | எப்படி முடிகிறது | தங்களுக்கு நாங்கள் மிகவும் கடப்பாடுடையோம் |

IX. கீழே கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்திற்குள் கட்டுரை எழுதுக:— 20

(1) சினிமாக்களினுல் ஏற்படும் நன்மை தீமைகள்.

(2) மாணவர்களும் கிராம சேவையும்.

(3) ஆறுகளும் அவற்றின் பயனும்.

(4) உங்கள் பள்ளியில் கொண்டாடிய ஒரு விழா.

100

# மாதிரி வினுத்தாள் 2

மார்க்குகள்

I. அடி மாருமல் எழுதுக :—

(1) "அரம் பொருத" என்று தொடங்கும் குறள். 2

(2) "உறுதல் இலன்" என்று முடியும் குறள். 2

(3) "பத்துக் கொடுத்தும்" என்று தொடங்கும் செய்யுள். 4

II. பதவுரை எழுதுக :—

(1) உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் 3
சேரா தியல்வது நாடு.

(2) நல்லதமிழ் நங்கைவளம் நாடுதும்நாம் நாடி 4
நானிலத்து மேன்மொழிகள் நல்குபல நலனும்
எல்லையறும் எழில்இளையாட்கு அணிந்து மகிழ்ந்து ஏத்தி
ஏற்றுமிசை வளர்க்குவம்பல் லாண்டுநிதம் பாடி!

III. (1) தமிழ் மொழியின் பெருமைகள் யாவை? 4

(2) உள்ளத்தால் பொய்யாது ஒழுகுபவன் அடையும் நன்மை யாது? 3

(3) "யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்" — இவ்வுவமையால் வெளிப்படும் நீதியை விளக்குக. 4

IV. (1) "தேடி இவ்வழி காண்பனேல் தீரும் என் சிறுமை"— இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக. 4

(2) "இத்தோற்றம் நன்றே"—அத்தோற்றம் யாது? 5

(3) நாம் என்னென்ன தொழில்களைச் செய்யவேண்டுமென்று பாரதியார் குறிப்பிடுகிருர்? 3

V. (1) இருமருங்கும் சர்க்கரையைக் கூட்டி இடையே கடுக்காய்த் தாளை வைத்தவர் யார்? அவர் அங்ஙனம் செய்த செயலை விளக்குக. 4

(2) "மடுவை மலையாக்கிக் கதை கட்டுவது மக்கள் இயல்பு தானே!" — இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக. 3

(3) ஸ்விஸ் மக்கள் எந்தக் காரியத்தையும் விரைவாகச் செய்யக் கூடியவர் என்பதற்குச் சான்றுகள் தருக. 2

VI. (1) கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளிடம் பேரன்பு கொண்டவர் என்பதை எவ்வாறு அறிவாய்? 3

மார்க்குகள்

(2) ஏரிவாரியர், தோட்டவாரியர், பொன்வாரியர் — இவர்கள் கடமைகள் யாவை? 3

(3) மோரூர்க் காங்கேய மரபினர் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டுகள் யாவை? 3

(4) நம் நாட்டில் பயிர்த்தொழில் வளர்ச்சி குன்றி இருப்பதற்குக் காரணங்கள் யாவை? 3

VII. (1) நூலகம் படிப்படியாக எவ்வாறு வளர்ந்து தற்கால நிலைமையை அடைந்தது? 2

(2) எவையேனும் இரண்டைப் பற்றிக் குறிப்பு எழுதுக:— 4
மாணிக்கவாசகர், ஔவையார், உமா மகேசுவரம் பிள்ளை, கரணத்தான்.

(3) பொருள் கூறுக:—
பேர்த்து, நங்கை, அவை, ஒரீஇ, ஒளிரும், ஈட்டம், பேதை. 3

VIII. (1) இலக்கணக் குறிப்பு எழுதுக:— 3
வளர்க்குவம், உண்ணு, விளம்பி.

(2) கீழ்வருவனவற்றிற்கு உதாரணம் தருக:— 3
விளிப்பெயர், பண்புத்தொகை, தோன்றுஎழுவாய்.

(3) என்னே காங்கேயன் தமிழ்ப்பற்று! — இதனைப் பொருள் மாறுமல் செய்தி வாக்கியமாக மாற்றுக. 2

(4) கோடிட்ட இடங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக:— 4
அன்பர்களே | முப்பெரு வேந்தராகிய சேர | சோழ | பாண்டியரைப் பாடிய வாய் | அவர்தம் இளங்கோக்களைப் பாடிப் புகழ்ந்த வாய் வள்ளல்களை வாழ்த்திய வாய் | அறப் பெரியோருக்கு அகங்குழைந்து பாடிய வாய் | இந்த வாயால் ஒன்றுக்கும் உதவாத நும்மையும் பாடவா |

IX. கீழே கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்திற்குள் ஒரு கட்டுரை எழுதுக:— 20

(1) நீ பார்த்த ஒரு நாடகம் அல்லது படக் காட்சி.

(2) மாட்டுவண்டியில் நீ செய்த பிரயாணம்.

(3) உங்கள் ஊரில் நடைபெற்ற பொதுத் தேர்தல்.

(4) முதியோர் கல்வி.

100

# மாதிரி வினத்தாள் 3

மார்க்குகள்

I. அடி மாருமல் எழுதுக :—

(1) 'மூத்தானே' என்று தொடங்கும் செய்யுள். 4

(2) 'புரளவிடல்' என்று முடியும் குறள். 2

(3) 'காய்தல் உவத்தல்' என்று தொடங்கும் செய்யுள். 4

II. பதவுரை எழுதுக :—

(1) பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 3

(2) பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்; 5
காணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்;
மாணநோற்று ஈண்டுஇவள் இருந்த வாறெல்லாம்
காணநோற்று இலன்அவன் கமலக் கண்களால்.

III. (1) தமிழ் மகள் எவ்வாறு நிலமகளின் முதல் மகள் ஆவாள்? 4

(2) நாடு எவ்வாறு இருக்கவேண்டுமென்று திருவள்ளுவர் கூறுகிருர்? 2

(3) 'கழாஅக் கால் பள்ளியுள்' என்று தொடங்கும் குறளில் உள்ள உவமையை விளக்கி எழுதுக. 4

IV. (1) நாலடியார், அறநெறிச்சாரம் இவற்றின் பெயர்க் காரணமும், ஆசிரியர் பெயர்களும் கூறுக. அவற்றின் பெருமைகள் யாவை? 5

(2) அரக்கியர் தன்மைகளைக் குறித்துக் கம்பர் கூறுவனவற்றைத் தொகுத்துக் கூறுக. 5

(3) புலவர் சென்னைக்கு வந்து சிவமாகியது எங்ஙனம்? 2

(4) கொன்றை மரத்தின் அழகை வாணிதாசனர் எவ்வாறு சித்தரிக்கின்ருர்? 2

V. (1) பால் நிறக் கடவுளும் நீலநிறக் கடவுளும் போல் ஒன்றுபட்டு வாழ்ந்த தமிழ் மன்னர்கள் யாவர்? காரிக் கண்ணனர் அவர்களுக்குக் கூறிய அறவுரைகள் யாவை? 3

(2) திருவள்ளுவர் மக்கள் என்று பொதுப்படக் கூருமல் தம் மக்கள் என்று அடைகொடுத்துக் கூறியது எவ்வாறு பொருந்தும்? 2

(3) ஸ்விட்ஸர்லண்ட் என்று சொன்னவுடனே தோன்றும் நினைவுகள் யாவை? 2

மார்க்குகள்

VI. (1) 'ஆன் ஐந்து' எனப்படுபவை யாவை? அவற்றில் தனித்தனியே கலந்திருக்கும் சத்துப் பொருள்கள் யாவை? 3

(2) எண்ணெய் விளக்கு எவ்வாறு ஒளி பெற்று எரிகிறது? 2

(3) அருந்தமிழ்க் கலைஞர் யார்? அவர் அருங்குணங்கள் யாவை? 4

(4) சம்வத்சர வாரியர் கடமைகள் யாவை? 2

VII. (1) அன்புடையான் பின்னர் அருளுடையான் ஆகும் விந்தையை விளக்குக. 2

(2) கலை என்பது யாது? அதை எங்கெங்கே காணலாம்? அதன் பயன்கள் யாவை? 3

(3) பொருள் கூறுக :— 3

புறநானூறு, எழிலோவியம், சிலேடை.

VIII. (1) இலக்கணக் குறிப்பு எழுதுக :— 3

செல்லலம், பெறூஉம், வெல்க.

(2) கீழ்வருவனவற்றிற்கு உதாரணம் தருக :— 3

பெயரெச்சம், வினையெச்சம், செயப்பாட்டு வினை.

(3) பிரித்து எழுதுக :—

கயியமுதம், எழிலோவியம், மேடுறுத்தி, அறிந்தறிந்தும். 2

(4) கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக:— 4

| அரசே | நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன் | பாண்டியனும் அல்லன் | சோழனே ஆவன் | நீயும் சோழன் | அவனும் சோழன் | நீயும் ஆத்திமாலை சூடியிருக்கிறாய் | அவனும் ஆத்திமாலை சூடியிருக்கிறான் |

IX. கீழே கண்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்திற்குள் ஒரு கட்டுரை எழுதுக :— 20

(1) முயற்சி திருவினை ஆக்கும்.

(2) உனக்கு விருப்பமான ஒரு புத்தகம்.

(3) நீ பார்த்த சரித்திர சம்பந்தமான ஓர் ஊர்.

(4) நீ விரும்பும் விளையாட்டு.

100

# மாதிரி வினாத்தாள் 4

மார்க்குகள்

I. அடி மாறாமல் எழுதுக :—

(1) 'நல்ல தமிழ்' என்று தொடங்கும் செய்யுள். 4

(2) 'மிக்க கொளல்' என்று முடியும் குறள். 2

(3) 'குறிப்பில் குறிப்புணரா' என்று தொடங்கும் குறள். 4

II. பதவுரை எழுதுக :—

(1) பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே ; 4
வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிகவினிதே ;
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலில் காழ் இனியது இல்.

(2) மாடு நின்றஅம் மணிமலர்ச் சோலையை மருவி 4
"தேடி இவ்வழி காண்பனேல் தீரும்என் சிறுமை ;
ஊடு கண்டிலன் எனிற்பின்னர் உரியதொன்று இல்லை
வீடு வேன்மற்றுஇவ் விலங்கல்மேல் இலங்கையை வீட்டி"

III. (1) எப்படிப்பட்டவர் நட்பைக் கொள்ளுதல் வேண்டும்? எப்படிப்பட்டவர் நட்பைத் தள்ளுதல் வேண்டும்? 3

(2) ஒளவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் தன்மையை எவ்வாறு புகழ்ந்து கூறியுள்ளார்? 5

(3) மெய்யாம் தம் பெயர் விளம்பிச் சிதறி ஓடுவன யாவை? அவ்வாறு ஓடக் காரணம் என்ன? 4

IV. (1) ஒன்றுக்கு ஒன்று சிறப்பைத் தருவன யாவை?

(2) பாரத தேசத்தை வளமாக்குவதற்குப் பாரதியார் கூறும் வழிகள் யாவை?

(3) காட்டில் காணப்படும் எழிலோவியத்தை விளக்குக. 2

V. (1) திருவள்ளுவர் ஒற்றுமையின் அருமையைப் புலப்படுத்தக் கூறும் உதாரணத்தை விளக்குக. 3

(2) இடம் சுட்டி விளக்குக :—
'எது இல்லாவிட்டால் என்னம்மா? பொருளிருக்கிறதா, இல்லையா எங்களிடம்?' 3

(3) புளிகுலர், ஏர்கேபின் : குறிப்பு எழுதுக. 2

VI. (1) நம் நாட்டில் நல்ல பால்தரும் இனப் பசுமாடுகள் எங்கெங்கே காணப்படுகின்றன? 2

(2) வெப்பத்தினால் பொருள்கள் விரிவடைவதற்கு உதாரணங்கள் தருக. 2

(3) காரிய நிறைவேற்றுக் கழக உறுப்பினராதற்குத் தகுதியுடையார் யாவர்? 4

மார்க்குகள்

(4) 'நூலாசிரியரை விட உரையாசிரியரே சிறந்தவர் ஆவர்'— எப்படி? 3

VII. (1) கல்வியின் குறிக்கோள் யாது? 3

(2) நுண் புழுக்கள் நன்றாக வேலை செய்வதற்குத் தேவையான வசதிகள் யாவை? 3

(3) இருவரைப்பற்றிக் குறிப்பு எழுதுக:—
கம்பர், பூதஞ் சேந்தனார், சுந்தரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார். 4

VIII. (1) இலக்கணக் குறிப்பு எழுதுக:— 3
வளர் தமிழை, ஈன்றாள், செல்வம்.

(2) படர்க்கைப் பேச்சாக மாற்றி எழுதுக:— 3
பொப்பண காங்கேயனைப் பார்த்து, 'தங்கள் கார்வளக் கையா இத்தொழில் செய்யத் தக்கது? தங்கள் தமிழன்புக்கு எல்லையே இல்லை போலும்!' என்றார் புலவர்.

(3) கோடிட்டவைகட்குச் சொல்லிலக்கணம் கூறுக:—
<u>வீட்டினுள்</u> <u>காணப்படும்</u> கலைக்கு வீட்டுத் <u>தலைவன்</u> அல்லது தலைவி பொறுப்பாளி. 2

(4) கோடிட்ட இடங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக. 4
புலவர் திரும்பிப் பார்த்தார் | திடுக்கிட்டார் | இருக்கையை விட்டெழுந்தார் | | என்ன இருக்க என்ன செய்தீர்கள் | தமிழ்ப் புலவர்க்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் தங்கள் கார்வளக்கையா இத்தொழில் செய்யத் தக்கது | தங்கள் தமிழன்புக்கு எல்லையே இல்லைபோலும் || என்றார் புலவர் |

IX. கீழே கண்ட தலைப்புகளில் ஏதேனும் <u>ஒன்றைப்பற்றி</u> ஒரு பக்கத்திற்குள் ஒரு கட்டுரை எழுதுக:— 20

(1) நீ செய்ய விரும்பும் தொழில்.

(2) நாட்டுக்கு உழைத்த ஒரு பெரியார்.

(3) உங்கள் ஊரில் ஒரு மழை நாள்.

(4) உனக்குப் பிடித்த ஒரு வீட்டுப் பிராணி.

100

# மாதிரி வினாத்தாள் 5

மார்க்குகள்

I. அடி மாறாமல் எழுதுக :—

(1) " கூடத்தாட்டு " என்று தொடங்கும் குறள். 2

(2) " இயல்வது நாடு " என்று முடியும் குறள். 2

(3) " பத்துக் கொடுத்தும் " என்று தொடங்கும் செய்யுள். 4

II. பதவுரை எழுதுக :—

(1) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு. 3

(2) காய்த்த விளைநெல் கதிரிறைஞ்சிக் காண்டுமால்; 5
கோத்த பதர்கொள் குலைநிமிர்வே கொள்ளும்;
ஏத்தும் அறிஞர்க்கு இயல்பு பணிவுடைமை;
வாய்த்தல்இலை பேதை வயின்.

III. (1) தமிழ்மகளுக்கு நாம் செய்ய வேண்டிய சேவைகள் யாவை ? 4

(2) பண்புடையாளர் தொடர்பு எது போன்றது ? விளக்குக. 4

அல்லது

"கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால்"—எது? விளக்குக.

(3) சீதையின் தூய தன்மையை எண்ணி அனுமன் பாராட்டிக் கூறியவை யாவை ? 4

IV. (1) சூரியோதயத்தின்போது சேவல் புரியும் செயலைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எவ்வாறு சித்தரிக்கிறார் ? 4

(2) உலக ஒருமைக்குத் திரு. வி. க. கூறும் நெறி முறைகளை எழுதுக. 3

(3) " எழிலோவியம் " என்னும் பாட்டின் ஆசிரியர் யார் ? இத் தலைப்பு அப்பாட்டுக்கு எவ்வாறு பொருந்தும ? 2

V. (1) பிசிராந்தையாருக்கு வயது பல ஆகியும் நரை தோன்றாமைக்குக் காரணம் என்ன ? 3

(2) " அம்மா பேசறது நல்லாத்தான் இருக்குது. ஆனா புரியத் தான் இல்லே "—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக. 2

(3) பால் எவ்வாறு மிகவும் சிறந்த உணவாகும் ? 3

VI. (1) பொப்பணவின் அருங்குணங்களை எழுதுக. 3

(2) மரக்கறி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ? 3

(3) காரிய நிறைவேற்றுக் கழகத்து உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தகாதவர் யாவர் ? 4

மார்க்குகள்

(4) கம்பிச் சுருள், இரும்புக் கட்டை, மின் ஆற்றல் ஆகிய வற்றை எவற்றுக்கு உதாரணமாகக் காட்டினர் என்பதை விளக்குக. 3

VII. (1) கலை உணர்ச்சியை எவ்வாறு தோற்றுவிக்க வேண்டும்? 3

(2) பொருள் கூறுக :—
கைபூட்டு, சிவிகை, அவிழ்ச்சுவை, பாடியம், சுணக்கம், மிளிர்தல். 3

(3) எவையேனும் இரண்டைப்பற்றிக் குறிப்பு எழுதுக :— 4
அடியார்க்கு நல்லார், நிகண்டு, தார் எண்ணெய், அம்மோனியா.

VIII. (1) இலக்கணக் குறிப்பு எழுதுக :— 3
சிறிது சிறிது, துலங்குதல், கெழீஇ.

(2) பிரித்து எழுதுக :—
நாயனையார், பாங்குடைய, கையகத்தது, முன்னீண்டு. 2

(3) படர்க்கைப் பேச்சாக மாற்றி எழுதுக :—
“ தங்களுக்குச் செய்யும் தொண்டு தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகும். இத்தமிழ்த்தொண்டு செய்யக் கொடுத்துவைத்ததற்கு நான் பெரிதும் மகிழ்கிறேன் ” என்று தன் அன்பை வெளியிட்டான் பொப்பணன். 3

(4) கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதுக: — 4
| ஐயம் கிளப்பிய அன்பருக்குக் குழந்தை உண்டா | | என்று கேட்டேன் | | இல்லை | | என்னும் மாறுமம் பிறந்தது |

IX. கீழே கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்தில் கட்டுரை எழுதுக :— 20

(1) பயிர்த் தொழில்.

(2) செய்தித்தாள்களும் அவற்றின் பயனும்.

(3) உங்கள் பள்ளியில் நடத்திய உல்லாசப் பிரயாணம்.

(4) கிராம வாழ்க்கை சிறந்ததா? நகர வாழ்க்கை சிறந்ததா?

100

...NNEMARA PUBLIC LIBRAR...

# படித்துப் பாருங்கள்

**செல்வச் சிறுவர்களே, சிறுமியர்களே !**

தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் பாடங்களை மேலும் விரிவாகக் கற்பதற்கும் உங்கள் தமிழறிவைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கும் கீழ் வரும் நூல்கள் மிகவும் பயனுடையவை ஆகும். உங்கள் பள்ளிக்கூட நூல் நிலையத்திலோ அல்லது விற்பனை நிலையங்களிலோ இவை கிடைக்குமாயின் வாங்கிப் படிப்பது நல்லது.

| | |
|---|---|
| 1. திருவாசகம் - மூலமும் உரையும் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. |
| 2. மாரிவாயில் | மலர் நிலையம், சென்னை-1. |
| 3. வள்ளுவர் வாய்மொழி | லிப்கோ, சென்னை-17. |
| 4. தனிப்பாடல்கள் - உரையுடன் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. |
| 5. மனோன்மணீயம் - எம். சண்முக சுந்தர முதலியார் இயற்றிய உரைநடை நாடகம். | ,, |
| 6. முதுமைஉளறல் | சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-1. |
| 7. மலரும் மாலையும் | பாரி நிலையம், சென்னை-1. |
| 8. பாரதியார் பாடல்கள் | அரசாங்கப் புத்தக விற்பனை நிலையம், மௌண்ட் ரோட், சென்னை-2. |
| 9. எழிலோவியம் | மலர் நிலையம், சென்னை-1. |
| 10. நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள் | "சோமலெ", பாரி நிலையம், சென்னை-1. |
| 11. பால் பண்ணை | அலையன்ஸ் கம்பெனி சென்னை-4. |
| 12. தமிழின்பம் — ரா. பி. சேதுப் பிள்ளை | பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5. |
| 13. பண்ணை வாழ்க்கை | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. |
| 14. தென்னிந்திய வேளாண்மை | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. |
| 15. தம்பிக்கு — தங்கைக்கு, டாக்டர் மு. வரதராசனார் | பாரி நிலையம், சென்னை-1. |

Printed at Rajah Power Press, Madras-14.

# நன்றியும் வேண்டுகோளும்

இப்புத்தகத்தில் 70, 96 ஆகிய பக்கங்களில் உள்ள இரு படங்களையும் உதவிய சென்னை மாணவர் மன்றத்தாருக்கு எங்கள் உளமார்ந்த நன்றி. பக்கம் 75-இல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் படத்துக்குப் பதிலாகத் திரு. வி. க. அவர்கள் படமும் 66-ஆம் பக்கத்தில் அரசன் சண்முகனார் படத்துக்குப் பதிலாகப பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் படமும சேர்ந்துள்ளன. அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்.